# சங்க சங்கம் மருவியகால இலக்கியங்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்

பெரியார் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக (பிஎச்.டி.)
அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்
ம.ப.ரமேஷ்குமார்
பதிவு எண். R10TAM08

நெறியாளர்
பேரா. முனைவர் தி.பெரியசாமி

தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
(தேசிய தரமதிப்பீட்டுக்குழுவின் மறுமதிப்பீட்டில் ‘ஏ’ தரச்சான்றிதழ் பெற்றது)
பெரியார் பல்கலை நகர்
சேலம்–636 011.

டிசம்பர் – 2019

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர் தி.பெரியசாமி,**
பேராசிரியர் மற்றும் தலைவர்,
தமிழ்த்துறை,
பெரியார் பல்கலைக்கழகம்,
பெரியார் பல்கலைநகர்,
சேலம்–636 011.

நாள் :

**‘சங்க சங்கம் மருவியகால இலக்கியங்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்’** என்னும் தலைப்பில் **ம.ப.ரமேஷ்குமார்** அவர்கள் முனைவர் பட்டத்திற்காகச் (பிஎச்.டி.) செய்த இந்த ஆய்வு பெரியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் அவர் ஆய்வு செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப்பட்டது என்றும் இந்த ஆய்விற்காக வேறு எந்தப்பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப்படவில்லை என்றும் உறுதி அளிக்கின்றேன்.

**தமிழ்த்துறைத் தலைவர்** **நெறியாளர்**

**(முனைவர் தி.பெரியசாமி)**

# ஆய்வாளர் உறுதிமொழி

**ம.ப.ரமேஷ்குமார்,** நாள் :
பதிவு எண். **R10TAM08,**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
பெரியார் பல்கலைக்கழகம்,
பெரியார் பல்கலை நகர்,
சேலம்–636 011.

**‘சங்க சங்கம் மருவியகால இலக்கியங்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்’** என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக (பிஎச்.டி.) எழுதப்பெற்ற இவ்வாய்வு எனது சொந்த முயற்சியால் உருவானது என்றும், இதற்குமுன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இவ்வாய்வேடு அளிக்கப்படவில்லை என்றும் உறுதி அளிக்கின்றேன்.

**ஆய்வாளர்**

**(ம.ப.ரமேஷ்குமார்)**

**உறுதிக் கையொப்பம்**

**நெறியாளர்**
**பேரா.முனைவர் தி.பெரியசாமி**
பேராசிரியர் மற்றும் தலைவர்,
தமிழ்த்துறை,
பெரியார் பல்கலைக்கழகம்,
பெரியார் பல்கலைநகர்,
சேலம்–636 011.

URKUND

# Urkund Analysis Result

Analysed Document: M.P.Rameshkumar_Tamil.pdf (D61154367)
Submitted: 12/16/2019 12:39:00 PM
Submitted By: lisjayaprakash@gmail.com
Significance: 1 %

## Sources included in the report:

https://iaraindia.com/wp-content/uploads/2018/06/TS-12-FULL.pdf
https://tnpscematerials.files.wordpress.com/2017/04/e0ae8ee0ae9fe0af8de0ae9fe0af81e0aea4e0af8de0aea4e0af8ae0ae95e0af88.pdf
68434acf-d6f2-4426-8959-6a8ef56f25a4
https://lvfiles.blob.core.windows.net/4-static/News%202015%20-%202016/Kalis%20Trends%20In%20Research.pdf
https://iaraindia.com/wp-content/uploads/2018/06/TS-11-FULL.pdf
https://iaraindia.com/wp-content/uploads/2018/06/TS-9.pdf
https://zenodo.org/record/2677488/files/FINAL%20BOOK%20OF%20MALAYSIA.pdf?download=1
https://zenodo.org/record/3550505/files/final%20color%20MKU%20Special%20Issue%201%2C%2030%2C%20August%2019%20.pdf

## Instances where selected sources appear:

38

# PERIYAR UNIVERSITY, SALEM – 636 011

## Declaration by the Candidate

I hereby declare that the thesis entitled **"சங்க சங்கம் மருவியகால இலக்கியங்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்"** submitted by me for the award of **Ph.D.,** degree in **Tamil** is my original contribution and it is not plagiarized or copied from any other thesis / books / any other copy right materials.

**Signature of the Candidate**

## Certificate by the Supervisor

I hereby declare that the candidate **Mr.M.P.Rameshkumar**, has carried out the Ph.D., programme under the supervision during the period **2010** to **2019** and the thesis entitled **"சங்க சங்கம் மருவியகால இலக்கியங்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்"** submitted by him is verified and it is not plagiarized or copied from any other thesis / books / any other copy right materials.

**Signature of the Supervisor**

## Certificate by the Librarian

It is certified that the thesis entitled **"சங்க சங்கம் மருவியகால இலக்கியங்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்"** submitted by the candidate **Mr.M.P.Rameshkumar,** Department of Tamil under the supervision **Dr. T. Periasamy,** Department of Tamil is verified for plagiarism through the software's and the thesis within the permissible limits of plagiarism rules and the percentage of plagiarism of the thesis is found the be **1% (One percentage).**

**Signature of the Librarian**

# PERIYAR UNIVERSITY, SALEM – 636 011

**Certificate by the R & D Coordinator**

It is certified that the thesis entitled **“சங்க சங்கம் மருவியகால இலக்கியங்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்”** submitted by the candidate **Mr.M.P.Rameshkumar,** Department of Tamil under the supervision **Dr. T. Periasamy,** Department of Tamil is verified by the anti-plagiarism software and the percentage of plagiarism is within the permissible limit.

**Signature of the R & D Coordinator**

## CERTIFICATE OF GENUINENESS OF THE PUBLICATION

This is to certify that Ph.D. Candidate **Mr.M.P.Rameshkumar** working under my supervision has published a research article in the **UGC** listed journal named **1. Ayidha Zhuthu** with Vol. No: 12, Issue: 6, Page No.14-16 and year of Publication December 2018 published by **Pallavipathippakam**. 2. **Shanlax International Journal of Tamil Studies** with Vol: 2, Issue: 3 Page No.121-126 and year of Publication January 2019 published by **Shanlax International Journal**. The contents of the publication incorporate part of the results presented in her thesis.

**Research Supervisor**

**Counter Signed**

**Head of the Department**

# நன்றியுரை

முனைவர் பட்டம் பயில வாய்ப்பளித்த பெரியார் பல்கலைக்கழக முன்னாள் இந்நாள் துணைவேந்தர்களுக்கும், பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களுக்கும், ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்வின் மீது மிகுந்த அக்கறையுடன் தகுந்த ஆலோசனைகளை வழங்கிய தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் நெறியாளர் பேராசிரியர் **முனைவர் தி.பெரியசாமி** அவர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆய்வு சம்பந்தமான அறிவுரைகளை வழங்கிய தமிழ்த்துறை பேராசிரியர்களான **முனைவர் மோ.தமிழ்மாறன், முனைவர் ம.சுந்தரமூர்த்தி**, இணைப்பேராசிரியர்களான **முனைவர் சு.வேலாயுதன், முனைவர் இரா.வசந்தமாலை** உதவிப்பேராசிரியர்களான **முனைவர் க.மைதிலி, முனைவர் இரா.தேவணன்** முதலிய அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் ஆய்வேடு தட்டச்சு செய்த சமயத்தில் உதவியாக இருந்த நண்பர்கள் **முனைவர் சு.இராஜா, குழந்தைவேலு, சுகந்தி, ரமணி** ஆ கியோருக்கும் என் மாணவச் செல்வங்களாகிய சுதா, தெய்வானை, மேகநாதன், பாரதி, மணிகண்டன், அஜித், சுபாஷ் ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆய்வின் வளர்ச்சிக்கு உதவிய பெரியார் பல்கலைக்கழக நூலகத்தாருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வேடு தட்டச்சு செய்து கொடுத்த என் உடன்பிறந்த தம்பி **ம.ப.அன்புமணி,** மனைவி **ப.பிரியா** ஆகியோருக்கும் ஆய்வேட்டை சிறப்புடனும் பொறுப்புடனும் கட்டமைத்துக் கொடுத்த நண்பர் திரு **சி.கௌதமன்** அவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ம.ப.ரமேஷ்குமார்**

# சுருக்கக்குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம். | – | அகநானூறு |
| அகத். | – | அகத்திணையியல் |
| ஆ.பெ.இல்லை. | – | ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை |
| உ.ஆ. | – | உரையாசிரியர் |
| ஐங். | – | ஐங்குறுநூறு |
| கலி. | – | கலித்தொகை |
| குறுந். | – | குறுந்தொகை |
| தொல். | – | தொல்காப்பியம் |
| நற். | – | நற்றிணை |
| நூ. | – | நூற்பா |
| ப. | – | பக்கம் |
| ப.ஆ. | – | பதிப்பு ஆசிரியர் |
| பக். | – | பக்கங்கள் |
| பா.எ. | – | பாடல் எண் |
| பொருள். | – | பொருளதிகாரம் |
| மு.ப.ஆ. | – | முதன்மைப் பதிப்பாசிரியர் |
| குறுந். | – | குறுந்தொகை |

# பொருளடக்கம்


| இயல் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | முன்னுரை | 1–10 |
| ஒன்று | தமிழ் இலக்கண நூல்களில் குறிஞ்சி | 11–39 |
| இரண்டு | கபிலர் பாடல்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் | 40–107 |
| மூன்று | பரணர் பாடல்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் | 108–129 |
| நான்கு | புலவர் பெயர் அறியப்படாத பாடல்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் | 130–161 |
| ஐந்து | சங்கம் மருவிய கால இலக்கியங்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் | 162–203 |
| | முடிவுரை | 204–212 |
| | துணைநூற்பட்டியல் | |
| | பின்னிணைப்பு | |

# முன்னுரை

மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டவை இலக்கியங்கள். இந்த இலக்கியங்கள் யாவும் அவ்வக்கால கட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகள், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், சமூகச் சூழல்கள் போன்றவற்றை வெளிப்படுத்தும் கருவூலங்களாகவும் திகழ்கின்றன. தமிழ்மொழியில் பல்வேறு காலச்சூழல்களில் பல்வேறு வகையான இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றை இலக்கணங்கள், சங்க இலக்கியங்கள், சங்கம் மருவிய கால இலக்கியங்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், பாட்டியல் நூல்கள், சிற்றிலக்கியங்கள், உரைநடை இலக்கியங்களான நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், கடித இலக்கியங்கள் மற்றும் புதுக்கவிதை இலக்கியங்கள் என பலவாறாக வகைப்படுத்தலாம். இத்தகைய இலக்கியங்கள் அமைப்பு நிலையில் பலவகையான வடிவங்களையும் பாவகைகளையும் கொண்டிருந்தாலும்கூட இவையாவும் அவ்வக்கால கட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்துவனவாகவே அமைந்துள்ளன.

இந்த வகையில் தமிழின் பழந்தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் மற்றும் சங்கம் மருவியகால இலக்கியங்களில் உள்ள குறிஞ்சித்திணைப் பாடல்களின்வழி குறிஞ்சிநிலம் சார்ந்து வாழக்கூடிய மக்களின் வாழ்வியல் ஒழுகலாறுகள் பல்வேறு அறிஞர்களால் ஆராயப்பட்டுள்ளன. அதாவது திணைக்கோட்பாட்டு நோக்கு, உளவியல் நோக்கு, பாலியல் நோக்கு, பண்பாட்டு நோக்கு, ஒப்பிலக்கிய நோக்கு, பகுப்பாய்வு நோக்கு எனும் கோட்பாடுகளின் அடிப்படையில் சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் கடந்தகாலங்களில் ஆராயப்பட்டுள்ளன. எனினும் தமிழ் இலக்கண நூல்களில் சொல்லப்பட்டுள்ள குறிஞ்சித்திணைக் கோட்பாடு குறித்த தொகுப்பாய்வும் அவற்றில் ஏற்பட்டுள்ள நெகிழ்வுத் தன்மைகளும் இன்றைய காலகட்டத்தில் ஆராயத்தக்க ஒன்றாகக் கருதப்படுகிறது. இதன்மூலம் இலக்கண நூலாரும் இலக்கியப் புலவர்களும் குறிஞ்சித்திணை குறித்தும் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் குறித்தும் அவர்கள் கொண்டிருந்த

கருத்தாக்கங்களை ஒட்டுமொத்தமாக இவ்வாய்வுலகத்திற்கு எடுத்துச் சொல்லுதல் அவசியமாகின்றது.

மேலும், சங்கக் குறிஞ்சித் திணைப் பாடல்களை மையமிட்டே இதுவரையிலும் பெரும்பாலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதோடு சேர்த்து சங்கம் மருவிய கால இலக்கியங்களான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் குறிப்பாக, அக இலக்கியங்களில் காணலாகும் குறிஞ்சித் திணைப் பாடல்களின்வழி குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலையும் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் சங்கக் குறிஞ்சிநில மக்களுடைய வாழ்வியலின் தொடர்ச்சி சங்கம் மருவியகாலக் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலிலும் இடம்பெற்றுள்ளதா? என்பதை இனங்கண்டு ஆராய்ந்தறிவது இன்றியமையாத தேவையாகிறது. இதன் காரணமாகவே குறிப்பிட்ட சில இலக்கண நூல்களும் சங்க இலக்கிய மற்றும் சங்க மருவிய கால இலக்கியக் குறிஞ்சித் திணைப் பாடல்களும் இவ்வாய்வின் களமாக அமைகின்றன.

## ஆய்வுத் தலைப்பு

தமிழின் பழந்தமிழ் இலக்கியமான சங்க இலக்கியத்திலுள்ள குறிஞ்சித் திணைப் பாடல்களின் மூலம் அவற்றில் இடம்பெற்றுள்ள குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலை இனங்காண்பதோடு அவற்றின் தொடர்ச்சியாக காலஅடிப்படையில் தொகுக்கப்பட்ட இலக்கியமான சங்கம் மருவிய கால இலக்கியத்தில் காணலாகும் குறிஞ்சித்திணைப் பாடல்களின்வழி குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலையும் கண்டறியும் நோக்கில் ‘‘சங்க சங்கம் மருவியகால இலக்கியங்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்’’ என்பது ஆய்வுத் தலைப்பாகக் கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வு எல்லை

சங்க இலக்கியங்கள் என்று சொல்லப்படும் எட்டுத்தொகை பத்துப்பாட்டு இலக்கியங்களில் கபிலர் இயற்றியதாகவுள்ள 191 குறிஞ்சித்திணைப் பாடல்களும் பரணர் இயற்றிய 28 குறிஞ்சித்திணைப்

பாடல்களும் புலவர் பெயர் அறியப்படாத 21 குறிஞ்சித்திணைப் பாடல்களும், சங்கம் மருவியகால இலக்கியத்திலுள்ள 77 குறிஞ்சித்திணைப் பாடல்களும் தொல்காப்பியம், நம்பியகப்பொருள், இறையனார் அகப்பொருள், மாறன் அகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல்விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் முதலிய ஒன்பது இலக்கண நூல்களும் இவ்வாய்வுக்குரிய ஆய்வு எல்லைகளாகும்.

## ஆய்வு நோக்கம்

சங்கக் குறிஞ்சித் திணைப் பாடல்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு சில ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. மேலும் தமிழ் இலக்கண நூல்களில் காணலாகும் குறிஞ்சித் திணைக் கோட்பாடுகளையும், சங்கம் மருவியகால குறிஞ்சித் திணைப் பாடல்களையும் ஆய்வுக்கு உட்படுத்தி குறிஞ்சித் திணைப்பாடல்கள் குறித்த முழுமையான ஆய்வு இதுவரை நிகழ்த்தப்படவில்லை. இந்நிலையில் தமிழ்இலக்கண நூல்களின் குறிஞ்சிக் கோட்பாடு குறித்தும் சங்க, சங்கம் மருவியகாலக் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் குறித்தும் ஒட்டுமொத்த குறிஞ்சித் திணைப்பாடல்களையும் கொண்டு ஆராய்ந்து அறிவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

## ஆய்வுக் கருதுகோள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் கபிலர் எனும் பெயரில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு புலவர்கள் இருந்துள்ளனர். சங்க இலக்கியத்தில் தொல்கபிலர் என்ற புலவரும், கபிலர் எனும் புலவரும் உள்ளனர். இதைப் போலவே சங்கம் மருவிய காலத்திலும் இன்னாநாற்பது எனும் அறநூலைப் பாடியகபிலரும் உள்ளார். மேலும் சங்ககாலக் குறிஞ்சிப்பாட்டு பாடிய கபிலரும் உள்ளார். இதில் சங்கக் கபிலர் 191 குறிஞ்சித் திணைப்பாடல்களைப் பாடியுள்ளார். இதற்கடுத்த நிலையில் பரணர் 28 குறிஞ்சித் திணைப்பாடல்களையும் பெயர் அறியப்பெறாத புலவர்கள் இயற்றியதாக 21 குறிஞ்சித்திணைப் பாடல்களும் காணப்படுகின்றன. மேலும் சங்கம் மருவிய கால இலக்கியத்திலுள்ள குறிஞ்சித்திணைப் பாடல்களை மூவாதியார், மாறன்

பொறையனார், கண்ணஞ்சேந்தனார், கணிமேதாவியார், புல்லங்காடானார் எனும் ஐந்து புலவர்களும் பாடியுள்ளனர். இவர்கள் தத்தம் முறையே குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலை எத்தகைய முறையில் எவ்விதம் வெளிப்படுத்துகின்றனர் என்பதை ஆராயும் விதமாக இவ்வாய்வுக்குரிய கருதுகோள் அமைகின்றது.

## ஆய்வுச் சிக்கல்

சங்க இலக்கியத்தில் உள்ள குறிஞ்சித் திணைப் பாடல்களும், சங்கம் மருவியகால இலக்கியத்தில் உள்ள குறிஞ்சித் திணைப் பாடல்களும் ஒரே மாதிரியான துறைக் குறிப்புகளையும், முதல், கரு, உரிப் பொருள்களையும் பெற்றிருப்பது ஆய்வுக்குரிய சிக்கலாக அமைகிறது. இச்சிக்கலைத் தீர்க்கும் விதமாக அவற்றின் பாடுபொருளின் அடிப்படையில் புலவர்களால் சிற்சில புதுமையான வாழ்வியல் கூறுகள் இப்பாடல்களுள் புகுத்தப்பட்டுள்ளன. இவற்றை வெளிப்படுத்தும் விதமாக ஆராய்வதே இவ்வாய்வின் சிக்கலுக்கான தீர்வாகக் கொள்ளப்படுகிறது.

## ஆய்வு முன்னோடிகள்

சங்க இலக்கியத்திலுள்ள குறிஞ்சித் திணைப்பாடல்களை முன்வைத்து உளவியல் நோக்கிலும், பாலியல் பார்வையிலும், திணைக் கோட்பாட்டு நோக்கிலும், பண்பாட்டு நோக்கிலும், ஒப்பிலக்கிய நோக்கிலும் ஆய்வுகள் செய்யப்பட்டு முனைவர்பட்ட ஆய்வேடாகவும் பின்னாளில் நூலாகவும் வெளியிடப்பட்டுள்ளது. (சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்கள், முனைவர் பெ.தியாகராசன்).

மேலும் கேரளப் பல்கலைக்கழகத்தில் திருமதி இல.குளோறியா சுந்தரமதி அவர்களால் குறுந்திட்ட ஆய்வேடாக 2009 ஆம் ஆண்டு சங்க இலக்கியத்தில் குறிஞ்சித் திணைப்பாடல்கள் - பகுப்பாய்வு அணுகுமுறை எனும் ஆய்வேடு வெளியிடப்பட்டது.

இதைப்போலவே குறிஞ்சிப்பாட்டின் கவிதையியல், பத்துப்பாட்டின் கவிதையியல் மற்றும் சங்க இலக்கியம் சார்ந்தும் சங்ககால மக்களின் வாழ்வியல் சார்ந்தும் வெளிவந்த சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம், சங்க இலக்கியத்தில் குடும்பம், தமிழ்க்காதல், சங்ககாலச்

சமுதாயம், சங்ககாலத் தொழில் நுட்பம், தொல்காப்பியம் சுட்டும் வாழ்க்கை, தொல்காப்பியக் கவிதையியல் முதலிய நூல்களும் குறிஞ்சித்திணை சார்ந்த முனைவர்பட்ட ஆய்வேடுகளும் இவ்வாய்விற்கான முன்னாய்வுகளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**ஆய்வு ஆதாரங்கள்**

இந்த ஆய்வு முதன்மை ஆதாரங்கள், துணைமை ஆதாரங்கள் என்னும் இரண்டையும் ஆய்வு மூலங்களாகக் கொண்டுள்ளது.

**முதன்மை ஆதாரங்கள்**

இந்த ஆய்விற்கு தமிழில் தோன்றியுள்ள அகப்பொருள் கூறும் இலக்கண நூல்களும், சங்க, சங்கம் மருவிய காலக் குறிஞ்சித் திணைப் பாடல்களும் முதன்மை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**துணைமை ஆதாரங்கள்**

இவ்வாய்விற்குத் துணை நிற்கும் இலக்கணம் சார்ந்த கட்டுரை நூல்கள், குறிஞ்சித்திணை சார்ந்த நூல்கள், வாழ்வியல் சார்ந்த நூல்கள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வேடுகள் போன்றன துணைமை ஆதாரங்களாக அமைகின்றன.

**ஆய்வு அணுகுமுறை**

தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களில் உள்ள குறிஞ்சித் திணை சார்ந்த கோட்பாடுகள் முதல் இயலிலும், சங்க இலக்கியத்தில் அதிகப்படியான குறிஞ்சித்திணைப் பாடல்களைப் பாடிய இருபெரும் புலவர்களான கபிலர், பரணர் இயற்றிய பாடல்களை மையமிட்டு அதிலுள்ள மக்களின் வாழ்வியல் சார்ந்த கருத்துக்களை முறையே இரண்டாவது மூன்றாவது இயல்களிலும், நான்காவது இயலில் பெயர் அறியப்படாத புலவர்களின் குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணலாகும் மக்களின் வாழ்வியலையும், ஐந்தாவது இயலில் சங்கம் மருவியகால இலக்கியத்திலுள்ள குறிஞ்சித்திணைப் பாடல்களின்மூலம் மக்களின் வாழ்வியலையும் அவற்றின் பாடுபொருளினடிப்படையில் விளக்கிக் கூறுவதால் இவ்வாய்வு விளக்கமுறைத் திறனாய்வு அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இயல் பகுப்பு**

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை,

1. தமிழ் இலக்கண நூல்களில் குறிஞ்சி
2. கபிலர் பாடல்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்
3. பரணர் பாடல்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்
4. புலவர் பெயர் அறியப்படாத பாடல்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்
5. சங்கம் மருவிய கால இலக்கியங்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்

என்பனவாகும்.

**இயல் விளக்கம்**

**முன்னுரை**

ஆய்வுத்தலைப்பு, ஆய்வுநோக்கம், ஆய்வு ஆதாரங்கள், முன்னாய்வுகள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வுக் கருதுகோள், ஆய்வேட்டின் அமைப்பு ஆகியவற்றை விளக்குவதாக இவ்வாய்விற்குரிய முன்னுரைப் பகுதி அமைந்துள்ளது.

**இயல் - 1 தமிழ் இலக்கண நூல்களில் குறிஞ்சி**

முதலாவது இயலான 'தமிழ் இலக்கண நூல்களில் குறிஞ்சி' எனும் பகுதி, தமிழில் தொல்காப்பியம் தொட்டு இதுவரை வந்துள்ள இலக்கண நூல்களுள் குறிப்பிடத்தக்க அகத்திணையியல் மற்றும் களவு குறித்த கருத்தாக்கங்களை அதிகளவில் கொண்டுள்ள நூல்களான இறையனார் அகப்பொருளுரை, நம்பியகப் பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் முதலிய இலக்கண நூல்களிலுள்ள குறிஞ்சித்திணை சார்ந்த கருத்துக்கள் அனைத்தும் திரட்டித் தொகுக்கப்பட்டு விளக்கிக் கூறப்படுவதோடு இத்தகைய கருத்தாக்கங்கள்

காலத்திற்கேற்ப எவ்விதம் வளர்ந்து வந்துள்ளன என்பதையும் எவ்விதம் நெகிழ்ந்து வந்துள்ளன என்பதையும் ஆராய்கிறது.

அதாவது தொல்காப்பியம் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் எனும் பகுதிகளில் மட்டுமே அகப்பொருள் குறித்தும் குறிஞ்சித்திணை சார்ந்தும் கருத்துகளைப் பதிவு செய்கிறது. ஆனால் பிற்காலத்தில் வரும் நம்பிஅகப்பொருள், மாறன் அகப்பொருள் முதலிய இலக்கண நூல்கள் அகப்பொருளை மட்டுமே சிறப்பாக விளக்கிக்கூறும் விதமாகத் தனித்த நூல்களாகப் படைக்கப் பட்டுள்ளதையும், இதன்மூலம் அகப்பொருள் என்பது பிற்காலத்தில் தனிப்பட்ட ஒரு இலக்கணப் பகுதியாக வளர்ச்சியடைந்து நிற்பதையும் இவ்வியலில் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளது.

**இயல் - 2 கபிலர் பாடல்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்**

கபிலர் எனும் பெயரில் காலந்தோறும் பல்வேறு புலவர்கள் இருந்துள்ளனர். சங்க இலக்கியத்தில் கபிலர், தொல்கபிலர் எனும் புலவர்களும் சங்கம் மருவியகால இலக்கியத்தில் ‘இன்னா நாற்பது’ பாடிய கபிலரும் பிறகு பக்தி இலக்கியத்தில் பன்னிருதிருமுறைகளில் வரும் கபிலதேவ நாயனாரும் என பலர் கபிலர் எனும் பெயரில் இருந்துள்ளனர். எனினும் இவ்வியலில் சங்கக் கபிலர் இயற்றிய எட்டுத் தொகையின் குறிஞ்சித்திணைப் பாடல்கள் 190 மற்றும் பத்துப்பாட்டிலுள்ள குறிஞ்சிப்பாட்டு ஒன்று என மொத்தம் 191 பாடல்களை முன்வைத்து குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் ஆராயப்பட்டுள்ளது. இதில் குறிஞ்சிநிலம் சார்ந்த களவுக்கால நிகழ்வுகள் அனைத்தும் வரிசைமுறைப்படி ஆராயப்பட்டுள்ளன. அதாவது, இயற்கைப் புணர்ச்சி முதல் தலைவியின் களவு வாழ்வைக் கற்பாக மாற்ற முயற்சிக்கும் அறத்தொடு நிற்றல் வரை உள்ள நிகழ்வுகள் அனைத்தும் ஆராயப்பட்டு அவற்றிலுள்ள குறிஞ்சிநில மக்களான தலைவன், தலைவி, தோழி, செவிலி, பரத்தை முதலானோரின் வாழ்வியல் ஆராயப்பட்டுள்ளது. சான்றாக,

‘சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு, இவள்

உயிர்தவர் சிறிது காமமோ பெரிதே! (குறுந்.18:4-5)

எனும் பாடலடிகளின் மூலம் தலைவனிடம் வரைவு கடாவும் தோழி, தம் தோழியான தலைவியின் களவு வாழ்வியலை குறிஞ்சிநிலம் சார்ந்த பலா மரத்தோடு ஒப்பிட்டு எடுத்துரைப்பதை அறியமுடிகின்றது. இங்கு பலா மரத்தின் சிறிய கிளையைத் தலைவியின் உயிருக்கு ஒப்பாகவும், அதில் தொங்கும் பெரிய பலாப்பழத்தை அவள் தலைவன்மீது கொண்டுள்ள காலத்திற்கு ஒப்பாகவும் சுட்டும் களவுக்கால வாழ்வியல் ஆராய்ந்து அறியப்பட்டுள்ளது. மேலும், பரத்தை கூற்றில் கபிலர் இயற்றிய ஒரேயொரு பாடலான நற்றிணையின் 225 ஆம் பாடலும் ஆராயப்பட்டு பரத்தையரின் வாழ்வியல் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், குறிஞ்சிப்பாட்டு எனும் பத்துப்பாட்டு இலக்கியமும் ஆராயப்பட்டு அதில் இடம்பெற்றுள்ள தலைவியின் களவு வாழ்வியல் அறத்தொடு நிற்றல் எனும் துறையில் தோழியால் வரிசைபட எடுத்துரைக்கப்படுவதும் ஆராயப்பட்டுள்ளது.

**இயல் - 3 பரணர் பாடல்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்**

மருதத்திணை பாடுவதில் வல்லவர் பரணர் என்றாலும், குறிஞ்சித் திணையிலும் இவர் பாடல்களைப் பாடியுள்ளார். அகநானூற்றில் 15, குறுந்தொகையில் 8, நற்றிணையில் 5 என மொத்தம் 28 குறிஞ்சித்திணைப் பாடல்களை இவர் இயற்றியுள்ளார். இவரது பாடல்களில் கூற்று நிலை மாந்தர்களாகத் தலைவன், தலைவி, தோழி என மூவர் மட்டுமே இடம்பெற்றுள்ளமையும் இவர்களில் எவர் அதிகளவில் கூற்று நிகழ்த்தும் உரிமையைப் பெற்றுள்ளனர் என்பதும் இவ்வியலில் ஆராயப்படுகின்றது.

மேலும், பாங்கற்கூட்டத்து வாழ்க்கை, தலைவன் குறைஇரந்து பின்நிற்றல், தோழி தலைவியைக் குறைநயப்பித்தல், இரவுக்குறி வாழ்க்கை, அல்லகுறியில் தலைவனது நிலை, இற்செறிப்பு வாழ்க்கை, வரைவு கடாதல், வரைவிடைப் பிரிவு வாழ்க்கை, அறத்தொடு நிற்றல், வரைவு மலிதல், வரைவு (திருமணம்) முதலிய குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் செயல்பாடுகள் அனைத்தும் இவ்வியலில் பரணர் பாடல்களை முன்வைத்து ஆராயப்பட்டுள்ளன.

## இயல்-4 புலவர் பெயர் அறியப்படாத பாடல்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்

சங்க இலக்கியத்துள் புலவர் பெயர் அறியப்படாத குறிஞ்சித் திணைப்பாடல்கள் மொத்தம் 21 பாடல்கள் உள்ளன. அவை, நற்றிணையில் 17 பாடல்களும், குறுந்தொகையில் 4 பாடல்களுமாக அமைந்துள்ளன. இப்பாடல்களை முன்வைத்து குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது. இதில் தலைவி கூற்றில் ஒரேயொரு பாடலும் (குறுந்.201), பரத்தை கூற்றில் ஒரேயொரு பாடலும் (நற்.176), தலைவன் கூற்றில் 5 பாடல்களும், தோழி கூற்றில் அதிகப்படியாக 14 பாடல்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் வாயிலாகக் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் ஆராயப்பட்டு, மற்ற புலவர்களுக்கும் புலவர் பெயர் தெரியாத இவர்களுக்குமான பாடுபொருள் மாற்றங்கள் குறித்தும் வாழ்வியல் மாற்றங்கள் குறித்தும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

## இயல் - 5 சங்கம் மருவியகால இலக்கியங்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்

சங்கம் மருவியகால இலக்கியங்களான ஐந்திணை ஐம்பதில் 10 பாடல்களும், திணைமொழி ஐம்பதில் 10 பாடல்களும், ஐந்திணை எழுபதில் 14 பாடல்களும், திணைமாலை நூற்றைம்பதில் 31 பாடல்களும், கைந்நிலையில் 12 பாடல்களும் என மொத்தம் 77 குறிஞ்சித்திணைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றை முறையே மாறன் பொறையனார், கண்ணஞ்சேந்தனார், மூவாதியார், கணிமேதாவியார், புல்லங்காடானார் எனும் புலவர்கள் பாடியுள்ளனர். இதில் தலைவன் கூற்றில் 11 பாடல்களும், தலைவி கூற்றில் 18 பாடல்களும், தோழி கூற்றில் 46 பாடல்களும் இடம்பெற்றுள்ளன. எனவே கூற்று அடிப்படையில் இப்பாடல்களில் காணலாகும் குறிஞ்சிநில மக்களின் அகவாழ்வியல் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது. மேலும் இப்பாடல்களில் புறவாழ்வியலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதை இவ்வியல் ஆராய்கின்றது. அதாவது, தலைவனின் விலங்கு வேட்டை, வேட்டுவர்களின் சினம், தலைவனின் கொடைப் பண்பை காட்டுப் பசுவின் செயலோடு பொருத்தி தலைவி

கூறுதல், தலைவன் வரும் வழி ஏதம் உரைத்தல் மூலம் அவனது வீரத்தைப் புலப்படுத்துதல், தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்ட தலைவியைக் காத்த தலைவனின் வீரம், தலைவியின் தந்தையும், தமையன்மார்களும் போர்வேலினை வைத்துக் கொண்டு காவல் காத்தல், தலைவியின் அண்ணன்கள் யானைத்தந்தம், புலித்தோள் முதலியவற்றைத் திறைப் பொருளாகக் (வரியாக) கொண்டு செல்லும் போது வழியில் எதிர்ப்படுவோரை அம்பு எய்து கொல்லுதல் முதலிய வீரம், கொடை சார்ந்த குறிஞ்சிநில மக்களின் புறவாழ்வியல் கூறுகளும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

**முடிவுரை**

ஒவ்வொரு இயலின் இறுதியிலும் தரப்பட்டுள்ள தொகுப்புரையில் இடம்பெற்றுள்ள குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் குறித்த கருத்துக்களின் அடிப்படையில் பெறப்பட்ட ஆய்வுமுடிவுகள் அனைத்தும் முடிவுரை எனும் பகுதியில் விளக்கமாகத் தரப்பெற்றுள்ளன. இம்முடிவுரையின் இறுதியில் எதிர்காலத்தில் செய்யப்படவேண்டிய ஆய்வுகள் குறித்தும் அவற்றிற்கான களங்கள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**துணைநூற்பட்டியல்**

இறுதியாக, ஆய்வுக்குத் துணைநின்ற நூல்கள் குறித்தும், ஆய்வுக் கட்டுரைகள் குறித்தும், அகராதிகள், இலக்கண நூல்கள் குறித்தும் பட்டியல் தொகுக்கப்பட்டு துணைநூல்பட்டியல் அமைக்கப்பட்டுள்ளது.

# இயல்-1

# தமிழ் இலக்கண நூல்களில் குறிஞ்சி

**முன்னுரை**

எம்மொழியிலும் காணப்படாத தமிழனுக்கே உரிய வாழ்க்கைக்கான இலக்கணம் அக இலக்கணம். இந்த அக இலக்கணம் அகத்தைப் பண்படுத்தக் கூடியது. வாழ்க்கையை நெறிபடுத்த கூடியது. அதிலும் மனிதனின் முதல் இருப்பிடமாக விளங்கிய மலை, மலை சார்ந்த பகுதியைக் குறிஞ்சி நிலமாக வகைப்படுத்தியுள்ள திணைக் கோட்பாட்டினைத் தெளிவாக விளக்கி காட்டுவதற்கு ஏதுவாக முதல், கரு, உரி என்ற முப்பாடுகளை வரையறுத்துக் கொண்டனர். இவ்வரையறையின் நோக்கில் மக்களின் வாழ்க்கையையும் படம்பிடித்துக் காட்டியுள்ளனர். அவற்றுள் குறிஞ்சித் திணைக்கான இலக்கணத்தை இலக்கண நூல்கள் எவ்வாறு விளக்கியுள்ளனர் என்பதனை **'தமிழ் இலக்கண நூல்களில் குறிஞ்சி'** எனும் தலைப்பிலமைந்த இம்முதலாவது இயலில் விரிவாக ஆராயப்படுகிறது.

**அகப்பொருள் திணைகள்**

தமிழ் இலக்கண நூல்களில் அகப்பொருள் திணைகள் குறித்து தொல்காப்பியம் ஏழு திணைகளை விவரிக்கின்றது. அதில் ஒன்று குறிஞ்சித் திணை. இதனை,

> **"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்,**
> **முற்படக் கிளந்த எழுதிணை என்ப"[1]**

எனும் நூற்பா மூலம் அறியலாம். மேலும் இறையனார் அகப்பொருள் உரை எனும் இலக்கண நூலும் அன்பின் ஐந்திணை குறித்தும் களவு குறித்தும் குறிப்பிடுகின்றது.

> **"அன்பி னைந்திணைக் களவெனப் படுவ**
> **தந்தண ரருமறை மன்ற லெட்டனுட்**
> **கந்தருவ வழக்க மென்மனார் புலவர்"[2]**

என்ற நூற்பா எட்டு வகையான திருமண முறைகளுள் குறிஞ்சித் திணைக்குரிய கந்தருவ மணம் குறித்துப் பேசுகிறது. இதைப்போலவே நம்பி அகப்பொருளும் அகத்திணைகளை ஏழாக வகைப்படுத்துகிறது. இதனை,

**"அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை**

**பெருந்திணை எனஎழு பெற்றித்(து) ஆகும்."[3]**

எனும் நூற்பாவால் அறியலாம். மாறன் அகப்பொருள் என்னும் இலக்கண நூலும் எழுவகை அகத்திணை பற்றி விளம்புகிறது. மேலும் குட்டித் தொல்காப்பியம் என்று அழைக்கப்படும் இலக்கண விளக்கமும் கைக்கிளை முதல் பெருந்திணை வரை அகத்திணைகள் ஏழு என்று வகைப்படுத்துகின்றது. (நூ-376). ஆனால் தொன்னூல் விளக்கம் மட்டும் அகத்திணை 12 என வகைப்படுத்துகின்றது. இதனை

**"இயல்பே அறைபடும் வகையே**

**பொதுச்சிறப்பு உவமை புறநிலை எதிர்நிலை**

**கருவி காரியம் காரகம் முன்னவை**

**பின்னவை எனவாம் பிரிவு ஈராறே"[4]**

எனும் நூற்பாவால் அறியலாம்.

முத்துவரிரியமும் ஏழவகைத் திணைகளை குறிப்பிடுகின்றது (நூ-770). சுவாமி நாதம் என்னும் இலக்கண நூல்

**"திணை குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஐந்தாம்"[5]**

என்று அகத்திணையை ஐந்தாக வகைப்படுத்துகின்றது. ஆனால் அறுவகை இலக்கணமோ புறப்பொருள் எனும் பகுதியில்

**"புறப்பொருட் பகுதியில் பொருவில் ஐவகை**

**நிலத்து இயல்பு உரைக்குதும் நிகழுந்த வாறே"[6]**

என்று ஐந்து திணைகளின் பெயர்களைக் குறிப்பிடுகின்றது.

**‘‘அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்**

**புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்’’[7]**

முற்படக் கிளந்த எழுவகை அகம் பற்றி என புறத்திணை கூறுகிறது. இங்குத் தொல்காப்பியம், நம்பியகப்பொருள், மாறனகப் பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், முதலிய இலக்கண நூல்கள் எழுவகைத் திணைகளைப் பற்றியும் தொன்னூல் விளக்கம் அதிகபட்சமாகப் பனிரண்டு திணைகள் பற்றியும் இறையனார் அகப்பொருள், சுவாமி நாதம், அறுவகை இலக்கணம் ஆகிய இலக்கண நூல்கள் அகத்திணை ஐந்தே என்றும் எடுத்து இயம்புகிறது.

**குறிஞ்சித்திணை**:

தொல்காப்பிய பொருளதிகாரம் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய இயல்களில் குறிஞ்சித்திணைப் பற்றிக் கூறுகிறது.

**‘‘மண்புரை மாசுனம் விலங்கிய நெறிய**

**மலைஇ மணந்த மயங்கரி லாரலற்**

**நிலைபொலந் திலங்கு வைவே லேந்தி**

**இரும்புபிடிப் புணர்ந்த செம்மல் பலவுடன்**

**பெருங்களிற்று தொழுதியோ டெண்குநிரை இரிய**

**நிரம்பா நெடுவரை தத்திக் குரம்பமைந்து’’[8]**

இவ்வாறு தொல்காப்பியம் குறிஞ்சித் திணைக்குச் செய்யுளியற்றி, இதன் வழி குறிஞ்சி மலைகள் நிறைந்து காணப்படுகின்றது என உணர்த்துகிறது.

**‘‘கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**

**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பு’’[9]**

என்ற பாடல்வழி மலை சூழ்ந்த உலகிற்குக் குறிஞ்சிப் பூ சிறந்தது என்கிறது குறுந்தொகை.

நம்பியகப்பொருள் அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் ஆகிய ஐந்து இயல்களிலும் ஆங்காங்கே ஐந்திணைகளுள் குறிஞ்சித்திணை பற்றிக் குறிப்பிடுகிறது. இறையனார் அகப்பொருளும் களவியல் கற்பியலில் குறிஞ்சி பற்றிக் குறிப்பிடுகிறது. ஆவிநயம், அமுதசாகரம், தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமி நாதம் முதலிய இலக்கண நூல்கள் தன் இயல்கள் வழி குறிஞ்சிப் பற்றி நூற்பா வாயிலாகக் குறிப்பிடுகிறது.

**‘‘வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்**

**கோடாது நீர்கொடுப்பின் நல்லது- கோடா**

**பொழிலினும் விளையாமோ போந்து’’** [10]

இது கற்பிற்புணர்வு பற்றிக் கூறுகிறது.

**முப்பொருள் பாகுபாடு:**

முதல், கரு, உரி ஆகிய மூன்றும் இணைந்து காணப்படுவதைத் திணை என்கின்றோம். குறிஞ்சித் திணை குறித்து இலக்கண நூல்கள் யாவும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் மூன்றையும் பாகுபடுத்தியுள்ளது.

**“முதல், கரு, உரிப்பொருள் என்ற மூன்றே,**

**நுவலுங் காலை முறைசிறந்தனவே,**

**பாடலுள் பயின்றவை நாடும் காலை”**[11]

எனும் நூற்பாவில் தொல்காப்பியர் முப்பொருள் பற்றிக் கூறுகிறார். நம்பியகப்பொருள் அகத்திணையியரும்,

**“அவைதாம்,**

**முதல்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என முறை**

**நுதல் பொருள் மூன்றினும் நுவலப்படுமே”**[12]

என முப்பொருள் பற்றிக் கூறுகின்றது.

**“அவற்றுள்ளும்**

**முதனிலம் பொழுதென மொழியிரு வகைத்தே”[13]**

என்று நிலம், காலம் ஆகிய முதற்பொருள் பற்றியும், “திணைநிலைப்பெயர் திணை” என்ற நூற்பா மூலம் கருப் பொருள் பற்றியும்

**“பாடலுட் புணர்தல் பிரிதலிருந்த**

**லூட்டரங் கலவற் றினிமித் தமென்றா**

**யிரண்டைத் திணைக்கமைத்தவுரிப் பொருள்”[14]**

என உரிப்பொருள் பற்றியும் சுவாமி கவிராயர் கூறுகிறார். இதைப்போலவே,

இலக்கண விளக்கமும் முப்பொருள் பற்றியே குறிப்பிடுகின்றது.

தொன்னூல் விளக்கம் முப்பொருளில் கருப்பொருளை மட்டும் விவரிக்கின்றது. அதே போல் முத்து வீரியம்

**“முதல், கரு, உரிப்பொருள் மூன்றே ஆகுதுமே”[15]**

என்று முப்பொருள் பற்றிக் கூறுகின்றது.

**குறிஞ்சி முதல் பொருள்**

நிலமும், பொழுதும் முதல்பொருள் என்கிறது தொல்காப்பியம்.

**“சேயோன் மேய மைவரை உலகமும்”[16]**

என்று குறிஞ்சித் திணையின் நிலம் பற்றியும் கடவுளான முருகப்பெருமானைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. மேலும், தொல்காப்பியம் குறிஞ்சி மலைசார்ந்த இடமெனக் கூறுகின்றது. இதனை,

**.................................................. குறிஞ்சி**

**கதிர் யாமம் என்மனார் புலவர்”[17]**

என்று பொழுதுகளை பெரும்பொழுது கூதிர் என்றும் சிறு பொழுது(யாமம்) எனவும் வகைப்படுத்தியுள்ளார். கூதிர் காலமைவது

ஐப்பசி, கார்த்திகை எனவும் யாமம் இராப்பொழுதின் நடுக்கூறு எனவும் அகப்பொருள் விளக்கத்தில் குறிஞ்சித்திணைக்கான முதல்பொருள்கள் விளக்கப்படுகின்றன.

**‘‘முதல் எனப்படுவது நிலம் பொழுதிரண்டின்**

**இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே’’[18]**

என்று திணைக்கான முதற்பொருள் குறித்து விளக்கம் கூறியுள்ளார் தொல்காப்பியர். மேலும், நம்பி முதற்பொருள் குறித்துக் கூறுகையில்,

நிலமும் பொழுதும் முதற்பொருள் என்று உரைக்கிறார்.

**“நிலமும் பொழுதும் என முதல் இருவகைத்தே”[19]**

**“வரையே சுரமே புறமே படினம்**

**திரையே அவையவை சேர்தரும் இடனே**

**எனார் ஐவகைத்து அணையியல் நிலமே”[20]**

வரையென்ற மலையை சார்ந்த இடம் குறிஞ்சி நிலத்திற்கு உரியது என்கிறார் நாற்கவிராச நம்பி. இதனைத் தொடர்ந்து பொழுது என்பதற்கு விளக்கம் கூறுகையில்,

**“பெரும் பொழுது என்றா சிறுபொழுது என்றா**

**இரண்டு கூற்றது இயம்பிய பொழுது”[21]**

தொல்காப்பியரைப் போலவே இவரும் பெரும் பொழுது என்றும் சிறுபொழுது என்றும் பொழுதை இருவகையாகப் பரித்துக் காட்டியுள்ளார். அப்பொழுதுகளுக்குரிய காலங்கள் எவையென என்பதனை அடுத்தடுத்துக் கூறமுற்பட்டுள்ளார்.

**‘‘கூதிர் யாமம் முன்பனி என்றிவை**

**ஓதிய குறிஞ்சிக்கு உரிய வாகும்’’[22]**

என்று விளக்கம் கூறியுள்ளதன்வழி அறியமுடிகிறது.

## குறிஞ்சித் திணைக்குரிய பெரும் பொழுது

கூதிர் முன்பனி, சிறுபொழுது யாமம் ஆகும். அகப்பொருள் கூறும் பெரும்பொழுது ஆறு ஆகவும், சிறுபொழுது ஐந்து ஆகவும் 11வகையினுள் 3 குறிஞ்சித் திணைக்குரியது.

**பெரும்பொழுது**

கூதிர் – ஐப்பசி, கார்த்திகை

முன்பனி – மார்கழி, தை

**சிறும்பொழுது**

யாமம் - நள்ளிரவு

மாறன் அகப்பொருளில் குறிஞ்சிக்குரிய நிலமாகிய முதற்பொருள் "மலை" என்கிறது குறிஞ்சிக்குரிய பெரும் பொழுதும், சிறு பொழுதும் பற்றிக் கூறுகையில்,

**"அவற்றுள்**
**யாமங் கூதிர் முன்பனி குறிஞ்சியதே"[23]**

என்று கூறியுள்ளார். யாமம், கூதிர், முன்பனி என்ற பொழுதுகள் குறிஞ்சியின் பொழுதுகள் என்கிறது மாறன் அகப்பொருள்.

**"கூதிர் யாமம் முன்பனி என்று இவை**
**ஓதிய குறிஞ்சிக்கு உரிய ஆதலும்"[24]**

என்று மேற்கண்ட இலக்கண நூல்களைப் போலவே இலக்கண விளக்கமும் விளக்குகின்றது.

தொன்னூல் விளக்கம் கால உரிமையைப்பற்றி

**"கூதிர்க்கு உரிமை கூதிரே குருகே**
**ஒதிமம் குரண்டம் ஒண்மதிச் சகோதரம்**
**முதுவளை நண்டு ஊரும் நத்து உவத்தல்**
**நீரே தெளிதல் நீர்மின் சனித்தல்**

**காரே சூலகொளல் பாரிசாதம் சந்து**

**ஆரம் பித்திகை மாங்காரம் நாணல்**

**முற்றலர்ந்து உவந்திலே மற்றுஉயிர் நைதலே"[25]**

கூதிர் காற்று குருகு, அன்னம், கொக்கு, சகோரபுல், சங்கு, நண்டு, நத்து ஆகியன மகிழ்தலும் நீர் தெளிதல் மீனினம் ஈனித்தல் மேகம் சூர்கொள்ளல் பாரிசாதம் சந்தனம் சிறு சென்பகம் என இவை மலர்தல் பறவை விலங்கு மக்கள் வறுந்துதல் ஆகியவை தொன்னூல் விளக்கம் கூறும் பெரும்பொழுதின் நிகழ்ச்சிகள்.

ஆகரிராகம் பாடல் கூகையோடு சமுகாரம் மகிழ்தல் பெருங்கடல் வந்து பொங்கல் காமம் களவு மிகுதல் ஆகியவை தொன்னூல் விளக்கம் கூறும் சிறுபொழுதாகிய யாமம் கூறும் நிகழ்ச்சிகளாகும்.

**முத்து வீரியம்**

முத்து வீரியத்தில் காலத்தில் உள்ள நிகழ்ச்சிகள்,

**"கூதிருயவை வீசல்கொக்கொடுவாள்**

**அன்னச்சங்க மகிழுற லுதகன்**

**தெலிதன் மீனினம் செனித்தன் முகில் குலாஞ்**

**சூற்க்கொளல் சிறுசெண்பக பாரிசாத**

**மலர்தன் மாணவர் வறுந்துதல் கூதிர்காலங்**

**கரிமையான் காணுங் காலே"[26]**

கூதிர் காற்றடித்தல் கொக்கு, அன்னம், சங்கு மகிழ்தல், நீர் தெளிதல், மீனினம் சினித்தல் மேகங்கள் சூழ்கொளல். சிறியசெண்பகமும் பாரிசாதம் மலர்தல் மானிடர் வருந்துதல் ஆகிய நிகழ்ச்சிகள் முத்து வீரியம் கூறும் பெரும்பொழுதாகிய கூதிர் காலத்திர்க்குரிய நிகழ்ச்சிகள்.

**முத்துவீரியம் கூறும் யாமப்பொழுதிற்குரிய நிகழ்ச்சிகள்**

**"கூகை சகோரம் குழமையுள் மகிழ்தல்**

**கடனிற் பொங்கல் களவு மேம்படுதல்**

**யாமக்குரிமைய வாகுமென்ப"[27]**

கோட்டான், சகோதரம் மகிழ்தல் கடல்நீர் அதிகப்படல் கடல்நீர் அதிகமாதல் ஆகிய நிகழ்ச்சிகள் முத்து வீரியம் கூறும் யாமத்திற்குரிய நிகழ்ச்சிகளாகும். தொல்காப்பியம், தொன்னூல் விளக்கம் ஆகியவை அறுவகை சிறுகொழுதுகளைக் குறிக்கின்றன. முத்துவீரியம் ஐவகை சிறு பொழுதுகளை மட்டும் கூறியுள்ளது.

**கருப்பொருள்களின் ஒப்பீடு**

**''பெருவரை இழிதரும் நெடுவெள் ளருவி**
**ஓடை யானை உயர்மிசை எடுத்த**
**ஆடுகொடி கடுப்பத் தோன்றும்**
**கோடுயர் வெற்பன் உறீஇய நோயே''[28]**

என்று மதுரை மருதனிள நாகனார் மலைசார்ந்த அருவிக்காட்சியை உருவகித்துள்ளதன்வழி போது இவ்வுண்மையை அறியமுடிகிறது.

**தெய்வம்**

குறிஞ்சிக்குரிய தெய்வம் முருகன் என்பதாகும். மலையும் மலை சார்ந்த இடமெல்லாம் முருகன் பெருமான் பற்றி குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான்'' என்ற பழமொழியை யாவரும் அறிந்தது.

தொல்காப்பியம் குறிஞ்சிக்குரிய தெய்வம் 'சேயோன்' என்கிறது. அதைப்போலவே இலக்கண விளக்கமும் நம்பியகப்பொருளும் 'சேய்' என்கிறது. இறையினார் அகப்பொருள் 'முருகவேள்' என்றும் தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், முத்துவீரியம் ஆகிய நூல்களில் முருகன் என்றும் கூறப்பட்டுள்ளது.

**உணவு**

குறிஞ்சி நிலமக்களின் உணவு, தினை, ஐவனம் வெதிர் நெல் என்று தொல்காப்பியமும் இறையனார் அகப்பொருளும் கூறுகின்றது. தமிழ் நெறி விளக்கம் தினையே குறிஞ்சி மக்களின் உணவு என்கிறது. வீர சோழியம் தேன் எனவும் இலக்கண விளக்கம், மாறனகப்பொருள்

நம்பியகப்பொருள் ஆகியவை மலைநெல், மூங்கிலரிசி, தினை என்று கூறுகின்றது. மேற்காட்டியுள்ள இலக்கண நூல்கள் குறிஞ்சி நிலத்திற்கான உணவுகள் குறித்து கூறியிருக்க முத்துவீரியம் உணவு குறித்து எதுவும் கூறப்படவில்லை.

**விலங்கு**

குறிஞ்சித்திணைக்கான விலங்குகள் குறித்துக் கூறுகையில் யானை, புலி, பன்றி, கரடி என்று தொல்காப்பியமும் புலி, பன்றி, யானை என்று இறையனார் அகப்பொருளும் யானை என்று வீரசோழியமும் புலி, கரடி, யானை, சிங்கம் என்று நம்பியகப்பொருளும் கிளி, மயில், புலி சியம் என்று இலக்கண விளக்கமும் புலி, கரடி, யானை, சிகண்டி, முயல், மான், பன்றி, உடும்பு, வரையாடு, சிங்கம் ஆகிய விலங்குகள் குறிஞ்சிக்கு உரியது என்று சுவாமி நாதமும் கூறுகின்றன.

**மரம்**

வேங்கை, கோங்கு என்று தொல்காப்பியமும், தமிழ் நெறிவிளக்கமும் கூறுகிறது. மூங்கில் என்று வீரசோழியம் கூறுகிறது. சுந்தனம், தேக்கு, அகில், அசோகம், நாகம், மூங்கில், அசோக் என்று நம்பியகப்பொருளும் குறிப்பிட்டுள்ளன. கடம்பு, அசோகு, புன்னை, தேக்கு, வேங்கை, கோங்கு, அகில் என்று சுவாமிநாதம் கூறுகிறது. ஆரம், தேக்கு, அசோகம் என்று முத்துவீரியம், இலக்கண விளக்கம் ஆகிய இரு நூல்களும் கூறியுள்ளன.

**புள் (பறவை)**

மயில், கிளி என்று தொல்காப்பியம் இறையினார் அகப்பொருள், நம்பியகப்பொருள், முத்துவீரியம் ஆகிய நூல்கள் குறிஞ்சிக்குரிய பறவைகள் குறித்துக் கூறியுள்ளன.

**பறை**

வெறியாட்டுத் தொண்டகம் என்று தொல்காப்பியம் கூறுகிறது. இறையனார் அகப்பொருளும் நம்பியகப்பொருளும் மீதமுள்ள இலக்கண நூல்கள் யாவும் தொண்டகப்பறை என்று மட்டும் கூறுகின்றன.

**செய்தி**

தேனழித்தல், கிழங்கு அகல்தல், குன்றம் ஆடுதல், கிளி கடிதல் என்று இறையனார் அகப்பொருள் உரைக்கின்றது. வெறியாடல் மலைநெல் விதைத்தல் திணை காத்தல் தேனழித்தல் கிழங்கு அகழ்ந்தெடுத்தல், அருவி நீராடல், சுனை நீராடல் ஆகியவற்றைப் பிற இலக்கண நூல்கள் எடுத்துரைக்கின்றன.

**யாழின் பகுதி**

தொல்காப்பியம் முதலாக சுவாமி நாதம் ஈராக உள்ள இலக்கண நூல்களில் குறிஞ்சியாழ், குறிஞ்சி பண் பற்றிக் கூறுகின்றன.

**‘பூ**

வேங்கை, காந்தன், குறிஞ்சி, குவளை, இலவம் ஆகிய பூக்களைப் பற்றி இலக்கண நூல்கள் உரைக்கின்றது. தமிழ் நெறி விளக்கம் மட்டும் பூ பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

**நீர்**

சுனைநீர், அருவிநீர் ஆகிய நீர்நிலைகள் பற்றி தொல்காப்பியம் முதலாக அனைத்து இலக்கண நூல்களும் உரைக்கின்றன. ஆனால் வீரசோழியம் நீர் பற்றிக் குறிப்பிடவில்லை.

**தலைமகன் பெயர்**

தலைமகன் பெயர் பற்றித் தொல்காப்பியம் எதுவும் கூறவில்லை. சிலம்பன், வெற்பன், பொருப்பன் என்று இறையனார் அகப்பொருளும் நம்பியகப் பொருளும் கூறுகின்றன. இதையே முத்துவீரியமும் இலக்கண விளக்கமும் கூறுகின்றன. குகன், சிலம்பன் என்று சுவாமிநாதமும் கூறுகின்றது.

**தலைமகள் பெயர்**

தலைமகள் பெயர் பற்றித் தொல்காப்பியம், நம்பியகப்பொருள், வீரசோழியம் ஆகிவை குறிப்பிடவில்லை. கோடிச்சி, குறத்தி என்று சுவாமிநாதமும் இலக்கண விளக்கமும் முத்துவீரியமும் கூறுகின்றன.

**ஊர்**

கருப்பொருளில் ஒன்றான ஊர் பற்றிச் சுவாமிநாதம், தொல்காப்பியம், வீரசோழியம், தமிழ்நெறி விளக்கம் குறிப்பிடவில்லை. ஏனைய பிறநூல்களில் சிறுகுடி என்றும் குடிச்சி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மக்கள் பெயர்**

மக்கள் பெயர் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. குறவர், இரவலர், குன்றவர், காணவர் ஆகியோர் குறிஞ்சித் திணைக்குரிய குடிமக்கள் என்று இலக்கண உரைகள் யாவும் எடுத்துரைக்கின்றன.

**குறிஞ்சிக்குரிய கருப்பொருள்**

குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் தங்கள் வாழும் நிலத்தோடு தொடர்புடைய உயிருள்ள, உயிரற்ற பொருட்கள் அனைத்தையும் கருப்பொருட்களாகக் கொள்வர்.

**"தெய்வம், உணவே, மா, மரம், புள், பறை**
**செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ**
**அல்வகை பிறவும் கருஎன மொழிப"**[29]

என்ற கருப்பொருள் பற்றிய நூற்பா வழி தொல்காப்பியர் கூறியுள்ளார். தெய்வம், உணவு, மரம், பறை, இசை, செய்தி, யாழ் ஆகியன குறிஞ்சி நில மக்கள் பயன்படுத்தும் வாழ்க்கைக்குத் தேவையான பிற இவையனைத்தும் கருப்பொருளைக் கொள்ளப்படும் என்று தொல்காப்பியர் கருத்தாகக் கொள்ளலாம்.

குறிஞ்சிக்குத் தெய்வம் முருகவேள் மைவரையுலகமும் கூதிர்க் காலமும் நள்ளிருளும் நிகழ்பவை கொள்க: உணவு-திணையும் ஐவனமும் வெதிர் நெல்லும்: மா-யானையும் புலியும் பன்றியும் கரடியும்: மரம்-வேங்கையும் கோங்கும்: புள்-மயிலும் கிளியும்:பறை-வெறியாட்டுப் பறையும், தொண்டகப்பறையும்: செய்தி-தேனழித்தல்: பண்-குறிஞ்சி பிறவும் என்றதனால்: பூ-வேங்கைப் பூவும், காந்தட்பூவும்

குறிஞ்ச்சிப்பூவும்: நீர்-சுனைநீரும், அருவி நீரும் பிறவும் என்று பொருள் விளக்கம் கொள்ளலாம்.

**இலக்கணவிளக்கத்தில் குறிஞ்சி கருப்பொருள்**

**“விறற்சேய் பொருப்பன் வெற்பன் சிலம்பன்**
**குறத்தி கொடிச்சி குறவர் கானவர்**
**குறத்தியர் கிளிமயில் மறப்புலி குடாவடி**
**கறையடி சீயம் சிறுகுடி அருவி**
**நறுஞ்சுனை வேங்கை குறிஞ்சி காந்தள்**
**ஆரம் தேக்கு அகில் அசோகம் நாகம்**
**வேரல் ஐவனம் தோரை ஏனல்**
**கறங்கு இசைத்தொண்டகம் குறிஞ்சியாழ் குறிஞ்சி**
**வெறிகோள் ஐவனம் வித்தல் செறிகுரல்**
**பைந்தினை காத்தல் செந்தேன் அழித்தல்**
**செழுங்கிழங்கு அகழ்தல் முழங்குவீர்**
**-அருவியொடு**
**கொழுஞ்சுனை ஆடல் குறிஞ்சிக்குக்கருப்பொருளே”**[30]

என்று பதினான்கு வகைகருப்பொருளை இலக்கணவிளக்கம் பகற்கிறது தொன்னூல் விளக்கத்தில் குறிஞ்சிக்கருப்பொருள்கள் பற்றிக் கூறுகையில்,

**“குறிஞ்சிக் கருப்பொருள் குமரன் தெய்வமே**
**வெறி அணிப் பொருப்பின் வெற்பன்சிலம்பன்**
**குறத்தி கொடிச்சி குறவர் கானவர்**
**குறத்தியர் கிளி மயில் மறப்புலிகுடவாடி**
**கறையடி சீயம் சிறுகுடி அருவி**
**நறுஞ்சுனை வேங்கை குறிஞ்சி காந்தள்**
**ஆரம் தேக்கு அகில் அசோகம் நாகம்**
**வேரல் ஐவனம் தோரை ஏனல்**

**கறங்கு இசை தொண்டகம் குறிஞ்சியாழ் -குறிஞ்சி**

**வெறிகொள் ஐவனம் வித்தல் செறிகுரல்**

**பைந்தினை காத்தல் செந்தேன் அழித்தல்**

**செழும் இழங்கு அகழ்தல் கொழும் அனைஆடலே ”[31]**

மேற்கண்ட பதினான்கு வகை கருப்பொருள்களைப் பற்றியே நம்பியகப்பொருளும் கூறுகின்றது. அவ்வாறே மாறன் அகப்பொருளும் கூறுகின்றது.

**முத்து வீரியத்தில் குறிஞ்சிக்குரிய கருப்பொருள்கள்**

**“வேற்கர முருகன் வெற்பன் சிலம்பன்**

**குறத்தி கொடிச்சி குறவர் காணவர்**

**குறத்தியர் கிளிமயில் கொல்சினக் களிறு**

**அரிமாச்சிறுகுடி யருவி யகன்சுனை**

**ஆரந் தேக்ககிலேசாக மைவனம்**

**உணாத் தொண்ட கந்தினை யோம்பல்”[32]**

**-குறிஞ்சியாழ்**

குறிஞ்சிக் கருப்பொருளாங்குறித்திடினே என்று முத்து வீரியம் குறிஞ்சி நில மக்களின் தெய்வம், குறிஞ்சி மக்களின் பெயர் என்று கருப்பொருளையும் அதன் பெயர்களையும் விளக்குகிறது. சுவாமி நாதம் கூறும் குறிஞ்சிக்கருப்பொருள் (நூற்பா.668) குறிஞ்சிக் கருப்பொருள் கூறும் சுவாமிநாதம் கருப்பொருள்களை வகைவகையாகக் கூறியுள்ளது. அறுவகை இலக்கணமோ எவ்வித கருப்பொருள் பற்றியும் கூறவில்லை.

தொல்காப்பியம் முதல் 19ஆம் நூற்றாண்டு இலக்கண நூல்கள் வரை அகத்திணை பற்றிக் கூறுகின்றன. அதில் குறிஞ்சி பற்றிய பாடல்கள் அழகுற அமைந்துள்ளது. கருப்பொருள்களே குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. குறிஞ்சி நில மக்கள் வாழ்க்கை முறை அவர்களின் தொழில் பற்றியும் மேற்கண்ட இலக்கணநூல்கள் கருப்பொருள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றன. தொல்காப்பியம் குறிஞ்சிக்குச் சேயோன் கடவுள் என்று

கூறுகிறது. அகப்பொருள் விளக்கம் குறிஞ்சிக் கடவுள் முருகன் என்கிறது.

**தொல்காப்பியத்தில் உரிப்பொருள்**

> **“புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
> **ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை**
> **தேருங்காலை திணைக் குரிப்பொருளே”[33]**

புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் அவற்றின் நிமித்தம் என்று இவை புணர்தலும், பிரிதலும், இருத்தலும், இரங்கலும், கூடலும் அவற்றின் நிமித்தமும் என்று சொல்லப்பட்ட இவை தேரும் காலை திணைக்கு உரிய உரிப்பொருள். இதில் குறிஞ்சிக்கு “புணர்தலும் புணர்தல் நிமித்தமும்'' உரித்தான உரிப்பொருளாகும் என்பதை இலக்கண நூல்கள் வழி அறிந்துகொள்ள முடிகின்றது.

**அகப்பொருள் விளக்கத்தில்**

> **“புணர்தலும் பிரித்தலும் இருத்தலும் ஊடலும்**
> **இரங்கலும் இவற்றின் நிமித்தமும் என்று - ஆங்கு”[34]**

எய்திய உரிப்பொருள் ஐ இரு வகைத்தே குறிஞ்சித் திணைக்குரிய உரிப்பொருள் தலைவன் தலைவி புணர்தலும் புணர்தல் நிமித்தமும் அகப்பொருள் விளக்கமும் தொல்காப்பியத்தைப் போல பத்து வகை உரிப்பொருளையே குறிக்கின்றது.

ஒவ்வொரு திணைக்கும் உரிப்பொருளும் நிமித்தமும் வருகின்றது. புணர்தல், பிரிதல் இருத்தல், ஊடல், இரங்கல் இவற்றோடு அதன் நிமித்தமும் இணைந்து பத்து வகையானது.

> **‘‘முதுக்குறைந்த தனலேழ் முதுகுறைந்த தனலேழ்**
> **மலையன் ஒல்வேர் கன்னிமுலையும் வாரா முதுகுறைந்தனலே”[35]**

இ∴து உரிப்பொருள் ஒன்றுமேல் வந்த குறிஞ்சிப்பாட்டு.

**இலக்கண விளக்கத்தில் உரிப்பொருள்கள்**

> **“புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும்**
> **இரங்கலும் இவற்றின் நிமித்தமும் என ஆங்கு**
> **எய்திய உரிப்பொருள் ஐ இருவகைத்து அவை**
> **ஓர் இரண்டு ஓர் இரண்டு உரைத்த ஐந்திணைக்கும்**
> **நேரும் என்மனார் நெறி உணர்ந்தோரே”[36]**

என்று புணர்தல் மற்றும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சிக்கு உரியது என்று இலக்கண விளக்கம் உரைக்கிறது.

**சுவாமி நாதத்தில் குறிஞ்சி உரிப்பொருள்**

> **“புணர்வு, பிரிவு, இருப்பூடல் இரங்கல் அவ்வநிமித்தம்**
> **போற்றும் இரண்டிரண்டாய் ஐந்திணைக்கும் உரிப்பொருளாய்”[37]**

என்று புணர்வு பற்றியே குறிஞ்சிக்கு உரைக்கிறது சுவாமிநாதம்.

தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் ஈறாக உள்ள இலக்கண நூல்கள் யாவும் குறிஞ்சிக்கு புணர்தலும் புணர்தல் நிமித்தமும் உரிப்பொருளாகும் என்று கூறியுள்ளதனை உணர்ந்துகொள்ள முடிகின்றது.

**குறிஞ்சித்திணைக்கு இணையான புறத்திணை**

புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆகிய உரிபொருள் களவு, கற்பு எனும் இருவகைக் இருவகைக் கைக்கோளினும் நிகழுமாதலின் அவ்விருவகைக் கைக்கோளினும் களவு ஆகிய கைக்கோள் பற்றிப் பின் கூறப்பட்டுள்ளது.

வெட்சி குறிஞ்சிக்குப் புறனானது. ஏனெனில் நிறைகோடல் குறிஞ்சிக்குறிய மலை சார்ந்த நிலத்தின்கண் நிகழும் அந்நிலத்து மக்கள் பிறநாட்டு ஆநிரையைக் களவில் கோடல் ஒரு புடைக் குறிஞ்சிக்கு உரித்தாகிய களவோடு ஒன்றுவதாலும் அதற்கு அது புறனாயிற்று என்பதனை,

**‘‘வெட்சித்தானே குறிஞ்சியது புறனே’’**[38]

எனும் சூத்திரத்தால் அறியமுடிகிறது. மாட்டேறு பெறாதாம் அதனிடை களவியலும் கற்பியலும் கிடைத்தலான் என்பதனால் இந்நால்வகையும் இதனுள் உரைக்கப்படுகின்றது என்று கொள்ளப்படும்.

காமப்புணர்ச்சி எனினும் இயற்கைப்புணர்ச்சி எனினும் முன்னுறு புணர்ச்சி எனினும் தெய்வப்புணர்ச்சி எனினும் இவையெல்லாம் காரணத்தோடு எழுந்த காரணப் பெயரே.

**தலைவனின் இயல்பு**

அகத்திணைக்கு இலக்கணம் கூறியுள்ள தொல்காப்பியர் அத்திணைகளுக்கான தலைமக்களின் இயல்பு குறித்துக் கூறுகையில்

**‘‘பெருமையும் உரனும் ஆடூஉ மேன’’**

பலியும் பாவமும் அஞ்சுதல் உரன் என்ற அறிவு இவை இரண்டும் ஆண்மகனுக்கு இயல்பு என்றும்,

**‘‘அச்சமும் ஞாணும் மடனும் முந்துறுதல்**

**மிச்சமும் பெண்பார்க் குரிய என்ப’’**[40]

அச்சம் நாணம் பேதைமை இவை மூன்றும் பெண்டிற்கு இயல்பு என்றும் தலைமக்களுக்கான இயல்புகள் குறித்துக் கூறியுள்ளார்.

**தலைவன் தோழியிடம் பேசும் சூழல்**

குறிஞ்சி நிலத்தலைவன் - தோழியிடம் எந்தெந்த சூழல்களில் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவன் என்பதனைப் பற்றித் தொல்காப்பியர் கூறுகையில்

**‘‘பண்பிற்ணு பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினும்**

**அன்புற்று நகினும் அவட் பெற்று மலியினும்**

**ஆற்றிடை யுறுதலும் அவ்வினைக் கியல்பே’’**[41]

என்று கூறியுள்ளார். தலைமகள் இளமைப்பண்பு கூறி பெயர்த்த வழி தலைமகன் கூறியது அதற்குச் செய்யுள்,

**‘‘குன்றக் குறவன் காதல் மடமகள்**

**வண்டுபடு கூந்தல் தண்தழைக் கொடிச்சி**

**வளையல் முளைவாள் எயிற்றள்**

**இளைய ளாயினும் ஆரணங்கினளே’’[42]**

பரிந்த வுள்ளத்துடன் மெலிதலுறுதலும் பரிவுற்றுத் தொழி மெலிகலாவது ‘‘உடம்படுவளியாள்’’ என்றாற் போல வருவது .

**அவ்வழித் தலைமகன் கூற்று**

அன்புத் தோன்றும் உள்ளத்துடன் நக்கக்காறும் கூற்று நிகழும் தோழி உடன்பாட்டினைப் பெற்று மகிழ்தல் இரட்டுற மொழிதலால் தலைமகளை இருவகைக் குறியையும் பெற்று மகிழும் எனக் கொள்க.

**‘‘பாங்கற் நிமித்தம் பன்னிரண்டு என்ப’’[43]**

**கூற்று**

அகப்பாடல்கள் அகமாந்தர்கள் மொழிவதாக அமையும். இக்கிளத்தல் முறை கூற்று எனப்படும்.

தொல்காப்பியர் அகத்திணையியல், களவியல், கற்பியல் ஆகிய மூன்று இயல்களில் வரும் மாந்தர்களுக்கு உரிய கிழவிகளைத் தொகுத்து உரைக்கின்றார். கூற்றுக்குரியர் அவர்களுக்குரிய கிழவி போன்றவற்றை தெளிவுப்படுத்திய தொல்காப்பியர் கேட்போர் பற்றிய ஆய்வையும் நிகழ்த்தியுள்ளார்.அகமாந்தர் அல்லாத பிறவும் அகப்பாடலுள் பயின்று வரும் முறையையும் சூழலையும் நோக்கத்தையும் விவரித்துள்ளார்.

**தொல்காப்பியர் கூறும் அகப்பொருள் மாந்தர்கள்**

அகத்திணை மரபின் முக்கியக் கொள்கையாகக் கருதப்படுவது கைகோள் ஆகும். கைகோள் என்பது களவு, கற்பு எனும் இருவகைப் பாகுபாடுகளைக் கொண்டுள்ளது. இவ்விருவகை பாகுபாடுகளுக்குத் தகுந்தாற்போல் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள் பற்றியும் தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

**களவினில் கிளவிக்குரியர்**

பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, கிழவன், கிழத்தி

**கற்பினில் கிளவிக்குரியர்**

பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர், பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, கிழவன், கிழத்தி

கூற்றுக்கு அற்றோர் பற்றியும் தொல்காப்பியர் கூறுகின்றார்.

**‘‘ஊரும் அயலுஞ் சேரிளோலும் நோய் மருங்கர்**

**நருதந்தையும் தன் ஐயும் கொண்டெடுத்து**

**மொழியப்படுதல் அல்லது**

**கூற்றவன் இன்மை யாப்புறத் தோன்றும்’’**[44]

எனும் நூற்பா கேட்போராக அமைவது மட்டும் காட்டும்.

**இறையனார் அகப்பொருளில் அகமாந்தர்கள்**

இறையனார் அகப்பொருளில் அகமாந்தர்கள் பற்றி விரிவான இலக்கண கோட்பாடு இல்லை.

தொல்காப்பியத்தைப் போன்று மாந்தர் பற்றிய ஆய்வு இந்நூலில் இல்லை.

கிழவன், கிழத்தி, தோழி, தாய், தந்தை, பரத்தை ஆகியோர் மட்டும் துறைக்குரிய கிளவித்தொகை கூற்றை ஆங்காங்கே சுட்டப்பெறுகின்றார்.

**நம்பியகப்பொருளில் அகமாந்தர்கள்**

கைக்கோள் நோக்கில் கூற்றுக்கு உரியவர்களை வகை செய்கிறது. அகபொருள் விளக்கம் கற்பின்கண் கூற்றுக்கு உரிய நற்றாயைச் சேர்த்து பதிமூன்று பேரைக் காட்டுகிறது.

**நம்பியகப்பொருளில் கூற்றுக்கு அல்லாதோர்**

**‘‘பையந்தோன் தென்னை உயங்கு நோய் அறிவோர்**

**ஊரவர் அயலோர் சேரியோர் என்றிவர்**

**முகத்துரை இயலா அகப்பொருள் அகத்தே’’[45]**

எனத் தொல்காப்பியத்தைப் பின்பற்றுகிறது.

இலக்கண விளக்கமும் தொன்னூல் விளக்கமும் அகப்பொருள் விளக்கத்தைப் பின்பற்றி தன்கருததை முன்வைக்கிறது.

**முத்துவீரியத்தில் அகமாந்தர்கள்**

பிற இலக்கண நூல்களைப் பகுக்கும் பொழுது முத்துவீரியத்தில் அகமாந்தர்களைப் பற்றி குறிப்பிடவும் இல்லை.

இருப்பினும் திணையைக் களவிற்கு உரியது கற்பிற்குரியது எனப் பாகுபடுத்தியுள்ளார்.

திணைகளில் களவிற்கு உரியது என்று குறிஞ்சியையும் நெய்தலையும் குறிப்பிடுகின்றார்.

**கூற்று**

தொல்காப்பியர் அகத்திணையியலில் களவியல் கற்பியல் கூற்றுக்கு உரியவர் இடங்களைப் பற்றி விளக்குகிறார். கூற்றுக்கு உரியவர் பட்டியலில் விறலி இடம்பெறுவதில்லை.

**தோழி கூற்று**

எட்டுத்தொகை நூல்களில் அகப்பொருள் ஐந்து நூல்களிலும் எழுநூற்றெழுபத்தேழு பாடல்கள் தோழி கூற்று பாடல்களாக அமைந்துள்ளன.

‘‘அகமாந்தர் கொள்ளும் அகப்போராட்டங்களுக்கு உளவியல் வழி தீர்வு காண்பதற்கு எனப் படைக்கப்பட்ட படைப்பு தோழி. இப்பாத்திரம் அகப்பொருளில் ஒரு இன்றியமையா பாத்திரம்.

**‘‘நெஞ்சாகுல முற்றிங்ங னோமெலிய**

**நிலவின் கதிர் நீளெரி யாய்விரியத்**

**துஞ்சாநய னத்தொடு சோருமிவட் (கு)**

**அருளாதொழி கின்றது தொண்டை கொலோ?’’[46]**

எனக் கலம்பகத்தில் தோழி, நந்தி மன்னனிடம் தலைவிக்காக தொண்டை மாலையை வேண்டுவதாக அமைந்துள்ளது இப்பாடல். தோழி கூற்று.

**‘‘அம்ம வாளி தோழி காதலர்**

**பாவையன்ன என் ஆய்கவின்தொலைய**

**நல்மா மேனி பசப்ப**

**செல்வேம் என்பதம் மலைகெழு நாட்டே’’[47]**

நாணமிக்கவழி தோழியோடு உரையாடி பிரிவு இறங்கியதற்குத் தோழி கூறுவதாக அமைந்துள்ளது.

இவ்வாறு தோழி கூற்று மரபை நமக்கு கிடைத்த முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் முதல் இன்று வரையுள்ள இலக்கண இலக்கியங்கள் அனைத்தும் போற்றியுள்ளன.

**தலைவி கூற்று**

**“நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி**

**இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென’’[48]**

தந்தையின் கடக்க முடியாத அரிய கட்டுக்காவலை மீறியும் களவுப்புணர்ச்சி வளர்ந்தது என்று கபிலர் காட்டிய திறம் காணத்தகும்.

சங்க, சங்க மருவிய அக இலக்கியத்தில் தோழிக்கு அடுத்தபடியாக தலைவி கூற்றுப் பாடல்கள் மிகுதியாக உள்ளன. எட்டுத்தொகையில் உள்ள தலைவி கூற்றுக்குரிய அகப்பாடல்கள் 548.தலைவி கூற்று மரபு வளர்ச்சியை இலக்கண வழி காணலாம்.

**‘‘துடிஅடித்து தோற்செவிலி தூங்குகைதந் நால்வாய்**

**பிடியோயானின்னை இறப்பல் கடிகமல்தார்**

**சேலேக வண்ணமொடு சேரிபுகுதலுமென்**

**சாம்லகஞ் சார நட’’[49]**

என வேண்டுகின்றார் தலைவியின் கூற்று இயற்கைப் புணர்ச்சிப்பின் நிகழும். இலக்கண நூல்கள் தவிர பல இலக்கியத்திலும் தலைவி கூற்று முக்கிய இடத்தை வகிக்கின்றது.

**தலைவன் கூற்று**

**‘‘குன்றக் குறவன் காதல் மடமகள்**

**வண்டுபட கூந்தல் தண்தழை கொடிச்சி**

**வளையல் முளைவால் எயிற்றல்**

**இளையலாயினும் ஆரணங்கினவே’’[50] (ஐங்குறு.257)**

தலைமகள் நிலமைப்பண்பு கூறி பெயர்த்தவழி தலைமகன் கூறியது. இப்பாடல் அமைந்துள்ளதன் வழி தலைவன் கூற்று நிகழும் இடத்தினை அறியமுடிகிறது.

தொல்காப்பியர் தலைவன் கூற்று நிகழும் இடங்களையும் கேட்போர் கூற்று பற்றியும் கூறியுள்ளார்.

**‘‘தமர்வரின் இடைச்சுரம் தன்னில் கிழத்தியொடு**

**அமர்தொரு கிழவோன் ஆணையும் கூறும்’’[51]**

என்று தலைவன் கூற்றினை நம்பியகப்பொருள் நூற்பாவழியில் ஒரு சிறப்பு விதியை விளக்குகிறது.

**‘‘நன்மலை நாட பண்பெனப் படுமோ**

**நின்னயத் துறைவி இன்னுயிர் உள்ளாய்’’[52]**

என்று தோழி தலைமகனை வினாவுகின்றாள். தோழி வினவல் ஓர் உண்மையை உணர்த்துகின்றது. விரும்பி வாழ்கின்ற ஓர்உயிர் படுந்துன்பத்தை உணர்ந்து அத்துன்பம் அவ்வுயிருக்கு ஏற்படாத வகையில் அன்புடனும் பண்புடனும் செயல்படுதலே பண்பாடு என்று பழந்தமிழர் கருதினர் என்று உணரலாம்.

**‘‘காமஞ் சொல்லா நாட்டமின்மையின்**

**ஏமுறு இரண்டையும் உளப்படமொழிப’’[53] (தொல்.களவு.107)**

தலைவன் புணர்ச்சி வேண்டி நிற்க தலைவிக்கு விருப்பம் இருந்தாலும் கூற்றினால் வெளிப்படுத்தக் கூடாதாம். குறிப்பினால் வெளிப்படுத்த வேண்டுமாம். தலைவனுக்கு ஒரு விதியும் தலைவிக்கு ஒருவிதியும் எனத் தனித்தனியே கூறியுள்ளனர்.

**நற்றாய் கூற்று**

தொல்காப்பியம் கூற்றிற்கு உரியோரை குறிப்பிடும்பொழுது நற்றாயை குறிப்பிடவில்லை. எனினும் கற்பு ஒழுக்கத்தில் வரும் வாயில்கள் பன்னிருவள் நற்றாயைக் குறிப்பிடுகிறார்.

**‘‘கிழவன் தன்னொடும் கிழத்தி தன்னொடும்**

**நற்றாய் கூறல் முற்றத் தோன்றாதே’’[54]**

என நற்றாய் கூற்றிற்குத் தொல்காப்பியர் மரபை புலப்படுத்துவார்.

**‘‘தன்னும் அவளும் அவனும் சுட்டி**

**மண்ணு நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்**

**நன்மை தீமை அச்சம் சார்தல் என்று**

**அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ**

**முன்னிய காலம் மூன்றுடன் விளக்கி**

**தோழி தேயத்தும் கண்டோர் பாங்கினும்**

**போகிய திரத்து நற்றாய் புலம்பலும்**

**ஆகிய கிழவியூ மவ்வழி உரிய"[55]**

தன்னையும் தலைமகனையும் தலைமகளையும் குறித்து ஆட்சிப் பெற்ற நிமித்தம் பள்ளி முதலியன ஆவேசித்து கூறும் சொல், தனக்கும் அவருக்கும் உளதாகிய நன்மையும் தீமையும் தன்னை வந்து சார்தல் என்பது இச்சூத்திரத்திற்கான விளக்கமாகும்.

**செவிலி கூற்று**

செவிலி களவு, கற்பு ஆகிய இது கைக்கோளினும் கூற்று நிகழ்த்துதற்கு உரியவை என்பது தொல்காப்பியர் கோட்பாடு. தொல்காப்பியர் செவிலிக்குரிய கிளவிகள் 13 என்பர்.

**"கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும்**

**வழிகொள நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்**

**செவிலிக்குரிய ஆகும் என்ப"[56]**

என மேற்கண்ட நூற்பாவால் செவிலி கூற்று மேன்மையைச் சுட்டுவர்.

**"காதற் செவிலியற் தவிர்ப்பவும் தவிராது"[57]**

எனக் கண்டோர் கூற்றிலும் செவிலியைப்போற்றும் மரபுஉடையது.

**கண்டோர் கூற்று**

தொல்காப்பியர் கண்டோரைக் கற்பினில் கூற்றிற்கு உரியவராகவும் பன்னிரு வாயில்களுள் ஒருவராகவும் காட்டுகிறார்.

**"பொழுது மாறும் உட்குவரத் தோன்றி**

**வழுவினாகிய குற்றங்காட்டலும்**

**ஊரது சார்ந்தும் செல்லும் தேயமும்**

**ஆர்வநெஞ்சமொடு செப்பிய வழியினும்**

**புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு**

**அழிந்தெதிர் கூறிவிடுப்பினும் ஆங்கத்**

**தாய்நிலைக் கண்டு தடுப்பினும் விடுப்பினும்**

**சேய்நிலைக் கண்றோர் செலவினும் வரவினும்**

**கண்டோர் மொழிதல் கண்டது என்ப"**[58]

எனவரும் நூற்பாவில் கூறுகிறது. தலைவன், தலைவியது உடன்போக்கிற்கண் கண்டோர் கூற்று நிகழும் அதை கேட்போர் தலைவன் தலைவி என்பதை இந்நூற்பா உணர்த்துகிறது.

**தொகுப்புரை**

தமிழ் இலக்கண நூல்களில் குறிஞ்சி என்ற தலைப்பின் கீழ் தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், அகப்பொருள் விளக்கம், மாறன் அகப்பொருள் இலக்கண விளக்கம் தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் என்ற நூல்கள் யாவும் பெரும்பாலும் ஒத்த தன்மையுடைய கருத்துகளையே விளக்குகின்றன.

சில நூல்கள் இதிலிருந்து மாறுபட்டும் உள்ளன. அறுவகை இலக்கணம் என்ற நூல் ஏனைய இலக்கண நூல்களைப் போல் முப்பொருள் பற்றி விரிவாக எடுத்துக்கவில்லை.

''தொல்காப்பியம், யாப்பருங்கலம் காரிகை, தண்டியலங்காரம், நன்னூல் ஆகிய நூல்களைப் பின்பற்றியும் திருத்தியும் மாற்றியும் ஏற்றுக் கொண்டு இயன்றுள்ளது.

பல நூல்கள் விரித்த செய்தியை சிறிது விரித்தும், மாற்றியும் குறிஞ்சி பற்றி செய்தியை அழகுற இலக்கண நூல்கள் முதற்பொருள் (நிலம், பொழுது) கருப்பொருள், உரிப்பொருள் என முப்பொருளையும் வகைப்படுத்தியுள்ளது.

அகவொழுக்கம், களவொழுக்கம், கற்பொழுக்கம் என இலக்கண நூல்கள் வகைப்படுத்தி திணையின் இயல்பை மேம்படுத்தியுள்ளது. குறிஞ்சித் திணைக்கு இலக்கண நூல்களில் சிறப்பிடம்பிடித்துள்ளது. இலக்கண நூலாசிரியர்கள் குறிஞ்சியை அழகுற கையாண்டுள்ளது வெளிப்படுகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. எஸ்.கௌமாரீஸ்வரி, (ப.ஆ.), தொல்காப்பியம், பொருளதிகாரம், ப.5, நூ.1.
2. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ.), இறையனார் அகப்பொருள், ப.1, நூ.1.
3. வ.த.இராமசுப்பிரமணியன் (ப.ஆ.), நம்பியகப் பொருள், ப.12, நூ.1.
4. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தென்னூல் விளக்கம், ப.463, நூ.151.
5. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), சுவாமி நாதம், ப.669, நூ.72.
6. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), அறுவகை இலக்கணம், ப.746, நூ.334.
7. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ.), தொல்காப்பியம், ப.5, புறத்.1.
8. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ.), தொல்காப்பியம், ப.22.
9. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), குறுந்தொகை, ப.172, குறு.3.
10. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), திணைமாலை நூற்றைம்பது, ப.356, பாடல்.15.
11. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ.), தொல்காப்பியம், ப.8, நூ.3.
12. வ.த.இராமசுப்பிரமணியன் (ப.ஆ.), நம்பிஅகப்பொருள், ப.16, நூ.7.
13. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), மாறன் அகப்பொருள், ப.311, நூ.9.
14. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), ஐங்குறுநூறு, ப.305, நூ.257.
15. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ.), தொல்காப்பியம், ப.9, நூ.5.
16. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ.), தொல்காப்பியம், ப.9, அகத்.4.
17. வ.த.இராமசுப்பிரமணியன் (ப.ஆ.), நம்பியகப்பொருள், ப.17, நூ.8.
18. வ.த.இராமசுப்பிரமணியன் (ப.ஆ.), நம்பியகப்பொருள், ப.17, நூ.9.
19. வ.த.இராமசுப்பிரமணியன் (ப.ஆ.), நம்பியகப்பொருள், ப.17, நூ.10.

20. வ.த.இராமசுப்பிரமணியன் (ப.ஆ.), நம்பியகப்பொருள், ப.17, நூ.13.

21. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), மாறன் அகப்பொருள், ப.311, நூ.14.

22. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தொன்னூல் விளக்கம், ப.464, நூ.68.

23. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தொன்னூல் விளக்கம், ப.614, நூ.791.

24. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தொன்னூல் விளக்கம், ப.615, நூ..797.

25. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தொன்னூல் விளக்கம், ப.616, நூ..799.

26. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தொன்னூல் விளக்கம், ப.53, நூ.964.

27. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தொன்னூல் விளக்கம், ப.400, நூ.388.

28. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தொன்னூல் விளக்கம், ப.464, நூ.176.

29. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தொன்னூல் விளக்கம், ப.615, நூ.802.

30. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தொன்னூல் விளக்கம், ப.52, நூ.68.

31. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தொன்னூல் விளக்கம், ப.213, நூ.25.

32. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ.), தொல்காப்பியம், ப.22.

33. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), இலக்கண விளக்கம், ப.401.

34. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), சுவாமிநாதம், ப.670, நூ.80.

35. எஸ்.கௌமரிரீஸ்வரி (ப.ஆ.), தொல்காப்பியம், ப.5, புறத்.1.

36. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தொல்காப்பியம், ப.75, நூ.1442.

37. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தொல்காப்பியம், ப.57, நூ.1044.

38. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தொல்காப்பியம், ப.57, நூ.1045.

39. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தொல்காப்பியம், ப.57, ஐங்.298.

40. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தொல்காப்பியம், ப.57, நூ.1050.

41. த.வசந்தாள் (ப.ஆ.), தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் ஒரு வரலாற்று பார்வை, ப.17, தொல்.39.

42. த.வசந்தாள் (ப.ஆ.), தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் ஒரு வரலாற்று பார்வை, ப.42, நம்பி.213, 214.

43. த.வசந்தாள் (ப.ஆ.), தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் ஒரு வரலாற்று பார்வை, ப.259, நச்திக்கலம்பகம்.

44. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), ஐங்குறுநூறு, ப.228, பா.221.

45. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), குறிஞ்சிப்பாட்டு, 28, ப.385.

46. புலியூர்கேசிகன், (உ.ஆ.), நந்திக்கலம்பகம், ப.89.

47. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), ஐங்குறுநூறு, ப.300, நூ.257.

48. குறிஞ்சிப்பாட்டு, 9.

49. மேலது

50. ஐங்குறுநூறு, பா.257.

51. நம்பியகப் பொருள்.

52. நற்றிணை

53. தொல்காப்பியம், களவியல்.107.

54. மேலது

55. மேலது

56. மேலது

57. மேலது

58. மேலது

# இயல்-2

# கபிலர் பாடல்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்

**முன்னுரை**

கபிலர் எனும் பெயரில் காலந்தோறும் பல்வேறு புலவர்கள் இருந்துள்ளனர். சங்க இலக்கியத்தில் கபிலர், தொல்கபிலர் எனும் புலவர்களும் சங்கம் மருவியகால இலக்கியத்தில் ‘இன்னா நாற்பது’ பாடிய கபிலரும் பிறகு பக்தி இலக்கியத்தில் பன்னிருதிருமுறைகளில் வரும் கபிலதேவ நாயனாரும் என பலர் கபிலர் எனும் பெயரில் இருந்துள்ளனர். எனினும் இவ்வியலில் சங்கக் கபிலர் இயற்றிய எட்டுத் தொகையின் குறிஞ்சித்திணைப் பாடல்கள் 190 மற்றும் பத்துப்பாட்டிலுள்ள குறிஞ்சிப்பாட்டு ஒன்று என மொத்தம் 191 பாடல்களை முன்வைத்து குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் ஆராயப்பட்டுள்ளது. இதில் குறிஞ்சிநிலம் சார்ந்த களவுக்கால நிகழ்வுகள் அனைத்தும் வரிசைமுறைப்படி ஆராயப்பட்டுள்ளன. அதாவது, இயற்கைப் புணர்ச்சி முதல் தலைவியின் களவு வாழ்வைக் கற்பாக மாற்ற முயற்சிக்கும் அறத்தொடு நிற்றல் வரை உள்ள நிகழ்வுகள் அனைத்தும் ஆராயப்பட்டு அவற்றிலுள்ள குறிஞ்சிநில மக்களான தலைவன், தலைவி, தோழி, செவிலி, பரத்தை முதலானோரின் வாழ்வியல் ஆராயப்பட்டுள்ளது. சான்றாக,

**‘சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு, இவள்**
**உயிர்தவர் சிறிது காமமோ பெரிதே! (குறுந்.18:4-5)**

எனும் பாடலடிகளின் மூலம் தலைவனிடம் வரைவு கடாவும் தோழி, தம் தோழியான தலைவியின் களவு வாழ்வியலை குறிஞ்சிநிலம் சார்ந்த பலா மரத்தோடு ஒப்பிட்டு எடுத்துரைப்பதை அறியமுடிகின்றது. இங்கு பலா மரத்தின் சிறிய கிளையைத் தலைவியின் உயிருக்கு ஒப்பாகவும், அதில் தொங்கும் பெரிய பலாப்பழத்தை அவள் தலைவன்மீது கொண்டுள்ள காலத்திற்கு ஒப்பாகவும் சுட்டும் களவுக்கால வாழ்வியல் ஆராய்ந்து அறியப்பட்டுள்ளது. மேலும், பரத்தை கூற்றில் கபிலர் இயற்றிய ஒரேயொரு பாடலான நற்றிணையின் 225 ஆம் பாடலும் ஆராயப்பட்டு பரத்தையரின்

வாழ்வியல் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், குறிஞ்சிப்பாட்டு எனும் பத்துப்பாட்டு இலக்கியமும் ஆராயப்பட்டு அதில் இடம்பெற்றுள்ள தலைவியின் களவு வாழ்வியல் அறத்தொடு நிற்றல் எனும் துறையில் தோழியால் வரிசைபட எடுத்துரைக்கப்படுவதும் ஆராயப்பட்டுள்ளது.

## சங்க இலக்கியங்கள்

சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை பத்துப்பாட்டு என இருநிலைகள் உள்ளன. இவற்றைப் பொதுநிலையில் அகம், புறம் என்று இரு பிரிவுகளாகப் பிரித்து அவற்றைத் தொகுத்தனர். உள்ள வாழ்க்கையொடு தொடர்புடையன அகப்பாடல்கள். மனம் ஒத்த தலைவனும், தலைவியும் இணைந்து வாழ்ந்த வாழ்க்கை பற்றிப் பேசுவன. சங்கப் பாடல்கள், அனைத்தும் கருத்து வளம் நிரம்பியவை. பிறர் உள்ளத்தைப் புண்படுத்தாத நிலையில் அமைந்தவை. சங்க இலக்கிய எட்டுத்தொகையில் ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை என ஐந்து நூல்கள் அகத்திணை பற்றியன. சங்க இலக்கியத்தில் அகப்பாடல்கள் 1874; புறப்பாடல்கள் 507. உலகில் உள்ள நிலங்கள் அனைத்தையும் அடிப்படையில் நான்கு வகையாகப் பிரிக்கின்றனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடமும், இதனை ‘சேயோன் மேய மைவரை உலகமும்’ என்கிறார் தொல்காப்பியர் (தொல்.951).

## கபிலரும் குறிஞ்சிப்பாட்டும்

சங்க இலக்கியத்தில் எண்ணிக்கையில் மிகுதியான பாடல்களைப் பாடியவர்; குறிஞ்சித்திணை பாடுவதில் வல்லவர்; அதன் பொருட்டுக் “குறிஞ்சிக்கோர் கபிலர்” என்னும் சிறப்புக்குரியவர்; அகத்திணைப் பாடல்களோடு புறத்திணைப் பாடல்களையும் பாடியவர். கபிலர் குறிஞ்சி நிலக் கடவுளான முருகனை, மீமிசைக் கடவுள் என்று சிறப்பித்துக் கூறுவதுடன், முருகனின் வீரத்தைக் காட்டுகிறார். ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடியது என்னும் குறிப்புடன் காணக்கிடப்பது கபிலர் எழுதிய குறிஞ்சிப் பாட்டாகும். இப்பாட்டு

தமிழுக்கே உரிய சிறப்பான அகத்திணைக் காதலின் சிறப்பை ஆரிய அரசன் அறிந்து கொள்ளும் வகையில் கபிலரால் பாடப்பட்டதாகும்.

பத்துப்பாட்டில் எட்டாவதும் பாட்டாக அமையும் இக்குறிஞ்சிப்பாட்டு 261 அடிகளையும் 1440 சொற்களையும் கொண்டதாகும். அறத்தோடு நிற்றல் என்னும் துறையில் அமைந்த இக்குறிஞ்சிப் பாட்டு முழுவதும் தோழி செவிலிக்காக கூறுவதாக அமைந்துள்ளது.

**கபிலர் பாடியவை**

சங்க இலக்கியத்துள் காணப்பெறும் கபிலரின் பாடல்களின் எண்ணிக்கை 235 ஆகும். இவை முறையே நற்றிணை 20, குறுந்தொகை 29, ஐங்குறுநூறு 100, பதிற்றுப்பத்து 10, அகநானூறு 12, புறநானூறு 28, கலித்தொகை 29, குறிஞ்சிப்பாட்டு 1 என்றவாறு அமைந்துள்ளன. பத்துப்பாட்டிலும் பரிபாடல் தவிர்த்த பிற எட்டுதொகை நூல்களிலும் கபிலர் பாடல்கள் காணக்கிடக்கின்றன. கபிலர் பாடியுள்ள 235 பாடல்களில் 197 பாடல்கள் அகப்பாடல்களாகும். இவற்றுள் 182 களவிற்கும், 12 கற்பிற்கும், 3 கைக்கிளைக்கும் உரியவை என்பார் வ.சுப. மாணிக்கம். 38 பாடல்கள் புறத்திணை பற்றியனவாகும்.

அகம், புறம் என்னும் பாகுபாட்டிற்குள் அடங்கும் தமிழ் மக்களின் வாழ்வியலையும், இயற்கையோடு இணைந்த வாழ்வு வாழ்ந்த பண்டைத் தமிழ் மக்களின் பண்பாட்டு வாழ்வில் பிரிக்க முடியாத கூறுகளாக விளங்கும் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், கலை வெளிப்பாடுகள் முதலியனவற்றையும் கபிலரின் பாடல்கள் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய கபிலர் பாடல்களில், அகத்திணை மரபுகள் அனைத்தும் ஒருசேர எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. ஐவகைத் திணைகள், மூவகைப் பொருள்கள் ஆகியன சிறப்புற இடம்பெற்று உள்ளன.

**முப்பொருள் பாகுபாடு**

முதற்பொருள், கருப்பொருள்ள் உரிப்பொருள் எனும் மூவகைப் பாகுபாடுகளை அகப்பொருளானது பெற்றுள்ளது. இதனை,

**"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங் காலை முறைசிறந் தனவே**
**பாடலுட் பயின்றவை நாடும் காலை"**[1]

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. முதற்பொருள் என்பது நிலத்தையும், பொழுதையும் கருப்பொருள் என்பது விலங்கு, மரம், புள், பூ, பறை, செய்தி, யாழ் முதலியவற்றையும் குறிக்கும். உரிப்பொருள் என்பது, புணர்தல், திரிதல், இருத்தல், ஊடல், வருந்தல் ஆகியவற்றை குறிக்கும். மேலும் இது பாடல்களில் பொருளாகவும் அமையும்.

**தொல்காப்பியமும் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலும்**

மலையும் மலை சார்ந்த நிலப்பகுதியும் குறிஞ்சி நிலம் எனப்பட்டது. இத்தகைய குறிஞ்சி சார்ந்த கோட்பாடுகளைப் பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியம் முன்வைக்கின்றது. இதைப்போலவே சங்க அகப்பாடல்களில் குறிப்பாகக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் பல்வேறு குறிஞ்சி நிலப்பகுதிகள் சுட்டப்பட்டுள்ளன. இத்தகைய மலைப்பகுதிகளை ஆட்சிபுரிந்த குறுநில மன்னர்கள் பற்றிய செய்திகளும் மலைநில மக்களின் வாழ்வியலில் இடம்பெற்றுள்ள நிகழ்வுகளையும் செயல்பாடுகளையும் சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் முன்வைக்கின்றன.

**குறிஞ்சி – தொல்காப்பிய வரையறைகள்**

**முதற்பொருள்**

மலைப்பகுதியே குறிஞ்சிநிலமாக இலக்கண இலக்கியங்களில் சுட்டப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலமானது

**"சேயான் மேய மைவரை உலகமும்"**[2]

என்று தொல்காப்பிய அகத்திணையியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் குறிஞ்சிக்குரிய முதற்பொருளாக நிலமும், பொழுதும் கீழ்க்கண்டவாறு தொல்காப்பியத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன.

**"குறிஞ்சி, கூதிர் யாமம் என்மனார் புலவர்"**[3]

**"பனிஎதிர் பருவமும் உரித்தென மொழிப்"[4]**

என்பதன் மூலம் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை ஆகிய மாதங்கள் பெரும் பொழுதுகளாகவும், யாமம் எனப்படுகின்ற நள்ளிரவு நேரம் சிறு பொழுதாகவும் குறிஞ்சி நிலத்துக்குரியனவாக அமைந்துள்ளன.

**உரிப்பொருள்**

குறிஞ்சி நிலத்துக்குரிய ஒழுக்கமாக அதாவது உரிப்பொருளாகப் 'புணர்தல்' என்பதைத் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். இதனை,

**"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை**
**தேருங் காலைத் திணைக்குரிய பொருளே"[5]**

**கருப்பொருள்**

குறிஞ்சித்திணைக்குரிய கருப்பொருள்கள் குறித்து இளம்பூரணர் குறிப்பிட்டுள்ளார். அதாவது, **"குறிஞ்சிக்கு தெய்வம் முருகவேள். மைவரை யுலகமும் கூதிர்காலமும் நள்ளிருளும் கூறினமையான், அந்நிலத்தினும் காலத்தினும் நிகழ்பவை கொள்க. உணவு – திணையும் ஐவனம் வெதிர் நெல்லும். மா – யானையும் புலியும் பன்றியும் கரடியும். மரம் - வேங்கையும் கோங்கும். புள் - மயிலும் கிளியும்; பறை – வெறியாட்டுப் பறையும் தொண்டகப் பறையும். செய்தி - தேனழித்தல், பண் - குறிஞ்சி, பிறவும் என்றதனால், பூ - வேங்கைப் பூவும் காந்தட் பூவும், குறிஞ்சிப்பூவும், நீர் - சுனை நீரும், அருவி நீரும். பிறவும் அன்ன"[6]** என்று குறிஞ்சிக்குரிய கருப்பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன. ஆனால் தொல்காப்பியர்,

**"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப"[7]**

என்று அனைத்துத் திணைக்குரிய பொதுவான கருப்பொருள்களை வரையறை செய்கிறார். இதனால் உரையாசிரியர்களின் மூலமாகவே ஒவ்வொரு திணைக்கும் உரிய கருப்பொருள்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. இதைப்போலவே சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களிலும் தொல்காப்பியர் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவை தொல்காப்பிய – சங்க இலக்கிய ஒற்றுமையை உணர்த்துவனவாக அமைந்துள்ளன.

**சங்க இலக்கியத்தில் குறிஞ்சி நிலப்பகுதி**

நற்றிணையின் தலைவன் கூற்றிலமைந்த குறிஞ்சித்திணைப் பாடல்களில் குறிஞ்சிநிலப் பகுதிகள் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. அதாவது மலைப்பகுதியாகிய கொல்லிமலை இங்கு பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**“வல்வில் ஓரி கானம் நாறி”**[8]

**“இரவலர் மெலியாது ஏறும், பொறையன்**
**உரைசால் உயர்வரைக் கொல்லிக் குடவயின்”**[9]

**“பயம்கெழு பலவின் கொல்லிக் குடவரை”**[10]

**“செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி”**[11]

**“மாரி வண்மகிழ் ஓரி கொல்லி’’**[12]

எனும் அடிகள் கொல்லிமலை பற்றிய குறிப்புகளைத் தருகின்றன. நற்றிணைத் தலைவன்கூற்றுப் பாடல்களில் கொல்லிமலை தவிர வேறு மலைகள் பற்றிய குறிப்புகள் ஏதும் இல்லை எனபது குறிப்பிடத்தக்கது.

**குறிஞ்சிநில இயற்கை வளமும் விலங்குகளும்**

குறிஞ்சிக்குரிய மரமாக வேங்கையும், கோங்கும் தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணரால் குறிப்பிடப்பட்டாலும் பலா, மூங்கில், சந்தனம், குமிழம் முதலிய மரவகைகள் குறிஞ்சி நிலத்தில் இருந்தமையை நற்றிணையின் குறிஞ்சித்திணைப் பாடல்களின் மூலம் அறியலாம். மேலும் புலி, யானை, குரங்கு, பன்றி, குதிரை, கன்று, பசு,

கரடி, கலைமான், யானை முதலிய விலங்குகளும் வங்கா, அன்னம், மயில் முதலிய பறவைகளும் பாம்பு, வண்டு முதலிய உயிரினங்களும் குறிஞ்சிநிலத்தில் இருந்தமையை அறியமுடிகின்றது.

இரவில் மின்மினிப் பூச்சிகள் ஒளிவீசுகின்ற நிகழ்வினை நற்றிணையின் 44ஆம் பாடலும் மான்கள் குறிஞ்சிநல வழியில் விழுந்து கிடக்கும் குமிழம் பழங்களை உண்ட செய்தியும் (6), பலா மரங்கள் வீட்டின் முற்றத்தில் இருந்ததை 77 ஆம் பாடலும், பன்றி சேற்றில் உழுத நிகழ்வை 82ஆம் பாடலும், காந்தள் மலர்த் தேனை வண்டு குடித்த காட்சியை 185ஆம் பாடலும், புலியும் யானையும் சண்டையிட்ட காட்சியை 39 ஆம் பாடலும், கன்றும் பசுவும் மலைஉச்சியை அடைந்து பலாச்சுளையை உண்டு அருவி நீரைக் குடித்த செய்தியை 213 ஆம் பாடலும் காட்டுகின்றன. இவை குறிஞ்சிநில இயற்கை வளத்தையும் அதிலுள்ள விலங்குகளின் சிறப்பியல்புகளையும் புலப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

**குறிஞ்சிநிலக் காட்சிகள்**

நற்றிணையின் 201, 203 ஆம் பாடல்கள் குறிஞ்சி நிலத்திலுள்ள அருவி பற்றிக் குறிப்பிடுகின்றன. இதனை,

**“அவ்வெள் அருவிக் குடவரை யகத்து”[13]**

**“அருவி ஆர்க்கும் பெருவரை நண்ணி”[14]**

எனும் அடிகளால் அறியலாம். மேலும் கதிரவனின் தோற்றம் குறித்த செய்தியும் குறிஞ்சித்திணைப் பாடலில் இடம்பெற்றுள்ளது.

**“குணக்குத் தோன்று வெள்ளியின் எமக்குமார் வருமே!”[15]**

எனும் அடி கிழக்குத் திசையில் கதிரவன் தோன்றுகின்ற காட்சியைப் பதிவு செய்கிறது. மேலும்,

**“தேர் வழங்கும் நிலவுமணல் முற்றத்து”[16]**

எனும் அடி மணற்பரப்பில் தேர் இயங்கிய செய்தியைச் சுட்டுகின்றது. இவ்வாறாகக் குறிஞ்சிநிலக் காட்சியை நற்றிணையின் தலைவன் கூற்றுக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன.

குறிஞ்சிநிலத் தலைமக்களது களவு வாழ்க்கை குறித்த பதிவுகளையும் நற்றிணையின் குறிஞ்சித்திணைப் பாடல்கள் கொண்டிருக்கின்றன. தலைமக்களது முதல் சந்திப்பை விளக்குவதாக நற்றிணையின் 44 ஆம் பாடல் விளங்குகின்றது. இதிலுள்ள

**"பொருவில் ஆயமொடு அருவி ஆடி,**
**நீர் அலைச் சிவந்த பேர்அமர் மழைக்கண்**
**குறியா நோக்கமொடு முறுவல் நல்கி**
**மனைவயின் பெயர்ந்த காலை, நினைஇய்"**[17]

எனும் அடிகள் தலைவனும் தலைவியும் சந்தித்துக் கொண்ட முதல் சந்திப்பை நமக்குக் காட்டுகின்றன. இதுவே தலைமக்களது களவு வாழ்வின் தொடக்கமாக அமைவதைக் காணலாம். இதன்பிறகு பல்வேறு களவுக்கால நிகழ்வுகள் நிகழ்வதை நற்றிணையின் குறிஞ்சித்திணைப் பாடல்கள் தலைவன் கூற்றிலமைந்து நமக்கு வெளிப்படுத்துகின்றன. அதாவது,

1. **தலைவனைத் தலைவி குறியிடத்திற்கு அழைத்துச் செல்லுதல் (நற்.204)**
2. **தலைமக்கள் இருவரும் நெருக்கமாகத் தழுவிக் கொள்ளுதல் (நற்.82)**
3. **தலைவி தோழிகளுடன் நீராடுதல் (நற்.44, 204)**
4. **தலைவி தோழியருடன் பந்தாடுதல் (நற்.140, 324)**
5. **தலைவன் தலைவியது அழகு நலன்களைப் புகழ்ந்து பேசுதல் (நற்.6,8,39, 75, 77, 146, 185, 190, 265)**
6. **தலைவி இற்செறிப்பில் அதாவது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருத்தல் (நற்.201)**
7. **உலகமே எதிர்த்தாலும் தலைவியை விட்டுப் பிரியமாட்டேன் எனத் தலைவன் கூறுதல் (நற்.201)**

8. **தலைவன் அன்பு மிகுதியால் துன்பப்படுதல் (நற். 140, 185, 190)**
9. **தலைவன் மடலேறுதலைக் கூறுதல் (நற்.146)**
10. **தலைவன் மடலேறாமல் சாவேன் எனக் கூறுதல் (நற்.377)**

முதலிய களவுக்கால நிகழ்வுகளைத் தலைவன் கூற்றுக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன.

**குறிஞ்சிநில மாந்தர்கள்**

மேற்கண்ட குறிஞ்சிநிலத் தலைமக்களைத் தவிர வேறு சில குறிஞ்சிநில மாந்தர்கள் பற்றிய செய்திகளையும் குறிஞ்சித்திணைப் பாடல்களின் மூலம் அறியலாம். அதாவது குறவன் (44, 201), வேட்டுவன் (75), துடியன், புலையன் (77), கானவர் (82), கொடிச்சி (82), பாணர்கள் (185), பூழியர் (192), பாங்கன் (201), மள்ளர்கள் (324) முதலிய குறிஞ்சிநில மாந்தர்கள் நற்றிணையின் குறிஞ்சித்திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளனர்.

**தலைவியின் உறவுமுறைகள்**

குறிஞ்சிக்குரிய மாந்தர்களைப் பதிவு செய்வதோடு மட்டுமல்லாமல் குறிஞ்சிநிலத் தலைவியின் உறவினர்கள் பற்றிய குறிப்புகளையும் நற்றிணையின் குறிங்சித்திணைப் பாடல்கள் கொண்டுள்ளன. அதாவது தலைவயின் பெற்றோர் புகழப்படுகின்ற செய்தியை,

**"யார்மகள் கொல் இவள்? தந்தை வாழியர்**

**.....................................................................**

**தன்திறம் பெறுகஇவள் ஈன்ற தாயே!"[18]**

எனும் அடிகள் உணர்த்துகின்றன. மேலும்,

**"அந்தோ! தானே அளியன் தாயே;**

**...........................................................**

**செல்வத் தந்தை இடனுடை வரைப்பின்"[19]**

எனும் அடிகள் தலைவியின் பெற்றோர் குறித்த செய்திகளை நமக்குத் தருகின்றன. இத்தோடு களவு வாழ்வில் ஈடுபடும் தலைவியைத் தலைவன் மனைவி என குறிப்பிடும் பதிவும் குறிஞ்சித்திணைப் பாடலில் இடம்பெற்றுள்ளது. இதனை,

**"சுளையுடைய முன்றில், மனையோள் கங்குல்"[20]**

எனும் அடியால் அறியமுடிகின்றது. இங்குக் குறிஞ்சிநிலத் தலைவி மனையோள் எனக் குறிக்கப்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**குறிஞ்சிநிலக் குறுநில மன்னர்கள்**

குறிஞ்சிநிலப் பகுதியை ஆண்ட குறுநில மன்னர்கள் பற்றியக் குறிப்புகளும் நற்றிணைக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் உள்ளன. கொல்லிமலையை ஆட்சிசெய்த வல்வில் ஓரி பற்றிய செய்தியை

**"வல்வில் ஓரி கானம் நாறி"-[21]**

**மாரி வண்மகிழ் ஓரி கொல்லி"[22]**

எனும் அடிகள் உணாத்துகின்றன. மேலும் கொல்லிமலையை ஆண்ட பொறையன் என்பவனுடைய குறிப்பைத் தருவதாக

**"இரவலர் மெலியாது ஏறும், பொறையன்**

**ஊரைசால் உயர்வரைக் கொல்லி"[23]**

எனும் பாடலடிகள் உள்ளன. இது கொல்லிமலையை ஓரி, பொறையன் முதலியோர் ஆட்சி புரிந்ததை உணர்த்துகின்றது.

**மூவேந்தர் பதிவுகள்**

குறுநில மன்னர்கள் மட்டுமல்லாது மூவேந்தர்கள் பற்றிய குறிப்புகளைத் தருவதாயும் நற்றிணையின் தலைவன் கூற்றிலமைந்த குறிஞ்சித்திணைப் பாடல்கள் அமைந்துள்ளன. நற்றிணையின் 8வது பாடல் சேர அரசனின் தொண்டி நகர்ச் சிறப்பையும், 39ஆம் பாடல் பாண்டியனின் மதுரைநகர்ச் சிறப்பையும், 265 ஆம் பாடல் அந்திமாலையும், சிறுகோலும் வைத்திருந்த சோழ மன்னனையும் நமக்குக் காட்டுவதிலிருந்து

குறிஞ்சிநிலப் பகுதிகளை மூவேந்தர்களும் ஆட்சிபுரிந்தனர் என எண்ணலாம்.

**பரிசில் வாழ்வும் கொடைத்திறமும்**

பாணர்கள் குதிரைகளைப் பரிசிலாகப் பெற்ற செய்தி சங்கக் குறிஞ்சித்திணைப் பாடலில் இடம்பெற்றுள்ளது. இதனை,

> **“................................................ பாணர்**
> **பரிசில் பெற்ற வரிஉளை நல்மான்**
> **கவிகுளம்பு பொருதகல் மிசைச் சிறுநெறி”**[24]

எனும் அடிகள் விளக்குகின்றன. மேலும் குறுநில மன்னர்களின் கொடைத்திறத்தையும் குறிஞ்சித்திணைப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. கொல்லிமலைத் தலைவன் வல்வில் ஓரியின் கொடைத்திறத்தை நற்றிணையின் 265 ஆம் பாடல் விளக்குவது குறிப்பிடத்தக்கது.

**போரும் படைக்கருவிகளும்**

மன்னர்க்கிடையேயான போர்களைப் பற்றிய பதிவுகளும் சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணப்படுகின்றன. நற்றிணை 39 ஆம் பாடல் புலி மற்றும் யானைக்கிடையே நடந்த சண்டையைச் சுட்டுகின்றது. மேலும்

> **“............................................... நண்ணார்**
> **ஆண்டலை மதிலராகவும் முரசுகொண்டு,**
> **ஓம்புஅரண் கடந்த அடுபோர்ச் செழியன்**
> **பெரும்பெயர்க் கூடல் ..............................”**[25]

எனும் அடிகளில் சேர அரசனை வென்று அவனது முரசையும் மதிலையும் கைப்பற்றிய செழியன் எனும் பாண்டிய மன்னன் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இது அக்காலத்தே நிலவிய போர்ச் செய்திகளை நமக்குக் காட்டுவதாக உள்ளது. இதைப்போலவே மலையன் எனும் குறுநில மன்னன் செய்த போரினை நற்றிணையின் 77 ஆம் பாடலும்,

அழிசி எனும் அரசன் செய்த போரினை 190 ஆம் பாடலும் விளக்குகின்றன. மேலும்

**"திதிலை எ.ஃ.கின் சேந்தன் தந்தை**

**தேம்கமழ் விரிதார் இயல்தேர் அழிசி"[26]**

எனும் அடிகள் அழிசி என்பவனுடைய தேரினையும் அவன் கொண்டிருந்த வேல்ப்படையையும் பற்றிக் குறிப்பிடுகின்றன. இதைப்போலவே

**"கோடுமுற்று யானை காடுடன் நிறைதர**

**நெய்பட் டன்ன நோன்காழ் எ.ஃ.கின்"[27]**

எனும் அடிகளும் தலைவியின் தந்தை மிகுதியான யானைகளையும் வேல்ப்படையையும் வைத்திருந்த நிகழ்வைச் சுட்டுகின்றன. இது சங்க காலத்தில் போரும், போர்க்கருவிகளும் புழக்கத்திலிருந்ததைக் காட்டுவதாக உள்ளது.

**குடியிருப்புகள் மற்றும் ஊர்கள்**

குறிஞ்சிநில மக்களின் வாழ்விடமான குடியிருப்புகள் பற்றிய செய்திகள் சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணப்படுகின்றன. வீடுகளின் முற்றத்தில் பலா மரங்கள் இருந்ததை நற்றிணை 77 ஆம் பாடலும், அவ்வீட்டு முற்றத்திலிருக்கும் பலாமரத்தில் பசு கட்டி வைக்கப்பட்டிருந்த காட்சியை நற்றிணை 213 ஆம் பாடலும் காட்டுகின்றன. 190, 265 ஆம் பாடலுள் முறையே வயல்கள் சூழ்ந்த ஆர்க்காடு, சோழ மன்னனின் கட்டுப்பாட்டிலிருந்த பாரம் எனும் ஊர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

**"ஊறலஞ் சேரிச் சீறூர் ..........................."[28]**

**குன்றகத் ததுவே, கொழுமிளைச் சீறூர்;**

**சீறூ ரோளே நாறுமயிர்க் கொடிச்சி"[29]**

எனும் அடிகள் குறிஞ்சி நிலத்திலுள்ள சேரிகள் நிறைந்த சிறிய ஊரினையும் குன்றுகள் நிறைந்த சிறிய ஊரினையும் காட்டுகின்றன.

இதிலிருந்து மலை சூழ்ந்த பகுதிகளில் சிறுசிறு சேரிகளில் மக்கள் குடியிருந்த செய்தியினை அறியமுடிகின்றது.

**தொழில்களும் கருவிகளும்**

குறிஞ்சிநில மக்கள் பல்வேறு தொழில்களை மேற்கொண்டுள்ளனர். வேட்டையாடுதல் (75), வேளாண்மை (8), தினை விதைப்பு (44), தொடி, வளையல் செய்யும் தொழில்கள் (77), துடியிசைத்தல் (77), பன்றிவேட்டை (82), கழைக்கூத்தாடுதல் (95), பூ, மாலை தொடுத்து விற்றல் (146), சோலைகளில் ஆடுமேய்த்தல் (192), கிளி விரட்டுதல் (204), உழவு செய்தல் (209), சிவந்த அரக்கினால் வட்டுச்சாடி அமைத்தல் (341) முதலிய தொழில்கள் நற்றிணைக் குறிஞ்சித்திணைப் பாடல்களின் வழி அறியப்படுகின்றன.

மேலும் துடி (77), புல்லாங்குழல் (95) எனும் இசைக்கருவிகளும் சுருக்குவார் (82), வில் அம்பு (265) முதலிய வேட்டைக்கருவிகளும், வேல் (190), (324) எனும் கருவியும் குறிஞ்சிநில மக்களின் பயன்பாட்டிலிருந்ததை நற்றிணை தலைவன் கூற்றுப் பாடல்களின்வழி அறியமுடிகின்றது. இதன்மூலம் மக்கள் வேட்டையாடியும் உழவு செய்தும் தங்கள் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டதை அறியலாம்.

**வேளாண்மையும் உணவும் உடையும்**

குறிஞ்சிநில மக்கள் தினை விதைப்பு எனும் வேளாண்மையைச் செய்து உணவைப் பெற்றுள்ளனர். பெரும்பாலான குறிஞ்சித்திணைப் பாடல்கள் இதை நமக்குக் காட்டுகின்றன. மேலும், வயலில் நெல் விதைத்த செய்தியும் குறிஞ்சிப் பாடல்களின் வழி அறியப்படுகின்றது. இதனை,

**“தண்சேறு தாயஅய மதனுடை நோன்தாள்**
**கண்போல் நெய்தல் போர்வில் பூக்கும்”[30]**

எனும் அடிகளால் அறியலாம். மேலும் தேனும் கள்ளும் குறிஞ்சிநில மக்களின் உணவாக இருந்ததை,

**“தேனுடை நெடுவரைத் தெய்வம் எழுதிய”[31]**

**ஆரியல்ஆம் கழனி ஆர்க்காடு அன்ன”[32]**

எனும் அடிகள் காட்டுகின்றன. இதைப்போலவே பலாப்பழம் (201), வேட்டையாடிப் பெற்ற பன்றிக்கறி (75, 82), கள் (265, 341) முதலியவைகளும் உணவாக இருந்தமையை அறியமுடிகின்றது. மேலும் களவுவாழ்வின் போது தலைவி தழையாடையை அணிந்திருந்த செய்தியினையும் அறியமுடிகின்றது.

**“பல்பூம் பகைத்தழை நுடங்கும் அல்குல்”[33]**

**“தளிர்சேர் தண்தழை தைஇ, நுந்தை”[34]**

எனும் அடிகள் தலைவி தழையாடை அணிந்திருந்த செய்தியினை நமக்குக் காட்டுகின்றன. இத்தழையாடை உடுத்தும் மரபு, குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் சார்ந்த செயற்பாட்டை விளக்குவதாக உள்ளது.

**வழிபாடுகளும் நம்பிக்கைகளும்**

குறிஞ்சிநில மக்கள் தங்களுக்கென தனித்த வழிபாட்டையும் நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் கொண்டிருந்தனர். கடவுள் குறித்த நம்பிக்கை குறிஞ்சி மக்களிடையே நிலவியிருந்ததை

**“முருகு புணர்ந்து இயன்ற வள்ளி போல, நின்”[35]**

எனும் அடி புலப்படுத்துகின்றது. முருகனும் வள்ளியும் கானவர் குடியில் பிறந்தனர் எனும் நம்பிக்கையைக் குறிஞ்சிநில மக்கள் கொண்டிருந்ததை மேற்கண்ட பாடலடி விளக்குகின்றது. இதைப்போலவே கொல்லிமலையில் வாழ்ந்த குறிஞ்சிநிலம் சார்ந்த மலையின மக்களின் தெய்வமாகக் கொல்லிப்பாவை விளங்கியதை நற்றிணையின் 185, 192, 201 ஆம் பாடல்கள் காட்டுகின்றன.

மேலும் சந்திரகிரகணம் (பாம்பு சந்திரனை விழுங்குதல்) குறித்த நம்பிக்கை குறிஞ்சிநில மக்களிடம் இருந்ததை

**“அகல்இரு விசும்பின் அரவுக்குறை படுத்த**
**பசுங்கதிர் மதியத்து அகல்நிலாப் போல”[36]**

எனும் அடிகள் புலப்படுத்துகின்றன.

**களவு வாழ்க்கை**

திருமணத்திற்கு முந்தைய காதல் வாழ்க்கையாகக் குறிப்பிடப்படும் ‘களவு’, இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் என்றவாறு கபிலர் குறிஞ்சித் திணையில் இயற்றிய 191 அகத்திணைப் பாடல்களை முன்வைத்து இத்தகைய களவு வாழ்வைப் பற்றி ஆராய்வதே இவ்வியலின் முக்கிய நோக்கமாகும்.

**ஐங்குறுநூற்றில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்**

ஐங்குறுநூறில் 500 பாடல்கள் உள்ளன. இதில் 201 முதல் 300 வரையுள்ள பாடல்கள் கபிலரால் இயற்றப்பட்டன. இந்த 100 பாடல்களும் குறிஞ்சித் திணையில் அமைந்துள்ளன. இவை பத்துப்பத்துப் பாடல்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பத்துப்பாடல்களுக்கும் ஒவ்வொரு தலைப்பிடப்பட்டு பாடப்பட்டுள்ளன. இவ்வைங்குறுநூற்றின் உள்கட்டமைப்பை நோக்கும் போது இவை திட்டமிட்டு பாடப்பட்ட கவிதைகளாக இருப்பதை அறியமுடிகின்றது. அதாவது ஐந்து புலவர்கள் முறையே 100 பாடல்கள் வீதம் பாடியிருப்பது இங்கு உற்றுநோக்கத்தக்கது. இதில் இடம்பெற்றுள்ள கபிலரின் 100 பாடல்களும் குறிஞ்சி நில மக்களின் வாழ்வியலை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளன.

அன்னாய் வாழிப்பத்து (201-210), அன்னாய்ப் பத்து (211-220) அம்ம வாழிப்பத்து (221-230); தெய்யோப்பத்து (231-240) வெறிப்பத்து (241-250); குன்றக்குறவன் பத்து (251-260); கேழற்பத்து (261-270); குரக்குப்பத்து (271-280); கிள்ளைப்பத்து (281-290); மஞ்ஞைப்பத்து (291-300) எனும் பத்துப்பத்துக்களை அதாவது நூறு பாடல்களைக் கபிலர் இயற்றியுள்ளார். இப்பாடல்களின் மூலம் குறிஞ்சி நிலமக்களின் வாழ்வியலையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த 100 பாடல்களுள் 72 பாடல்கள் தோழி கூற்றிலும் 19 பாடல்கள் தலைவிகூற்றிலும்; 9 பாடல்கள் தலைவன் கூற்றிலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**களவும் அறத்தொடு நிற்றலும்**

கபிலரின் முதல் பாடல் தலைவியின் களவு வாழ்வையும், அவள் தோழிக்கு அறத்தொடு நின்றதையும் உணர்த்தும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது. இப்பாடலில் தலைவி தோழியிடம் தானும் தலைவனும் களவுக்கால நிகழ்வில் ஈடுபட்டு இருந்த போது தலையாடை உடுத்திய செய்தியைத் தோழியிடம் தெரிவிக்கின்றாள் (ஐங்.201). இத்தலையாடை உடுத்தல் என்னும் மரபு சங்ககாலத் தலைமக்களின் களவியல் வாழ்வின் ஓர் அங்கமாக இருந்ததை இப்பாடலின் வழி உணர முடிகின்றது.

**வரைதல் வேட்கை**

இப்பாடலின் தொடர்ச்சியாக அமைந்த அடுத்த பாடலில் தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டி பெண்கேட்பதற்காக குதிரைப்பூட்டிய தேரில் வருவதையும், அக்குதிரைகள் அந்தணச் சிறுவர்களைப் போல் குடுமித்தலையுடன் இருந்ததையும் தோழி புலப்படுத்துகின்றாள் (ஐங்.202). இப்பாடல் தலைவனின் வரைதல் வேட்கையை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

**உடன்போய் மீண்ட தலைமகள் கூற்று**

தலைவனுடன் உடன்போக்கை மேற்கொண்ட தலைவியைப் பார்த்து தோழி நீ சென்ற தலைவன் நாட்டின் நீர் இனிதாக இருக்காது என்றும் அதை நீ எப்படி நுகர்ந்தாய் என்றும் கேட்டாள். இதற்கு பதில் கூறும் தலைவி தலைவன் நாட்டில் உதிர்ந்த தலைகளால் மூடப்பட்டு காணப்படும் கிணறுகளில் விலங்குகளால் உண்ணப்பட்டு எஞ்சியக் கலங்கிய நீரானது நம்தோட்டத்தில் கிடைக்கும் தேன் கலந்த பாலைவிட இனியதாகும் என்று தோழிக்குப் பதிலளிக்கிறாள். (ஐங்.203)

**தலைவி தோழிக்குச் சொல்லுவது**

தலைவன் வீட்டின் சிறைப்புறத்தே நிற்கத் தலைவி தோழிக்குச் சொல்கிறாள். அதாவது ஊர் மக்களிற் பலரும் என்னை நல்லவள் என்று கூற மலைத்தலைவனுக்கு மட்டும் நான் எப்படி தீயவள் ஆனேன் என்று கூறுவதாக ஐங்குறுநூற்றின் 204-ம் பாடல் அமைந்துள்ளது.

**செவிலிக்கு தோழி அறத்தொடு நிற்றல்**

ஐங்குறுநூற்றின் 205-ம் பாடல் தோழி செவிலிக்கு அறத்தொடுநிற்றல் எனும் துறையில் அமைந்துள்ளது. இதைப்போலவே 208-ம் பாடலிலும் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கிறாள். மேலும் 210, 212, 220, 248, 250, 271 ஆகிய பாடல்கள் அறத்தொடு நிற்றல் எனும் துறையில் அமைந்து தலைவியின் களவு வாழ்வியலைச் சொல்லுவதாக அமைந்துள்ளன.

அறத்தொடு நிற்றல் எனும் துறையில் எட்டுப்பாடல்களைக் கபிலர் பாடியிருப்பது அத்துறைக்கு அவர் தரும் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. அறத்தொடு நிற்றல் என்பது தலைவியின் களவு வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வந்து திருமணம் எனும் கற்பியல் வாழ்க்கைக்கு கொண்டு சேர்க்கும் ஓர் வாழ்வியல் செயல்பாடாகவே தோழி இதனைச் செய்கிறாள்.

கபிலர் நூறு பாடல்களில் அறத்தொடு நிற்றல் எனும் துறைக்கே அதிக முக்கியத்துவம் தருவதால் அக்கால வாழ்வியலில் குறிப்பாகக் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலில் அறத்தொடு நிற்றல் முக்கிய இடம் வகித்ததை இதன் மூலம் அறியமுடிகிறது.

குறிஞ்சித்திணைக் கோட்பாடுகள் முதல், கரு, உரி எனும் நிலைகளில் சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களோடு ஒத்துள்ளதை அறியமுடிகின்றது. சங்ககாலம் குறிஞ்சிநிலத் தலைமக்கள் களவு எனும் ஒழுக்கநிலையை மேற்கொண்டு வாழ்ந்ததையும் அவ்வாழ்வினூடே குறிஞ்சிநில மக்கள் கடைபிடித்த சில வாழ்வியல் மரபுகளையும் செயல்பாடுகளையும் நாம் குறிஞ்சித்திணைப் பாடல்களின் வழி உணரமுடிகின்றது.

**குறுந்தொகையும் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்**

சங்க இலக்கியப் பாடல்களுள் பாலைத்திணைப் பாடல்களுக்கு (530) அடுத்து அதிக எண்ணிக்கையில் அமைந்துள்ளவை. குறிஞ்சித்திணைப் பாடல்களாகும். பத்துப்பாடலிலுள்ள குறிஞ்சிப் பாட்டையும் சேர்த்து மொத்தம் 488 பாடல்கள் குறிஞ்சித்திணையில் அமைந்துள்ளன. இதில் தலைவன் கூற்றாக 83 பாடல்கள் உள்ளன. இந்த 83 பாடல்களுள் 35 பாடல்கள் குறுந்தொகையில் உள்ளன. குறுந்தொகையில் உள்ள தலைவன் கூற்றுப் பாடல்களின் (35) வாயிலாக குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**களவுப் புணர்ச்சி**

சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் அனைத்தும் தலைமக்களது களவு வாழ்வையே பெரிதும் வெளிப்படுத்துகின்றன.

**"காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்**
**பாங்கொடு தழாஅலும் தோழியிற் புணர்வுமென்று**
**ஆங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு**
**மறையென மொழிதல் மறையோர் ஆறே"[37]**

என்று தொல்காப்பியர் களவு குறித்துக் குறிப்பிடுகிறார். அதாவது இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியிற் கூட்டம் எனும் களவுக்கூறுகள் குறிஞ்சித் திணைக்குரியன. **"களவுக் கைகோளின் இந்த நால்வகையும் இணைந்து அமைவதே புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகிய குறிஞ்சித் திணைக்குரிய உரிப்பொருள்"[38]** என்று முனைவர் இலா.குளோறியா சுந்தரமதி கூறும் கருத்து இங்கு நோக்கத்தக்கது. தொல்காப்பியர் கூறிய மேற்கண்ட களவு ஒழுக்கங்கள் குறுந்தொகையின் தலைவன் கூற்றுக் குறிஞுசித்திணைப் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளன.

**இயற்கைப்புணர்ச்சி அல்லது களவுப்புணர்ச்சி**

தலைவன் கூற்றிலமைந்துள்ள குறிஞ்சித்திணைப் பாடல்கள் பெரும்பாலானவை தலைவியின் அழகு நலன்களைப் புகழ்வனவாகவே அமைந்துள்ளன. இது சங்க காலக் குறிஞ்சிநில மக்களின் காதல் வாழ்வைப் புலப்படுத்துவதாக உள்ளது. சான்றாக,

> **“பெருந்தோட் குறுமகள் சிறுமெல் ஆகம்**
> **ஒருநாள் புணரப் புணரின்**
> **அரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே”[39]**

என்று தலைவன் கூறுகின்றான். இங்கு தலைவியின் மார்பைப் புணர்ந்த பின்பு அரைநாள் வாழ்க்கை கூட எனக்கு வேண்டாம் எனத் தலைவன் கூறுவதிலிருந்து குறிஞ்சிநில மக்களின் காதல் வாழ்வை அறியமுடிகின்றது. இதைப்போலவே ‘சிறுநுதல் புதுக்கோள் யானையின் பிணித்தற்றால் எம்மே’ (குறுந்.129) என்று கோப்பெருஞ்சோழன் எனும் அரசன் காதலின் சிறப்பை எடுத்துரைக்கின்றான். அதாவது தலைவியின் நெற்றி தன்னைக் கட்டிப்போட்டு விட்டதாகக் கூறுவது காதலின் சிறப்பைச் சுட்டவதாக அமைந்துள்ளது. மேலும், குறுந்தொகையின் 32 ஆம் பாடல் பொழுது தெரியாமல் காதலிக்கும் தலைமக்களது இயல்பையும், 40 ஆம் பாடல் செம்புலத்தில் நீர் கலத்தல் போல தலைமக்களது இரு மனமும் கலந்து காதலுற்ற நிகழ்வையும் கூறுகின்றன. 101 ஆம் பாடலில் கடல்சூழ் உலகையும் மேலுலகமான தேவருலகையும் தந்தாலும் தலைவியுடன் சேர்ந்த இன்பத்திற்கு ஈடாகாது என்று தலைவன் கூறுகின்றான். இவ்வாறாகக் குறிஞ்சிநில மக்கள் கொண்டிருந்த காதல் வாழ்வு குறுந்தொகையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**தலைவியின் அழகு புகழ்ச்சி**

இயற்கைப் புணர்ச்சி முதலாகிய நான்கு நிலைகளில் நடைபெறுகின்ற தலைமக்களது களவு வாழ்வின் முக்கிய அம்சமாக இருப்பது தலைவன் தலைவியின் அழகைப் புகழ்வதாகும். இந்தப் புகழ்ச்சி குறிஞ்சித்திணைப் பாடல்களில் குறிப்பாகத் தலைவன் கூற்றுப்

பாடல்களில் மிகுந்திருத்தலை அறியமுடிகின்றது. அதாவது, தலைவன் கூற்றிலுள்ள குறுந்தொகையின் 35 குறிஞ்சித்திணைப் பாடல்களில் 21 பாடல்கள் தலைவன் தலைவியின் கூந்தல், கை, முகம், நெற்றி, தொள், விரல்கள் முதலியவற்றைப் புகழ்வதாக அமைந்துள்ளன.

**"சேறிஎயிற்று அரிவை கூந்தலின்**

**நறியவும் உளவோ நீயறியும் பூவே?"[40]**

எனவும்,

**"அமிழ்துபொதி செந்நா அஞ்ச வந்த**

**வார்ந்துஇலங்கு வைஎயிற்றுச் சின்மொழி அரிவையை"[41]**

எனவும் தலைவன் தலைவியின் பல், கூந்தல், நாக்கு முதலியவற்றைப் புகழ்கிறான். இதைப்போலவே குறுந்தொகையின் 62, 70, 72, 95, 100, 101, 116, 119, 129, 132, 165, 199, 222, 272, 280, 286, 291, 300, 337 ஆகிய பாடல்களிலும் தலைவன் தலைவியின் அழகைப் புகழ்ந் பேசுகின்றான். குறிஞ்சிநில மக்களின் காதல் வாழ்வில் ஒருவரையொருவர் புகழ்தல் எனும் நிகழ்வு ஒரு கூறாக வாழ்வியல் செயல்பாடாக இடம்பெற்றிருந்ததே அதிகப்படியான பாடல்களில் இந்தப் புகழ்ச்சி அமைந்ததற்கு காரணம் எனலாம்.

**இடந்தலைப்பாடு**

தலைமக்களது முதல் சந்திப்பை இயற்கைப் புணர்ச்சியின் முதற்கட்ட நடவடிக்கை எனலாம். இது நடந்த மறுநாள் மீண்டும் தலைவன் தலைவியை அதே இடத்தில் சந்தித்துத் தழுவவேண்டும் என எண்ணுகிற நிகழ்வு இடந்தலைப்பாடு எனப்படும். இதனை **"இடம் தலைப்பாடு என்பது, அதே இடத்தில் மறுநாளும் இருவரும் எதிர்ப்படுதல் - தலைப்பாடு – தலைப்படுதல் - கூடுதல். தலைவனும் தலைவியும் வினையினால் தலைப்படுதலால், இங்ஙனம் கூடுவது இடந்தலைப்பாடு எனப்படும்"[42]** என்று விளக்குகிறார் ந.சுப்புரெட்டியர். இத்தகைய இடந்தலைப்பாடு

**“தீண்டலும் இயைவது கொல்லோ?**

**.......................................................**

**நாறு இருங் கூந்தல் கொடிச்சி தோளே!”[43]**

எனக் குறுந்தொகையில் அமைந்து தலைவன் கூற்றாக வெளிப்படுகின்றது.

**தலைவனின் காமநோய்**

காதல் வாழ்வில் ஏற்படுகின்ற தலைவனின் காம மிகுதியையும் அதனால் ஏற்படுகின்ற துன்பத்தினையும் பல குறிஞ்சித்திணைப் பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

**“கையில் ஊமன் கண்ணின் காக்கும்**

**வெண்ணெய் உணங்கல் போலப்**

**பரந்தன்று, இந்நோய்: நோன்றுகொளற்கு அரிதே!”[44]**

என்று தலைவனின் காம நோய் இங்கு சுட்டப்படுகின்றது. ஆனால்

**“காமம் காமம் என்ப: காமம்**

**அணங்கும் பிணியும் அன்றே: நுணங்கிக்**

**கடுத்தலும் தணிதலும் இன்றே: யானை**

**குளகுமென்று ஆள்மதம் போலப்**

**பாணியும் உடைத்து, அது காணுநர்ப்பெறினே”[45]**

என்று காமத்தைப் பற்றித் தலைவன் கூறும் இப்பாடல், யானை குளகு என்னும் தழையுணவை உண்டு தன் மதத்தை அடக்கிக் கொள்வது போல தலைவன் தன் காமத்தை அடக்குவதற்குத் தலைவியுடன் சேர்தலே சிறந்த வழி என்று தன் தோழர்களிடம் மறைமுகமாகக் கூறுவதாக அமைந்துள்ளது. இதிலிருந்து காதல் வாழ்வில் காமத்தை உண்டாக்குபவளாகவும் அக்காமத்திற்கு மருந்தாகவும் தலைவி இருந்தமை அறியப்படுகின்றது.

**மடலேறுதல்**

தலைவனின் காதல் மிகும்போதும் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள முடியாத நிலை ஏற்படும்போதும் தலைவன் மடலேறுவேன் என்று கூறும் நிகழ்வு சங்ககாலக் காதல்வாழ்வின் ஒரு பகுதியாக இருந்ததைக் குறுந்தொகைப் பாடல்களின்வழி அறியமுடிகின்றது.

இதனை,

> **“மாஎன மடலும் ஊர்ப் பூ எனக்**
> **குவிமுகிழ் எருக்கம் கண்ணியும் சூடுப**
> **மறுகின் ஆர்க்கவும் படுப**
> **பிறிதும் ஆகுப காமம்காழ்க் கொளினே”[46]**

எனும் தலைவன் கூற்றுப் பாடல்வவழி அறியலாம். மேலும் ‘மாஎன மடலொடு மறுகில் தோன்றி’ (32) ‘பல்நூல் மாலைப் பனைபடு கலிமாப் பூண்மணி கறங்க ஏறி, நாண் அட்டு’ (173), ‘மாமடல் மணிஅணி பெருந்தார் மரபிற் பூட்டி’ (182) என வரும் குறுந்தொகைப் பாடல் அடிகளால் தலைவன் மடலேறுவேன் எனக் கூறுவதை அறியமுடிகின்றது. இத்தகைய மடலேறும் மரபு சங்ககால மக்களின் காதல் வாழ்வில் இன்றியமையாத இடத்தைப் பெற்றிருத்தலோடு அது தலைமக்களது காதலை ஊரார் அறியும்படிச் செய்யும் ஒரு செயல்பாடாகவும் இருந்ததை அறியமுடிகின்றது.

**குறிஞ்சிநில மக்களின் தொழிலும் உணவும்**

குறிஞ்சிநில மக்களின் வேட்டைத் தொழிலோடு வேளாண்மை, வியாபாரம், கைத்தொழிகள் முதலிய தொழில்களையும் செய்துவந்ததைக் குறுந்தொகைப் பாடல்களின்வழி அறியமுடிகின்றது. “வில்லுடை வீளையர்” (குறுந். 272) எனும் தொடர் குறிஞ்சிநில மக்கள் வில் எனும் கருவியை வைத்திருந்த செய்தியைத் தருகின்றது. மேலும், குளிர் எனும் கிளி விரட்டும் கருவியையும் இவர்கள் பயன்படுத்தியுள்ளனர். இதனை, “படுகிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே”

(குறுந். 291:2) எனும் அடியால் அறியலாம். இதன் மூலம் வில் கொண்டு இவர்கள் காட்டு விலங்குகளை வேட்டையாடி உணவைப் பெற்றதை அறியலாம்.

மேலும் குறிஞ்சிநில மக்கள் நிலத்தைப் பண்படுத்தி வேளாண்மைத் தொழில் செய்த நிகழ்வுகள் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. "சுடுபுன மருங்கில் கலித்த ஏனற்" (குறுந்.291:1) எனும் அடி மரம் செடிகளைச் சுட்டு எரித்துப் பண்படுத்திய நிலத்தில் ஏனல் எனப்படும் தினையை விதைத்திருந்த செய்தியைச் சுட்டுகின்றது. மேலும், 'பரீஇ வித்திய ஏனல்" (குறுந். 72:4) எனும் அடி தினை விதைத்திருந்ததையும் அதனூடே பருத்தி ஊடு பயிராகப் பயிரிடப்பட்டிருந்ததையும் காட்டுகின்றது. இதைப்போலவே,

> **"அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்**
> **பருஇலைக் குளவியொடு பசுமரல் கட்கும்**
> **காந்தள்அம் சிலம்பில் சிறுகுடி பசித்தென**
> **கடுங்கண் வேழத்துக் கோடுநொடுத்து உண்ணும்"**[47]

எனும் பாடலடிகள் அருவிபாயும் நிலத்தில் ஐவனம் எனும் நெல்லை விதைத்திருந்த செய்தியையும், யானையின் தந்தத்தை விற்றுக் கிடைக்கின்ற பொருளைக் கொண்டு உணவு உண்ட செய்தியையும் தருகின்றன. இதிலிருந்து குறிஞ்சிநில மக்கள் தினை, பருத்தி, நெல் பயிரிடுதல் எனும் வேளாண் தொழிலோடு தந்தம் விற்றல் எனும் வணிகத் தொழிலிலும் ஈடுபட்டிருந்ததை அறியமுடிகின்றது. மேலும், 'பெயல்நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல' (குறுந்.29:2) எனும் அடி சுடப்படாத பச்சைமண் பானையைக் குறிப்பதிலிருந்து சங்ககாலக் குறிஞ்சிநில மக்களின் தொழிலாக மட்பாண்டத் தொழிலும் செய்யப்பட்டிருக்கலாம் என்பதை உணர்த்துகின்றது. மேலும் உணவாக உப்பும் மதுவாகிய கள்ளும் இருந்ததை,

**“மகிழ்ந்ததன் தலையும் நறஉண் டாங்கு**

**...................................................................**

**இருங்கரை நின்ற உப்புஒய் சகடம்”[48]**

எனும் அடிகளின் மூலம் அறியலாம்.

**குறிஞ்சிநிலமும் மன்னர்களும்**

குறிஞ்சிநில இயற்கை வளம் பற்றிக் குறுந்தொகையின் 95 ஆம் பாடலிலும், 100 ஆம் பாடலில் அருவி குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் குறிஞ்சிநில மக்களின் வாழிடம் பற்றியும் பாடல்களில் குறிப்புகள் உள்ளன. 276 ஆம் பாடலில் தலைவியின் ஊர் பற்றிப் பேசப்பட்டுள்ளது. இதேபோல் 337 ஆம் பாடலும் தலைவியின் செல்வக் குடிப்பிறப்பை,

**“பெருமுது செல்வர் ஒருமட மகளே? ”[49]**

எனச் சுட்டுகின்றது. மேலும் குறிஞ்சிநிலத் தலைவர்களான குறுநில மன்னர்கள் பற்றியும் பாடல்கள் குறிப்பிடுகின்றன. 100, 199 ஆம் பாடல்களில் கொல்லிமலையை ஆண்ட வல்வில் ஓரி பற்றிக் கூறப்பட்டுள்ளது. 312 ஆம் பாடல் திருமுடிக்காரி பற்றிக் குறிப்பிடுவதோடு அவன் ஆண்ட ஊரான முள்ளூர்காட்டையும் சுட்டுகின்றது. அரசவை இருந்த செய்தியை,

**“முறையுடை அரசன் செங்கோல் அவையத்து”[50] (குறுந். 276:5)**

எனும் அடியால் அறியலாம்.

**நட்பு, கல்வி வாழ்க்கை**

குறிஞ்சிநிலத் தலைவனுக்கு இருந்த நண்பர்களைப் பற்றி பல பாடல்கள் குறிப்பிடுகின்றன. பார்ப்பனத் தோழனைத் தலைவன் பெற்றிருந்த செய்தியை,

**“பார்ப்பன மகனே! பார்ப்பன மகனே! ”[51]**

எனும் பாடலடி உணர்த்துகின்றது. இதைப்போலவே குறுந்தொகையின் 58, 182, 206 ஆம் பாடல்கள் தலைவனின் தோழர்கள் குறித்தும், 222 ஆம் பாடல் தலைவியின் தோழி குறித்தும் கூறுவனவாக அமைந்துள்ளன. இதில் 156 ஆம் பாடல் பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணன் எனும் அரசனால் பாடப்பட்டு ஏட்டில் எழுதாமல் வாய்மொழியாகவே வேதக்கல்வி கற்கப்பட்ட அக்காலக் கல்வி நிலையைச் சுட்டுகின்றது.

**வழிபாடும் நம்பிக்கையும்**

முனிவர்கள் மேற்கொள்ளக்கூடிய தவ வழிபாடு குறித்த செய்தி 156 ஆம் பாடலில் உள்ளது. இதில் முனிவர்கள் கையில் வைத்திருக்கும் கவை எனும் தவக்கருவி புரச மரத்தினால் செய்யப்பட்ட செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கொல்லிமலையில் உள்ள கொல்லிப்பாவை எனும் தெய்வம் தலைவிக்கு ஒப்புமை கூறும் விதமாக 100 ஆம் பாடலில் சுட்டப்பட்டுள்ளது. குறிஞ்சிக்கடவுளான முருகன் பற்றிய குறிப்பு தலைவன் கூற்றிலுள்ள 35 குறுந்தொகைப் பாடல்களிலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் குறிஞ்சிநில மக்கள் இம்மை மறுமையாகிய பிறப்புகளின் மீது நம்பிக்கை வைத்திருந்ததை,

**“இன்றை அன்ன நட்பின் இந்நோய்**
**இறுமுறை எனஒன்று இன்றி,**
**மறுமை உலகத்தும் மன்னுதல் பெறினே”**[52]

எனும் அடிகளால் அறியலாம். இங்கு தலைவனின் காம நோய் இரு பிறவிகளிலும் தீராமல் தொடர்ந்து நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கை குறிஞ்சிநில மக்களிடையே இருந்ததை அறியமுடிகின்றது.

இவ்வாறாகக் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலில் இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் முதலிய களவுக்கால வாழ்க்கைக் கூறுகளும் தொழில்கள், உணவு, கருவிகள், வழிபாடுகள், நம்பிக்கைகள், கல்வி, அரசர்கள், அரசவை முதலியனவும் இடம் பெற்றிருந்ததை குறுந்தொகையின் குறிஞ்சித்திணைப் பாடல்களின் வழி அறியமுடிகின்றது.

**ஐங்குறுநூறும் குறிஞ்சிநிலப் பண்பாடும்**

எட்டுத்தொகையுள் ஒன்று ஐங்குறுநூறு. இதிலுள்ள 500 பாடல்களுள் குறிஞ்சித்திணைப் பாடல்கள் 100. இதன் ஆசிரியர் கபிலர்.

**பண்பாடு**

ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் வாழ்கின்ற மக்கள் மரபு வழியாக காலங்காலமாகக் கடைபிடித்து வருகின்ற சமூகப் பண்பே பண்பாடு எனப்படுகின்றது. இப்பண்பாடு மக்களின் பழக்கவழக்கம் சார்ந்த நிலைப்பாடாக அமைகின்றது எனலாம். **"முதலில் பயிர்த்தொழிலைக் குறிப்பாக உணர்த்திய 'பண்பாடு' என்ற சொல், காலப்போக்கில் நுண்பொருட்பேறு பெற்று, ஒரு குறிப்பிட்ட மக்களின் உள்ளத்தைப் பண்படுத்துவதற்குக் காரணமாகிய சமூகப் பழக்க வழக்கங்களையும், மரபுகளையும், கருத்துக்களையும், எண்ணங்களையும் குறிக்கும் பொதுச் சொல்லாக விளங்குவதாயிற்று"**[53] என்று பண்பாட்டிற்கு விளக்கம் தருகிறார் முனைவர் பெரு. தியாகராஜன்

**இலக்கியத்தில் பண்பாடு**

சங்க அக இலக்கியமான நற்றிணையில் பண்பாடு என்பதற்கு விளக்கம் தருகிறார் பெயர் தெரியாத சங்கப்புலவர் ஒருவர்.

**"நன்மலை நாட! பண்புஎனப் படுமோ**
**நின்நயந்து உறைவி இன்உயிர் உள்ளாய்"**[54]

எனும் அடிகளில் பயின்று வரும் பண்பு என்ற சொல், தலைவி வருந்தும்படி துன்பம் தரும் மலைச்சாரல் வழியில் தலைவன் வருவது பண்பற்ற செயல் என்பதைக் குறிக்கின்றது. மற்றவர்களின் விருப்பத்திற்கேற்ப நடந்து கொள்வதே சிறந்த பண்பு என்பது இங்குச் சுட்டப்படுகின்றது. மேற்கண்ட பாடல் குறிஞ்சித்திணையில் அமைந்து குறிஞ்சி நிலத்துக்குரிய தலைமக்களது களவு வாழ்க்கை சார்ந்த பண்பாட்டை விளக்குவதாக அமைந்துள்ளது.

**ஐங்குறுநூற்றில் பண்பாடு**

ஐங்குறுநூற்றின் தலைவன் கூற்றிலமைந்த குறிஞ்சித்திணைப் பாடல்கள் குறிஞ்சிநிலத்துக்குரிய மக்களின் பண்பாட்டை விளக்குவனவாக உள்ளன. இந்தப் பாடல்கள் அனைத்தும் கபிலரால் இயற்றப்பட்டவை. குறிஞ்சி பாடுவதில் வல்லவர் எனும் சிறப்பை "குறிஞ்சிக்குக் கபிலர்" எனும் தொடர் புலப்படுத்துகின்றது. கபிலர் தம் பாடல்களில் குறிஞ்சிநில மக்களின் களவு வாழ்வு சார்ந்த பண்பாட்டு மரபுகளை எடுத்துரைத்துள்ளார் எனில் அது மிகையாகாது. ஐங்குறுநூற்றுப் பாடல்கள் முழுவதும் திட்டமிட்டு பாடப்பட்ட கவிதை மரபைக் கொண்டுள்ளன. அதாவது பத்துப் பத்துப் பாடல்களாகத் தலைப்பிடப்பட்டு இவை பாடப்பட்டுள்ளன.

**குன்றக்குறவன் பத்தில் பண்பாடு**

குன்றக்குறவன் பத்தில் உள்ள 10 பாடல்களுள் 3 பாடல்கள் தலைவன் கூற்றில் அமைந்து குறிஞ்சிநில மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன. இப்பாடல்கள் களவு வாழ்வை மையமிட்டதாய் அமைந்து தலைமக்களின் நடத்தை சார்ந்த பண்பாட்டு மரபுகளை முன்வைக்கின்றன. ஐங்குறுநூற்றின் 255, 256, 259 ஆகிய மூன்று பாடல்களிலும் பெரும்பான்மையாக களவில் தலைவன் தலைவியைப் புகழ்தல் எனும் காதல் சார்ந்த குறிஞ்சிநிலப் பண்பாட்டு மரபு வெளிப்படுகின்றது.

**"களவில் அழகு புகழ்ச்சி**
**குன்றக் குறவன் காதல் மடமகள்**
**வரையர மகளிர்ப் புரையும் சாயலள்**
**ஐயள் அரும்பிய முலையள்**
**செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே"**[55]

என அமையும் பாடல் முழுமையும் தலைவியின் அழகு நலன்களைச் சுட்டுவதாகவே அமைந்துள்ளது. இதில் வரும் 'வரையர மகளிர்ப் புரையும் சாயலள்' எனும் அடி குறிஞ்சிநில மக்கள் கொண்டிருந்த

தெய்வ நம்பிக்கை எனும் பண்பாட்டுமரபை வெளிப்படுத்துகின்றது. அதாவது தலைவன் தலைவியைத் தெய்வப் பெண்டிர்க்கு நிகரானவள் என்று புகழ்வது இங்கு குறிப்பிடத்தக்கது. இது களவு வாழ்வில் நிகழும் இன்றியமையாத பண்பாட்டு மரபாகத் தலைவனால் வெளிப்படுத்தப்படுவதை அறியமுடிகின்றது.

இதைப்போலவே 'வண்டுபடு கூந்தல்' (ஐங்.256:2) 'வளையள் முளைவாள் எயிற்றள் (ஐங்.256:3), இளையள் (ஐங்.256:4) எனும் தொடர்கள் தலைவியின் பல், கூந்தல் முதலியவற்றைத் தலைவன் புகழ்வதை உணாத்துகின்றன. மேலும் காந்தள் மலா் மணக்கும் மேனியை உடையவள் (ஐங்.259) என்றும் தலைவன் தலைவியைப் புகழ்கிறான். இவை களவு சார்ந்த பண்பாட்டை நமக்குப் புலப்படுத்துகின்றன.

**கடவுள் வழிபாடு**

குறிஞ்சிநில மக்களின் மரபு சார்ந்த பண்பாட்டில் கடவுள் வழிபாடு என்பது இன்றியமையாத பண்பாடாக அமைந்துள்ளது. இதனை

**"மன்ற வேங்கை மலர்சில கொண்டு**
**மலைஉறை கடவுள் குலமுதல் வழுத்தித்**
**தேம்பலிச் செய்த ஈர்நறும் கையள்"**[56]

எனும் அடிகளால் அறியலாம். இப்பாடலடிகள் கடவுளை வழிபடும் முறையினைக் குறிஞ்சிநிலப் பண்பாடு சார்ந்து விளக்குகின்றன. அதாவது வேங்கை மலர்களை கடவுளுக்குப் பலியாகக் கொடுத்ததையும் தேனைக் கடவுளுக்குப் படையலாகப் படைத்ததையும் மேற்கண்ட பாடலடிகள் உணர்த்துகின்றன. இத்தகைய கடவுள் வழிபாட்டு முறை குறிஞ்சிநிலத்துக்குரிய மக்களின் பண்பாடாக இருந்ததை இதன்மூலம் அறியமுடிகின்றது.

**தழையாடை உடுத்தும் மரபு**

குறிஞ்சிநிலத் தலைமக்கள் தமது களவு வாழ்வின்போது குளிர்ச்சி மிக்கத் தழையாடையை அணிந்து கொள்வதை மரபாகக்

கொண்டிருந்தனர். இது களவு சார்ந்த பண்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இதனை

**"வண்டுபடு கூந்தல் தண்தழைக் கொடிச்சி"[57]**

எனும் அடி உணர்த்துகின்றது. இங்குத் தலைவி குளிர்ச்சி பொருந்திய தழையால் செய்யப்பட்ட ஆடையை அணிந்திருந்த பண்பாட்டு மரபு சுட்டப்படுவதை அறியலாம்.

**கிள்ளைப் பத்தில் குறிஞ்சிநிலப் பண்பாடு**

களவு எனும் நிலையில் அறியப்பட்ட குறிஞ்சிநிலத் தலைவியானவள் உணவு உற்பத்திக்கான வேளாண்மையிலும் ஈடுபட்ட நிகழ்வினைக் குறிஞ்சித்திணைப் பாடல்களின்வழி அறியமுடிகின்றது. கிள்ளைப் பத்தில் வரும் 281, 288 ஆம் பாடல்கள் தலைவி தினைப்புனக் காவல் புரிந்த செய்தியைத் தருகின்றன. இத்தினைக் காவலானது குறிஞ்சிநிலம் சார்ந்த பெண்களுக்குரிய பண்பாட்டு மரபாக உள்ளதை அறியலாம். இதனை,

**"இரும்பல் கூந்தல் கொடிச்சி**
**பெருந்தோள் காவல் காட்டி யவ்வே"[58]**

எனும் அடிகள் உணர்த்துகின்றன.

**மஞ்ஞைப் பத்தில் பண்பாடு**

மஞ்ஞைப் பத்தில் 291, 293, 298, 299 ஆம் பாடல்கள் தலைவன் கூற்றில் அமைந்துள்ளன. இவற்றில் 291 ஆம் பாடல் தலைவி தழையாடை அணிந்திருந்த செய்தியைத் தருகின்றது. இதனை,

**"ஆய்தழை நுடங்கும் அல்குல்**
**காதலி உறையும் நனிநல் ஊரே"[59]**

எனும் அடிகளால் அறியலாம். இங்கு, தலைவி தேர்ந்தெடுத்த இலைகளால் செய்யப்பட்ட தழையாடையை அடிவயிற்றுப் பகுதியில் அணிந்திருந்த செய்தி சுட்டப்படுகின்றது. இந்தத் தழையாடை அணியும்

மரபு குறிஞ்சிநிலத்துக்கே உரிய மரபாக அமைந்துள்ளதை இதன் மூலம் அறியமுடிகின்றது. மேலும்

**“மலைவரவு அறியா மஞ்ஞை ஆலும்**
**அடுக்கல் நல்லூர் அசைநடைக் கொடிச்சி”[60]**

எனும் அடிகள் மழை வருவதை முன்னரே அறிந்துகொண்டு மயில்கள் தம் தோகையை விரித்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் ஆடிய குறிஞ்சிநிலக் காட்சியைத் தருகின்றன. இது குறிஞ்சிநிலச் செயல்பாடாகிய மழை வருதலை முன்னரே அறிதல் எனும் நம்பிக்கை சார்ந்த குறிஞ்சிநில மக்களின் பண்பாட்டைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

**ஒப்பனை மரபு**

மஞ்ஞைப் பத்தின் 299 அம் பாடல் முழுவதும் தலைவியின் அழகைப் புகழ்வதாக அமைந்துள்ளது. எனினும் குறிப்பாகத் தலைவி தன் கூந்தலைப் பின்னிக் கொள்ளும் ஒப்பனை முறையினைச் சுட்டுவதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது குறிஞ்சிநிலத் தலைவியின் ஒப்பனை சார்ந்த பழக்க வழக்கத்தைக் காட்டுகின்றது. இதனை,

**“குன்ற நாடன் குன்றத்துக் கவாஅன்**
**பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும்**
**அஞ்சில் ஓதி அசைநடைக் கொடிச்சி**
**கண்போல் மலர்தலும் அரிது இவள்**
**தன்போல் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே”[61]**

எனும் பாடல் உணர்த்துகின்றது. இதில் வரும் ‘அஞ்சில் ஓதி’ எனும் தொடர் தலைவியின் கூந்தலானது ஐந்துவகையாகப் பின்னப்பட்டிருந்த ஒப்பனை முறையைச் சுட்டுகின்றது. இது குறிஞ்சிநிலத் தலைவியின் உடல்சார்ந்த பண்பாட்டு மரபைக் காட்டுவதாக உள்ளது. மேலும் மயிலானது தலைவியின் சாயலைப் பெற்றிருத்தல் அரிதே என்று தலைவன் சுட்டுவதிலிருந்து தலைமக்களது களவு வாழ்க்கையில் தலைவன் தலைவியின் அழகுநலன்களைப் புகழ்தல் எனும் மரபு

குறிஞ்சிநிலத்துக்குரிய பண்பாட்டு மரபாக நிலைத்திருப்பதை அறியமுடிகின்றது.

மலைப்பகுதியாகிய குறிஞ்சிநிலத்து மக்களுக்கென தனித்த பண்பாட்டு மரபுகள் காலங்காலமாக இருந்து வந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கதாக களவில் தலைவன் தன் தலைவியாகிய தலைவியைப் புகழ்தல் எனும் பண்பாட்டு மரபு அமைந்துள்ளது. மேலும் தனித்தன்மை வாய்ந்த பண்பாடாகத் தழையாடை அணிதல் எனும் பண்பாடு அமைந்துள்ளது. இது குறிஞ்சி நிலத்துக்கு மட்டுமே உரியதாக இருப்பதைக் குறிஞ்சித்திணைப் பாடல்களின்வழி அறியமுடிகிறது. குறிஞ்சிநிலச் சடங்குகளில் கடவுளை வழிபடும் முறை குறித்துச் சுட்டப்பட்டுள்ளது. தேனையும் மலரையும் இறைவழிபாட்டில் பலியாகக் கொடுக்கின்ற பண்பாட்டு மரபு குறிஞ்சி நிலத்துக்குரியது என்பதையும் இத்தகைய சிறப்புமிக்க தனக்கே உரிய தனித்தன்மை வாய்ந்த பண்பாட்டு மரபுகளைக் குறிஞ்சிநில மக்கள் தம் வாழ்வியலாகக் கொண்டிருந்ததையும் ஐங்குறுநூற்றுப் பாடல்களின்வழி அறிய முடிகின்றது.

**குறிஞ்சித்திணைப் பாடல்களில் பாடுபொருள் மாற்றமும் மக்கள் வாழ்வியலும்**

குறிஞ்சித் திணையில் அமைந்துள்ள பாடல்கள் அனைத்தும் தம்முள் ஒத்த நிலையில் அதாவது குறிஞ்சித் திணைக்குரிய முதல், கரு, உரி ஆகிய முப்பொருள்களை உணர்த்துவனவாக உள்ளன. எனினும் இப்பாடல்களின் அடிவரையறையில் மாற்றங்கள் காணப்படுகின்றன. இந்த மாற்றங்கள் பாடல்களின் பாடுபொருள்களிலும் ஏற்பட்டு குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் வெளிப்பாட்டிலும் பிரதிபலிக்கின்றன. இவ்வாறாகச் சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணலாகும். அடிநீட்சியையும் அதன்மூலம் ஏற்பட்டுள்ள மக்களின் வாழ்வியல் மாற்றங்களையும் இனங்காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## குறிஞ்சித்திணைப் பாடல்களின் அடிவரையறை

**“இருவரும் கொள்ளும் காதலில் ஒருவர் ஒருவரை மறுக்காமை ஒரு மரபாகும். ஒருவர்க்கொருவர் கொள்ளும் இத்தகைய ஒத்த காதலின் தோற்றத்தையும் தொடக்கத்தையும் பாடும் திணை குறிஞ்சியாகும்”**[62] என்று குறிஞ்சித்திணைக்கு விளக்கம் தருகிறார் தமிழண்ணல், சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் தம்முள் வேறுபட்ட எண்ணிக்கையில் அடிவரையறை கொண்டுள்ளன. அதாவது 3 முதல் 6 அடிகளை ஐங்குறுநூறும், 4 முதல் 8 அடிகளைக் குறுந்தொகையும், 9 முதல் 12 நற்றிணையும், 13 முதல் 31 அடிகளை அகநானூறும், 11 முதல் 80 அடிகளைக் கலித்தொகையும், 261 அடிகளைக் குறிஞ்சிப்பாட்டும் கொண்டுள்ளன.

## அடிநீட்சியும் பாடுபொருள் மாற்றமும்

மேற்கண்ட அடிவரையறையில் காணப்படுகின்ற வேறுபாடே பாடல்களின் பாடுபொருள் மாற்றத்திற்கும் காரணமாகின்றது. இந்தப் பாடுபொருள் மாற்றமானது பாடலுக்குப் பாடல் வேறுபட்டமைவதால் பாடல்கள் உணர்த்தக்கூடிய திணைநிலை மக்களின் வாழ்வியல் வெளிப்பாட்டிலும் மாற்றங்கள் காணப்படுகின்றன. இவ்வாறாகக் குறிஞ்சி முதலாகிய ஐவகை நிலமக்களின் வாழ்வியலிலும் மாற்றங்களைக் காணமுடிகின்றது. எனினும் **“வேறு எத்திணைக்குரிய உரிப்பொருளும் குறிஞ்சியிற் கலக்கவில்லை. இது குறிஞ்சித்திணையின் தனிச்சிறப்பாகும்”**[63] என்று தமிழண்ணல் கூறும் கருத்தும் நோக்கத்தக்கதாகிறது. இங்கு குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் வேறுபாட்டை பாடலின் அடி வேறுபாடு அதாவது அடிநீட்சி மற்றும் அதன்மூலம் நிகழ்ந்துள்ள பாடுபொருள் மாற்றம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆராய இக்கட்டுரை முற்படுகின்றது.

## ஐங்குறுநூறு – பாடுபொருளமைப்பும் மக்கள் வாழ்வியலும்

ஐங்குறுநூற்றில் நூறு பாடல்கள் குறிஞ்சித்திணையில் அமைந்துள்ளன. இவை கபிலரால் பாடப்பட்டவை இப்பாடல்கள் 3 அடி முதல் 6 அடி வரை பெற்றுள்ளன. இங்கு பாடலுக்குப் பாடல்

அடிவரையறையில் மாற்றம் உள்ளதால் பாடல்கள் உணர்த்தும் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் சார்ந்த கருத்தாக்கங்களிலும் மாற்றங்கள் காணப்படுகின்றன. அதாவது அன்னாய்ப் பத்தில் உள்ள 211, 212 ஆம் பாடல்கள் 3 அடி பெற்று குறிஞ்சி நில மக்களின் சில வாழ்வியற் சூழல்களை உணர்த்துகின்றன.

**"நெய்யொடு மயக்கிய உழுந்துநூற் றன்ன**
**வயலையஞ் சிலம்பின் தலையது**
**செயலையம் பகைத்தழை வாடும் அன்னாய்!"**[64]

என வரும் 3 அடிப்பாடலின்வழி,

1. நெய்கலந்து உழுந்து மாவைப் பிசைதல்
2. மாவைப் பிசைந்த கையினால் நூலைத் திரித்தல்
3. திரித்த நூலைப் போல வயலைக் கொடியானது அமைந்திருத்தல்
4. வயலைக் கொடியானது குறிஞ்சி நிலமான மலை உச்சியிலுள்ள அசோக மரத்தில் படர்ந்திருத்தல்
5. அந்த அசோக மரத்தின் இலைகளால் தழையாடை செய்யப்பட்டிருத்தல்
6. அத்தழையாடையைத் தலைவன் தலைவிக்குக் கையுறையாக அதாவது பரிசுப்பொருளாகத் தருதல்
7. தழையாடையைத் தலைவி ஏற்க மறுத்தல்
8. தழையாடையானது வாடிவிடுமாதலால் அதை ஏற்றுக் கொள் எனத் தோழி தலைவியிடம் கூறுதல்

எனும் குறிஞ்சித்திணை சார்ந்த தலைமக்களின் வாழ்வியல் செயல்பாடுகளை அறியமுடிகின்றது. அதாவது 3 அடிகளில் மட்டுமே அமைந்த ஒரு சிறிய பாடலானது குறிஞ்சிநிலம் சார்ந்த எட்டு வகையான நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் நமக்கு உணர்த்துகின்றது. இதைப்போலவே 213, 214 ஆம் பாடல்கள் 5 அடிகளிலும், 215,216 ஆம் பாடல்கள் 6 அடிகளிலும் அமைந்து தத்தம்முள் வேறுபட்ட பாடுபொருளைக் கொண்டனவாக நீண்ட பாடுபொருளைக் கொண்டனவாக அமைந்துள்ளன. இத்தகைய நீண்ட பாடலமைப்பே மக்களின் வாழ்வியல்

செயல்பாடுகளை வெளிப்படுத்துவதிலும் நீட்சியை ஏற்படுத்துகின்றது எனலாம். எனினும் குறுந்தொகையின் 23வது பாடல் மேற்கண்ட அடிநீட்சிக்கேற்ப பாடுபொருளும் நீட்சியடைகிறது என்ற கருத்தாக்கத்திலிருந்து மாறுபட்டுக் காணப்படுகின்றது.

**குறுந்தொகை அடி நீட்சியும் பாடுபொருள் மாற்றமும்**

5 அடிகளைக் கொண்டு ஔவையாரால் பாடப்பெற்ற

**“அகவன் மகளே! அகவன் மகளே**
**மனவுக் கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்**
**அகவன் மகளே! பாடுக பாட்டே!**
**இன்னும் பாடுக பாட்டே! அவர்**
**நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே!”**[65]

எனும் பாடல் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்பதாக அமைந்து தலைவியின் களவை (காதல் வாழ்வை) வெளிப்படுத்துகின்றது. இப்பாடல் முன்னர் கண்ட ஐங்குறுநூற்றின் 211 ஆம் பாடலிலிருந்து நீண்டு 5 அடிகள் கொண்டதாக அமைந்துள்ள போதும்,

1. அகவன் மகள் (கட்டுவிச்சி) கட்டுக்காணுதல், அதாவது கட்டுவிச்சியானவள் சாமியை அழைத்துக் குறிகேட்டுப் பாடல் பாடுதல்
2. தோழி அறத்தொடு நிற்றல். அதாவது தலைவனது நெடிய மலை பற்றிய பாட்டைக் கட்டுவிச்சியிடம் பாடச் சொல்லுதல்
3. சங்குமணி மாலை போன்று நீண்ட கூந்தலை உடையவளாகக் கட்டுவிச்சி இருத்தல்

எனும் நிலைகளில் அமைந்து குறிஞ்சிநில வாழ்வியல் சார்ந்த 3 வகை கருத்தாக்கங்களை மட்டுமே முன்வைக்கின்றது. இங்கு பாடல் அடி நீண்டுள்ள போதிலும் பாடுபொருள் உணர்த்தும் குறிஞ்சிநில வாழ்வியல் சார்ந்த கருத்துநிலை குறைந்திருப்பதை அறியமுடிகிறது. ஆகவே இப்பாடல் பாடுபொருள் மாற்றம் கொண்டதாக விளங்குவதை அறியலாம்.

**நற்றிணை அடிநீட்சியும் பாடுபொருள் மாற்றமும்**

12 அடிப் பேரல்லை கொண்டனவாக நற்றிணைப் பாடல்கள் வரையறுக்கப்பட்டாலும் குறிஞ்சித்திணையிலமைந்துள்ள 64, 379, 393 ஆம் நற்றிணைப் பாடல்கள் 13 அடிகளைக் கொண்டமைந்து அடிவரையறையில் நெகிழ்வை உண்டாக்குகின்றன. எனினும் நற்றிணையின் குறிஞ்சிப்பாடல்கள் அடி எண்ணிக்கையிலும் பாடுபொருளமைப்பிலும் நீட்சியைக் கொண்டனவாகவே காணப்படுகின்றன.

சான்றாக,

**“பகல் எரி சுடரின் மேனி சாயவும்”**[66]

எனவும்,

**“அமர்க்கண் ஆமான் அருநிறம் முள்காது”**[67]

எனவும்,

**“விழுந்த மாரிப் பெருந்தண் சாரல்’** [68]

எனவும் தொடங்கும் நற்றிணையின் குறிஞ்சித்திணைப் பாடல்கள் முறையே தலைவி கூற்று, தோழிகூற்று, தலைவிகூற்று என அமைந்துள்ளன. **“இப்பாடல்களுக்கு வகுக்கப்பட்டுள்ள துறைகளை நோக்கும்போது அவற்றுக்கிடையே ஒரு தொடர்ச்சியான இயைபுடைய கவிதைமரபு அமைந்திருப்பதை அறியமுடிகின்றது. அதாவது தலைவி தன் காதல் குறித்துத் தோழிக்குக் கூறுதல் (தலைவி தோழிக்கு) (அறத்தொடு நிற்றல்), தோழி தலைவியை நோக்கி நம் பெற்றோர்க்கு நாம் அறத்தொடு நிற்க வேண்டும் எனக் கூறுதல், அவ்வாறு கூறிய தோழியைத் தலைவி கடிந்து கொள்ளுதல் என்னும் தொடர்ச்சியான கவிதைமரபு மேற்கண்ட மூன்று பாடல்களிலும் அமைந்துள்ளதைக் காணலாம்”**[69] எனும் கருத்து மேற்கண்ட மூன்று குறிஞ்சிப்பாடல்களும் வேறுவேறாக அமைந்திருந்தாலும் தம்முள் தொடர்ச்சியான பாடுபொருள்களைக் கொண்டிருத்தலை உணர்த்துகின்றது. இவ்வகையில் நற்றிணையின் குறிஞ்சிப் பாடல்களில் பாடுபொருள் மாற்றமும் களவுக்கால வாழ்வியல் நிகழ்வுகளும் அமைந்திருப்பதை அறியமுடிகின்றது.

### அகநானூறு, கலித்தொகை அடிநீட்சியும் பாடுபொருள் மாற்றமும்

சங்ககால மன்னர்கள் சார்ந்த பல வரலாற்றுக் குறிப்புகள் அகநானூற்றுக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளமையே இதன்அடி நீட்சிக்குக் காரணம் எனலாம். 'களிறு கெழு தானைப் பொறையன்' (அகம்.62:13) எனச் சோழமன்னன் பற்றிய குறிப்புடைய குறிஞ்சிப்பாடல் 16 அடிகளில் அமைந்துள்ளது. எனினும் இப்பாடலைவிட மிக நீண்ட 26 அடிப் பாடலமைப்பைக் கொண்டதாக 142 ஆம் பாடல் அமைந்துள்ளது. இதில் 'பொறையன் கடுங்கோப் பாடிச் சென்ற' (6) எனவும், 'கூட்டு எதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி' (11) எனவும், 'வெள்ளைத்தானை அதிகன் கொன்று' (13) எனவும் மூன்று மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளமையே இப்பாடலின் பாடுபொருள் மாற்றத்திற்கும் நீட்சிக்கும் காரணம் எனலாம்.

மேலும் கலித்தொகையின் பாடலமைப்பு 80 அடிகள் வரை நீட்சி பெற்று குறிஞ்சிநில மக்களின் வாழ்வியற் செயற்பாடுகளை ஓரளவு வெளிப்படுத்துகின்றது. 'காமர் கடும்புனல் கலந்து எம்மோடு ஆடுவாள்' எனத் தொடங்கும் குறிஞ்சிக்கலியின் 39 ஆம் பாடல் 51 அடிகளைக் கொண்டுள்ளது. இதில், அறத்தொடுநிற்றல் முதல் தலைவன் திருமணம் செய்ய வருதல் வரையிலான குறிஞ்சிநில வாழ்வியல் பாடுபொருளாக்கப்பட்டுள்ளது.

### குறிஞ்சிப்பாட்டின் அடிநீட்சியும் பாடுபொருள் மாற்றமும்

261 அடிகளைக் கொண்ட குறிஞ்சிப்பாட்டு மிக நீண்ட பாடல் மரபைக் கொண்டதாக அமைந்துள்ளது. இது கபிலரால் பாடப்பட்ட குறிஞ்சிநிலம் சாாந்த வாழ்வியலை முழுமையாக வெளிப்படுத்தும் தொடர்நிலைச் செய்யுளாகவே காட்சியளிக்கிறது.

**"அன்னாய் வாழிவேண்டு அன்னை! ஒள்நுதல்**
**ஒலிமென் கூந்தல்என் தோழி மேனி"**[70]

எனத் தொடங்கும் இப்பாடல், தோழி கூற்றிலமைந்து தலைவியின் களவு வாழ்வைச் செவிலிக்கு உணர்த்துகின்றது. இதில் குறிஞ்சிநிலம்

சார்ந்த வாழ்வியல் ஒழுகலாறுகள் வரிசைபட கோர்வையாக இடம்பெற்றுள்ளமையே இதன் அடிநீட்சிக்கும் பாடுபொருள் மாற்றத்திற்கும் காரணம் எனலாம்.

இதன்மூலம் ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய மூன்றிலும் உள்ள குறிஞ்சித்திணைப் பாடல்கள் சிறியனவாக அமைந்திருந்தாலும் தத்தம்முள் வேறுபட்ட அடிவரையறையையும் பாடுபொருளமைப்பில் மாறுபாட்டையும் கொண்டுள்ளதை அறியமுடிகின்றது. இத்தகைய மாற்றங்கள் குறிஞ்சிநில வாழ்வியலை வெளிப்படுத்துவதிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. அகநானூறு, கலித்தொகை, குறிஞ்சிப்பாட்டு ஆகியன மிக நீண்ட பாடல் மரபைக் கொண்டனவாக குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலை ஓரளவு முழுமையாக விளக்கும் வகையில் தத்தம்முள் மாறுபட்ட பாடுபொருளமைப்பைக் கொண்டனவாக விளங்குகின்றன.

## குறிஞ்சிப்பாட்டில் அறத்தொடுநிற்றல்

குறிஞ்சிப்பாட்டு 261 அடிகளையுடைய நீண்ட கவிதைமரபைக் கொண்டுள்ளது. இந்த நீண்ட பாடல்மரபிற்குச் சங்கக் குறிஞ்சித் திணைப்பாடல் மரபே அடித்தளமிடுகின்றது. சங்கக் கவிதைமரபில் ஏற்பட்ட படிநிலை வளர்ச்சியே இக்குறிஞ்சிப்பாட்டின் நீட்சிக்குக் காரணமாகிறது. குறிஞ்சிநிலத் தலைவியின் களவினைத் தோழி செவிலிக்கு வெளிப்படுத்துவதன் காரணமாகக் குறிஞ்சித் திணைக்குரிய களவுக்கால நிகழ்வுகள் தொடர்ச்சியாகக் குறிஞ்சிப்பாட்டினுள் இடம்பெற்றுள்ளன. இதன்மூலம் குறிஞ்சித்திணைக்கான நீண்ட அகக்கவிதை மரபைக் கொண்ட பாடலாகக் குறிஞ்சிப்பாட்டு விளங்குகிறது.

## அறத்தொடு நிற்றல்

பாடுபொருளின் அடிப்படையில் குறிஞ்சிப்பாட்டிற்கான துறை “தோழி செவிலிக்கு அறத்தொடுநிற்றல்” என்பதாகும். பாடல் முழுவதும் தோழி கூற்றாகவே அமைந்து தலைவியின் களவொழுக்கத்தினைச் செவிலிக்கு வெளிப்படுத்துவதால் ‘தோழி செவிலிக்கு அறத்தொடுநிற்றல்’ என்பது குறிஞ்சிப்பாட்டிற்குரிய துறையாகக் கொள்ளப்படுவது

பொருத்தமுடையதாகிறது. தலைமக்களது களவுவாழ்வைக் கற்பாக்கும் பொருட்டுக் கைக்கொள்ளப்பட்ட ஓர் உத்திமுறையாக ‘அறத்தொடுநிற்றல்’ என்னும் துறை விளங்குவதால் குறிஞ்சிப்பாட்டில் அறத்தொடுநிற்றல் என்பது முக்கியத்துவம் பெறுகின்றது.

**“…… முன்னிலை அறன் எனப்படுதல் என்று இருவகைப் புரைதீர்கிளவி தாயிடைப் புகுப்பினும்…”[71]** (தொல்.பொருள்.1060) என அறத்தொடு நிற்றலைப் புரைதீர்கிளவி என்று கூறுகிறார் தொல்காப்பியர்.

**“எளித்தல், ஏத்தல், வேட்கை உரைத்தல்**
**கூறுதலுசாஅதல், ஏதீடு, தலைப்பாடு**
**உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ**
**அவ் எழு வகைய என்மனார் புலவர்”[72]**

என்னும் நூற்பா மூலம் அறத்தொடு நிற்றலானது ஏழுமுறைகளில் நிகழும் என்கிறார் தொல்காப்பியர். இதைப் போலவே,

**“தலைவி பாங்கி தன்னொடும், பாங்கி**
**செவிலி தன்னொடுஞ், செவிலி நற்றாய்**
**தன்னொடும், நற்றாய் தந்தை தன்னை**
**யர்க்கறத் தொடுநிற் றலாகு மென்ப”[73]**

என்று அறத்தொடுநிற்றலை விளக்குகிறது மாறன் அகப்பொருள். இதில் அறத்தொடு நிற்கும் முறை, அறத்தொடு நிற்றற்கு உரியோர் பற்றி விளக்கப்படுகின்றது.

**“காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்**
**நொதுமலர் வரையும் பருவம் ஆயினும்**
**வரைவுஎதிர் கொள்ளாது தமரவண் மறுப்பினும் அவன்**
**ஊஞ்சுங் காலம் ஆயினும்**
**அந்நாலிடத்தும் மெய்ந்நாண் ஒரீஇ**
**அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே”[74]**

என்று இறையனார் களவியலுரை, தோழி அறத்தொடுநிற்கும் சூழல்கள் குறித்துக் கூறுகின்றது. **“அறத்தொடுநிற்றல் என்ற நுண்துறை பற்றி 51 செய்யுட்கள் சங்கவிலக்கியத்து உள்ளன”[75]** என்கிறார் வ.சுப.மாணிக்கம். இவற்றில் தலைவி, தோழி ஆகியோர் அறத்தொடு நிற்கும் பாடல்கள் இடம்பெறுகின்றன. நொதுமலர்வரைவு, தலைவி வேறுபாடு கண்டு செவிலி வினவுதல், தமர் திருமணத்திற்கு மறுப்பு தெரிவித்தல், தலைவியின் மேனி வேறுபாடு கண்ட செவிலி வேலன் வெறியாட்டுக்கு ஏற்பாடு செய்தல், ஊரில் அலர் எழுதல், தலைவி இற்செறிக்கப்பட்டுக் காவல் மிகுதியாதல், நற்றாயும் செவிலியும் கட்டுக் காணுதல், தோழி தலைவியிடம் வினவுதல், தலைவி தாமாக முன்வந்து தோழியிடம் தன் களவை வெளிப்படுத்துதல், தலைவி தோழியை அறத்தொடு நிற்குமாறு கூறுதல், தலைவி வேறுபாடு கண்டு நற்றாய் செவிலியை வினவுதல் முதலிய சூழல்களின் போது அறத்தொடு நிற்றல் நிகழ்ந்துள்ளதைச் சங்க இலக்கியப் பாடல்களின் வழி அறிய முடிகின்றது. இதைப்போலவே குறிஞ்சிப்பாட்டிலும் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கிறாள். இதற்குச் செவிலித்தாயின் செயல்பாடுகள் காரணமாவதை,

**“அன்னாய் வாழிவேண்டு அன்னை ஒள்நுதல்**
**ஒலிமென் கூந்தல்என் தோழி மேனி**
**விறல் இழை நெகிழ்ந்த வீவுஅரும் கடுநோய்**
**அகலுள் ஆங்கண் அறியுநர் வினாயும்**
**பரவியும் தொழுதும் விரவுமலர் தூயும்**
**வேறுபல் உருவின் கடவுள் பேணி**
**நறையும் விரையும் ஓச்சியும் அலவுற்று**
**எய்யா மையலை நீயும் வருந்துதி”[76]**

என வரும் வரிகளால் உணர முடிகின்றது. தோழி அறத்தொடு நிற்பதற்குரிய சூழல்கள் வெளிப்படுவதை இங்குக் காணலாம். அஃதாவது செவிலியானவள், தலைவியின் மேனி பசலையுற்று இருத்தலைக் காணுதல், நோய்க்குரிய காரணத்தை அறியக் கட்டுவிச்சி, வேலன் வெறியாட்டு முதலியவற்றுக்கு ஏற்பாடு செய்தல் போன்ற

செயல்பாடுகளைக் கண்ட தோழி தலைவியின் களவு குறித்துச் செவிலிக்கு அறத்தொடு நிற்பதை அறிய முடிகிறது.

குறிஞ்சிப்பாட்டு முழுவதும் தோழியின் கூற்றாகவே வெளிப்படினும் அதனுள் தலைவியின் கூற்றும் தோழிவாயிலாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தலைவி தனது காதல் குறித்துத் தோழியிடம் கூறிய செய்திகள் தோழி கூற்றாக வெளிப்பட்டுச் செவிலித்தாயிடம் எடுத்துரைக்கப்படுகின்றன. இக்கூற்றுக்கள் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல், தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல் என்னும் அறத்தொடு நிற்றல் குறித்த இலக்கண நெறிகளைப் புலப்படுத்துவனவாக உள்ளன.

**“இப்பாட்டினுள் பல துறைகளுக்கு இடனுண்டு. எனினும் எல்லா அடிகளும் அறத்தொடு நிலை என்னும் ஒருதுறை நோக்கியே இயலுகின்றன”**[77] என்னும் வ.சுப.மாணிக்கனாரின் கூறறு குறிஞ்சிப்பாட்டின் கவிதையியலை விளக்குவதில் முக்கியத்துவம் பெறுகின்றது. இதனடிப்படையில் குறிஞ்சிப்பாட்டில் வரும் தோழியின் கூற்று பல படிநிலைகளைக் கொண்ட கவிதை மரபை வெளிக்காட்டுவதாகவுள்ளது.

இவ்வாறு தோழி அறத்தொடு நிற்பதற்குரிய முறைகளாக எளித்தல், ஏத்தல், வேட்கை உரைத்தல் முதலிய ஏழு வகைகளைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இந்தஏழு முறைகளுள் ஆறு முறைகளைப் பின்பற்றிக் குறிஞ்சிப்பாட்டுத் தோழி அறத்தொடு நிற்பதை, **“தொல்காப்பியர் வகுத்துள்ள ஏழு முறைகளுள் கூறுதல் உசாதல் என்பது நீங்க ஏனைய ஆறும் கூறித் தோழி உண்மையைப் புலப்படுத்தியதைக் குறிஞ்சிப்பாட்டில் காண்கிறோம்”[78]** என்னும் சிலம்பொலி சு.செல்லப்பனின் கருத்துவழி அறியமுடிகின்றது. இது அறத்தொடு நிற்கும் முறை குறித்துத் தொல்காப்பியம் கூறும் நெறிகள் அனைத்தும் குறிஞ்சிப்பாட்டின் கவிதை மரபில் இடம் பெற்றுள்ளதை உணர்த்துவதாகவுள்ளது. மேற்கூறிய ஏழு முறைகளுள் ஏதாவது ஒன்றைக் கூறித் தோழியானவள் அறத்தொடு நிற்கலாம் அல்லது ஏற்புடையவை எவையோ அவையனைத்தையும் தன் கூற்றினுள் உட்புகுத்தித் தலைவியின் களவை வெளிப்படுத்தி அறத்தொடுநிற்கலாம். ஆனால் சங்கப் பாடல் மரபில் தொல்காப்பியர் கூறும் ஏழுமுறைகளுள்

ஏதேனும் சில முறைகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. குறிஞ்சிப்பாட்டில் மட்டுமே பெரும்பான்மையாக ஆறுமுறைகளில் தலைவனது பண்புநலன்கள் எடுத்துரைக்கப்பட்டு அறத்தொடு நிற்றல் நிகழ்ந்துள்ளது.

குறிஞ்சிப்பாட்டில் அறத்தொடுநிற்றல் எனும் துறையின் வழியாகத் தலைவியின் களவைச் செவிலிக்கு வெளிப்படுத்துதல் என்னும் நிகழ்வு கட்டமைக்கப்பட்டுள்ளது. இங்கு தலைமக்களது களவு தலைவன், தலைவி, தோழி ஆகியோர்க்கிடையில் பின்னப்பட்ட நிகழ்வுகளின் தொகுப்பாக உள்ளது. அறத்தொடு நிற்றல் எனும் நிலையில் இம்மூவருடன் செவிலியையும் உட்படுத்தி காதல் நிகழ்வுகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

இந்த 'அறத்தொடுநிற்றல்' எனும் தோழியின் செயல்பாடு குறிஞ்சிநிலத் தலைமக்களது களவு வாழ்வைக் கற்பு வாழ்க்கையாக அதாவது திருமணத்துக்குப் பிந்தைய வாழ்வான இல்லற வாழ்க்கையாக மாற்றுவதற்கான முழுமுயற்சி எனில் அது மிகையாகாது.

**சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் சுற்றுச்சூழல் சிந்தனைகள்**

மனிதன் வாழ்வதற்கு ஏற்ற இடமாக பூமி எனும் மிகப்பெரிய நிலப்பரப்பு தேவையான ஒன்றாக இருந்து வருகின்றது. இந்நிலப்பரப்பைத் தவிர வேறு வாழிடம் மனிதனுக்கு இப்போதைக்கு இல்லை என்று கூறலாம். இவ்வாறு மனிதன் வாழ ஏற்றதொரு வாழ்வாதாரமாக விளங்கும் இத்தகைய நிலப்பரப்பைப் பாதுகாக்கவும் அதன் சுற்றுச் சூழல் குறித்த அக்கறையையும் கொண்டிருத்தல் அவசியமாகின்றது. இத்தகைய சுற்றுச்சூழல் குறித்த சிந்தனைகள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய சங்க இலக்கியங்களில் குறிப்பாகக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் எவ்விதம் உள்ளன என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**சுற்றுச்சூழல் - விளக்கம்**

நிலம், நீர், காற்று எனும் இம்மூன்றையும் மையப்படுத்தவதாகச் சுற்றுச்சூழல் விளங்குகின்றது. நிலமும் நிலத்தில் இருக்கக்கூடிய அனைத்துவகை உயிரினப் பாதுகாப்பு பற்றியதாகவும், நீர்ப்பாதுகாப்பு,

காற்றுப் பாதுகாப்பு எனும் நிலைகளில் இந்தச் சுற்றுச்சூழலானது தொடர்புடையதாக இருக்கின்றது. **“சுற்றுச்சூழல் என்பது உலக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனையாகும். மனிதன் இயற்கையை அலட்சியமாகவும் தவறாகவும் கையாண்டதன் விளைவாக உலகம் முழுவதும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் பெருவடிவம் எடுத்துள்ளன”**[79] என்று கூறும் பசுமைக்குமார் **“சுற்றுச்சூழல் என்பது, மனினைச் சுற்றியுள்ள சமூக, பொருளாதார, உயிரிய, இயற்பிய, வேதிய காரணிகளின் சேர்க்கையாகும்”**[80] என்று சுறறுச்சூழல் குறித்து விவரிக்கின்றார்.

### சங்க இலக்கியத்தில் சுற்றுச் சூழல் சிந்தனைகள்

சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் ஐந்திணை இலக்கியங்களாக அகத்திணை இலக்கியங்களாகக் காட்சியளிக்கின்றன. இந்த வகையில் ஐந்திணை இலக்கியங்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐவகை நிலங்களின் அடிப்படையில் பாடுபொருளைக் கொண்டுள்ளனவாக விளங்குகின்றன. இத்தகைய பாடுபொருள்களினூடே காணப்படுகின்ற சுற்றுச்சூழல் சிந்தனைகளை இனங்காண்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

### குறிஞ்சித்திணைப் பாடல்களில் சுற்றுச்சூழல் சிந்தனைகள்

மலையும் மலைசாாந்த இடமும் குறிஞ்சி எனப்படுவதால் இங்கு மலைவளம் இன்றியமையாததாகிறது. இத்தகைய மலைவளத்தைப் பாதுகாத்துப் பயன்படுத்தும் விதமாகச் சுற்றுச்சூழல் சிந்தனை நிறைந்ததாகக் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் அமைந்துள்ளதைச் சங்கப்பாடல்களின்வழி அறியமுடிகின்றது. அதாவது குறிஞ்சிநிலச் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மரம், செடி, கொடிகளின் பாதுகாப்பு அவசியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. இத்தோடு மலைப்பகுதியாகிய குறிஞ்சிநிலப் பரப்பும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதாக உள்ளது. இத்தகைய குறிஞ்சிநிலம் சார்ந்த சுற்றுச்சூழல் சிந்தனைகளை இனிக் காண்போம்.

நற்றிணையின் முதல் பாடல் நீரின் இன்றியமையாமை குறித்துப் பேசுகின்றது. நீர் இல்லாமல் இவ்வுலகம் இல்லை எனும் கருத்தை இப்பாடலில் பதிந்துள்ளார் கபிலர். அதாவது,

**“நீர் இன்று அமையா உலகம் போல”[81]**

எனும் அடி நீரின் தேவையை உணர்த்துகின்றது. இத்தகைய நீரை எவ்வாறு பாதுகாத்துப் பயன்படுத்துவது எனும் சுற்றுச்சூழல் குறித்த சிந்தனையைத் தருவதாக நற்றிணையின் ஐந்தாம்பாடல் அமைகின்றது.

**“நிலம்நீர் ஆர, குன்றம் குழைப்ப**
**அகல்வாய்ப் பைஞ்சுனைப் பயிர்க்கால் யாப்பக்**
**குறவர் கொன்ற குறைக்கொடி நறைப்பவர்**
**நறுங்காழ் ஆரம் சுற்றுவன அகைப்ப”[82]**

இங்கு, மழை பெய்ததால் நிலமானது நீர் நிறைந்ததாகக் காட்சி தந்து மரங்கள் செழித்து வளர்ந்தன எனவும், அகன்ற சுனை முழுவதும் நீர் நிறைந்ததால் பயிர்கள் நெருக்கமாக வளர்ந்தன எனவும் சந்தன மரத்தில் மணம் நிறைந்த கொடிகள் படர்ந்திருந்தன எனவும் கூறப்படுவதால் மழை நீரைக் குளத்தில் (சுனையில்) சேகரித்து வைத்து மரங்களையும், பயிர்களையும், கொடிகளையும் வளர்த்தல் எனும் சுற்றுச்சூழல் சிந்தனை குறிஞ்சிநில மக்களிடம் இருந்ததை அறியமுடிகின்றது.

**வன விலங்குகளுக்கு உணவளித்தல்**

சுற்றுச்சூழல் சிந்தனையில் மிக இன்றியமையாததாக அமைவது வன விலங்குகளான உயிரினங்களைப் பாதுகாத்தலாகும். வன விலங்குகளுக்கு உணவளிக்கக்கூடிய வகையில் சுற்றுச்சூழலை அமைத்தல் என்பது இங்கு அவசியமாகிறது. இத்தகைய காட்சியை நாம் சங்க இலக்கியத்தில் காணமுடிகின்றது. அதாவது குறிஞ்சிநிலத்தில் உள்ள குமிழமரத்தின் பழங்கள் காட்டில் வாழும் மான்களுக்குச் சிறந்த உணவாக விளங்கியதை

**"அத்தக் குமிழின் கொடுமூக்கு விளைகனி**

**எறிமட மாற்கு வல்சி ஆகும்"[83]**

எனும் அடிகளால் பரணர் உணர்த்துகின்றார். இந்தச் சங்க இலக்கியக் காட்சி, **"1972 ஜூன் 14 ஆம் தேதி ஸ்வீடனில் (ஸ்டாக்ஹோம் நகரம்) நடைபெற்ற சுற்றுச்சூழல் மாநாட்டில், சுற்றுச்சூழல் குறித்து வலியுறுத்தப்பட்ட அம்சங்களில் ஒன்றான "வனவிலங்குகளைப் பாதுகாத்தல்"** எனும் கருத்திற்கேற்ப சங்க இலக்கியத்தில் அமைந்திருப்பதை உணரமுடிகின்றது. மேலும்,

**"கண்போல் நெய்தல் போர்வில் பூக்கும்"[85]**

எனும் பாடலடி நெற்போர் இருந்த செய்தியைத் தருகின்றது. இந்த நெற்போர் வைத்தல் எனும் செயலும் சுற்றுச்சூழல் சிந்தனை சார்ந்ததே எனக் கருதவாய்ப்புண்டு. ஏனெனில் காய்ந்த நெற்தாளானது, பசு முதலிய வீட்டில் வளர்க்கக் கூடிய கால்நடை விலங்கினங்களுக்கு உணவாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இதற்காகவே இவை போர்களாக வைக்கப்பட்டிருக்கலாம் என எண்ணலாம். இந்த வகையில் இதுவும் ஒரு சுற்றுச்சூழல் சிந்தனையாகவே குறிஞ்சித்திணை பாடலின்வழி அறியப்படுகின்றது.

**வேளாண்மை சார்ந்த சுற்றுச்சூழல் சிந்தனை**

"உணவுப் பொருளுக்கான இன்றியமையாத ஆதாரமாக வேளாண்மை விளங்குகிறது. இந்த விவசாய உற்பத்தி குறையும்போது உணவுப் பொருள் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. இத்தகைய உணவு உற்பத்திக் குறைபாட்டிற்கு மூன்று காரணங்கள் சுட்டப்படுகின்றன. அவை,

1. **மண்அரிப்பு (Soil Erosion)**
2. **பாலைவனமாக்கல் (Desertification)**
3. **பண்ணை நில மாற்றம் (Farmland conversion)**

என்பனவாகும்"[86] இவ்வகையான வேளாண்மை சார்ந்த மண்அரிப்பைத் தடுக்கக்கூடிய சுற்றுச்சூழல் சிந்தனை சங்ககாலக் குறிஞ்சிநில மக்களிடையே நிலவியிருந்ததைக் காணமுடிகின்றது. இதனை,

**"வில்லுடை வீளையர் கல்இடுபு எடுத்த**

**நனந்தலைக் கானத்து ............................ "[87]**

எனும் அடிகளால் அறியலாம். அதாவது தலைவியின் தமையன்மார்கள் கற்களை அடுக்கித் தடுத்த அகன்ற இடம் காட்டில் இருந்த செய்தி இங்கு சுட்டப்படுகின்றது. இது மண் அரிப்பிலிருந்து நிலத்தைப் பாதுகாக்கின்ற சுற்றுச்சூழல் சிந்தனையாகச் சங்க இலக்கியத்திலிருப்பதை அறியமுடிகின்றது. எனவே சங்ககாலக் குறிஞ்சிநில மக்கள் சுற்றுச்சூழல் குறித்த அறிவையும் அக்கறையையும் கொண்டிருந்தனர் எனலாம். மேலும்,

**"சுடுபுன மருங்கில் கலித்த ஏனற்**

**படுகிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே"[88]**

எனும் அடிகளால் மரம் செடிகளைச் சுட்டுப் பண்படுத்திய நிலத்தில் தினைக்கதிர்கள் வளர்ந்ததையும் அதில் வந்து அமரும் கிளிகளைத் தலைவி விரட்டியதையும் அறியமுடிகின்றது. இந்நிகழ்வு மக்களிடையே வேளாண் உற்பத்தியாகிய உணவு உற்பத்தி குறித்தும் அதைப் பாதுகாக்க வேண்டும் என்ற சுற்றுச்சூழல் சிந்தனையும் இருந்ததை உணர்த்துகின்றது.

**இயற்கை வளப்பாதுகாப்பு**

இயற்கை வளங்களை அழிக்காமல் அப்படியே பாதுகாக்கக்கூடிய சுற்றுச்சூழல் சிந்தனையும் இயற்கையோடு இயைந்து வாழவேண்டும் எனும் வாழ்வியல் வெளிப்பாடும் சங்ககால மக்களிடையே இருந்ததை ஐங்குறுநூற்றுப் பாடல்வழி அறியமுடிகின்றது.

**"சாரல் பலவின் கொழுந்துணர் நறும்பழம்**

**இருங்கடல் விடர்அளை வீழ்ந்தென, வெற்பில்**

**பெருந்தேன் இறாஅல் சிதறும் நாடன்"**[89]

எனும் அடிகள் இயற்கைவளத்தோடு மனிதன் வாழ்ந்த செய்தியினைச் சுட்டுகின்றன. பலா மரத்தின் பழுத்த பழங்கள் பாறையின் பிளவிலிருக்கும் தேனடையைச் சிதைத்துக் கொண்டு கீழே விழுந்த நிகழ்வை மேற்கண்ட அடிகள் சுட்டுவதன் மூலம் இயற்கைவளம் சங்ககாலத்தில் எவ்விதம் இருந்தது என்பதை நம்மால் அறிய முடிகின்றது. மேலும்,

**"சாத்த மரத்த பூழில் எழுபுகை**
**கூட்டுவிரை கமழும் நாடன்"**[90]

எனும் அடிகள் சந்தன மரத்தின் மணமும் அதனிடையே இருந்த அகில் எனும் மரமும் இணைந்து மணம் வீசிய நிகழ்வைக் காட்டுகின்றன. இத்தகைய காட்சி சங்ககால மக்கள் கழிவுகளினால் ஏற்படக்கூடிய மாசுகளிலிருந்து விலகிய பாதுகாப்பான இயற்கை வளத்தோடு வாழ்க்கை நடத்திய நிலையை நமக்குச் சுட்டுகின்றது. இவ்வாறு சங்ககால மக்கள் இயற்கைவாழ்வு வாழ்ந்த நிலையைச் சங்கப் பாடல்களின் மூலம் அறியமுடிகின்றது.

மேலும், **'பெருவரை வேங்கை' (217), 'பலவின் பழம் தூங்கு கொழுநிழல்' (216), 'சாத்தமரத்த பூழில் எழுபுகை' (212), 'வயலையஞ் சிலம்பின்' (211), 'நறுவடி மாஅத்து' (213), 'கறிவளர் சிலம்பில்' (243), 'நறுந்தண் சோலை' (244), 'நெடுவரைப் படப்பை' (251), 'தேம்கமழ் சிலம்பின்' (253), 'பெறுவரைநாடன்' (258), 'குன்றுகெழு நாடன்' (265)** எனும் ஐங்குறுநூற்றுப் பாடல்களின் தொடர்களால் இயற்கை வளங்கள் பற்றி அறியமுடிகின்றது. சந்தனம், அகில், வேங்கை, மா, பலா முதலிய மரவகைகளும், மிளகு, வயலை முதலிய கொடி வகைகளும், படப்பை எனப்படும் தோட்டங்களும் குறிஞ்சிநிலத்தில் இயற்கை வளங்களாகக் காட்சியளித்ததை அறியமுடிகின்றது. இவை குறிஞ்சிநிலம் சார்ந்த சுற்றுச்சூழலை விவரிப்பனவாகச் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாகக் குறிஞ்சி நிலத்துக்குரிய சங்ககால மக்கள் சுற்றுச்சூழல் சிந்தனைகளோடு விளங்கியமையைச் சங்க இலக்கியங்களின்வழி அறியமுடிகின்றது. நீர், நிலம், காற்று எனும் மூவகை நிலைகளைப் பேணிப்பாதுகாக்கும் விதமாகச் சங்க கால மக்கள் பல சுற்றுச்சூழல் சிந்தனைகளைக் கொண்டிருந்தனர். குறிஞ்சிநிலம் சாாந்த மக்கள் தங்கள் வாழ்வியல் சூழலுக்கேற்ப தாம் வசித்து வந்த சுற்றுச்சூழல் நிலைகளைப் பாதுகாத்தனர். பாதுகாக்க வேண்டும் எனும் உந்துதலையும் பெற்றனர் என்பதை அறியமுடிகின்றது. இவர்கள் வேளாண்மை, காடுவளர்ப்பு, இயற்கைவளப் பாதுகாப்பு, நிலத்தைச் சீர்படுத்தி மண் அரிப்பைத் தடுத்தல் எனும் நிலைகளில் சுற்றுச்சூழல் சிந்தனைகளைப் பெற்றிருந்தனர் எனும் செய்தியைச் சங்கக் குறிஞ்சித்திணை இலக்கியங்கள் நமக்குத் தருவதை அறியமுடிகின்றது.

**அகநானூற்றில் குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல்**

எட்டுத் தொகையுள் முழுவதுமாக கிடைக்கப்பெற்ற தொகை நூல்களுல் ஒன்று அகநானூறு. அகநானூறு ஐந்தினையும் பாகுபடுத்தி பாட்டெண்ணால் குறிக்கப் பெறுகிறது. அன்பின் ஐந்திணையான (பாலை 1,3,5,7,9) முல்லை (4) மருதம் (6) நெய்தல் (10) குறிஞ்சி (2,8) இத்திணைகளை பாட்டு எண்களால் வகைப்படுத்தியுள்ளது. அகநானூறு மூவகைப் பாகுபாடு பற்றிக் கூறுகிறது. களிற்றியாணை நிறை 1-120, மணிமிடைப்பவளம் 121-300 நித்திலக்கோவை 301-420 என பாகுபடுத்தியுள்ளது. இவ்வகைப் பாகுபாடு அகநானூற்றில் தனிச்சிறப்பு மிக்கது. அகநானூறு 13அடி சிற்றெல்லைகளையும் 31 அடி பேறெல்லைகளையும் உடையது.

கபிலா் பாடிய அகநானூற்றுப் பாடல்களில் குறிஞ்சித்தினைப் பற்றிய வாழ்வியல் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

**இரவுக் குறியில் வரைவு காடதல்**

**“ஏனல்வும் காவலா் ஆனாது ஆா்த்தொன்றும்,**

**கிளிவாளி பயிற்றும் வெளில் ஆடு பெருஞ்சினை**

**------------------------------------------------------------------------**

**குறவர் ஊன்றிய குரம்பை புதைய**

**வேங்கை தாய தேம்பாய் தோற்றம்"[91]**

**தினைப்புனக்காவல்**

தினைப்புனம் காக்கும் மகளிர் கிளியை ஓட்டும் ஓசையைக் கேட்டு கிளிக் கூட்டம் தம் இனம் தான் அழைக்கிறது என எண்ணி தினைப்புனத்திற்கு அவை வந்து விடுகின்றன.

**அன்பு வெளிப்பாடு**

குறிஞ்சி நிலத் தலைவியும் தோழியும் தாம் கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்துவதாக, அதாவது பெற்றோர் மீதும் தலைவன் மீதும் கொண்டிருந்த அன்பினால் இருதலைப் பறவை போல உள்ளதாகக் கூறுகின்றனர். இதனை,

"இருதலைப் புள்ளின் ஓர் உயிர் அம்மே"[93] (அகம்.12:5) எனும் அடியால் அறியலாம். மேலும், இப்பாடலில் பலாப்பழம் பறிக்க வேடுவர்கள் அமைத்த குடிசை இங்கு பதிவிடப்படுகிறது. இதன் மூலம் குறிஞ்சிநில மாந்தரான வேடுவர்கள் செயல் உணர்த்தப்பட்டு அவர்களின் வாழ்வியல் அறியப்படுகிறது.

**வரும்வழித் துன்பம்**

தலைவன் தலைவியைக் காண கொடிய விலங்குகளும் காட்டாற்று வெள்ளமும் ஓடுகின்ற பாதையை நள்ளிரவில் கடந்து வருகிறான். இவ்வாறு அவன் வரும் வழியின் துயரைப் பற்றித் தலைவியும் தோழியும் புலம்புவதாகப் பாடல்களைக் கபிலர் இயற்றியுள்ளார். இந்த வகையில் 18, 128, 139ஆம் பாடல்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை,

**"இறும்புபட்டு இருளிய இட்டு அருஞ் சிலம்பில்**

**குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்**

**கான நாடன் வரூஉம், யானைக்**

**கயிற்றுப் புறத்தன்ன கல்மிசைச் சிறுநெறி"[93]**

எனும் அடிகளால் உணரலாம்.

**வறுமை நிலை**

மழை பொய்த்துப் போனதால் உண்டான வறட்சியின் காரணமாக ஏர்கலப்பை முதலிய வேளாண் கருவிகள் செயலற்று இருந்த நிலைமையையும், அதனால் வறுமை நிலை உண்டானதையும் அகநானூற்றின் 42 ஆம் பாடல் விவரிக்கின்றது. இதன் மூலம் குறிஞ்சி நில மக்கள் வேளாண் தொழில் செய்ததும், அக்காலத்தில் கலப்பை முதலிய கருவிகளைப் பயன்படுத்தியமையும் வாழ்வியல் செயல்பாடுகளாக வெளிப்பட்டு நிற்கின்றன.

**கூத்தாடும் களமும் இயற்கைப் புணர்ச்சியும்**

சங்க காலக் குறிஞ்சிநில மக்கள் கூத்தாடுதல் எனும் செயலில் ஈடுபட்டிருந்ததும் அதற்கென தனியே ஓர் களம் அதாவது இடம் இருந்ததும் (அகம்.) 82ஆம் பாடலின் வழி வெளிப்படுகின்றது. இதனை,

ஆடு அமைக்குயின்ற அவிர்துளை மருங்கின் (அகம்.82:1) எனும் அடியால் அறியலாம். மேலும், இப்பாடலில் தலைமக்களது முதல் சந்திப்பான இயற்கைப் புணர்ச்சி குறித்த செய்தியும் கபிலரால் பதியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதனை,

**“நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன்**
**உருவ வல்விற் பற்றி. அம்பு தெரிந்து**
**செருச் செய் யானை செல் நெறி வினா அய்”**[94]

எனும் அடிகளால் அறியலாம்.

**தெய்வ வழிபாடு**

குறிஞ்சி நிலத்தில் முருக வழிபாடு இருந்ததைக் கபிலா் பதிவு செய்துள்ளாா். அதாவது குறிஞ்சிநில மக்கள் வசிக்கும் சிறுகுடி பகுதியல் ஆண்களும் பெண்களும் வேங்கை மலா் மாலைகளைச் சூடிக்கொண்டும், தொண்டகப்பறையை அடித்துக் கொண்டும் முருகக்

கடவுளை வழிபட்ட செய்தி 118 ஆம் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**“தேம்கமழ் இணர வேங்கை சூடி**
**தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடு விரைஇ**
**மறுகில் தூங்கும் சிறுகுடிப் பாக்கத்து**
**இயல்முருகு ஒப்பினை _ _ _ _ _ _ _ _ _ _”**[95]

எனும் அடிகள் மூலம் முருக வழிபாட்டு வாழ்க்கையைக் குறிஞ்சிநில மக்கள் மேற்கொண்டிருந்தனர் என்பது புலப்படுகின்றது. இதைப் போலவே 382ஆம் பாடலும்,

**“கடம்புகொடி யாத்து, கண்ணி சூட்டி**
**வேறுபல் குரல ஒருதூக்கு இன்இயம்**
**காடுகெழு நெடுவேட் பாடு கொளக்கு ஏற்ப”**[96]

என்று முருக வழிபாட்டில் குறிஞ்சி நில மக்கள் ஈடுபட்டதை வெளிப்படுத்துகிறது. இதனை, **“சங்க காலத்தில் தமிழர் வணங்கிய தெய்வங்களில் முருகனுக்கு தனி இடம் உண்டு. பழங்காலத்திலிருந்து முருக வழிபாடு தமிழகமெங்கும் பரவியிருந்தது.”**[97] எனும் கருத்தின் மூலம் அறியமுடிகிறது. மேலும், **“குறிஞ்சி நிலத் தெய்வமாகத் திகழ்ந்த தமிழர்கள் வணங்கும் கடவுள் முருகன். அணங்குடை முருகன் கோட்டத்து என்ற பொன்முடியார் பாடலடி மூலம் முருகக் கடவுளுக்கு அக்காலத்தில் கோயில் எழுப்பப்பட்டிருந்தது”**[98] எனுங் கருத்தால் முருகனுக்கு அக்காலத்திலேயே கோயில்கள் எழுப்பப்பட்டன என்பதை அறிய முடிகிறது. எனினும், சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் கோயில் இருந்ததற்கான பதிவுகள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**குறிஞ்சி நிலத் தந்தையும் - முருகக் கடவுளும்”**

**“முருகன் அன்னை சீற்றத்துக் கடுந்திறல்**
**எந்தையும் இல்லன் ஆக,**

**அஞ்சுவள் அல்லளோ இவள்இது செயலே?"[99]**

என்று கூறுவதிலிருந்து சங்க காலக் குறிஞ்சிநிலத் தந்தை இல்லத்தில் முருக்கடவுள் போல பாதுகாவலனாகவும் கோபமுடையவனாகவும் இருந்ததை அறிய முடிகிறது. தலைவியின் தந்தை குறித்த பதிவு இப்பாடல் ஒன்றில் மட்டுமே கபிலரால் பதியப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**வேட்டைத் தொழில்:**

குறிஞ்சி நிலத்தில் வாழும் குறமகன் சீல்க்கை ஒலியை எழுப்பிக்கொண்டு வேட்டை நாய்கள் பின்தொடர முள்ளம்பன்றியை வேட்டையாடிய செய்தியும் (அகம்.182) கபிலரால் பதிவு செய்யப்பட்டு, குறிஞ்சி நில மக்களில் தொழில் சார்ந்த வாழ்வியலை வெளிப்படுத்துகிறது. மேலும்,

**"கமழ்இதழ் அலரி தாஅய் வேலன்**

**வெறிஅயர் வியன்களன் கடுக்கும்"[100]**

என்னும் பாடலடிகள் குறிஞ்சி நிலத்தில் வேலன் வெறியாட்டு நிகழ்ந்த களத்தை அறிவிக்கின்றன. இது அக்காலத்தில் வேலன் வெறியாட்டு நிகழ்ந்ததை உணர்த்துகின்றது. **"குறிகேட்ட பிறகு தலைவியின் உடலில் ஏற்படும் மாறுதலைப் போக்க எண்ணி வெறியாட்டினை நிகழ்த்துதலும் உண்டு. இவ்வெறியாட்டு நிகழ்த்துவதற்கு அமைக்கப்படும் இடம் வெறியாட்டுகளம் என்று அழைக்கப்படுகின்றது"[101]** எனும் கருத்தின் மூலம் வெறியாட்டிற்கான காரணமும் அதற்குரிய களமும் அறியப்படுகின்றது. இந்த வெறியாட்டு சங்கக் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் செயல்பாடாக அதுவும் களவுசார்ந்த செயல்பாடாக இருந்ததை உணர முடிகிறது.

**இயற்பட மொழிதல்**

சங்க இலக்கியத் தோழி தலைவனைப் பற்றிப் பேச அதற்கு தலைவி தலைவனுக்கு ஆதரவாகக் பரிந்து பேசி இயற்பட மொழிதல்

என்னும் களவுச் செயல்பாடும் கபிலர் பாடல் மூலம் அறியப்படுகின்றது. இதனை,

**"நின்புரைத் தக்க சாயலன் என, நீ**
**அன்பு உரைத்து அடங்கக் கூறிய இன்சொல்**
**வாய்த்தன – வாழி தோழி''**[102]

எனும் அடிகளால் அறியலாம். இவ்வாறாகக் கபிலர் இயற்றிய அகநானூற்றுப் பாடல்களின் வழி, தலைவியின் அன்பு வெளிப்பாடு, தினைப்புனக்காவல், குறவரின் வேளாண் தொழில், வறுமை நிலை, வரும்வழித் துன்பம், இயற்கைப் புணர்ச்சி, கூத்தாடும் களம். தந்தை பற்றிய செயலும் பதிவும், வேலன் வெறியாட்டு, வேட்டைத் தொழில், இயற்பட மொழிதல் முதலிய குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் செயல்பாடுகள் அறியப்படுகின்றன.

## நற்றிணையில் குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல்

நற்றிணையின் 400 பாடல்களுள் 16 பாடல்களைக் கபிலர் பாடியுள்ளார். இந்த 16 பாடல்டகளும் பல்வேறு துறைக் குறிப்புகள் அமைய பாடப்பெற்று குறிஞ்சி நில மக்களின் வாழ்வியலை முன் வைக்கின்றன. அதாவது வெறியாட்டு பற்றியும், பசலை நோய் பற்றியும் நற்றிணையில் பெரும்பான்மையாகக் குறிப்பிடப்படுகின்றது. மேலும், தலைவனைப் புகழ்தல், தினைப்புனக்காவல், கடவுள் பற்றிய பதிவுகள், யானை வேட்டை, நகை செய்யும் தொழில், பரிசிலர், வல்லள், கைம்பெண் மகளிர் நிலை முதலிவை பற்றிய பதிவுகளையும் கபிலர் தம் பாடல்களில் மேற்கொண்டுள்ளார்.

## தலைவனைப் புகழ்தலும் பசலை படர்தலும்

களவுப் பாடல்களில் பெரும்பாலும் தலைவியின் அழகு நலன்களே புகழப்பட்டுள்ளன. இப்புகழ்ச்சியில் தலைவன் ஈடுபடுவது இயல்பு. எனினும் நற்றிணையில் இதற்கு மாறாகத் தலைவி தலைவனைப் பற்றிப் பாடுகிறாள், இதனை

**“நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்**

**என்றும் என்தோள் பிரிபு அறி யலரே”[103]**

எனும் வரிகள் அமைவதைக் காணலாம். மேலும், இப்பாடலில் தலைவிக்கு உண்டான பசலை நோய் குறித்தும் பேசப்படுகின்றது.

**“நறுநுதல் பசத்தல் அஞ்சிச்**

**சிறுமை உறுபவோ செய்பு அறி யலரே”[104]**

எனும் அடிகள் பசலை நோய் குறித்து எடுத்தியம்புகின்றன. இதன் மூலம் களவு வாழக்கையின் போது பசலை படர்வதும், புகழந்து பேசிக் கொள்வதும் இயற்கையாக உண்டாகும் நிகழ்வுகளாக இருப்பதை அறிய முடிகின்றது.

**தினைப்புனக் காவலும் விலங்கு வேட்டையும்**

குறிஞ்சி நில மலைப்குதியில் விளைந்திருக்கும் தினைப்பயிர்களைக் காவல் காக்கும் பணியைக் காவலர்கள் மேற்கொண்டிருந்தனர் என்பதையும் அப்போது தினைப்பயிரை உண்ண வந்த விலங்குகளை அவர்கள் அம்பு எய்து வேட்டையாடி வீழ்த்தியதும் நற்றிணையின் 13 ஆம் பாடல் மூலம் புலப்படுத்துகிறார் கபிலர். **“குறிஞ்சி நிலத்தின் முக்கிய விளை பொருள் தினையாகும். தினைக்கதிர் முற்றிய அறுவடைக்குரிய பருவத்தில் கதிர்களைப் பறவைகள் உண்ணவரும். அங்ஙனம் பறவைகளால் தீங்கு ஏற்படாதவாறு குறிஞ்சி நிலத்தில் இளமகளிர் தினைப்புனத்தைக் காவல் காப்பர்”[105]** எனும் கருத்தால் தினைப்புணைக் காவலில் குறிஞ்சி நில மகளிர் ஈடுபட்டிருந்ததை அறியமுடிகின்றது.

**கடவுள் நம்பிக்கையும் பதிவும்**

சங்ககாலக் குறிஞ்சிநில மக்கள் கடவுள் பற்றிய நம்பிக்கையில் இருந்ததை வேலன் வெறியாட்டு உணர்த்தி நின்ற போதிலும் பிற கடவுள்கள் பற்றிய பதிவுகளையும் கபிலர் முன்வைப்பது குறிப்பிடத்தக்கது. அதாவது திருமால் பற்றியும் திருமாலின் அண்ணன் பலதேவன் குறித்தும் கபிலர் பதிவிட்டுள்ளார். இங்கு. **“வேதங்கள்**

**எவ்வளவு பழமை வாய்ந்தனவோ அவ்வளவு பழமை வாய்ந்தது திருமால் வழிபாடும் எனலாம்"**[106] எனும் கருத்து உற்றுநோக்கத்தக்கது. அதாவது கி.மு விற்கு முன்பே திருமால் வழிபாடு வந்துவிட்டது என்பதை உணர முடிகின்றது. இங்கு,

**"மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்**

**வாலியோன் அன்ன வயங்குவெள் அருவி"**[107]

என்று திருமாலை குறிஞ்சிநில மலைப்பகுதிக்கும், அதில் ஓடும் அருவிக்கு பலராமனையும் ஒப்பிட்டு கபிலர் பாடியிருப்பது சங்க காலத்தில் குறிஞ்சி நிலத்தில் முருக வழிபாடு இருந்த காலத்திலேயே திருமால் வழிபாடும் இருந்ததை அறிய முடிகின்றது.

**யானை வேட்டை**

குறிஞ்சி நிலக்கானவர் புலியோடு போரிட்டு புண்பட்ட யானையின் தந்தத்தைக் கவர்வதற்காக அம்பெய்து யானையைக் கொல்லுகின்ற நிகழ்வு சங்கப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன. இதனை,

**"புலியொடு பொருத புண்கடர் யானை**

**நற்கோடு நயந்த அன்பில் கானவர்"**[108]

எனும் அடிகளால் அறியலாம். **"காடுவாழ் விலங்குகள் பறவைகள் ஆகியவற்றையும் வேட்டையாடிப் பயன்படுத்திக்கொள்ளும் இவர்கள், யானை இறைச்சியையும் உண்ணும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர்"**[109] என்று க.ரத்னம் கூறும் கூற்றால் தந்தத்திற்காக மட்டுமல்லாமல் இறைச்சிக்காகவும் யானைகள் வேட்டையாட்பட்டதை அறிய முடிகின்றது. குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடி உணவைப் பெற்றதையும் அது அவர்களது வாழ்வியலின் ஓர் அங்கமாக இருந்ததையும் அறியலாம். மேலும், முருகப் பெருமானின் கோபத்தை யானையின் கோபத்திற்கு ஒப்பிடும் நிலையையும் கபிலர் பாடலால் அறிய முடிகிறது. (நற்.225)

**அணிகலன் தயாரிப்பு:**

குறிஞ்சி நில மக்கள் அணியத்தக்க கொடி, வளையல் முதலியவற்றைச் செய்து கொடுக்கும் திறன் படைத்த தொழில் வல்லுநர்கள் குறிஞ்சி நிலச் சமூகத்திலிருந்ததை அறிய முடிகிறது. இதனை,

> **"ஊறலஞ் சேரிச் சிறூர் வல்லோன்**
> **வாள் அரம் பொருத கொண்டு நேர் எல்வளை**
> **அகன்தொடி செறித்த முன்கை, ஒற்றுதல்"[110]**

எனும் அடிகளால் அறிய முடிகின்றது. இதன்மூலம் சங்கக் குறிஞ்சிநில மக்கள் அணிகலன்களைத் தயார் செய்துகொள்ளும் திறமை படைத்த வல்லுநர்களாகத் திகழ்ந்ததை அறிய முடிகின்றது.

**ஊசல் விளையாட்டு:**

சங்க காலக் குறிஞ்சி நில மக்களில் ஊசல் எனும் விளையாட்டை மேற்கொண்டனர் என்றும், அப்போதுதான் தலைவனைச் சந்திக்கும் வாய்ப்பு பெற்றுக் களவில் ஈடுபட்டனர் என்பதையும் கபிலர் தம் பாடலில் உணர்த்துகின்றார். (நற்.222) இதன் மூலம் பிள்ளைத்தமிழில் பெண்களுக்குக் குறிப்பிடப்படும் விளையாட்டுகளான கழங்கு. ஊசல், அம்மானை என்பனவற்றுள் இந்த ஊசல் எனும் விளையாட்டுச் சங்க காலந்தொட்டே இருந்து வருவதை அறிய முடிகின்றது. **"மகளிர் தங்கள் தன்மைக்கேற்ப அடக்கமான பொழுது போக்குகளில் கலந்து கொண்டனர்." என்றும், "ஊசலாடிக் கொண்டே பாடுதலும் மகளிரிடையே பயின்ற ஒரு பழக்கம்"[111]** என்றும் ந.சுப்பிரமண்யன் கூறுவதிலிருந்து சங்கப் பெண்களின் விளையாட்டை அறியமுடிகின்றது.

**கைம்பெண் மகளிர்:**

கைம்பெண் மகளிர் குறித்தும் அவர்கள் செய்த தொழில் குறித்தும் கபிலர் நற்றிணையில் குறிப்பிடுகின்றார். அதாவது,

**“ஆள்இல் பெண்டிர் தாளின் செய்த**

**நுணங்குநண் பனுவல் போல கணம்கொள”[112]**

என்று கூறுவதன் மூலம் சங்க காலத்தில் ஆதரவற்ற பெண்கள் நுண்ணிய பஞ்சு தயாரிக்கும் வேலையைச் செய்தனர் என்பது புலனாகிறது.

**வள்ளல் தன்மையும் பரிசிலரும்**

நற்றிணையின் 376 ஆம் பாடல் தினைப் பயிரையாவது பரிசிலாகத் தருவர்கள் என்று எண்ணி பரிசலர் குறிஞ்சி நிலத் தலைவரிடம் வருவதைக் கபிலர் புலப்படுத்துகிறார். இது குறிஞ்சி நில மக்கள் தினையைக் கூட பரிசிலாகத் தரக்கூடிய வள்ளல் தன்மை உடையவர்கள் என்பதை காட்டுகின்றது.

**குறுந்தொகையில் குறிஞ்சி நல மக்களின் வாழ்வியல்**

**வரைவு கடாதல்**

கபிலர் இயற்றிய 18-ம் பாடல் இரவுக்குறியில் வரும் தலைவனை வரைவு கடாதல் துறையில் அமைந்து தலைவனை திருமணத்திற்காக வற்புறுத்தும் நோக்கில் பாடப்பட்டுள்ளது. இதனை

**“வேரல்வேலி, வேர்க்கோட் பலவின்**

**சூரல் நாட! செவ்வியை ஆகுமதி!**

**யார் அ∴து அறிந்திசி னோரே ? சாரல்**

**சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு, இவள்**

**உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே!”[113]**

எனும் பாடல் வழி அறியலாம். இங்கு தலைவியின் உயிரை விட அவள் கொண்டிருக்கும் காமமே மிகப்பெரியது என்று தோழி கூறுகிறாள். இங்கு மிகவும் உணர்ச்சி வயப்படும் அளவிற்கு வார்த்தெடுக்கும் ஒரு உன்னதமான ஒரு கதாப்பாத்திரம் தலைவியின் பாத்திரம் என்றால் அது மிகையாகாது.

**பசலை நோய்:**

தலைவியின் பசலை நோயை விவரிப்பதாகக் குறுந்தொகையின் 13, 121, 249 பாடல்கள் விளக்குகின்றன. இதனை

**"பைதல் ஒருகலை சேக்கும் நாடன்**
**நோய்தந் தனனே தோழி!**
**பசலை ஆர்ந்த, நம் குவளை அம் கண்ணே"[114]**

எனும் பாடலும்,

**"தான்குறி வாயாத் தப்பற்குத்**
**தாம்பசந்தன, என் கடமென் தோளே"[115]**

எனும் பாடலும்,

**"படுமழை பொழிந்த சாரல் அவர்நாட்டுக்**
**குன்றம் நோக்கினென் தோழி!**
**பண்டை யற்றோ, கண்டிசின்நுதலே? "[116]**

எனும் பாடலும், தலைவிக்குப் பசலை நோய் வந்ததை வெளிக்காட்டுகின்றன. சங்ககால களவியல் வாழ்க்கையில் இப்பசலைப் படர்தல் என்பது பெண்களுக்குரிய வாழ்வியல் செயல்பாடாக இருந்ததை மேற்கண்ட கபிலர் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

**வேளாண் தொழில்:**

சங்ககால குறிஞ்சி நில மக்கள் வேளாண்மை தொழிலில் ஈடுபட்டதை அதுவும் நிலத்தைப் பண்படுத்தி கரும்பு முதலிய பயிர்களை விளைவிப்பதையும் கபிலர் பாடல்களால் அறிகிறோம். இந்த வகையில் 198 மற்றும் 291-ம் பாடல்களில் குறிஞ்சி நில மக்கள் நிலத்தைப் பயன்படுத்தியதை நமக்கு பறைசாற்றுகின்றன. அதாவது

யாமரத்தை வெட்டிச் சுட்ட பண்படுத்தப்பட்ட நிலத்தில் கரும்பு விளைந்ததை

**“யாஅம் கொன்ற மரம்சுட்ட இயவில்**

**கரும்புமருள் முதல பைந்தாட் செந்திணை”[117]**

என வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன. மேலும்,

**“சுடுபுனல் மருங்கில் கலித்த ஏனற்**

**படுகிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே”[118]**

எனும் அடிகள் மரம், செடிகளைப் பண்படுத்தி நிலத்தில் தினைப்பயிர் வளர்ந்ததை எடுத்துக்காட்டுகின்றன. குறிஞ்சி நில மக்கள் நிலத்தை பண்படுத்தி வேளாண்மைத் தொழில் செய்த நிகழ்வுகள் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

**தலைவியின் இருவகை இயல்பு**

சங்ககால குறிஞ்சி நிலத் தலைவியின் இயல்புகளைப் பற்றி தலைவன் கூறுகின்றான். காதலியாகிய தலைவி இரண்டு விதமாக செயல்படுகின்ற கள்ளத்தனம் உடையவள் என்றும் நள்ளிரவில் நம்முடன் ஒன்றிய தன்மையை உடையவளாகவும், பொழுது விடிந்ததும் சுற்றத்தாருடன் ஒன்றிய தன்மையை உடையவளாகவும் மாறுகின்றாள். இதனை

**“இரண்டு அறிகள் விநம் காதலோளே”[119]**

எனும் அடியும்

**“நள்ளென் கங்குல் நம்ஓ ரன்னள்**

**கூந்தல் வேய்ந்த விரவு மலர் உதிர்த்துச்**

**சாந்து உளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி**

**அமரா முகத்தள் ஆகித்**

**தமர்ஓ ஏன்னள் வைகறையானே”[120]**

எனும் அடிகளாலும் அறியலாம்

**கலித்தொகையில் குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல்:**

கலித்தொகையில் குறிஞ்சிக்கலியைப் பாடியவர் கபிலர். இதில் 29 பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்களில் நீண்ட அடிகள்

உரைநடைப்பாங்கில் இடம் பெற்றுள்ளன. இவ்விதம் நீண்ட கவிதை மரபைக் கொண்டதாகக் கலித்தொகை விளங்குகின்றது. இது சங்க இலக்கிய எட்டுத்தொகைப் பாடல்களிலேயே அதிக எண்ணிக்கையில் அடிவரையரை கொண்டதாக அமைந்துள்ளது. இதில் ஊசல் விளையாட்டு, வரைவு மலிதல், தலைவியின் உறுப்புநல பாராட்டல் எனும் வாழ்வியல் சார்ந்த செயல்பாடுகள் இடம் பெற்றுள்ளன.

**ஊசல் விளையாட்டு:**

குறிஞ்சி நில தலைவி தினைப்புனத்திற்கு அருகே பறவைகளை விரட்டியபடி ஊஞ்சலில் ஆடிக்கொண்டு இருக்க தலைவன் அங்கு வருகிறான். அவனிடம் ஊஞ்சலை ஆட்டிவிடும்படி தலைவி கேட்க இருவரும் மெய்யுறுபுணர்ச்சி விவரிக்கின்றது. இங்கு தலைமக்களுக்கு இடையிலான மெய்யுறுபுணர்ச்சிக்கு ஊஞ்சல் விளையாட்டுக் காரணமாக அமைகிறது. இதனை

> **"இனக்கிளியாம் கடிந்து ஓம்பும் புனத்துஅயல்**
> **ஊசல் ஊர்ந்து ஆட, ஒரு ஞான்று வந்தானை**
> **ஐய! சிறிது என்னை ஊக்கி' எனக்கூற**
> **தையால் நன்று' என்று அவன் ஊக்கிக் கைநெகிழ்பு**
> **பொய்யாக வீழ்ந்தேன் அவன் மார்பில்"[121]**

எனும் அடிகளால் அறியலாம்

**அறவாழ்வு:**

கலித்தொகை 38-ம் பாடல் ஏராளமான உவமைகளைக் கொண்டு விளங்குகின்றன. நீரற்ற புலமே போல் என்றும்: கார்பெற்ற புலமே போல் என்றும்: பொருளில்லாள் என்றும்: அறம்சாரான் மூப்பே போல் என்றும்: திறன்சேர்ந்தான் ஆக்கம் போல் என்றும் வாழ்வியல் சார்ந்த அறக்கருத்துகளை இப்பாடல் சுட்டுகின்றது. அதுமட்டுமல்லாது இமைய மலையில் இருக்கும் சிவபெருமான் பத்துத் தலை இராவணின் கையை மலையை எடுக்க விடாமல் செய்தது போலவும் என்றும்: கடவுள் பற்றிய பதிவையும் இப்பாடல் கொண்டுள்ளது. அதாவது கபிலா் இப்பாடலில்

புராணச் செய்தி மூலமாகவும் அறக்கருத்துகளை வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**தமர் வரைவெதிர்த்தல்:**

தமர் வரைவெதிர்த்தல் எனும் துறையில் அமைந்த 45-ம் பாடல் தலைவியை ஆற்றுவிக்கும் தோழி கூற்றில் அமைந்துள்ளது.

**“தன்தீமை பலகூறிக் கழறலின், என் தோழி**
**மறையில் தான் மருவுற மணந்தநட்பு அருகலான்**
**பிறைபுரை நுதல்! அவர்ப் பேணிநம்**
**முறைவரைந்தனர், அவர் உவக்கும் நாளே”**[122]

எனும் அடிகள் திருமணம் பேசுவதற்குத் தலைவன் தன் சுற்றத்தாரோடு வர நம் வீட்டாரும் அவனை வரவேற்று உபசரித்தனர். தலைவன் வீட்டார் விரும்பிய மங்கள நாளில் திருமணத்தை நடத்த முடிவு செய்து விட்டனர் என்று தோழி தலைவியிடம் கூறுவதிலிருந்து தலைமக்களுக்கான வரைவு மலிந்ததும் அறிய முடிகின்றது.

**தொகுப்புரை**

பத்துப்பாட்டில் எட்டாவதும் பாட்டாக அமையும் இக்குறிஞ்சிப்பாட்டு 261 அடிகளையும் 1440 சொற்களையும் கொண்டதாகும். அறத்தோடு நிற்றல் என்னும் துறையில் அமைந்த இக்குறிஞ்சிப் பாட்டு முழுவதும் தோழி செவிலிக்காக கூறுவதாக அமைந்துள்ளது.

சங்க இலக்கியத்துள் காணப்பெறும் கபிலரின் பாடல்களின் எண்ணிக்கை 235 ஆகும். இவை முறையே நற்றிணை 20, குறுந்தொகை 29, ஐங்குறுநூறு 100, பதிற்றுப்பத்து 10, அகநானூறு 12, புறநானூறு 28, கலித்தொகை 29, குறிஞ்சிப்பாட்டு 1 என்றவாறு அமைந்துள்ளன. பத்துப்பாட்டிலும் பரிபாடல் தவிர்த்த பிற எட்டுதொகை நூல்களிலும் கபிலர் பாடல்கள் காணக்கிடக்கின்றன. கபிலர் பாடியுள்ள 235 பாடல்களில் 197 பாடல்கள் அகப்பாடல்களாகும். இவற்றுள் 182 களவிற்கும், 12 கற்பிற்கும், 3 கைக்கிளைக்கும் உரியவை என்பார் வ.சுப. மாணிக்கம். 38 பாடல்கள் புறத்திணை பற்றியனவாகும்.

கபிலர் பாடல்களில், அகத்திணை மரபுகள் அனைத்தும் ஒருசேர எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. ஐவகைத் திணைகள், மூவகைப் பொருள்கள் ஆகியன சிறப்புற இடம்பெற்று உள்ளன.

சங்க அகப்பாடல்களில் குறிப்பாகக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் பல்வேறு குறிஞ்சி நிலப்பகுதிகள் சுட்டப்பட்டுள்ளன. இத்தகைய மலைப்பகுதிகளை ஆட்சிபுரிந்த குறுநில மன்னர்கள் பற்றிய செய்திகளும் மலைநில மக்களின் வாழ்வியலில் இடம்பெற்றுள்ள நிகழ்வுகளையும் செயல்பாடுகளையும் சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் முன்வைக்கின்றன.

சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களிலும் தொல்காப்பியர் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவை தொல்காப்பிய – சங்க இலக்கிய ஒற்றுமையை உணர்த்துவனவாக அமைந்துள்ளன.

பல்வேறு களவுக்கால நிகழ்வுகள் நிகழ்வதை நற்றிணையின் குறிஞ்சித்திணைப் பாடல்கள் தலைவன் கூற்றிலமைந்து நமக்கு வெளிப்படுத்துகின்றன. அதாவது,

தலைவனைத் தலைவி குறியிடத்திற்கு அழைத்துச் செல்லுதல், தலைமக்கள் இருவரும் நெருக்கமாகத் தழுவிக் கொள்ளுதல், தலைவி தோழிகளுடன் நீராடுதல், தலைவி தோழியருடன் பந்தாடுதல், தலைவன் தலைவியது அழகு நலன்களைப் புகழ்ந்து பேசுதல், தலைவி இற்செறிப்பில் அதாவது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருத்தல், உலகமே எதிர்த்தாலும் தலைவியை விட்டுப் பிரியமாட்டேன் எனத் தலைவன் கூறுதல், தலைவன் அன்பு மிகுதியால் துன்பப்படுதல், தலைவன் மடலேறுதலைக் கூறுதல், தலைவன் மடலேறாமல் சாவேன் எனக் கூறுதல் முதலிய களவுக்கால நிகழ்வுகளைத் தலைவன் கூற்றுக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன.

களவு வாழ்வில் ஈடுபடும் தலைவியைத் தலைவன் மனைவி என குறிப்பிடும் பதிவும் குறிஞ்சித்திணைப் பாடலில் இடம்பெற்றுள்ளது.

குறிஞ்சிநில மக்களின் வாழ்விடமான குடியிருப்புகள் பற்றிய செய்திகள் சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணப்படுகின்றன.

மக்கள் வேட்டையாடியும் உழவு செய்தும் தங்கள் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டதை அறியலாம்.

குறிஞ்சிநில மக்கள் தினை விதைப்பு எனும் வேளாண்மையைச் செய்து உணவைப் பெற்றுள்ளனர். பெரும்பாலான குறிஞ்சித்திணைப் பாடல்கள் இதை நமக்குக் காட்டுகின்றன.

குறிஞ்சிநில மக்கள் தங்களுக்கென தனித்த வழிபாட்டையும் நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் கொண்டிருந்தனர்.

தலையாடை உடுத்தல் என்னும் மரபு சங்ககாலத் தலைமக்களின் களவியல் வாழ்வின் ஓர் அங்கமாக இருந்ததை இப்பாடலின் வழி உணர முடிகின்றது.

கபிலர் நூறு பாடல்களில் அறத்தொடு நிற்றல் எனும் துறைக்கே அதிக முக்கியத்துவம் தருவதால் அக்கால வாழ்வியலில் குறிப்பாகக் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலில் அறத்தொடு நிற்றல் முக்கிய இடம் வகித்ததை இதன் மூலம் அறியமுடிகிறது.

தலைவன் கூற்றிலமைந்துள்ள குறிஞ்சித்திணைப் பாடல்கள் பெரும்பாலானவை தலைவியின் அழகு நலன்களைப் புகழ்வனவாகவே அமைந்துள்ளன. இது சங்க காலக் குறிஞ்சிநில மக்களின் காதல் வாழ்வைப் புலப்படுத்துவதாக உள்ளது.

காதல் வாழ்வில் ஏற்படுகின்ற தலைவனின் காம மிகுதியையும் அதனால் ஏற்படுகின்ற துன்பத்தினையும் பல குறிஞ்சித்திணைப் பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

தலைவனின் காதல் மிகும்போதும் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள முடியாத நிலை ஏற்படும்போதும் தலைவன் மடலேறுவேன் என்று கூறும் நிகழ்வு சங்ககாலக் காதல்வாழ்வின் ஒரு பகுதியாக இருந்ததைக் குறுந்தொகைப் பாடல்களின்வழி அறியமுடிகின்றது.

குறிஞ்சிநில மக்களின் வேட்டைத் தொழிலோடு வேளாண்மை, வியாபாரம், கைத்தொழிகள் முதலிய தொழில்களையும் செய்துவந்ததைக் குறுந்தொகைப் பாடல்களின்வழி அறியமுடிகின்றது.

குறிஞ்சிநில மக்களின் மரபு சார்ந்த பண்பாட்டில் கடவுள் வழிபாடு என்பது இன்றியமையாத பண்பாடாக அமைந்துள்ளது.

குறிஞ்சிநிலத் தலைமக்கள் தமது களவு வாழ்வின்போது குளிர்ச்சி மிக்கத் தழையாடையை அணிந்து கொள்வதை மரபாகக் கொண்டிருந்தனர்.

தலைமக்களது களவு வாழ்க்கையில் தலைவன் தலைவியின் அழகுநலன்களைப் புகழ்தல் எனும் மரபு குறிஞ்சிநிலத்துக்குரிய பண்பாட்டு மரபாக நிலைத்திருப்பதை அறியமுடிகின்றது.

வேறு எத்திணைக்குரிய உரிப்பொருளும் குறிஞ்சியிற் கலக்கவில்லை. இது குறிஞ்சித்திணையின் தனிச்சிறப்பாகும்.

சங்ககால மன்னர்கள் சார்ந்த பல வரலாற்றுக் குறிப்புகள் அகநானூற்றுக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளமையே இதன்அடி நீட்சிக்குக் காரணம் எனலாம்.

பாடுபொருளின் அடிப்படையில் குறிஞ்சிப்பாட்டிற்கான துறை "தோழி செவிலிக்கு அறத்தொடுநிற்றல்" என்பதாகும். பாடல் முழுவதும் தோழி கூற்றாகவே அமைந்து தலைவியின் களவொழுக்கத்தினைச் செவிலிக்கு வெளிப்படுத்துவதால் 'தோழி செவிலிக்கு அறத்தொடுநிற்றல்' என்பது குறிஞ்சிப்பாட்டிற்குரிய துறையாகக் கொள்ளப்படுவது பொருத்தமுடையதாகிறது. தலைமக்களது களவுவாழ்வைக் கற்பாக்கும் பொருட்டுக் கைக்கொள்ளப்பட்ட ஓர் உத்திமுறையாக 'அறத்தொடுநிற்றல்' என்னும் துறை விளங்குவதால் குறிஞ்சிப்பாட்டில் அறத்தொடுநிற்றல் என்பது முக்கியத்துவம் பெறுகின்றது.

குறிஞ்சிப்பாட்டு முழுவதும் தோழியின் கூற்றாகவே வெளிப்படினும் அதனுள் தலைவியின் கூற்றும் தோழிவாயிலாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தலைவி தனது காதல் குறித்துத் தோழியிடம் கூறிய செய்திகள் தோழி கூற்றாக வெளிப்பட்டுச் செவிலித்தாயிடம் எடுத்துரைக்கப்படுகின்றன.

மனிதன் வாழ்வதற்கு ஏற்ற இடமாக பூமி எனும் மிகப்பெரிய நிலப்பரப்பு தேவையான ஒன்றாக இருந்து வருகின்றது. இந்நிலப்பரப்பைத் தவிர வேறு வாழிடம் மனிதனுக்கு இப்போதைக்கு இல்லை என்று கூறலாம்.

சங்க காலக் குறிஞ்சிநில மக்கள் கூத்தாடுதல் எனும் செயலில் ஈடுபட்டிருந்ததும் அதற்கென தனியே ஓர் களம் அதாவது இடம் இருந்ததும் (அகம்.) 82ஆம் பாடலின் வழி வெளிப்படுகின்றது.

முருகனுக்கு அக்காலத்திலேயே கோயில்கள் எழுப்பப்பட்டன என்பதை அறிய முடிகிறது. எனினும், சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் கோயில் இருந்ததற்கான பதிவுகள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சங்க இலக்கியத் தோழி தலைவனைப் பற்றிப் பேச அதற்கு தலைவி தலைவனுக்கு ஆதரவாகக் பரிந்து பேசி இயற்பட மொழிதல் என்னும் களவுச் செயல்பாடும் கபிலர் பாடல் மூலம் அறியப்படுகின்றது.

களவுப் பாடல்களில் பெரும்பாலும் தலைவியின் அழகு நலன்களே புகழப்பட்டுள்ளன. இப்புகழ்ச்சியில் தலைவன் ஈடுபடுவது இயல்பு. எனினும் நற்றிணையில் இதற்கு மாறாகத் தலைவி தலைவனைப் பற்றிப் பாடுகிறாள் என்பது குறிப்பிடத்தக்தாக உள்ளது.

சங்ககாலக் குறிஞ்சிநில மக்கள் கடவுள் பற்றிய நம்பிக்கையில் இருந்ததை வேலன் வெறியாட்டு உணர்த்தி நின்ற போதிலும் பிற கடவுள்கள் பற்றிய பதிவுகளையும் கபிலர் முன்வைப்பது குறிப்பிடத்தக்கது.

குறிஞ்சி நில மக்கள் அணியத்தக்க கொடி, வளையல் முதலியவற்றைச் செய்து கொடுக்கும் திறன் படைத்த தொழில் வல்லுநர்கள் குறிஞ்சி நிலச் சமூகத்திலிருந்ததை அறிய முடிகிறது.

சங்க காலக் குறிஞ்சி நில மக்களில் ஊசல் எனும் விளையாட்டை மேற்கொண்டனர் என்றும், அப்போதுதான் தலைவனைச் சந்திக்கும் வாய்ப்பு பெற்றுக் களவில் ஈடுபட்டனர் என்பதையும் கபிலர் தம் பாடலில் உணர்த்துகின்றார்.

சங்ககால குறிஞ்சி நில மக்கள் வேளாண்மை தொழிலில் ஈடுபட்டதை அதுவும் நிலத்தைப் பண்படுத்தி கரும்பு முதலிய பயிர்களை விளைவிப்பதையும் கபிலர் பாடல்களால் அறிகிறோம்.

## சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம், அகத்திணையியல், நூ.3
2. மேலது, பொருளதிகாரம், நூ.5.
3. மேலது, நூ.7.
4. மேலது, நூ.8.
5. மேலது, நூ.16.
6. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம், ப.17.
7. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.20.
8. ச.வே.சுப்பிரமணியன், சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்கள், நற்றிணை, பா.6:9.
9. மேலது, பா.எ.185:6-7.
10. மேலது, பா.எ.192:8.
11. மேலது, பா.எ.201:5.
12. மேலது, பா.எ.265:6.
13. மேலது, பா.எ.201:7.
14. மேலது, பா.எ.213:1.
15. மேலது, பா.எ.356:9.
16. மேலது, பா.எ.140:6.
17. மேலது, பா.எ.44:1-4.
18. மேலது, பா.எ.8:4-10.
19. மேலது, பா.எ.324:1-6.
20. மேலது, பா.எ.77:6.
21. மேலது, பா.எ.6:9.
22. மேலது, பா.எ.265:6.
23. மேலது, பா.எ.185:6-7.
24. மேலது, பா.எ.185:3-5.
25. மேலது, பா.எ.39:7-10.
26. மேலது, பா.எ.190:3-4.
27. மேலது, பா.எ.324:4-5.
28. மேலது, பா.எ.77:8.
29. மேலது, பா.எ.95:7-8.

30. மேலது, பா.எ.8:7-8.
31. மேலது, பா.எ.185:10.
32. மேலது, பா.எ.190:6.
33. மேலது, பா.எ.8:2.
34. மேலது, பா.எ.204:1.
35. மேலது, பா.எ.82:4.
36. மேலது, பா.எ.377:6-7.
37. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.487.
38. இலா.குளோறியா சுந்தரமதி, சங்க இலக்கியத்தில் குறிஞ்சித்திணைப் பாடல்-பகுப்பாய்வு அணுகுமுறை, ப.5.
39. குறுந்தொகை, பா.எ.280.
40. மேலது, பா.எ.2:1-2.
41. மேலது, பா.எ.14:1-2.
42. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.84.
43. குறுந்தொகை, பா.எ.272.
44. மேலது, பா.எ.58.
45. மேலது, பா.எ.136.
46. மேலது, பா.எ.17.
47. மேலது, பா.எ.100:1-4.
48. மேலது, பா.எ.165:1,3.
49. மேலது, பா.எ.337:7.
50. மேலது, பா.எ.276:5.
51. மேலது, பா.எ.156:1.
52. மேலது, பா.எ.199:6-8.
53. பெரு.தியாகராசன், சங்கக் குறிஞ்சித் திணைப் பாடல்கள், ப.88.
54. நற்றிணை, பா.எ.168:6-7.
55. ஐங்குறுநூறு. பா.எ.255.
56. மேலது, பா.எ.259:2-4.
57. மேலது, பா.எ.256:2.
58. மேலது, பா.எ.281:3-4.
59. மேலது, பா.எ.291:3-4.
60. மேலது, பா.எ.298:1-2.

61. மேலது, பா.எ.299.
62. தமிழண்ணல், சங்கமரபு, ப.171.
63. மேலது, ப.170.
64. ஐங்குறுநூறு, பா.எ.211.
65. குறுந்தொகை, பா.எ.23.
66. நற்றிணை, பா.எ.128.
67. மேலது, பா.எ.165.
68. மேலது, பா.எ.244.
69. ம.ப.ரமேஷ்குமார், குறிஞ்சிப்பாட்டின் கவிதையியல், ப.61.
70. குறிஞ்சிப்பாட்டு, பா.எ.1-2.
71. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.1060.
72. மேலது, நூ.10153.
73. தமிழ் இலக்கண நூல்கள், ப.316.
74. மேலது, ப.93.
75. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.70.
76. குறிஞ்சிப்பாட்டு, பா.எ.1-8.
77. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.307.
78. சிலம்பொலி சு, செல்லப்பன், சங்க இலக்கியத் தேன், ப.52.
79. பசுமைக்குமார், தமிழக சுற்றுச் சூழல், ப.9.
80. மேலது, ப.8.
81. நற்றிணை, பா.எ.1:6.
82. மேலது, பா.எ.5:1-4.
83. மேலது, பா.எ.6:7-8.
84. பசுமைக்குமார், தமிழக சுற்றுச் சூழல், ப.14.
85. நற்றிணை, பா.எ.8:8.
86. வி.ராதா, சுற்றுச்சூழல் கல்வி, ப.37.
87. குறுந்தொகை, பா.எண்.272:2-3.
88. மேலது, பா.எ.291.
89. ஐங்குறுநூறு, பா.எ.214:1-3.
90. மேலது, பா.எ.212:1-2.
91. அகநானூறு, பா.எ.12:6-10.
92. மேலது, பா.எ.12:5.

93. மேலது, பா.எ.128:8-11.

94. மேலது, பா.எ.82:10-12.

95. மேலது, பா.எ.118:2-5.

96. மேலது, பா.எ.382:3-5.

97. கோவைவாணன், சங்க இலக்கிய மெய்யியல், ப.65.

98. மேலது, ப.253.

99. அகநானூறு, பா.எ.158:16-18.

100. மேலது, பா.எ.182:16-17.

101. ஜெயரதி.பொன்மலர், பன்முகநோக்கில் சங்க இலக்கியங்கள், ப.71.

102. அகநானூறு, பா.எ.332:10-12.

103. நற்றிணை, பா.எ.1:1-2.

104. மேலது, பா.எ.1:8-9.

105. சு.சதாசிவம், தமிழ் இலக்கிய வகையையும் வாழ்வியல் சிந்தனைகள், ப.109.

106. க.மாரியப்பன், காலந்தோறும் தமிழ் இலக்கியப் போக்குகள், பக்.136

107. நற்றிணை, பா.எ.32:1-2.

108. மேலது, பா.எ.65:5-6.

109. க.ரத்னம், சங்க இலக்கியத்தில் யானைகள், ப.28.

110. நற்றிணை, பாடல்.77:8-10.

111. ந.சுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் வாழ்வியல், ப.412.

112. நற்றிணை, பா.எ.353:1-2.

113. குறுந்தொகை, பா.எ.8.

114. மேலது, பா.13:3-5.

115. மேலது, பா.121:5-6.

116. மேலது, பா.எ.249:3-5.

117. மேலது, பா.எ.198:1-2.

118. மேலது, பா.எ.291:1-2.

119. மேலது, பா.எ.312:1.

120. மேலது, பா.எ.312:4-8.

121. கலித்தொகை, பா.எ.37:13-17.

122. மேலது, பா.எ.45:20-23.

## இயல்-3

## பரணர் பாடல்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்

கபிலருக்கு அடுத்து அதிகப்படியான குறிஞ்சித்திணைப் பாடல்களைப் பாடியவர் பரணர். இவர் பாடியதாக மொத்தம் 28 பாடல்கள் சங்க இலக்கியத்தில் உள்ளன. அகநானூற்றில் 15 பாடல்களும், குறுந்தொகையில் 8 பாடல்களும், நற்றிணையில் 5 பாடல்களும் காணப்படுகின்றன. இவரது பாடல்களில் குறிஞ்சிநிலத் தலைமக்களான தலைவன், தலைவி ஆகியோரின் வாழ்வியல் செயல்பாடுகளும் தோழியின் செயல்பாடுகளும் இடம்பெற்றுள்ளன. அதாவது பாங்கற்கூட்டம் முதல் வரைவு மலிதல் வரை குறிஞ்சிநில மக்களுக்குரிய வாழ்வியல்செயல்பாடுகள் அனைத்தும் பரணரின் 28 பாடல்களிலும் இடம்பெற்றுள்ளன. இவற்றைப் பற்றி ஆராய்வதாக இவ்விவல் அமைகின்றது.

### பாங்கற்கூட்டமும் தலைவனின் மன உறுதியும்

குறிஞ்சித்திணைக்குரிய களவுக்கால ஒழுகலாறுகளை வரிசைப்படுத்தும் போது இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியற்கூட்டம் என வரிசைப்படுத்திக் கூறுவது இலக்கண நூலாரின் இயல்பு. இதில் பாங்கற்கூட்டத்தில் இருக்கும் தலைவனுக்கு அவனது தோழன், சில அறிவுரைகளைக் கூறுகிறான். அதை மறுத்து தலைவன் பதிலுரைப்பதாக நற்றிணை 201 ஆம் பாடல் அமைந்துள்ளது. தலைவி மீது தலைவன் கொண்டிருக்கும் காதலின் உறுதித்தன்மையை வெளிப்படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதாவது,

**“கால்பொருது இடிப்பினும், கதழ்உறை கடுகினும்,**
**உரும்உடன்று எறியினும், ஊறுபல தோன்றினும்,**
**பெருநிலம் கிளரினும், திருநல உருவின்**
**மாயா இயற்றைப் பாவையின்,**
**போதல் ஒல்லாள்என் நெஞ்சத் தானே”[1]** (நற்.201:8-12)

என்று தவைன் கூறுவதிலிருந்து, அவன் தலைவி மீது கொண்டிருந்த அன்பினை அறியமுடிகின்றது. காற்று வேகமாக அடித்தாலும், தீமைகள் பல தோன்றினாலும், இடி இடித்தாலும், மழை மிகுதியாகப் பெய்தாலும், பெரிய நிலப்பரப்பாகிய இந்த உலகமே எதிர்த்து நின்றாலும் தலைவியை என் நெஞ்சிலிருந்து நீக்க மாட்டேன் எனத் தலைவன் உரைப்பதிலிருந்து சங்க காலக் குறிஞ்சிநிலத் தலைமக்களது காதலையும், அவர்கள் கொண்டிருந்த மன உறுதியையும் அறியமுடிகின்றது. காற்று வீசுதல், இடி இடித்தல், மழை பொழிதல் முதலிய இயற்கை நிகழ்வுகள் சுட்டப்பட்ட போதிலும், சங்க இலக்கியப் பாடல்களில் ஒன்றில் கூட “இயற்கை” எனும் சொல் கையாளப்படவில்லை எனும் கருத்தை **“இத்துணையளவு இயற்கைக்கு இலக்கியம் இடம் அளித்தும், “இயற்கை” என்ற சொல்லோ அதற்கு இனமான பிறிதொரு சொல்லோ ஓர் இடத்தும் குறிக்கப்படவே இல்லை. உலக அளவில் மனித வாழ்வு ஒரு கூறு என்றால், அவனுக்குப் புறத்தே உள்ளனவற்றைப் பிறிதொரு கூறு என்பர். அப்புற வாழ்வின் குறியீடு என்ற அளவில் கூட இயற்கை என்ற சொல்லைச் சங்க இலக்கியம் குறிக்க வில்லை.”**[2] என்று மு.வரதராசனார் குறிப்பிடுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. அதவாது இயற்கை நிகழ்வுகளைத் தன் பாடல்களில் சுட்டும் பரணர் ‘இயற்கை’ எனும் சொல்லை எங்குமே பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**அருங்கடிக்காவல்**

மேலும் இப்பாடலில் வரும் பாங்கனின் (தோழனின்) அறிவுரைகளும் சங்ககாலக் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்துகின்றன. அதாவது தலைவி காவலில் வைக்கப்பட்டிருந்ததை இப்பாடல் உணர்த்துகின்றது.

**“மலைஉறை குறவன் காதல் மடமகள்,**
**பெறல் அருங் குரையள் அருங்கடிக் காப்பினள்,**
**சொல்எதிர் கொள்ளாள், இளையள் அனையோள்**
**உள்ளல் கூடாது என்றோய்! ……..”**[3]

என வரும் அடிகளின் மூலம் களவுப் புணர்ச்சியில் ஈடுபடும் தலைவியானவள், அவளது பெற்றோரால் காவல்காக்கப்பட்ட நிலையையும் அறியமுடிகின்றது. இதனை, **“பெற்ற மனம் பித்தாக ஒருதாய் வசை பொழிகின்றாள். பெதும்பைப் பருவ மகளைப் புறத்தே போகவிடாள் கோல்கொண்டு அழைப்பாள். இரவு பகலெல்லாம் கண்காணிப்பாள் என்று தாயின் செய்திகளை அகவிலக்கியத்துப் படிக்கின்றோம். படிப்பார்க்கும் தலைவிக்கும் தோழிக்கும் தலைவனுக்கும் அன்னை கொடியவளாகவும் காதலுக்குப் பகைத்தி ஆகவும் தோற்றம் தந்தாலும் இளமை வேகத்தால் தன் பழங்குடி ஒழுக்கம் வடுப்படுதல் கூடாது. ஊர்வாய்ப்படுதல் கூடாது என்ற வழிப்புதான் முதிய அன்னையின் கடுமைக்குக் காரணம்”** எனும் கருத்தால் அறியலாம்.”[4] எனவே களவு ஒழுக்கம் என்பது குறிஞ்சிநில சமூகத்துக்கு உரியது என்றாலும் அதற்கான எதிர்ப்பும் குறிஞ்சிநிலச் சமுதாயத்தில் நிலவியதை உணரமுடிகின்றது. இந்த எதிர்ப்புநிலை குடிச்சிறப்பு பாழ்படக்கூடாது என்ற நோக்கில் தோன்றியதையும் அறியமுடிகின்றது.

**தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுதல்**

வருத்தப்படும் தலைவன் தன் நெஞ்சினைப் பார்த்துக் கூறுவதாகச் சில பாடல்களைப் பரணர் இயற்றியுள்ளார், அதில் குறிப்பிடத்தக்கது நற்றிணையின் 265 ஆம் பாடல். இங்கு தலைவன் தனது குறையைத் தீர்த்து வைக்கும்படி தோழியிடம் கூறியபிறகு, தன் நெஞ்சிடம் சில கருத்துக்களை உரைக்கின்றான். அதாவது,

> **“மாரி வண்மகிழ் ஓரி கொல்லிக்**
> **கலிமயில் கலாவத்து அன்ன, இவள்**
> **ஒலிமென் கூந்தல் நம்வயி னானே”[5]**

என்று தலைவன் தன் நெஞ்சிடம் கூறுகின்றான். இங்கு மழை போன்று கொடை கொடுக்கும் வல்வில் ஓரி எனும் வள்ளல் பற்றிக் கூறப்படுகின்றது. அப்படிப்பட்ட ஓரி ஆட்சி செய்யும் கொல்லிமலையின் சாரலில் இருக்கும் மயிலின் தோகை மாதிரி கூந்தலையுடைய தலைவி நம் மீது மிகுந்த அன்புடையவள் அதனால் நெஞ்சமே நீ வருந்தாதே

என்று தலைவன் கூறுகின்றான். இதிலிருந்து தலைவியைக் காணமாட்டாத தலைவன் தன் நெஞ்சை ஆற்றுப்படுத்தும் வாழ்வியல் நிலையை இப்பாடலின் மூலமாக அறியமுடிகின்றது. **“இவ்வாறு ஒருவர் ஒருவரை நோக்கி உரைப்பதைத் தவிர்த்து, வேறு இருவகைப் பேச்சுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று தலைவன் அல்லது தலைவி ஏறத்தாழ தனி மொழி போலத் தம் நெஞ்சுக்குரைப்பதாகும். அவர்களின் இதயத்திற்கெனத் தனி உணர்ச்சி இருப்பது போலவும், அஃது அவர்களை மறுத்துரைப்பது போலவும் கருதி தலைவன் தலைவியர் தம் நெஞ்சோடு பேசுகின்றனர்.”**[6]

இதைப்போலவே, குறுந்தொகையின் 165 ஆம் பாடலும் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாகப் பரணரால் பாடப்பட்டுள்ளது. இப்பாடலிலும் தலைவியின் கூந்தல்அழகு சுட்டப்படுகின்றது. அதாவது, கள் உண்டவர்கள் மீண்டும் மீண்டும் அக்கள்ளையே விரும்பிக் குடிப்பதைப் போல, தலைவியின் கூந்தல் அழகைக் கண்ட தலைவனது நெஞ்சு தலைவியையே மீண்டும் மீணடும் நினைத்து விரும்புகிறது என்பதை,

> **“மகிழ்ந்ததன் தலையும் நறு உண்டாங்கு**
>
> **விழைந்ததன் தலையும் நீவெய் துற்றனை;**
>
> **..................................................................**
>
> **.................................................... இவள்**
>
> **இரும்பல் கூந்தல் இயல்அணி கண்டே”**[7]

எனும் பாடல் உணர்த்துகின்றது. தலைவனின் இத்தகைய செயல் குறிஞ்சித்திணைக்குரிய களவுக்காலச் செயல்பாடுகளில் ஒன்றாகவே கருதப்படுகின்றது.

**அகவன் மகளிர் நிலை (பாண் மகளிர் நிலை)**

குறிஞ்சிநிலத்தில் வாழ்கின்ற அகவன் மகளிர் என்று சொல்லக்கூடிய பாண்மகளிரைப் பற்றியும் அவர்களின் தோற்றம் மற்றும் வாழ்வியல் நிலை குறித்தும் குறுந்தொகையின் 298 ஆம் பாடல் எடுத்தியம்புகின்றது.

**“வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்**

**மடப்பிடிப் பரிசில் மானப்”[8]**

அதாவது பாண்மகளிர் வெள்ளைநிற பூண் அணிந்த சிறு கோலைக் கையில் வைத்தவாறு பாடல்பாடுவதால் பெண்யானைகளைப் பரிசிலாகப் பெற்றனர் என்ற செய்தி இப்பாடலின் வழி உணர்த்தப்படுகின்றது. **“இதனை பாணர்களின் பசி தீர்த்த மன்னர்கள் வள்ளல்கள் அவர்களின் வறுமை தீர பொன்னும் பொருளும், தகுதிக்கேற்றவாறு யானை, குதிரை, ஊர் என கொடைகளாக அளித்தனர். பாணர்கள் அவற்றைப் பெற்றுத் தம் வறுமை தீரத் திரும்பியுள்ளனர்** எனும் கருத்தால் உணரலாம்.”[9] மேலும் களவில் ஈடுபடும் தலைவன் தினந்தோறும் வந்து தலைவியின் ஊரில் தங்கிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்ததையும் இப்பாடல் வழிக் காண முடிகின்றது. இதனை,

**“சேரி சேர மெல்ல வந்து வந்து**

**அரிது வாய்விட்டு இனிய கூறி**

**வைகல்தோறும் நிலம் பெயர்ந்து உறையும் அவன்**

**பைதல் நோக்கம் நினையாம் தோழி!”[10]**

எனும் வரிகள் உணர்த்துவதை அறியலாம். இங்கு களவில் ஈடுபடும் தலைவனின் செயல் பரிசில் பெறும் பாண்மகளிரின் செயலுக்கு ஒப்பிடுவதை அறிய முடிகின்றது. இக்கருத்துக்கள் யாவும் தோழி கூற்றாக அமைந்து தலைவிக்கு உணர்த்தப்படுவது குறிப்பிடத்தக்கது. அதாவது களவு வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் தலைவனது மனநிலையைத் தோழி தன் தலைவிக்கு எடுத்துக்கூறுவதாக இப்பாடல் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## இரவுக்குறி வாழ்க்கையும் வரலாற்றுப் பதிவுகளும்

இரவுக்குறியில் தலைவியைக் காண வரும் தலைவன் அவளைக் கண்ட பிறகு தன் நெஞ்சிற்குக் கூறக் கூடிய நிகழ்வுகளைச் சில பாடல்களின் மூலம் அறியமுடிகின்றது. அதாவது அகநானூற்றின் 152, 162, 198, 208, 262 ஆம் பாடல்கள் இந்த வகையில் அமைவதைக்

காணமுடிகின்றது. மேலும், இப்பாடல்களின் மூலம் சில வரலாற்று நிகழ்வுகளும் வெளிப்படுகின்றன. அதாவது தலைவியைச் சந்தித்த தலைவன், அவள் மீண்டும் தன் ஊருக்குச் சென்றபிறகு தன் நெஞ்சிடம் தலைவியின் அழகுநலன்களைப் பற்றிக் கூறுகின்றான். அப்போது தித்தன் வெளியன், நன்னன், நள்ளி, ஆய் முதலிய வள்ளல்களின் வள்ளல் தன்மை பற்றியும் தலைவியின் கூந்தல் மற்றும் தோள் அழகு பற்றியும் தலைவன் ஒப்பிட்டு எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது.

**“குன்றுழை நண்ணிய சீறூர் ஆங்கண்**

**செலீஇய பெயர்வோள் வணர்சுரி ஐம்பால்**

**-------------------------------------------------------**

**களிமயில் கலாவத் தன்ன தோளே”[11]**

எனும் பாடலடிகள் தலைவியின் கூந்தலையும், தோளையும் பற்றிக் கூறுகின்றன. தித்தன் என்பவன் பாணர்களை ஆதரித்தமையையும், நன்னன் என்பவன் இரவலர்க்கு களிறுகளை வழங்கியமையையும், ஆய் என்பவன் தன்னிடம் வருவோர்க்கு கலம் நிறையச் சோறளித்து உபசரித்தமையையும் மேற்கண்ட பாடல் உணர்த்துகின்றது. இங்கு வள்ளல்களின் ஆட்சிப்பகுதியில் உள்ள காந்தள்மலர், மூங்கில், மயில் தோகை முதலியவற்றோடு தலைவியின் கூந்தல், தோள் அழகு ஒப்பிடப்பட்டு தலைவனால் தன் நெஞ்சிற்குச் சொல்லப்படுகின்றது. இது அக்காலத் தலைமகனது இரவுக்குறி வாழ்க்கையை உணர்த்துவதோடு வரலாற்றுச் செய்திகளாகவும், பதிவு செய்யப்படுவதை அறிய முடிகின்றது.

**இரவுக்குறி சந்திப்பு**

தலைவனின் காதல் துன்பம் நீங்கும் படியாகத் தலைவி தலைவனை அணைத்துக்கொண்ட காதல் நிகழ்வு அகநானூறு 162 ஆம் பாடலில் தலைவனால் சுட்டப்படுகின்றது. அதாவது பெருமழை பொழியக்கூடிய நடுச்சாமத்தில் தலைவன் தலைவியின் வீட்டிற்கே சென்று இரவுக்குறியில் சந்திக்கிறாள். இதனை,

**“கால்உறு தளிரின் நடுங்கி ஆனாது,**

**நோய்அசா வீட முயங்கினள்……”[12]**

எனும் அடிகளால் அறியலாம். தலைமகளது இச்செய்கை அருங்கடிக்காவலையும் மீறி தலைவியின் இருப்பிடத்திற்கே செல்லும் தலைவனின் துணிவையும், தலைவியின் அன்புணர்ச்சியையும் வெளிப்படுத்துகின்றது. அதாவது குறிஞ்சித்திணைக்குரிய உரிப்பொருளான புணர்தலும் புணர்தல் நிமித்தமும் என்னும் செயல்பாட்டை இப்பாடலின் மூலம் உணர்ந்து கொள்ள முடிகின்றது. இந்த குறியிட சந்திப்பை, **“துடிப்பிரிந்த தலைவன் வேட்கைமீதூர மற்றை நாள்களிலும் வந்து தோழிக்குத் தன் குறிப்புணர்த்தி முன் கூடியது போல் கூடவும் பெறுவான். குறியிடம் என்பது கலவியன் பொருட்டு தலைவனும் தலைவியும் சந்திக்கும் இடமாகும். இது பகற்குறியென்றும், இரவுக்குறியென்றும் இருவகைப்படும்.”[13]** என்கிறார் ந.சுப்பு ரெட்டியார். இதைப்போலவே தலைவன்-தலைவி புணர்ச்சி குறித்து அகநானூற்றின் 198 அம் பாடலும் விவரிக்கின்றது. இப்பாடலில் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லும்போது, தலைவி குறித்தும் அவள் தன்னோடு புணர்ந்து சென்றது குறித்தும் கூறுகின்றான். இதனை,

**“அம்சிலம்பு ஒடுக்கி அஞ்சினள் வந்து**

**துஞ்சு யாமத்து முயங்கினள், பெயர்வோள்”[14]**

எனும் அடிகளால் அறியலாம். இதன்மூலம் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லக்கூடிய பாடல்கள் பெரும்பாலானவை தலைவன்-தலைவியின் இரவுக்குறிப் புணர்ச்சி பற்றியனவாகவே உள்ளதை அறியமுடிகின்றது.

**வரலாற்றுச் செய்திகள்**

தலைமகளது களவு வாழ்வியலைப் புலப்படுத்தும் (பரணர் பாடல்கள்) அதே வேளையில் வரலாறுகளை முன்வைப்பனவாகவும் விளங்குகின்றன. அகநானூற்றின் 208 ஆம் பாடல் குறுநில மன்னர்களின் கொடைத்தன்மையை விளக்குவதோடு அவர்களின் போர் நிகழ்ச்சிகளையும் எடுத்தியம்புகின்றது. அதாவது,

**"நுண்கோல் அகவுநர் வேண்டின், வெண்கோட்டு**
**அண்ணல் யானை ஈயும் வண்மகிழ்**
**வெளியன் வேண்டான் ஆஅய் எயினன்**
**அளிஇயல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை**
**இழைஅணி யானை இயல்தேர் மஞிலியொடு**
**நுண்பகல் உற்ற செருவில் புண்கூர்ந்து**
**ஓள்வாள் மயங்குஅமர் வீழ்ந்தென, புள் ஒருங்கு**
**அம்கண் விசும்பின் விளங்கு ஞாயிற்று**
**ஒண்கதிர் தெறாமை சிறகரின் கோலி**
**நிழல் செய்து …………………"**[15]

எனும் பாடலடிகள் ஆய் எயினன் என்னும் குறுநில மன்னன் பாணர்களுக்குப் பட்டத்து யானையையே பரிசாகத் தருபவன் என்றும் அவன் நன்னனின் நண்பன் மிஞிலி என்பவனோடு வாள் போரில் ஈடுபட்டு இறந்தான் என்பதையும் கூறும் வரலாற்றுக் கருவூலமாக இருப்பதை அறியமுடிகிறது. மேலும் இப்பாடல் எயினன் என்பவன் பறவைகளிடமும் அளவுகடந்த அன்பு செலுத்தியவன் என்பதையும் அவன் இறந்தபிறகு பறவைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து தன் இறகுகளை விரித்துப்பிடித்து அவன்மீது வெயில்படாதவாறு பாதுகாத்ததையும் இப்பாடல்மூலம் அறியமுடிகின்றது. பரணர் தம் சங்கப் பாடல்கள் மூலம் சங்ககால மக்கள் மனிதநேயம் மிக்கவர்களாக இருந்ததை அறிய முடிகின்றது.

**அன்னி மிஞிலியும் குறிஞ்சிநிலத் தலைவனும்**

அகநானூற்றின் 262 ஆம் பாடலும் வரலாற்று நிகழ்ச்சியைத் தெரியப்படுத்துவதாகப் பரணரால் இயற்றப்பட்டுள்ளது. அதாவது கோசர்கள் எனும் ஒரு பிரிவினர் சங்ககாலத்தில் குறிஞ்சிநிலப் பகுதிகளில் வேளாண்மைத் தொழில் புரிந்ததை இப்பாடல் மூலம் பரணர் புலப்படுத்துகின்றார். அக்காலத்தில் குறுநில மன்னர்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்ததை, **"புன்செய் வேளாண்மை குறிஞ்சி, முல்லை எனும் இரு திணைகளிலும் முக்கிய வேளாண்மையாய் இருந்துள்ளது.**

**குறிஞ்சி நிலப்பகுதிகளை ஆண்ட குறுநில மன்னர் பற்றிய பாடல்களில் புன்செய் வேளாண்மையின் சிறப்பும் பாடப்பட்டுள்ளது."[16]** என்று பெ.மாதையன் உணர்த்துகின்றார்.

மேலும், அந்த நிலத்தில் அன்னி மிஞிலி என்ற பெணணின் முதிய தந்தை வளர்த்த பசுக்கள் மேய்ந்ததையும் அதனால் கோசர்கள் அம்முதியவரின் கண்களைப் பிடுங்கி தண்டித்ததையும் இப்பாடல் உணர்த்துகின்றது. இதனை

> **"பாசிலை அமன்ற பயறுஆ புக்கென**
> **வாய்மொழித் தந்தையைக் கண்களைந்து அருளாது**
> **ஊர்முது கோசர் நவைத்த சிறுமையின்"[17]**

எனும் அடிகளால் அறியலாம். மேலும் தந்தையின் கண்களைப் பிடுங்கிய கோசரை, மிஞிலி எனும் பெண், தித்தன் எனும் குறுநிலமன்னனிடம் சொல்லிக் கொலைத் தண்டணை பெற்றுத் தந்து மகிழ்ந்ததையும் அதைப்போலவே இப்பாடல் தலைவியைச் சந்தித்த எனது உள்ளமும் மகிழ்ச்சியாக உள்ளது என்றும் தலைவியை இரவுக்குறி சந்திப்பில் புணர்ந்து நீங்கிய தலைவன் தன்நெஞ்சிற்குக் கூறுவது குறிப்பிடத்தக்கது. இது ஒரு சேர தலைமக்களது களவு வாழ்வையும் அக்காலத்தில் நிகழ்ந்த ஒரு வரலாற்றுச் செய்தியையும் தருவது குறிப்பிடத்தக்கது.

**அல்லகுறி வாழ்க்கை**

அல்லகுறியில் தலைவனது நிலை எவ்வாறிருந்தது என்பதையும் பரணர் பாடல்கள் சுட்டிநிற்கின்றன. அதாவது தலைவன் குறியிடத்து வந்து காத்திருக்கும் நிலையில் தலைவி வராமல் போனநிலையை அல்லகுறி என்றழைப்பர். இவ்வல்லகுறி நிகழ்வதற்கான காரணங்களைக் குளோறியா சுந்தரமதி கீழ்கண்டவாறு விளக்குவது குறிப்பிடத்தக்கது. **"அல்லகுறி இரவுக்குறியின் பகுதியாக நிகழ்வது அல்லகுறிபட்டுத் தலைவன் வரும் அவலமும் தலைவியின் துன்பமும் அல்லகுறிக்கு காரணம் தலைவியே என தலைவன் கூறலும் அல்லகுறிபட்ட அன்னையின் விழிப்பே காரணம் என்பது பாடல்களில் பதிவு பெறும் கவிதைச் சுவையை மிகுவிக்கும் கூறுகள் இரவுக்குறிக்காகத் தாயின்**

**துயில் உணர்த்தலும் இரவுக்குறிக்காக இல்லத்தை விட்டுத் தலைவி இறங்கிச் சென்றதாக ஐயுற்று உரைக்கும் தாயின் ஐயத்தை ஏதுகாட்டி தெளிவிக்கும் தோழியின் கூற்றும் அரிய கூறுகள். அகநானூற்று பாடல்களில் பதிவு பெற்றவை."[18]**

அகநானூற்றின் 62ம் பாடல் அல்லகுறியில் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அமைந்துள்ளது. இதில் தலைவனும், தலைவியும் நள்ளிரவில் சந்தித்து களவொழுக்கத்தில் ஈடுபட்டதால் அது ஊர்முழுவதும் பரவி அலர் ஆகிறது. இதனால் முதல்நாளில் காவிரியில் தலைவனுடன் சேர்ந்து நீராடிய தலைவி மறுநாள் வரவில்லை. இதனை

**"பேயும் அறியா மறை அமை புணர்ச்சி**
**பூசல் துடியின் புணர்புபிரிந்து இசைப்ப**
**கரந்த கரப்பொடு நாம்செலற்கு அருமையின்,**
**கடும்புனல் மலிந்த காவிரிப் பேரியாற்று**
**நெடுஞ்சுழி நீத்தம் மண்ணுநள் போல,**
**நடுங்குஅஞர் தீர முயங்கி, பெருநல்**
**ஆகம் அடைதந் தோளே…."[19]**

எனும் அடிகளால் அறியலாம். இதைப்போலவே அல்லகுறிப் பட்டு நீங்கும் தலைமகன் தலைவியின் அழகை நினைத்து ஏங்கும் தன் நெஞ்சினைத் திட்டுவதாக அகநானூற்றில் 212ஆம் பாடல் அமைந்துள்ளது. இப்பாடலில் சேர மன்னனின் போர் வேல் தன் நெஞ்சில் பாய வேண்டும் என்றும் அப்போது தான் தன் நெஞ்சுக்குள் செறுக்கு ஒழியும் என்றும் தலைவன் சுட்டுகிறான். இதனை

**"நீர்மாண் எ஼கம் நிறத்துச் சென்று அழுந்தக்**
**கூர்மதன் அழியரோ-நெஞ்சே!"[20]**

எனும் பாடல் அடிகளும்

**"அரவுஇரை தேரும் அஞ்சுவரு சிறுநெறி,**
**இரவின் எய்தியும் பெறாஅய், அருள்வரப்**

**புல்லென் கண்ணை புலம்புகொண்டு உலகத்து**

**உள்ளோர்க்கு எல்லாம் பெருநகை யாக,**

**காமம் கைம்பகை உறுதர,**

**ஆனா அரும்படர் தலைத்தந் தோயே!"[21]**

எனும் பாடல் அடிகளும் அல்லகுறிப்பட்ட தலைவன் தன் நெஞ்சினைத் திட்டி, மலைச்சாரலில் உள்ள குகைகளில் இரத்தினங்கள் ஒளியின்றி மங்கிக் கிடப்பது போல நீயும் புகழ் இழந்து மாய்வாயாக என்று கூறுகின்றான். இதைப்போலவே அகநானூற்றின் 322ஆம் பாடலும் அல்லகுறிப் படும் தலைவன் கூற்றுப் பாடலாக அமைகின்றது. இதில் தேனடைகளை அறுத்து எடுக்க முயற்சி செய்யும் குறவர்களின் செயலும் அவர்கள் அடைதற்கு இயலாத பெரிய சிகரங்களை உடைய பொதிகை மலையைப் போன்று தலைவியும் பெறுவதற்கு அரியவள் என்று தன் நெஞ்சிற்குத் தலைவன் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இதனை

**"அறைஉறு தீம்தேன் குறவர் அறுப்ப,**

**முயலுநர் முற்றா ஏற்றுஅரு நெடுஞ்சிமை,**

**புகல்அரும் பொதியில் போலப்**

**பெறல் அருங்குரையள் எம்அணங்கி யோளே!"[22]**

எனும் அடிகளால் உணர்த்துகிறார் பரணர். மேலும் அகநானூற்றின் 372 ஆம் பாடல்,

**"பேய்மணி இழந்த பாம்பின், நீதனி**

**தேம்பானை வாழி, என் நெஞ்சே –வேந்தர்**

**கோண்தணி எயிலின் காப்புச் சிறந்து,**

**ஈண்டு அருங் குரையள் நம் அணங்கி யோளே"[23]**

என அமைந்து அல்லகுறியில் தலைவன் கூற்றாக இடம் பெற்றுள்ளது. எனவே அல்லகுறி என்பது குறிஞ்சிநில மக்களின் களவு வாழ்வில் ஒரு அங்கமாக இருந்ததை அறிய முடிகின்றது.

**குறுந்தொகையில் அல்லகுறி**

குறுந்தொகையின் 120ஆம் பாடல் பரணரால் இயற்றப்பட்டு அல்லகுறியில் தலைவன் கூற்று நிகழ்த்துவதாக அமைந்துள்ளது. இதில் தலைவன் தன் நெஞ்சினைப் பார்த்து தலைவி நல்லவள் என்றும் அதே சமயம் பெறுவதற்கு அரியவள் என்றும் கூறுகின்றான். மேலும் பொருட்செல்வம் இல்லாதவன் இன்ப வாழ்வை அடைய விரும்புவதைப் போல பெறுவதற்கு அரிதான தலைவியை நீ விரும்புகின்றாய் என்றும் தலைவன் தன் நெஞ்சினைப்பார்த்து உரைக்கின்றான். இதனை

**“இல்லோன் இன்பம் காமுற் றாஅங்கு,**
**அரிதுவேட் டனையால் நெஞ்சே! காதலி**
**நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு**
**அரியள் ஆகுதல் அறியா தோயே”[24]**

எனும் பாடலால் அறியலாம். இதன் மூலம் அல்லகுறிப்பட்ட தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறும் பாடல்களின் மூலம் தலைவியின் அழகுநலன்கள் எடுத்துரைக்கப்படுவதோடு, தலைவி பெறுவதற்கு அரியவள் என்ற கருத்தினை ஒவ்வொரு பாடலிலும் பரணர் எடுத்தியம்புகின்றார். இந்த வகையில் பரணரின் அகநானூற்றுப்பாடல்கள் பெரும்பாலும் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்வதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் சங்ககால மக்களின் களவுவாழ்வில் அல்லகுறிப்பிடுதல் என்பது மிகமுக்கிய வாழ்வியல் செயல்பாடாக அமைந்திருத்தலை அறியமுடிகின்றது.

**இற்செறிப்பு உணர்த்தல்**

சங்ககால வாழ்வியலில் இற்செறிப்பு உணர்த்தல் எனும் நிகழ்வு பெரும்பாலும் தோழி வாயிலாகவே நிகழ்ந்துள்ளதை அறியமுடிகின்றது. அதாவது தலைவியைக் காணவரும் தலைவனுக்குத் தோழியானவள், தலைவி இல்லக் காவலில் வைக்கப்பட்டுள்ளாள் என்பதைப் புலப்படுத்துகின்றாள். இந்த இற்செறிப்பாகிய வீட்டுக் காவல் குறித்தும் பரணர் பாடல் இயற்றியுள்ளார். அதாவது குறுந்தொகையின் 292 ஆம்

பாடல் இற்செறிப்பை உணர்த்தும் விதமாகத் தோழி கூற்றில் அமைந்துள்ளது.

இதனை,

**“மண்ணிய சென்ற ஒள்நுதல் அரிவை**
**புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு**
**ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள் நிறை**
**பொன்செய் பாவை கொடுப்பவும், கொள்ளான்,**
**பெண்கொலை புரிந்த நன்னன் போல,**
**வரையா நிரையத்துச் செலீஇயரோ, அன்னை**
**ஒரு நாள்**
**நகைமுக விருந்தினன் வந்தென,**
**பகைமுக ஊரின் துஞ்சலோ இலளே”**[25]

எனும் பாடலால் அறியலாம். இங்கு பெண்கொலை செய்த நன்னன் நரகத்திற்குச் செல்வான் என்றும் அதைப்போலவே தலைவியை வீட்டுக் காவலில் வைத்துள்ள தாயும் நரகத்திற்குச் செல்வாள் என தோழி கூறுவதன் மூலம் இற்செறிப்பு உணர்த்தப்படுவதை அறியமுடிகின்றது. “**மகளின் மனமாற்றம், உடல் மாற்றத்தை எண்ணி அன்னை மகளை இற்செறித்தனள்: மணவாளனைக் காண இயலாது அவள் தவித்தனள்: அவளைக்காண இயலாது அவன் தவித்தனன். இருவர் தவிப்பும் தோழியை வாட்டியது.”**[26] இதன் மூலம் சங்க கால வாழ்வியலில் இற்செறிப்பு எனும் நிகழ்வு முக்கிய இடம் வகித்ததைப் பரணரின் மேற்கண்ட பாடல்வழி அறியமுடிகின்றது.

**வரைவு கடாதல்**

**அகநானூற்றில் வரைவு கடாதல்**

வரைவுகடாதல் எனம் துறையில் நான்கு பாடல்களைப் பரணர் இயற்றியுள்ளார். அகநானூற்றின் 148, 222 ஆம் பாடல்களும் குறுந்தொகையின் 73, நற்றிணையின் 247 ஆம் பாடல்களும் வரைவு கடாதல் என்னும் நிலையில் அமைந்துள்ளன. வரைவு கடாதல் என்பது

பெரும்பாலும் தோழிக்கு உரிய செயலாகவே அமைந்துள்ளது. தலைவிக்கு விரைவாகத் திருமணம் நடந்தேற வேண்டும் என்ற நோக்கில் தோழி தலைவனை வற்புறுத்துகிறாள். அதாவது தலைவியின் களவு வாழ்வைக் கற்பு வாழ்விற்கு மாற்றும் ஒரு செயல்பாடே இந்த வரைவு கடாதல் ஆகும். **"வரைவு வேண்டித் தலைவன் வர வேண்டும் என தலைவி எதிர்பார்த்து நிற்கிறாள். துலைவியைச் சந்திக்க வந்த தலைவனிடம் இனித் தலைவியை மணந்து கொண்டால்தான் அவளைப்பார்க்க முடியும் என்ற நிலையைத் தோழி உணர்த்துகின்றாள். இவ்வாறு திருமணத்திற்காக வரைவு கடாவுதலை மேற்கொள்ளாமல் சில நேரங்களில் ஆணும், பெண்ணும் பிறரறியாமல், பெற்றோரைப் பிரிந்து சென்று, தனியாக வாழ்க்கை நடத்துவதுமுண்டு."**[27] இந்த வகையில் அகநானூற்றின் 148ஆம் பாடல் பகலில் தலைவியைச் சந்திக்க வரும் தலைவனை வரக்கூடிய வழியின் துன்பநிலையை உணர்த்தி தோழியானவள் தலைவனைப் பகலில் வரவேண்டாம் மாலையில் வருதும் என்று கூறுகின்றாள். இப்பாடலில் காட்டில் உலவும் மதம் பிடித்த யானையின் செயலைச் சுட்டிக்காட்டி வரைவு கடாதல் என்னும் பணியினைத் தோழி செய்கிறாள். **"மணமுறையாவது களவு நிலையில் தலைவன் தலைவி உறவு நிறைவு பெறுதலேயாம். ஆனால் விரைவில் அந்நிலை பெற்றோர் முதலியோர்க்குத் தூதுவர், தோழியர், சிலதியர் வாயிலாகத் தெரியவரும் என்று எதிர்பார்க்கப்படும். இந்த நெருக்கடி தோன்றவே கரணம் அமைந்த திருமணம் நிறைவேறி முறையான மணவாழ்க்கை தொடங்கும்."**[28] இதனை

> **"கடும்பகல் வழங்கா தாஅங்கு, இடும்பை**
> **பெரிதால் அம்ம இவட்கே அதனால்**
> **மாலை வருதல் வேண்டும் - சோலை**
> **முளைமேய் பெருங்களிறு வழங்கும்**
> **மலைமுதல் அடுக்கத்த சிறுகல் ஆறே"**[29]

எனும் அடிகளால் அறியலாம். இதைப்போலவே அகநானூற்றின் 222 ஆம் பாடலும் தலைமகன் சிறைப்புறத்தே இருக்க, தோழி தலைவிக்குச் சொல்லுவது போலத் தலைவனிடம் வரைவு கடாவுகிறாள். இப்பாடலில்

ஆட்டனத்தி ஆதிமந்தியின் காதல் கதையைச் சுட்டி, தோழி வரைவு கடாதலை மேற்கொள்கிறாள். இதனை

**"ஆதி மந்தி காதலற் காட்டிப்**
**படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்**
**மருதி அன்ன மாண்புகழ் பெறீஇயர்**
**சென்மோ-வாழி, தோழி – பல்நாள்,**
**உரவுஉரும் ஏறொடு மயங்கி,**
**இரவுப்பெயல் பொழிந்த ஈர்ந்தன் ஆறே"**[30]

எனும் பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

**குறுந்தொகையில் வரைவு கடாதல்**

குறுந்தொகையின் 73 ஆம் பாடல் பகற்குறி, இரவுக்குறி இரண்டும் மறுக்கப்படட நிலையில் தோழி தலைவிக்குச் சொல்லுவதாய் அமைந்துள்ளது. இங்கு தலைவன் தலைவி சந்திப்பு நிகழாத சமயத்தில் தலைவி வருத்தம் அடைகிறாள். இங்கு இருவரின் சந்திப்புக்கும் தடையாக விளங்கும் தோழி மறைமுகமாகத் தலைவனைத் திருமணத்திற்கு வற்புறுத்துகிறாள். அதாவது வரைவு கடாவுகிறாள். இதனை

**"மகிழ்நன் மாபே வெய்யை யால் நீ:**
**அழியல் வாழி தோழி! நன்னன்**
**நறுமா கொன்று ஞாட்டால் போக்கிய**
**ஒன்றுமொழிக் கோசர் போல,**
**வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே"**[31]

எனும் பாடல் உணர்த்துகின்றது. மேலும் நற்றிணையில் 247 ஆம் பாடல் நீட்டியாமை வரை எனத்தோழி சொல்லியது என்னும் கூற்றில் அமைந்து வரைவு கடாதலை வலியுறுத்துகின்றது. அதாவது பிரிந்து செல்லக் கருதிய தலைவனைத் தோழி வரைவு கடாவுகிறாள். தலைவிக்குக் காதலால் உண்டான பசலை நோய்க்குத் திருமணமே மருந்து என்று தோழி கூறுகிறாள். இதனை,

**"கோடுஉணர் நெடுவரை ஆடும் நாட! நீ**

**நல்காய் ஆயினும், நயன்இல செய்யினும்,**

**நின்வழிப் படுஉம்என் தோழி நல்நுதல்**

**விருந்து இறைகூடிய பசலைக்கு**

**மருந்துபிறிது இன்மைநற்கு அறிந்தனை சென்மே!"**[32]

என்னும் வரிகள் உணர்த்தி நிற்கின்றன. இவ்வாறாக வரைவு கடாதல் என்னும் துறையில் பரணர் இயற்றிய இப்பாடல்கள் அனைத்தும் தோழி கூற்றிலேயே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவற்றில் தோழி நேரிடையாகவும் மறைமுகமாகவும் தலைவனிடம் தலைவியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவதைக் காண முடிகின்றது.

**இற்செறிப்பு – தலைவன் கூற்று**

பரணர் பாடல்களுள் இற்செறிப்பை உணர்த்துவதாக இரண்டு பாடல்கள் உள்ளன. அதில் ஒன்று தோழி கூற்றிலும் (குறுந். 292) மற்றொன்று தலைவன் கூற்றிலும் அமைந்துள்ளது. அதாவது குறுந்தொகையின் 199 ஆம் பாடல் தலைவன் கூற்றில் அமைந்து தலைவன் தன் நெஞ்சிற்கு சொல்வதாய் அமைந்துள்ளது. இப்பாடலில் தலைவியின் அழகு நலன்களைப் புகழும் தலைவன் தன் நெஞ்சிடம் மறுபிறவியிலும் தலைவி மீதான காமநோய் தொடரும் எனக் கூறுகின்றான். இதனை

**"இன்றை அன்ன நட்பின் இந்நோய்**

**இறுமுறை என ஒன்று இன்றி,**

**மறுமை உலகத்தும் மன்னுதல் பெறினே"**[33]

என்னும் பாடல் அடிகள் மூலம் அறியலாம். மேலும் இப்பாடலில் தோழி தலைவனிடம் இற்செறிப்பை உணர்த்த, தலைவன் தன் நெஞ்சிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளதை அறிய முடிகின்றது. மேலும், **"மக்கள் நாகரிக வளர்ச்சியடைந்து சமுதாயக் கட்டுக் கோப்புகள் வளரத் தலைப்பட்ட போது ஆணும் பெண்ணும் தாங்களே விரும்பிக் கூடும் எதிர்பாட்டுப் புணர்ச்சிக்குக் கட்டுக்காவல் ஏற்படலாயிற்று:**

**இக்கட்டுப்பாடுகள் சமுதாய மரபுகளாகவும் திருமணச் சடங்குகளாகவும் அமையலாயின. உரிமைப் பறவைகளாக தலைவன் தலைவி ஆகிய இருபாலருக்கும் இக்கட்டுக்காவல்கள் தடைகளாக மாறின: அகப்பொருள் இலக்கண நூலார் சமுதாயக் கட்டுப்பாடுகளை "இற்செறிப்பு" – "சிறைக்காவல்" "இடையீடு" என்று பலவாறு இலக்கண மொழியில் பேசுவராயினர்"**[34] எனும் கருத்தால் சங்க காலத் தலைமக்களது களவு வாழ்வியலுக்கு எதிராகக் காவல் எனும் இற்செறிப்பு தலைவிக்கு மட்டும் உரியதாக அமைந்திருத்தலையும் இக்கட்டுப்பாடு தலைவனுக்கு எந்நிலையிலும் அவன் உறவினர்களால் ஏற்படுத்தப்படவில்லை என்பதையும் அறிய முடிகின்றது.

**வரைவிடைப் பிரிவு**

வரைவாகிய திருமணத்தைக் காரணமாக வைத்து தலைவன் பொருள்தேடப் பிரிந்து செல்கின்றான். அப்போது தலைவி தோழிக்கு சொல்லுவதாக குறுந்தொகையின் 36, 60ஆம் பாடல்கள் விளங்குகின்றன. இப்பாடல்களில் வருந்தும் தோழியைத் தலைவி ஆற்றுப்படுத்துகிறாள். அதாவது தலைவனை நம்பிய தலைவியின் நிலை துன்பத்திற்குரியதாக மாறியதைக் குறுந்தொகையின் 36 ஆம் பாடல் விவரிக்கின்றது. இதனை

**"துறுகல் அயலது மானை மாக்கொடி**
**துஞ்சுகளிறு இருவரும் குன்ற நாடன்**
**நெஞ்சுகளன் ஆக, 'நீயலென் யான்" என,**
**நற்றோள் மணந்த ஞான்றை, மற்று அவன்,**
**தாவா வஞ்சினம் உரைத்தது**
**நோயோ தோழி! நின்வயி னானே?"**[35]

என்னும் பாடலால் அறியலாம். இதனை, **"ஆண்கள் பொருள் ஈட்டுவதைக் கடமையாகக் கொண்டிருந்தனர். பொருளைக் கொண்டுதான் ஏனைய அறங்களைச் செய்ய முடியுமென்று அவர்கள் இறுதியாக எண்ணினர்"**[36] என்னும் கருத்தாலும் அறிய முடிகின்றது. இதைப்போலவே குறுந்தொகையின் 60ஆவது பாடலும் பிரிவிடை ஆற்றாத தோழி தலைவிக்குச் சொல்லுவதாய் அமைந்துள்ளது. அதாவது,

**“குறுந்தாட் கூதளி ஆடிய நெடுவரைப்**

**பெருந்தேன் கண்ட இருகால் முடவன்**

**உட்கைச் சிறுகுடை கோலிக் கீழ்இருந்து,**

**சுட்டுபு நக்கியாங்கு, காதலர்**

**நல்கார் நயவார் ஆயினும்,**

**பல்கால் காண்டலும் உள்ளத்துக்கு இனிதே”**[37]

என அமைந்து வரைவிடைப் பிரிவை இப்பாடல் உணர்த்துகின்றது. இங்கு, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல என்னும் பழமொழிக்கு ஏற்ற கருத்தினைத் தலைவி தோழியிடம் குறிப்பிடுகின்றாள். முடவன் உயரத்தில் இருக்கும் தேனைப் பார்த்து நாக்கை நக்கி இன்புற்றதைப் போல தலைவி தலைவனைப் பலமுறைக் கண்களால் கண்டதே தன் மனதிற்கு இன்பம் தரும் என்று தோழியிடம் கூறுகிறாள். இதன்மூலம் தலைவன் தலைவிக்கு இடையேயான பிரிவு உணர்த்தப்படுவதை அறிய முடிகின்றது.

**வரைவு மறுத்தல்**

வரைவு மறுக்கப்பட்ட தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லுவதாக நற்றிணையின் 356 ஆம் பாடல் அமைந்துள்ளது. இங்கு,

**“வருந்தினை வாழிஎன் உள்ளம்! ஒருநாள்**

**காதலி உழைய ளாக**

**குணக்குத் தோன்று வெள்ளியின் எமக்குமார் வருமே?”**[38]

என்று தன் நெஞ்சிடம் புலம்பும் தலைவன் வரைவு மறுக்கப்பட்டமையை உணர்த்துகின்றான். இங்கு தலைவி தம் அருகிலேயே எப்போதும் இருக்க வேண்டுமென்று எண்ணுகின்ற தலைவனின் உள்ள வெளிப்பாடு வெளிப்பட்டு நிற்பதை அறிய முடிகின்றது.

**வரைவு மலிதல்**

தலைமக்களது களவு வாழ்வைக் கற்பு வாழ்வாக மாற்றுவது திருமணம் என்னும் நிகழ்வின் மூலம் நடைபெறுகின்றது. இதன் தொடக்கமாக வரைவு மலிதல் எனும் நிகழ்வு அமைகின்றது. இந்த

வரைவு மலிவைத் தோழி உணர்த்துவதாக அகநானூற்றின் 178ஆம் பாடல் அமைந்துள்ளது. இப்பாடலில் தலைவனின் நாட்டுவளமும் இயற்கை வளமும் தோழியால் சுட்டப்பட்டு, தலைவனின் நற்பண்புகளும் சுட்டப்படுகின்றன. அவனோடு தலைவி மகிழ்ச்சியாக இன்புற்று வாழ வேண்டுமென்று தோழி வாழ்த்துவதன் மூலம் வரைவு மலிவு இங்கு மறைமுகமாக உணர்த்தப்படுவதை அறியமுடிகிறது. இதனை,

**“கண்இனிது படுக்கும் நல்மலை நாடனொடு**

**உணர்ந்தனை புணர்ந்த நீயும், நின்தோட்**

**பணைக்கவின் அழியாது துணைப்புணர்ந்து, என்றும்**

**தவல்இல் உலகத்து உறைஇயரே-தோழி!”**[39]

என்னும் அடிகளால் அறியலாம். மேற்கண்ட பாடலின் மூலம் வரைவு மறுத்தல், வரைவு மலிவு ஆகியவற்றை உணர்த்தும் பரணர் களவு வாழ்வை கற்பு வாழ்வாக மாற்றுவதற்குரிய அறத்தொடு நிற்றல் என்னும் துறையில் அமைந்த பாடல் ஒன்றினைக் கூட பாடவில்லை என்பது வியப்புக்குரியது. இயற்கைப் புணர்ச்சி மற்றும் பாங்கற்கூட்டம் தொடங்கி இரவுக்குறி, அல்லகுறி, இற்செறிப்பு, வரைவு கடாதல், வரைவுமறுத்தல், வரைவு மலிதல் என்னும் துறைகளில் பாடல்களைப் பாடியுள்ள பரணர் குறிஞ்சித்திணைக்குரிய முக்கிய துறையான அறத்தொடு நிற்றலைப் புறக்கணித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தொகுப்புரை

- இயற்கை நிகழ்வுகளைத் தன் பாடல்களில் சுட்டும் பரணர் ‘இயற்கை’ எனும் சொல்லை எங்குமே பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
- களவு ஒழுக்கம் என்பது குறிஞ்சிநில சமூகத்துக்கு உரியது என்றாலும் அதற்கான எதிர்ப்பும் குறிஞ்சிநிலச் சமுதாயத்தில் நிலவியதை உணரமுடிகின்றது. இந்த எதிர்ப்புநிலை குடிச்சிறப்பு பாழ்படக்கூடாது என்ற நோக்கில் தோன்றியதையும் அறியமுடிகின்றது.
- தித்தன் என்பவன் பாணர்களை ஆதரித்தமையையும், நன்னன் என்பவன் இரவலர்க்கு களிறுகளை வழங்கியமையையும், ஆய்

என்பவன் தன்னிடம் வருவோர்க்கு கலம் நிறையச் சோறளித்து உபசரித்தமையையும் அறியமுடிகின்றது.

- தலைவி பெறுவதற்கு அரியவள் என்ற கருத்தினை ஒவ்வொரு பாடலிலும் பரணர் எடுத்தியம்புகின்றார். இந்த வகையில் பரணரின் அகநானூற்றுப்பாடல்கள் பெரும்பாலும் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்வதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் சங்ககால மக்களின் களவுவாழ்வில் அல்லகுறிப்பிடுதல் என்பது மிகமுக்கிய வாழ்வியல் செயல்பாடாக அமைந்திருத்தலை அறியமுடிகின்றது.
- சங்ககால வாழ்வியலில் இற்செறிப்பு உணர்த்தல் எனும் நிகழ்வு பெரும்பாலும் தோழி வாயிலாகவே நிகழ்ந்துள்ளதை அறியமுடிகின்றது.
- சங்க காலத் தலைமக்களது களவு வாழ்வியலுக்கு எதிராகக் காவல் எனும் இற்செறிப்பு தலைவிக்கு மட்டும் உரியதாக அமைந்திருத்தலையும் இக்கட்டுப்பாடு தலைவனுக்கு எந்நிலையிலும் அவன் உறவினர்களால் ஏற்படுத்தப்படவில்லை என்பதையும் அறிய முடிகின்றது.
- ஆண்கள் பொருள் ஈட்டுவதைக் கடமையாகக் கொண்டிருந்தனர். பொருளைக் கொண்டுதான் ஏனைய அறங்களைச் செய்ய முடியுமென்று அவர்கள் உறுதியாக எண்ணியதை அறியமுடிகின்றது.
- வரைவு மறுத்தல், வரைவு மலிவு ஆகியவற்றை உணர்த்தும் பரணர் களவு வாழ்வை கற்பு வாழ்வாக மாற்றுவதற்குரிய அறத்தொடு நிற்றல் என்னும் துறையில் அமைந்த பாடல் ஒன்றினைக் கூட பாடவில்லை என்பது வியப்புக்குரியது. இயற்கைப் புணர்ச்சி மற்றும் பாங்கற்கூட்டம் தொடங்கி இரவுக்குறி, அல்லகுறி, இற்செறிப்பு, வரைவு கடாதல், வரைவுமறுத்தல், வரைவு மலிதல் என்னும் துறைகளில் பாடல்களைப் பாடியுள்ள பரணர் குறிஞ்சித்திணைக்குரிய முக்கிய துறையான அறத்தொடு நிற்றலைப் புறக்கணித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சான்றெண் விளக்கம்

1. நற்றிணை, பாடல் 201:8-12
2. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பக்.20-21.
3. நற்றிணை, பாடல் 201:1-4.
4. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், பக்.63-64.
5. நற்றிணை, பாடல் 265:6-8.
6. தமிழண்ணல், சங்க மரபு, ப.125.
7. குறுந்தொகை, பாடல் 165:1-5.
8. மேலது, பாடல் 298:6-7.
9. க.காந்திதாசன், சங்க இலக்கியத்தில் பாணர் வாழ்வியல், ப.58.
10. குறுந்தொகை, பாடல்.298:1-4.
11. அகநானூறு, பாடல், 152:2-4.
12. மேலது, பாடல்.162:15-16.
13. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.107.
14. அகநானூறு, பாடல் 198:10-11.
15. மேலது, பாடல் 208:3-12.
16. பெ.மாதையன், சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம், ப.21.
17. அகநானூறு, பாடல் 262:4-6.
18. குளோறியா சுந்தரமதி, சங்க இலக்கியத்தில் குறிஞ்சித்திணைப் பாடல் - பகுப்பாய்வு அணுகுமுறை, ப.25.
19. அகநானூறு, பாடல் 62:6-12.
20. மேலது, பாடல் 212:20-21.
21. மேலது, பாடல் 258:10-15.
22. மேலது, பாடல் 322:12-15.
23. மேலது, பாடல் 372:13-16.
24. குறுந்தொகை, பாடல் 120.
25. மேலது, பாடல் 292.

26. க.ப.அறவாணன், அற்றைநாட் காதலும் வீரமும், ப.130.

27. ர.விஜயலட்சுமி, தமிழக மகளிர், ப.22.

28. ந.சுப்ரமண்யன், சங்ககால வாழ்வியல், ப.384.

29. அகநானூறு, பாடல் 148:10-14.

30. மேலது, பாடல் 222:10-15.

31. குறுந்தொகை, பாடல் 73.

32. நற்றிணை, பாடல் 247:5-9.

33. குறுந்தொகை, பாடல் 199:6-8.

34. பெரு.தியாகராசன், சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்கள், பக்.32-33.

35. குறுந்தொகை, பாடல்36.

36. கி.ஆதிநாராயணன், சங்ககாலம், ப.308.

37. குறுந்தொகை, பாடல்60.

38. நற்றிணை, பாடல் 356:7-9.

39. அகநானூறு, பாடல் 178:13-16.

# இயல்-4

# புலவர் பெயர் அறியப்படாத பாடல்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்

## முன்னுரை

சங்ககாலச் சமூகம் இயற்கையை ஒட்டி உறவாடி இயற்கையில் கலந்து வாழ்வை நடத்தியுள்ளனர். அதிலும் குறிஞ்சி நில மக்கள் மலைகளிலும் மலைச் சார்ந்த பகுதிகளிலும் வாழ்ந்துள்ளனர். அதனால் அவர்களுடைய உணர்வுகள் நடிப்புகளற்ற இயல்புமிக்க வாழ்க்கையாக விளங்கியுள்ளன. தலைவன் தலைவிக்குமான களவு, தினைப்புனம் காக்கும் போது உண்டாகும் காதல், பிரிவில் உண்டாகும் துயரம், உடல் உள்ளப் பாதிப்பு, தோழி திருமணத்திற்கான பேச்சுகளை முன்னெடுத்தல், வாய்மையையும், நல் மனிதருக்கான நாகரிகத்தையும் அறிவுறுத்தல், முதலான அகவாழ்வியலும் மற்றும் பாடல்களின் வழியே வெளிப்படும் தொழில், நம்பிக்கைகள் முதலான புறவாழ்வியலும் வெளிப்பட்டு நிற்பதை இவ்வியல் எடுத்தியம்புகிறது.

## இல்லறவாழ்வே மகிழ்வு

தான் விரும்பிய தலைவன். தன்னைக் கரம்பிடிக்க வருகிறான் என்று அருகில் குடியிருக்கும் பெண்ணால் அறிகிறாள் தலைவி மகிழ்வுக்கு அளவேது.! அதனை,

**“அமிழ்தம் உண்கநம் அயல்இல் ஆட்டி,**
**பால்கலப் பன்ன தேக்கொக்கு அருந்துபு,**
**நீல மென்சிறை வள் உகிர்ப் பறவை**
**நெல்லிஅம் புளிமாந்தி, அயலது**
**முள் இல் அம்பணை மூங்கிலில் தூங்கும்**
**கழைநிவந்து ஓங்கிய சோலை**
**மலைகெழு நாடனை வரும்என் றோளே!”[1]**

இப்பாடல் வரிகளால் அறியமுடிகிறது. அதாவது, தோழி பால் கலந்தது போன்ற இனிய தேமாங்னியாகிய மாம்பழத்தைத் தின்ற கரிய, மெல்லிய

சிறகையும் வளைந்த நகங்களையும் உடைய வவ்வால் நெல்லிமரத்தின் புளிப்பான காயையும் தின்று அருகில் உள்ள பருத்த அழகிய முள்ளில்லாத மூங்கிலில் திருமணம் செய்ய வருகிறான் என்று கூறிய நம் வீட்டுப் பக்கத்தில் உள்ள மனைக் கிழத்தி அமிழ்தம் உண்ணப் பெறுவாளாக என்று வாழ்த்துகிறாள் தலைவி. நினைத்தது கிடைக்கும் போது மகிழ்வும், வாழ்த்தும், ஒற்றுமையும் மேலோங்குவது இயல்புதானே. தன் காதலனோடு இணைந்து வாழும் இல்லற வாழ்வே மகிழ்வானது என்பது வெளிப்படுகிறது. இங்கே **"காதல் என்பது காதுக்கினிய சொல்; கருத்துக்கினிய பொருள் காதல் உண்டாயின் இவ்வுலகில் எல்லாம் உண்டு; காதல் இல்லையேல் ஒன்றும் இல்லை"**[2] எனும் கருத்து நோக்கத்தக்கதாகும். காதலோடு இணைந்து வாழும் இல்லற வாழ்வே சிறப்பானது என்பது பெறப்படுகிறது.

நற்றிணையிலும் இதே போன்று காதலன் தலைவியை மணக்க தகுந்த ஏற்பட்டோடு வருகிறான். அங்கே, தோழியானவள் தலைவியிடம் கீழ்கண்டவாறு,

**"வான்பெயல் நனைந்த புறத்த, நோன்பியர்**
**கைஊண் இருக்கையின் தோன்றும் நாடன்**
**வந்தனன் வாழி தோழி! உலகம்**
**நள்என் யாமத்து மழையொழிந் தாங்கே"**[3]

பாடல் அமைந்துள்ளது. அதில், தோழியே, பசுமைமிக்க மலையில் மழை பெய்த காரணத்தால் குரங்கின் உடல் முழுவதும் நனைந்திருந்தது. இக்காட்சி நோன்பு உடையவர்கள் தைத்திங்களின் போது நீராடி நோன்பு இருந்து உண்ணுதல் போலக் காட்சியளித்தது. இத்தகைய இக்காட்சியை உடைய மலைநாடன் உலகத்தின் குளங்கள் எல்லாம் நீர் வற்றி ஈரமற்று இருக்கும் வேளையில் சூலோடு வாடிய நெற்பயிருக்கு நடு இரவில் மழைபெய்தது போல தலைவனும் வந்தான். இனி விரைவில் திருமணம் செய்து கொண்டு நெடுங்காலம் வாழ்கவென வாழ்த்துகிறாள் தோழி. அதற்குக் காரணம் **"அன்பு அறிவு அழகு வயது முதலியன பொருத்தமாக வாய்ந்த ஆணும் பெண்ணும் காதல் கொண்டு திருமணம் செய்து இல்லற வாழ்க்கை நடத்தினர். அத்தகைய காதலும்**

**இல்லறமுமே சிற்றூர்களின் இயல்பான வாழ்க்கையாக இருந்தன"**[4] எனும் கருத்து ஈண்டு நோக்கத்தக்கதாயுள்ளது.

**பார்த்ததும் பூத்த காதல்**

தலைவி எவ்வாறு களவிற்குப் பிறகு தலைவனை அடைய துடிக்கிறாளோ, அதே போல தலைவியைக் களவிற்கு உட்படுத்த தலைவனும் தவியாய் தவிப்பதை சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளன. அதில்,

**"நயனும் நண்பும் நாணு நன்கு உடைமையும்**
**பயனும் பண்பும் பாடு அறிந்து ஒழுகலும்**
**நும்மினும் அறிகுவென்மன்னே கம்மென**
**எதிர்த்த தித்தி ஏர் இள வன முலை**
**விதிர்த்து விட்டன்ன அந் நுண் சுணங்கின்**
**ஐம் பால் வகுத்த கூந்தல் செம் பொறித்**
**திரு நுதல் பொலிந்த தேம் பாய் ஓதி**
**முது நீர் இலஞ்சிப் பூத்த குவளை**
**எதிர் மலர்ப் பிணையல் அன்ன இவள்**
**அரி மதர் மழைக் கண் காணா ஊங்கே"**[5]

இப்பாடல் தலைவனின் நிலையை எடுத்தியம்புகிறது. தலைவனின் களவு உறவினாலே அவனது சிறந்த பண்பு நலன்கள் எல்லாம் இழந்து நின்றதனைக் கண்டு பாங்கன் பழித்துக் கூற தலைவன் அதற்குப் பதிலுரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. அதாவது, வயிற்றின் மேல் தோன்றிய தேமலையும் எழுச்சி உடைய இளமையான அழகிய மார்பின்மேல் அள்ளித் தெளித்தாற் போன்ற அழகிய நுண்ணிய தேமலையும், அழகிய நெற்றியின் மேல் பொலிந்த ஐந்து விதமாக வகை செய்யப் பெற்ற கூந்தலையும் உடையவள் இத்தலைவி. இவளுடைய கண்கள் சிறந்த நீர்நிலையில் பூத்த குவளை மலர்களின் பிணையல் போன்று செவ்வரியோடு காண்போரை ஈர்க்கும் விதமாய் விளங்கும். அக்கண்களை நான் காணும் முன்பு என்னிடமும் பிறரிடமும் நெருங்கிப்

பழகும் உறவும், சுற்றம் தழுவலும் நட்பும் நாணும் நன்கு உடைமையும் பிறர்க்கு உதவும் பயன் அறிதலும் நல்ல முறையான வழியில் செல்லும் பண்பும் உலக நடை அறிந்து ஒழுகும் தன்மையும் உன்னை விட போற்றப்படுவதாயிருந்தன. ஆனால் இப்போது இவள் கண்களைக் கண்டபின்னர் அவை யாவும் இல்லையென்றாயின. இந்நிலையைக் கருதுவதால் என்ன பயன்? என்று தன் நிலையை எடுத்தியம்புகிறான் தலைவன். இதனால் தலைவனும் தலைவியை அடைய துயருற்றமை விளங்குகின்றது.

மற்றுமொரு பாடலில் தலைவன், தலைவியைப் பெறாமையால் தவிக்கிறான். அப்போது பாங்கன், தலைவனது களவு பொருத்தமற்றது எனப் பல காரணங்களைக் கூறினாலும், அதை தலைவன் மறுத்துத் தன் காதற்பெருக்கினை நயமாக எடுத்துரைக்கிறான். அதனை,

**“ஆனா நோயோடு அழி படர்க் கலங்கி**
**காமம் கைம்மிக கையறு துயரம்**
**காணவும் நல்காய் ஆயின் பாணர்**
**.......................................................**
**அகல் இலைக் காந்தள் அலங்கு குலைப் பாய்ந்து**
**பறவை இழைத்த பல் கண் இறாஅல்**
**தேனுடை நெடு வரை தெய்வம் எழுதிய**
**வினை மாண் பாவை அன்னோள்**
**கொலை சூழ்ந்தனளால் நோகோ யானே”**[6]

இப்பாடல் வரிகளால் அறியலாம். மிகுதியான தேனடைகள் உள்ள அம்மலையில் தெய்வத்தால் செய்து வைத்த சிறப்புடைய பாவை போன்ற அத்தலைவி என்னை வருத்தும் வண்ணம் ஆராய்ந்து அறிந்தனள். அப்பெண் செய்த சூழ்ச்சியில் சிக்கி இன்னும் உயிர் நீங்காது அடங்காத நோயுடன் துன்பம் மிகுதியாகவும் அன்பு மிகுதியாகவும் அளவு கடந்து பெருகச் செயலாற்ற இயலாது வருந்துகின்றேன். இந்த வருத்தத்தை நீ கண்ணால் கண்டும் அவருடன் என்னைக் கூட்டுவிக்கும் முயற்சியைச் செய்யாது விடின், அது உன்னால்

வந்ததன்று என் ஊழ்வினையால் வந்தது என வருந்தினேன், எனத் தலைவன் கூறுகிறான். இப்பாடல் மூலம் அவனது காதல் துயரம் வெளிப்படுகிறது. இங்கே **“ஒத்த-ஒவ்வாத காமங்கள் என ஆண் பெண் பாலியலில் நன்மை-தீமை என்ற மதிப்பீடுகள் சார்த்தப்பட்டு, ஒத்த காமம் உயர்ந்தது; ஒவ்வாக் காமம் தாழ்ந்தது எனப் பாகுபாடான வரிசை முறை ஏற்படுத்தப்படுவதைக் காணலாம். இதில், ஒவ்வாக் காமம் என்பது பெண்ணுக்குரியதாகவன்றி, ஆணுக்கு ஏற்படுவதாகத் தொல்காப்பியம் முடிவு செய்திருப்பதை அனுமானிக்கலாம்”**[7] என்பர். இந்நிலையில் பாங்கன் தலைவனிடம் உம்முடைய காதல் பொருத்த மற்றது எனப் பல காரணங்களைக் கற்பிப்பதும் பொருளாதார ஏற்றத்தாழ்வின் வேறுபாடாகயிருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது.

**புன்னகையும் துயரமும்**

தலைவன் தலைவியைக் கண்டு காதல் கொள்கிறான். அவளது குறுநகையைக் கண்டு மகிழ்ந்தவன் இன்று அவளைச் சேரமுடியவில்லை; இரவுக் குறியிற் காண முடியவில்லை; அவள் அங்கே இருக்கிறாள், நாமோ வினை வயிற் பொருட்டு இங்கே இருக்கிறோம் என மூன்று சூழலிலும் தலைவியை எண்ணி துயருற்றதை இப்பாடல் எடுத்தியம்புகிறது. இதனை,

**“நோ இனி வாழிய நெஞ்சே**

**..................................................................**

**காமர் பணைத் தோள் நலம் வீறு எய்திய**

**வலை மான் மழைக் கண் குறுமகள்**

**சில் மொழித் துவர் வாய் நகைக்கு மகிழ்ந்தோயே”**[8]

இப்பாடலால் அறிமுடிகின்றது. அதாவது, நெஞ்சமே! தலைவியின் தோள்கள் அணுகுதற்கு அரியன. அவளுடைய பருத்த தோள்கள் விருப்பத்தை உண்டாக்குவன. மான் போன்ற குளிர்ச்சி உடைய கண்ணையும், சில சொற்களையும் மெல்லிய புன்னகையும், உடையவள். அவள் புன்னகைக்கு நீ மகிழ்ந்தாய் ஆதலின் அவள் கிடைக்கப் பெறாத நிலையில் நீ துன்புறுகின்றாய். அத்துன்பத்துடன் நீ நீண்டகாலம்

வாழ்வாயாக, எனக் கூறுவதன் வாயிலாகத் தெரியவருகின்றது. அதாவது அவளை நெஞ்சமே உன்னால் மறக்க இயலாது. அவளை நினைந்து வருந்தியே அழிவாயாக எனத் தன் நெஞ்சோடு கூறுகின்றான் தலைவன்.

**தலைவியின் அச்சமும் தலைவனின் வீரமும்**

இரவுக்குறியில் தலைவியைச் சந்திக்க தலைவன் வந்தொழுகிறான். அவன் வரும் வழியையும், நேரக் கூடிய ஆபத்துகளையும் எண்ணித் தலைவி பயப்படுகிறாள். அதற்குத் தலைவன் அஞ்சாதே, அதுவே எனக்குப் பாதுகாப்பான வழியாகும் என்று கூறி அவளைத் தெளிவிக்கிறான். அதனை,

**“குருதி வேட்கை உரு கெழு வய மான்**
**வலி மிகு முன்பின் மழ களிறு பார்க்கும்**
**மரம் பயில் சோலை மலிய, பூழியர்**
**உருவத் துருவின் நாள் மேயல் ஆரும்**
**மாரி எண்கின் மலைச் சுர நீள் இடை**
**நீ நயந்து வருதல் எவன் எனப் பல புலந்து**
**அழுதனை உறையும் அம் மா அரிவை**
**பயம் கெழு பலவின் கொல்லிக் குட வரைப்**
**பூதம் புணர்த்த புதிது இயல் பாவை**
**விரி கதிர் இள வெயில் தோன்றி அன்ன நின்**
**ஆய் நலம் உள்ளி வரின் எமக்கு**
**ஏமம் ஆகும் மலைமுதல் ஆறே”**[9]

எனும் இப்பாடல் மூலம் அறியலாம். அதாவது, குருதியை உண்ணுவதில் விருப்பம் கொண்ட வலிமை மிக்க புலி தன் எதிரே வரும் இளமை வாய்ந்த களிற்றினை எதிர் பார்த்திருக்கும். அத்தகைய மரங்கள் பொருந்திய சோலை முழுவதும் பூழியருடைய நல்ல நிறத்தைக் கொண்ட ஆட்டு மந்தை போன்ற மழைக்காலத்து வைகறைப் பொழுதில் மேய்கின்ற கரடிகளை உடைய நீண்ட மலை வழியில் நீ என்னை விரும்பி வருவது எதற்கு? வரவேண்டாம் என்னும் மனம் மாறுபட்டு

அழுது கலங்கும் மாமை நிறம் கொண்ட பெண்ணே! பயன் மிக்க பலா மரங்களை உடைய கொல்லி மலைப் பகுதியில் முன்பு தெய்வத்தால் வடிவமைத்து வைக்கப்பெற்ற பாவையானது விரிந்து பரவும் சூடிய வெயிலில் தோன்றி நிற்பதைப் போன்ற உன் அழகினைக் கருதி வருவேன். அவ்வாறு வரும்போது உன் கண்ணில் இருந்து பரவும் ஒளி இருளைப் போக்குவதாக எனக்குத் தோன்றும். அதுவே எனக்குப் பாதுகாப்பு உடையதாகும். அதனால் அழுவதைக் கைவிடுவாயாக, என்று அவளைத் தெளிவிக்கிறான். இதன் மூலம் தலைவியின் அச்சமும் தலைவனுடைய காதல் உள்ளமும் வீரமும் வெளிப்பட்டு நிற்பதைக் காணமுடிகிறது.

**திருமணத்திற்கு வலியுறுத்தல்**

தலைவன் வரைவு நீட்டிக்கும் போது தலைவியின் நலன் கருதி தோழி வரைவு கடாதலை மேற்கொள்கிறாள். இதைப் பற்றி “களவு நிலையில் பாலியல் தொடர்பு தொக்கு நிற்கிறது. அதன் காரணமாகவே தோழி, தலைவி இருவருமே வரைவு கடாதல் பற்றி ஆர்வம் காட்டுவார்கள்”[10] என்பார் கா.சிவத்தம்பி. ஆனாலும் அதனைத் தாண்டி தான் விரும்பியவனைக் கைப்பிடிக்கவே இத்துறைப் பெரிதாகப் பயன்பட்டுள்ளது எனலாம். இங்கே, “களவு நிலையில் தலைவன் வரைவிடை வைத்துப் பொருளுக்காகப் பிரியும் நிலையிலும், தலைவனைச் சந்திக்க வரும் நிலையிலும் இன்னாச் சூழலிலும் திருமணத்தையோ. உடன் போக்கையோ மேற்கொள்ளும் வரை அவனுக்காகவே காத்திருக்கிறாள். காதலன் பொருளுக்காகப் பிரியும் நிலையிலும், காதலுக்கு இடையூறு நேரும் சூழலிலும் அவனுக்காகக் காத்திருக்கும் நிலை காணப்படுகிறதே தவிரப் புது உறவை உருவாக்கிக் கொண்ட நிலை இல்லை”[11] எனும் கருத்தும் ஈண்டு நோக்கத்தக்கதாகும். இங்கே,

**“நன் மலை நாட பண்பு எனப் படுமோ**
**நின் நயந்து உறைவி இன் உயிர் உள்ளாய்**
**அணங்குடை அரவின் ஆர் இருள் நடு நாள்**

**மை படு சிறு நெறி எ.்.கு துணை ஆக**

**ஆரம் கமழும் மார்பினை**

**சாரற் சிறுகுடி ஈங்கு நீ வரலே”**[12]

இப்பாடல் இரவுக்குறியைத் தலைவி மறுத்தமைப் பற்றி கூறுகிறது. நல்ல மலைக்குத் தலைவனே! உன்னை விரும்பி வாழுகின்ற இத்தலைவியின் உயிர் எய்தும் துன்பத்தை நீ நினைக்கவில்லை. நீ வருந்துகின்ற இயல்புடைய பாம்புகள் மிகுதியாக இருக்கும் நள்ளிரவுப் பொழுதில் மயக்கம் தரும் சிறிய வழியில் உன் கை வேலை ஏந்தி அதனைத் துணையாகக் கொண்டு சந்தனம் பூசப்பெற்ற மணம் கமழ்கின்ற மார்பினை உடையவனாய் மலைச்சாரலில் உள்ள சிறுகுடிக்கு நீ தனியே வருதல் பண்பாகுமா? அதனால் இனி இங்கு இரவில் வராதே. எனத் தோழி தலைவனிடம் கூறுகிறாள். இதன் மூலம் தலைவனுக்குத் துன்பம் நேரக்கூடாது எனும் தலைவியின் அன்பும், விரைவில் இவ்களவொழுக்கத்தை விட்டு கற்பொழுக்கத்திற்கு மாறுதல் வேண்டும். திருமணம் செய்தல் வேண்டும்; என்னும் எண்ணக் கிடக்கையும் வெளிப்படுகிறது.

மேலும் குறுந்தொகை நூல் தலைவியொருத்தியும் வரைவுக்குத் தலைவனை அறிவுறுத்துகிறாள். அதில்,

**“அம்ம வாழி, தோழி! இன்று அவர்**

**வாரார் ஆயினோ நன்றே சாரல்**

**சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்து**

**இரவு அரி வாரின், தொண்டகச் சிறுபறை**

**பானாள் யாமத்தும் கறங்கும்,**

**யாமம் காவலர் அவியா மாறே.”**[13]

எனத் தோழி தலைவன் சிறைப்புறத்தானாகக் கேட்கும்படி தலைவியிடம் கூறுகிறாள். தோழி வாழ்க! மலைச்சாரலில் உள்ள சிறு தினை விளைந்த அகன்ற இடத்தையுடைய பெரிய தினைப் புனத்தில் இரவுக் காலத்திலும் தினையை அரிந்தனர், அப்போது இரவில் தொண்டகச் சிறுபறையை நள்ளிரவிலும் ஒலிக்கச் செய்தும், இரவுக் காவலாளிகள்

உறங்காமலும் காவல் செய்கின்றனர். எனவே நம் தலைவர் இரவுக் குறிக்கண் வராமல் இருப்பது நல்லதாகுமென எச்சரிக்கை செய்கிறாள். அதாவது இவ்வாறே மறைந்து மறைந்து களவொழுக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது எவ்வளவு காலம். அதனை விடுத்துத் திருமணம் புரிந்து இல்லற வாழ்வில் நுழையும் பொருட்டுத் தோழி இரவுக்குறி மறுப்பதைக் காணமுடிகிறது.

தலைவியை இல்லற வாழ்வில் இணைக்கும் பொருட்டுத் தலைவனிடம் வரைவு பற்றிப் பேச வேண்டும் எனத் தோழி தலைவியிடம் நேரடியாகக் கூறுவதையும் காணமுடிகிறது. இதனை,

**"அகமும்**

**நடுநாள் வருதல் அஞ்சுதும் யாம் என,**

**வரைந்துவரல் இரக்குவம் ஆயின், நம்மலை**

**நன்நாள் வதுவை கூடி, நீடு இன்று**

**நம்மொடு செல்வர்மன் தோழி! மெல்ல"**[14]

இப்பாடல் வரிகளால் அறியமுடிகிறது. அதாவது, தோழியே கடுமையான கரடிகள் இயங்கும் நள்ளிரவுப் பொழுதில் தலைவன் இரவுக்குறி நேர்ந்து நம்மிடத்து வருவதை நினைத்து நாம் அஞ்சுகின்றோம். நம் அச்சத்தைத் தலைவனிடம் கூறி மணம் புரிந்துகொள்ள வேண்டினால், மறுத்து உரைக்க மாட்டான். காலம் தாழ்த்தாது நன்னாளில் நம்மை மணம் புரிந்து கொள்வான்.

குறவர் விடியற் காலத்தில் எழுமாறு களிறு முழங்கி எழுப்பும் பெரியமலை நாட்டிடத்து நம்மை உடன் கொண்டு மணம் புரிந்துகொண்ட தலைவன் மெல்லச் செல்வார் வருந்தாதே எனத் தோழி தலைவியிடம் கூறுவதைக் காணமுடிகிறது.

**"இனிதின் இனிது தலைப்படும் என்பது**

**இதுகொல் வாழி தோழி காதலர்**

**வரு குறி செய்த வரையகச் சிறு தினைச்**

**செவ் வாய்ப் பாசினம் கடீஇயர் கொடிச்சி**

**அவ் வாய்த் தட்டையடு அவணை ஆக என**

**ஏயள்மன் யாயும் நுந்தை வாழியர்**

**அம் மா மேனி நிரை தொடிக் குறுமகள்**

**செல்லாயோ நின் முள் எயிறு உண்கு என**

**மெல்லிய இனிய கூறலின் யான் அ·து**

**ஒல்லேன் போல உரையாடுவலே"[15]**

தோழி வாழ்க! நம் காதலர் பகற்குறிக்கண் வருகின்ற இடத்தை உடையது நம் தினைப்புனம். அங்கே கதிர்களைக் கொய்ய வரும் கிளிக்கூட்டத்தினை ஒட்டக் கருதிய அன்னை அவ்வெண்ணத்தால் என்னை நோக்கிக் கொடிச்சி நீ, கிளி கடிகருவியாகிய தட்டையை எடுத்துக் கொண்டு தினைப்புனம் செல்க என்று கூறிய உன் தந்தையும் வாழ்வாராக அவரும் என்னை அழைத்து மாந்தளிர் போன்ற மேனியை உடையவளே! நீ புனத்திற்குச் செல்லவில்லையா? செல்க உன் முள் எயிற்றின் முத்தம் பெறுவேன். என்று இனிய சொற்களுடன் ஏவினார். அவர்கள் இருவரும் இவ்வாறு கூறினும் காவலுக்கு உடன்படாதவள் போலச் சிலமுறை மறுத்துக் கூறினேன். இருப்பினும் தினைப்புனத்தில் காதலனைக் கூடுதல் நல்ல அறிகுறிதானே. இச்செயல் இனிமையிலும் இனியதாய் அமைகிறதல்லவா? என்று கூறி காதலனைச் சந்திப்பதிலே தனிமகிழ்ச்சியுண்டு என்பதை வெளிப்படுத்துகிறாள்.

### ஆயத்தோடு வாழ விரும்பல்

தலைவியை ஆயத்தோடு விழாவில் பார்க்கிறான் தலைவன். அவன் தலைவியை மட்டும் கண்டு வணங்காமல், அவளோடு உள்ள அவளது பெற்றோர்களையும் உறவினரையும் கண்டு மனதுள் வணங்கிப் பேருவுவகைக் கொள்கிறான். இதனை,

**"அல்குபடர் உழந்த அரிமதர் மழைக்கண்,**

**பல்பூம் பகைத்தழை நுடங்கும் அல்குல்,**

**திருமனப் புரையும் மேனி மடவோள்**

**யார்மண் கொல்இவள்? தந்தை வாழியர்!**

**துயரம்மடறீ இயினள் எம்மே அகல்வயல்**

**அரிவார் அரிந்தும் தருவனார் பெற்றும்**

**தண்னேறு தாஅய மதனுடை நோன்தாள்**

**கண்மோல் நெய்தல் போர்வில் பூக்கும்**

**திண்தெர்ப் பொறையன் தொண்டி**

**தன்திறம் பெறுக இவள் ஈன்ற தாயே!”[16]**

இப்பாடலால் உய்த்துணரமுடிகிறது. மிகுந்த துன்பம் அடைந்த செவ்வரி படர்ந்த குளிர்ச்சி உடைய கண்கள், பல பூக்களால் மாறுபட்ட வண்ணங்களைக் கொண்ட தழை ஆடையை அணிந்துள்ள இடை, நீலமணி போன்ற நிறம் இத்தகைய இப்பெண் யார் மகளோ? இவள் தந்தை சிறப்பாக வாழ்க! அகன்ற வயல்களில் அரியப்பட்ட நெல் கதிர்களை உடைய பெரிய நெற்போரில் மலர்ந்த நெய்தல் மலரைப் போன்ற கண்களை உடையவள். இவளுடைய அழகையும் வளமையையும் பார்க்கும் போது திண்மையான தேரினை உடைய சேர அரசனின் தோண்டி நகரைப் போன்ற சிறப்பினை உடையவள். இவள் தாயும் அச்சிறப்பினைப் பெறுவாளாக, என்று அவன் வாழ்த்துவதன் மூலம் உணரமுடிகிறது.

**உணர்ந்து கொள்ளாமையும் மனித உறவும்**

தலைவன் தலைவி உறவில் நல்லதொரு புரிந்துகொள்ளும் ஆற்றல் வேண்டும். ஒருவரையொருவர் புரிந்துகொண்டால் மட்டுமே உறவு நிலைத்து நீடித்ததாய் இருக்கும். ஆனால் இங்கே ஒரு தலைவனை தலைவி சரியாகப் புரிந்து கொள்ளாமையால், அறிந்துகொள்ளாமையால் இரங்கத்தக்க நிலை உண்டாகிறது. இதனை,

**“படு நீர்ச் சிலம்பில் கலித்த வாழைக்**

**கொடு மடல் ஈன்ற கூர் வாய்க் குவி முகை**

**ஒள் இழை மகளிர் இலங்கு வளைத் தொடூஉம்**

**மெல் விரல் மோசை போல, காந்தள்**

**வள் இதழ் தோயும் வான் தோய் வெற்ப**

**நன்றி விளைவும் தீதொடு வரும் என**

**அன்று நற்கு அறிந்தனள் ஆயின் குன்றத்துத்**

**தேம் முதிர் சிலம்பில் தடைஇய**

**வேய் மருள் பணைத் தோள் அழியலள் மன்னே"[17]**

இப்பாடல் உணர்த்துகிறது. அதாவது ஆழமான சுனையில் நீரையுடைய மலையில் முளைத்த வாழையின் வளைந்த மடலில் இருந்து தோன்றிய கூர்மையான நுனியைக் கொண்ட குவிந்த மொட்டு அணிகலன்களைப் பெண்களின் விரல் அணி போலச் செங்காந்தளின் வளமை இதழின் தோயும், வானில் நீண்டு பொருந்திய மலையை உடைய தலைவனே! எங்கள் தலைவி ஒரு காலத்தில் நன்றாக முடிகின்ற செயலும் மற்றொரு காலத்தில் தீதாக வரும் என்று உன்னோடு நிகழ்ந்த இயற்கை இணைவை முதற் கூட்டத்தின் கண் நன்றாக அறிந்திருப்பின், குன்றிடத்தே தேன்முற்றிய பக்கமலையில் இக்காலத்து நெகிழுமாறு ஆகமாட்டார். நடந்து முடிந்த பின் அதனைக் கூறுவதால் பயன் என்ன? எனத் தோழி கூறுகிறாள். இதன் மூலம் அன்று உறவு நினைத்தவர்கள் கால ஓட்டத்தில் உறவற்றவர்களாக மாறும் வாழ்வின் தத்துவ நிலையை உணர்த்துவதாக இப்பாடல் அமைந்துள்ளமை மனம் கொள்ளத்தக்க நிலையில் உள்ளது.

**மணமுடிக்க நீடித்த தலைவனைக் கடிந்துரைத்தல்**

தலைவன் நீடித்த களவு உறவில் ஈடுபடுகிறான். இனிய சொற்களைப் பேசுபவனாகவும் விளங்கியிருக்க கூறிய சொற்களில் வாய்மை இல்லை எனத் தோழி கடிந்துரைப்பதைக் காணமுடிகிறது. இதனை,

**"..............................................................**

**நின்மார்பு அணங்கிய செல்லல் அருநோய்**

**யார்க்கு நொந்து உரைக்கோ யானே பல்நாள்**

**காமர் நனிசொல் சொல்லி,**

**ஏமம் என்று அருளாய், நீமயங் கினையே"[18]**

இவ்வரிகளால் அறியமுடிகிறது. மலைநாடனே! உன் மார்பு தந்த நீங்குவதற்கரிய அன்பின் மிகுதியை நான் யாரிடம் சொல்லி வருந்த இயலும். நீ பல நாட்கள் விரும்பத் தக்க இனிய சொற்கள் பல கூறினாய். ஆனால் நீயே கூறிய வழி நடத்தல் நல்லது என்று செய்யாமல் தடுமாற்றத்தோடு வாழ்கிறாய் என்று இடித்துரைப்பதையும் காணமுடிகிறது.

**நனிநாகரிகம் வேண்டும்**

சொன்ன சொல் மாறாது, நல்ல நட்பை மதித்து அந்த நட்புக்காகத் தனது உயிரையும் கொடுப்பதே நனிநாகரிகம். அதனால் தன்னுடைய நிலையில் உயர்ந்து உறவை மதித்து வாழ வேண்டும். நட்புறவினைப் பேணி நனிநாகரிகத் தோடு வாழ்தல் வேண்டும் எனத் தோழி கூறி களவொழுக்கத்தில் தலைவனையே தன்னுடைய உறவாக எண்ணி வாழ்ந்திருக்கும் தலைவியை மணந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவதை,

**"புதல்வன் ஈன்ற பூங்கண் மடந்தை**
**முலைவாய் உறுக்கும் கைபோல், காந்தட்**
**குலைவாய் தோயும் கொழுமடல் வாழை**
**அம்மடல் பட்ட அருவித் தீம்நீர்**
**செம்முக மந்தி ஆரும் நாட!**
**முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்,**
**நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்**
**அம்சில் ஓதிஎன் தோழி தோள் துயில்**
**நெஞ்சின் இன்புறாய் ஆயினும், அதுநீ**
**என்கண் ஓடி அளிமதி**
**நின்கண் அல்லது பிறிதுயாதும் இலளே!"[19]**

இப்பாடல் உணர்த்துகிறது. அதாவது, புதல்வனைப் பெற்றெடுத்த நீலமலர் போன்ற கண்களை உடைய பெண் தன் கொங்கையைத் தன் கையால் பிடித்துப் புதல்வன் வாயில் வைத்துப் பால் ஊட்டுவாள். அப்போது அக்குழந்தை பாலைப் பருகுவது போலக் காந்தள்

பூங்கொத்துக்களோடு பொருந்திய வாழை மடலின் நீரைச் சிவந்த முகமுள்ள பெண் குரங்கு பருகி நிற்கும். அத்தகைய மலையை உடைய நாடனே! நட்பைக் கொண்ட நல்ல கொண்ணோட்டம் உடையார்தம் முன்பு நஞ்சைக் கலந்து கொடுத்து உண்ணச் சொன்னாலும் அவர்கள் அதை உண்டு அன்புடையோர் என்பதை மெய்ப்பிப்பர். அழகிய கூந்தலை உடைய என் தோழியின் தோளில் துயில்வதை உன் உள்ளத்தில் இன்பமாகக் கொள்ளாவிட்டாலும் நீ என்பால் உள்ள அன்பின் காரணமாக இவளுக்கு அருள் செய்தல் வேண்டும். இவள் உனது அன்பைத்தவிர வேறு யாதும் இல்லாதவள் எனக் கூறுகிறாள். இப்பாடலில் தலைவிக்குத் தோழி ஒரு தாய்மை நிலையில் நின்று செயல்படுவதும் போற்றத் தக்கதாயுள்ளது.

**தலைவியின் கவலை**

தலைவியின் காதல் பெற்றோருக்குத் தெரிந்து அவளை வீட்டில் இற்செறித்து விட்டனர். ஆதலால் அவள் கலக்கமுறுகிறாள். தலைவன் நமக்கு மீண்டும் கிடைப்பானா? அவனோடு சேர்ந்து வாழ முடியுமா எனும் கவலைத் தலைவிக்கு மேலோங்குகிறது. இதனை,

**“நிலவும் மறைந்தன்று இருளும் பட்டன்று**
**ஓவத்து அன்ன இடனுடை வரைப்பின்**
**பாவை அன்ன நிற் புறங்காக்கும்**
**சிறந்த செல்வத்து அன்னையும் துஞ்சினள்**
**கெடுத்துப்படு நன் கலம் எடுத்துக் கொண்டாங்கு**
**நன் மார்பு அடைய முயங்கி மென்மெல**
**கண்டனம் வருகம் சென்மோ தோழி**
**கீழும் மேலும் காப்போர் நீத்த**
**வறுந் தலைப் பெருங் களிறு போல**
**தமியன் வந்தோன் பனியலை நீயே”[20]**

இப்பாடல் உணர்த்தி நிற்கிறது. தோழியே நிலவும் மறைந்து, இருளும் வந்தது. ஓவியத்தில் அமைந்தது போன்ற அகன்ற வீட்டின் எல்லையில் பாவையைப் போன்று விளங்கும் உன்னைப் பாதுகாக்கும் மேம்பாடுடைய

தாயும் தூங்கினாள். யானையைக் கட்டுத்தறியில் கட்டி வைத்துக் காப்பவரும் அதன் மீது ஏறிச் செலுத்துபவரும் நீங்கிய வறுமையான தலையை உடைய பெரிய களிற்றைப் போன்றவருமாகிய தலைவன் வந்தான். அவன் பனியலைத்தலால் கலக்க முற்றான். அவன் நிலையைக் கண்டு கையிலிருந்து கீழே விழுந்து காணாமல் போன நல்ல அணிகலன்களை மீண்டும் கண்டு எடுத்ததைப் போல நம்மை வீட்டில் வைத்ததனால் நம்மை அடையப் பெறாமல் இருந்த தலைவனுடைய நல்ல மார்பைத் தழுவி மகிழ்ந்து வரும் சூழ்நிலை அமையுமோ? கூறுவாயாக எனக் கூறுவதைக் காணமுடிகிறது.

**தலைவியின் பசலையும் மருந்தும்**

தலைவியோடு பழகிய தலைவன் அவளைக் காண வராததால் அவள் மேனி வாடி பசலைப் படர்ந்து காணப்படுகிறாள். அவளுடைய இந்த நோயைத் தீர்க்க தோழி மருந்து தேடிப் போகிறாள். அந்த மருந்து தலைவனே அவனிடமே அவள் போய்,

**“விளியர், புறக்குடி ஆர்க்கும் நாட!**
**பழகிய பகையும் பிரிவுஇன் னாதே;**
**முகைஏர் இலங்கு எயிற்று இன்நகை மடந்தை**
**சுடர்புரை திருநுதல் பசப்ப,**
**தொடர்புயாங்கு விட்டனை? நோகோ யானே!”**[21]

இவ்வாறு கேட்கிறாள். மலைநாடனே! பழகி இருந்து பின் பகைவரானவர் தம்மை விட்டுப் பிரியினும் முன்பு நட்புக் கொண்டவர்க்கு இது துன்பத்தைத் தரும் அல்லவா? அங்ஙனமாக முல்லை அரும்பினை ஒத்த பற்களையும் நல்ல நகைத்தகையும் உடைய தலைவியின் ஒளிபொருந்திய அழகிய நெற்றியில் பசலை ஏற்பட, நீ அவள் தொடர்பை எதன் காரணமாகக் கைவிட்டனை? இதனைக் கருதியே நான் வருந்தினேன் எனக் கூறி அவர்களை மீண்டும் காதல் வாழ்விலும், இல்லறவாழ்விலும் இணைய வழிகோளுகிறாள்.

**அறத்தொடு நிற்றல்**

தலைவிக்கு வெறியாட்டு நிகழ்த்தி துயரினை ஏற்படுத்தக் கூடிய நிலையிலும், வேறு ஒருவருக்கு மணம் பேசும் நிலையிலும், காலம் கடக்கும் வேளையிலும் தோழி செவிலித் தாயிடம் அறத்தொடு நிற்பாள். அவ்வறத்தோடு நிற்றலுக்கான சூழலைப் பெரும்பாலும் வேலன் வெறியாட்டு உருவாக்கித்தருகிறது. அவ்வேலன் முருகன் ஆவான். அவனைப் பற்றி அறிதல் நலம்.

**குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலில் முருக வழிபாடு**

மனித சமூகம் தோன்றிய காலந்தொட்டே வழிபாடு எனும் மரபு மக்களால் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. குறிப்பாகச் சங்ககால மக்கள் தாம் வாழ்ந்துவந்த நிலங்களுக்கு ஏற்பத் தெய்வங்களை வணங்கி வந்தனர். குறிஞ்சிநில மக்கள் முருகனையும், முல்லைநில மக்கள் மாயோன் எனப்படுகின்ற திருமாலையும் மருதநில மக்கள் இந்திரனையும், நெய்தல்நில மக்கள் வருணனையும், பாலைநில மக்கள் கொற்றவையையும் வழிபட்டுவந்த செய்தியைத் தமிழ் இலக்கண நூல்களும், இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. இதில் குறிஞ்சிநிலத்தில் காணப்படுகின்ற முருகவழிபாட்டை மக்கள் எவ்வாறு தம் வாழ்வியலில் மேற்கொண்டிருந்தனர் என்பதைச் சங்கக்குறிஞ்சித்திணைப் பாடல்களைக் கொண்டு அதாவது குறுந்தொகை, நற்றிணைப் பாடல்களை மட்டும் முன்வைத்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**முருகனின் தோற்றப் பொழிவு**

முருகனது தோற்றப்பொழிவை விரிவாக விவரிக்கும் பொருட்டு குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலானது அமைந்துள்ளது. அதாவது,

> **“தாமரை புரையுங் காமர் சேவடி**
> **பவழத்து அன்ன மேனி திகழ்ஒளிக்**
> **குன்றி ஏய்க்கும் உடுக்கை குன்றின்**
> **நெஞ்சு பக எறிந்த அம்சுடர் நெடுவேல்**

**சேவல்அம் கொடியோன் காப்ப**

**ஏம வைகல் எய்தின்றால் உலகே"**[22]

என்று முருகக் கடவுளின் அழகை உணர்த்துகின்றார் பாரதம் பாடிய பெருந்தேவனார். இதிலிருந்து முருகன் குன்றக் கடவுள் என்று அறியப்படுகின்றான். மலையும் மலைசார்ந்த பகுதியுமாகிய குறிஞ்சிநிலத்தில் வாழும் மலைவாழ் மக்களின் கடவுளாக முருகன் விளங்கியதை அறியமுடிகின்றது.

**சங்க இலக்கியங்களில் முருகனின் வேறு பெயர்கள்**

சங்கப் பாடல்களான பாட்டும் தொகையுமாகிய பதினெட்டு இலக்கியங்களிலும் பெரும்பாலானவற்றில் முருகக் கடவுள் பற்றிப் பேசப்பட்டுள்ளது. சங்கப்பாடல்களில் முருகன் பலவிதமான பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளான். அதாவது, செவ்வேலான், செவ்வேள், முருகன், முருகு, குமரன், கந்தன், சேயோன், சேவலங்கொடியன், சேவலங்கொடியோன், சேவலோய், வேல்வல்லான், வேல்வலான், வேல, வேல், வேலன், வேலான், வேலோய், வேலோன் எனும் பெயர்களால் முருகன் எனும் தமிழ்க்கடவுள் பற்றிய பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

**காப்பியத்தில் முருகன்**

சங்க இலக்கியங்களில் அக, புற இலக்கியங்களில் முருகன் பற்றிக் குறிப்பிடப்படுவதோடு காப்பிய இலக்கியங்களிலும் முருகக் கடவுள் குறித்த செய்திகள் காணலாகின்றன. அருகதேவனைக் கடவுளாக வழிபடக்கூடிய சமணமதம் சார்ந்த தோலாமொழித்தேவர் தான் இயற்றிய சூளாமணி எனும் காப்பியத்தில் முருகன் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

**முன்றில் எங்கும் முருகயர் பாணியும்**

**சென்று வீழ் அருவித் திரள் ஓசையும்**

**வென்றி வேழ முழக்கொடு கூடிவான்**

**ஒன்றி நின்றதிரும் ஒருபால் எலாம்"**[23]

என வீடுகளின் முற்றத்தில் முருகவழிபாடு நடைபெறும் போது எழுகின்ற ஓசை பற்றி இப்பாடல் விளக்குகின்றது. இது காப்பியங்கள் தோன்றிய பிற்காலங்களில் மலைகளில் வழிபடப்பட்ட முருகக் கடவுளை வீடுகளிலும் வைத்து மக்கள் வழிபட்ட நிலையினைப் புலப்படுத்துவதாக உள்ளது.

**சங்க இலக்கியங்களில் முருகன்**

சங்க அக இலக்கியங்களில் குறிப்பாகக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் முருகன் பற்றிய பதிவுகள் இடம்பெற்றுள்ளன. குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை முதலிய அகவிலக்கியங்கள் முருக வழிபாடு குறித்துக் கூறுகின்றன. இந்த முருகவழிபாடு வேலன்வெறியாட்டு எனும் பெயரில் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. **“அணங்கு, சூர் போன்ற தெய்வங்களைப் போன்று, முருகனும் திருமணம் ஆகாத பெண்களைத் தீண்டி வருத்தும் தெய்வமாகக் குறிக்கப் பெறுகின்றான்.முருகனால் தீண்டப்பட்ட பெண்களின் பெற்றோர், முருகனின் பூசாரியான வேலனை அழைத்து முருகனைச் சாந்தி செய்யும் விழா எடுப்பர். இவ்விழா ‘வெறியாடல்’ எனப்படுகின்றது”[24] (தமிழர் சிந்தனைமரபு, 2008. ப.70)** என்று வெறியாடல் எனும் முருகவழிபாடு குறித்துச் சுட்டுகின்றார் அ.பாண்டுரங்கன். இதிலிருந்து, முருகன் பெண்களுக்குப் பசலை எனும் நோயினை உண்டாக்கும் கடவுளாகச் சங்க காலத்தில் நம்பப்பட்ட செய்தியினை அறியமுடிகின்றது. இவ்விழா எடுக்கப்படுவதற்கு குறிஞ்சிநில மக்களின் நம்பிக்கை காரணமாக அமைகின்றது. உண்மையில் தலைவிக்குப் பசலைநோய் உண்டாக்குபவன் தலைவனே தவிர முருகன் அல்ல என்பதையும் சங்கப்பாடல்கள் வழி அறியலாம். தலைவியின் தாயும், செவிலியும், உறவினர்களும் தலைவி உற்ற நோய்க்குக் காரணம் முருகக் கடவுளே என நம்புவதால் வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்தப்படுகின்றது. தலைவிக்கான பசலை நோய் தோற்றம் பெறுகின்ற சூழலிலும், அதை தாய் அறிந்து கொள்ளும் சூழலிலுமே முருகக் கடவுள் பற்றிய வழிபாடு நிகழ்த்தப்படுவதை நாம் அறியமுடிகின்றது.

**குறுந்தொகையில் முருகன்**

**தோழிகூற்றில் முருகவழிபாடு**

குறுந்தொகையின் 362 ஆம் பாடல் தோழி அறத்தோடு நிற்குங் கூற்றில் அமைந்து முருகவழிபாட்டில் பொங்கல் வைத்து இளம் ஆட்டுக்குட்டியைப் பலிகொடுக்கும் வழிபாட்டு முறையைச் சுட்டுகின்றது.

**"முருகுஅயர்ந்து வந்த முதுவாய் வேல!**

**……………………………………..**

**பல்வேறு உருவின் சில்அவிழ் மடையொடு**

**சிறுமறி கொன்று, இவள் நறுநுதல் நீவி,**

**வணங்கினை கொடுத்தி ஆயின், அணங்கிய"[25]**

எனும் பாடலடிகளின்மூலம் வேலன் எனும் பூசாரி முருக வழிபாட்டில் மேற்கொண்ட சடங்கு முறைகளை அறியமுடிகின்றது. இங்கு, **"பலி கொடுத்தல், மலர் தூவுதல், தெய்வ ஆவேசமுற்று வேலன் வெறியாட்டு போன்ற சிறுதெய்வ வழிபாட்டு மரபுகளும் காணப்படுகின்றன"[26]** எனும் சு.வேங்கடராமனின் கருத்து ஒப்புநோக்கத்தக்கதாகிறது. அதாவது சோற்றையும், ஆட்டையும் முருகனுக்குப் பலியாகக் கொடுக்கும் வேலன் வெறியாட்டு எனும் வழிபாட்டு முறை சிறுதெய்வங்களுக்கான வழிபாட்டு முறையாகக் கருதப்படுகின்றது. ஆனால் இந்த வழிபாட்டுமுறை குறிஞ்சிநில மக்களிடையே பெருவழக்காக நிலைகொண்டு இருந்தமையைச் சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன. அதாவது, குறுந்தொகை 111 ஆம் பாடலும் தோழிகூற்றில் அமைந்து முருக வழிபாட்டை முன்வைக்கின்றது.

**"மென்தோள் நெகிழ்த்த செல்லல், வேலன்,**

**வென்றி நெடுவேள் என்னும்; அன்னையும்**

**அதுஎன உணரும் ஆயின்"[27]**

எனும் பாடலடிகள் வேலன் வெறியாட்டு குறித்துக் குறிப்பிடுவதை அறியமுடிகின்றது.

**தலைவிகூற்றில் முருகவழிபாடு**

தலைமக்களின் களவு வாழ்வில் முருகவழிபாடு என்பது தவறான புரிதலினாலேயே ஏற்படுகின்றது என்பதைக் குறிஞ்சித் திணைப் பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன.

**“வெறிஎன உணர்ந்த வேலன் நோய்மருந்து**
**அறியான் ஆகுதல் அன்னை காணிய ”[28]**

எனும் பாடலடிகளின்மூலம் தலைவியின் பசலை நோய்க்கு வெறியாட்டு நிகழ்த்துதலே சிறந்த மருந்து என முடிவெடுக்கும் முருகபூசாரியான வேலனின் முடிவு தவறானது எனத் தலைவி தோழியிடம் கூறுகின்றாள். தன் நோய்க்குச் சரியான மருந்து தலைவனே எனத் தலைவி மறைமுகமாக இங்குச் சுட்டுவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய களவுச் சூழலிலேயே முருகவழிபாடு நிகழ்வதைப் பல சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. இந்த வழிபாட்டு மரபு சங்ககால மக்களின் வாழ்வியலில் இன்றியமையாத நிலைப்பாடாக விளங்கியமையை அறியமுடிகின்றது.

**நற்றிணையில் முருகவழிபாடு**

நற்றிணையின் குறிஞ்சித்திணைப் பாடல்களின்மூலம் குறிஞ்சிநில மக்களின் முருகவழிபாட்டு வாழ்க்கையை அறியமுடிகின்றது. நற்றிணையின் 34 ஆம் பாடல் தோழி முருகக் கடவுளிடம் உரையாடுவதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**“கடவுட் கல்சுனை அடைஇறந்து அவிழ்ந்த**
**பறியாக் குவளை மலரொடு காந்தள்**
**குருதி ஒண்பூ உருகெழக் கட்டிப்**
**பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்**
**அருவி இன்இயத்து-ஆடும் நாடன்**
**மார்புதர வந்த படர்மலி அருநோய்**
**நின் அணங்கு அண்மை அறிந்தும், அண்ணாந்து**
**கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி**
**வேலன் வேண்ட, வெறிமனை வந்தோய்!**

**கடவுள் ஆயினும் ஆக;**

**மடவை மன்ற, வாழிய முருகே! ”**[29]

இப்பாடல் முழுக்க முழுக்க தோழி முருகக் கடவுளிடம் உரைப்பதாகவே அமைந்துள்ளது.இதில் இறைவழிபாட்டின் போது பயன்படுத்தப்படும் மலர்கள் பற்றிக் குறிப்பிடப்படுவதோடு களவுக்காதலில் தலைவிக்கு ஏற்படுகின்ற நோய்க்குக் காரணம் முருகன் அல்ல எனும் கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

**முருகனின் குடிப்பிறப்பு**

முருகன் எனும் குறிஞ்சிநிலக் கடவுளின் பிறப்பு குறித்த குறிப்புகளும் சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. அதாவது,

**“முருகு புணர்ந்து இயன்ற வள்ளி போல.......**

**.......................................................**

**கானவர் பெயர்க்குஞ் சிறுகுடி யானே”**[32]

எனும் தலைவன் கூற்றுப் பாடலடிகள் முருகனும் வள்ளியும் பிறந்து இணைந்த நிகழ்வினைச் சுட்டுவதோடு அவர்களது கானவர் குடிப்பிறப்பு பற்றியும் குறிப்பிடுகின்றன. மேலும்,

**“முருகுஉறழ் முன்பொடு கடுஞ்சினம் செருக்கிப்**

**பொருத யானை வெண்கோடு கடுப்ப”**[33]

எனும் பாடலடிகள் முருகக் கடவுள் பற்றிய குறிப்பை உவமையாகச் சுட்டுகின்றது. அதாவது முருகனின் வலிமை இங்கு யானையின் வலிமைக்கு உவமையாகச் சுட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இது பரத்தை கூற்றிலமைந்து அக்கால மக்களின் வாழ்வியலில் இடம்பெற்றிருந்த முருகக்கடவுள் குறித்த பதிவை முன்வைக்கின்றது. இதைப்போலவே நற்றிணையின்

**“மின்னு நிமிர்ந்தன்ன வேலன் வந்தென்”**[34]

**“அறியாது அயர்ந்த அன்னைக்கு வெறிஎன,**

**வேலின் உரைக்கும் என்ப.................”**[35]

**“நல்நுதல் பசந்த படர்மலி அருநோய்**

**அணங்கு எனஉணரக் கூறி, வேலன்**

**இன் இயம் கறங்கப் பாடிப்**

**பன்மலர் சிதறிப் பரவுறு பலிக்கே”**[36]

எனும் அடிகள் வேலன் வெறியாட்டு எனும் நிலையில் மேற்கொள்ளப்பட்ட முருகவழிபாட்டு முறைகளை வளக்குவனவாக உள்ளன.

இவ்வாறாகச் சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணலாகும் முருகவழிபாடு தலைமக்களது களவு வாழ்வின் ஒரு பகுதியாக நிகழ்த்தப்படுவதோடு தாயின் தவறான புரிதல் காரணமாகவும் நிகழ்த்தப்படுவதை அறியமுடிகின்றது. இந்த முருகன் எனும் குறிஞ்சிக் கடவுளை வேலன் வெறியாட்டு எனும் முறையில் குறிஞ்சிநில மக்கள் வழிபாடு செய்கின்றனர். இந்த வெறியாட்டு நிகழ்த்தப்படுவதற்கு முன் தலைவிக்கு நோய் ஏற்படக் காரணமாக இருப்பவன் முருகக்கடவுளே என்பதை அறிவதற்காக கழங்கு பார்க்கப்படுவதையும் சங்கப்பாடல்களின் மூலம் அறியலாம். முருகனின் தோற்றப்பொழிவினையும் அவனது கானவர் குடிப்பிறப்பையும் உணர்த்துவதாகச் சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. முருகவழிபாட்டை நடத்துவதற்காக வேலன் எனும் பெயர் கொண்ட பூசாரி இருந்தமையும் அறியப்படுகின்றது. இப்பூசாரி முருகனுக்குப் பலவித பூக்களைத் தூவி மலர்மாலை அணிவித்தும் சோறு, ஆட்டுக்குட்டி முதலியவற்றைப் பலியாகக் கொடுத்தும் வழிபாடு நடத்திய செய்தியை நற்றிணை மற்றும் குறுந்தொகையில் உள்ள குறிஞ்சித்திணைப் பாடல்களின்வழி அறியமுடிகின்றது. மேலும் சங்க இலக்கியத்தின்மூலம் மலைக்கடவுளாக அறியப்பட்ட முருகன் காப்பிய காலத்தில் வீட்டுக்கடவுளாக மாறிய செய்தியினையும் அறியமுடிகின்றது.

இங்கே,

**“இன்றுயாண் டையனோ தோழி! குன்றத்துப்**

**பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு,**

**கண் அகன் தூமணி, பெறூஉம் நாடன்,**

**அறிவுகாழ்க் கொள்ளும் அளவை, செறிதொடி!**

**எம்மில் வருகுவை நீ எனப்**

**பொம்மல் ஓதி நீவி யோனே?"**[37]

தோழி! குன்றில் பழைய குழியினைத் தோண்டிய வேட்டுவனுக்குக் கிழங்குடன் தூய மாணிக்கக் கல்லையும் பெறுகின்ற செல்வம் மிகுந்த மலைநாடன் கைக்குப் பொருத்தமான வளையலை அணிந்தவனே! நீ அறிவை முழுநிலையில் பெறும்போது என்னுடைய வீட்டிற்கு வருவாய் என்று கூறி அடர்ந்த கூந்தலைத் தடவிச் சென்ற அத்தலைவன் இப்போது எங்குள்ளானோ? என்று பிறர் பெண் பார்க்க வந்த வேளையிலே இவ்வாறு கூறுகிறாள். மேலும் வேலன் வெறியாட்டை நிறுத்தும் விதமாக தோழி அறத்தொடு நிற்றலையும் காணமுடிகிறது. இதனை,

**"சுனைப் பூக் குற்றும் தொடலை தைஇயும்**

**மலைச் செங் காந்தட் கண்ணி தந்தும்**

**தன் வழிப் படூஉம் நம் நயந்தருளி**

**வெறி என உணர்ந்த அரிய அன்னையை**

**கண்ணினும் கனவினும் காட்டி இந் நோய்**

**என்னினும் வாராது மணியின் தோன்றும்**

**அம் மலை கிழவோன் செய்தனன் இது எனின்**

**படு வண்டு ஆர்க்கும் பைந் தார் மார்பின்**

**நெடு வேட்கு ஏதம் உடைத்தோ**

**தொடியோய் கூறுமதி வினவுவல் யானே"**[38]

எனக் கூறுகிறாள். தோள்வளை அணிந்த தலைவியே! நான் உன்னிடம் ஒன்று கேட்கிறேன். அதற்குப் பதில் கூறுக. சுனையில் பூத்த மலர்களைக் கொய்தும் அவற்றை மாலையாகத் தொடுத்தும் மலையில் உள்ள செங்காந்தள் மலர்களை முருகவேள் போருக்குச் சூடும் கண்ணியாகத் திருத்தியும் இவற்றை அத்தெய்வத்திற்குச் சூட்டி வழிபாடு செய்து தமக்கு ஆதரவு நல்க வேண்டும் என்று நம் தாய் கேட்டாள். நாம் இப்போது கொண்டுள்ள மிகுதியான அன்பு நோயை முருகவேள் வருத்தியது காரணமாக வந்த இந்நோய் வெறி அயர்ந்தால் நீங்கும்

என்று அன்னை தவறாக நினைக்கிறாள். உன் மேனி வேறுபாடு இதன் காரணமாக வந்தது என்று தெரியாமல் வெறியாட நினைக்கின்றாள். இவ்வன்பு மிகுதியைச் செய்தவன் யார் என்று அவர்களுக்குத் தெரியாது நீலமணி தோன்றும் அழகிய மலைக்குத் தலைவனே! இந்நோய்க்குக் காரணம் என்றும் முருகனுக்குக் கூறினால் அதில் குற்றம் உண்டா? என்பதன் மூலம் நோய் தீர்வதற்குக் காரணமான தலைவனும் முருகனே! என்று அறத்தொடு நிற்றலை அறியமுடிகிறது. அயலவர் பெண் பார்க்க வரும் நிலையில் தோழி அறத்தொடு நிற்றலை,

**"அமர்க் கண் ஆமான் அரு நிறம் முள்காது**
**பணைத்த பகழிப் போக்கு நினைந்து கானவன்**
**அணங்கொடு நின்றது மலை வான் கொள்க எனக்**
**கடவுள் ஓங்கு வரை பேண்மார் வேட்டு எழுந்து**
**கிளையடு மகிழும் குன்ற நாடன்**
**அடைதரும்தோறும் அருமை தனக்கு உரைப்ப**
**நப் புணர்வு இல்லா நயன் இலோர் நட்பு**
**அன்ன ஆகுக என்னான்**
**ஒல்காது ஒழி மிகப் பல்கின தூதே"**[39]

இப்பாடல் உணர்த்துகிறது. அதனை, தோழி! அழகிய கண்களை உடைய காட்டுப் பசுவின் மீது அம்பு தொடுத்த கானவன், அவ்வம்பு குறி தவறிப் போனமை கண்டு கானவன், அதற்கு காரண்ம் மலையுறை தெய்வம் எனக் கருதி மழை பெய்தால் அத்தெய்வத்தின் சினம் தணியும் ஆதலின் மழை பெய்வதற்காகத் தம் சுற்றத்தோடுச் சென்று மலை தெய்வத்திற்குப் பலியிட்டு, வழிபட்டான். அத்தகு மலை நாட்டை உடைய நம் தலைவன் இங்கு வரும்போதெல்லாம் உன் சிறப்பினை அவனுக்குச் சொல்வேன். அதனால் நம்மோடு இணையாத நம்பால் அன்பற்றவருடைய நட்பு அன்பில்லாமலே போகட்டும் என்று நீ, வெறுத்துக் கூறுமாறு அவன் கூறவில்லை. அவன் உன்னிடத்து மிகுதியான அன்புடையவன் ஆதலின் உன்னைத் திருமணம் செய்துகொள்ள வருவான். அதனால் நம் தாயார் செய்திகளைக் கேட்கும் போது நான் பதில் கூறுவதற்காக நீ என்னிடத்து அறத்தோடு நிற்பாயாக.

உன்னை மணம் செய்து கொள்ள அயலவர் விடுகின்ற தூது பலவாயின. பிறரோடு அமையும் திருமணம் நமக்குத் தகுதியற்றது என்று கூறி தோழி அறத்தொடு நிற்கிறாள்.

**இல்லறம் ஓங்குக**

பரத்தையின் வீட்டுக்குத் தலைவன் சென்று தங்கி விடுகிறான். ஆனால் அப்பரத்தையோ,

**"எம் நயந்து உறைவி ஆயின் யாம் நயந்து**
**நல்கினம் விட்டது என் நலத்தோன் அவ் வயின்**
**சால்பின் அளித்தல் அறியாது அவட்கு அவள்**
**காதலள் என்னுமோ உரைத்திசின் தோழி**
**நிரைத்த யானை முகத்து வரி கடுப்பப்**
**போது பொதி உடைந்த ஒண் செங் காந்தள்**
**வாழை அம் சிலம்பின் வம்பு படக் குவைஇ**
**யாழ் ஓர்த்தன்ன இன் குரல் இன வண்டு**
**அருவி முழவின் பாடொடு ஒராங்கு**
**மென்மெல இசைக்கும் சாரல்**
**குன்ற வேலித் தம் உறைவின் ஊரே"[40]**

இவ்வாறு கூறுகிறாள். அதாவது விறலியே! தலைமகள் எம்மை விரும்பி இருக்கின்றவளாய் அவளை விரும்பி, அவள் விரும்பிய வண்ணம் அளித்து விடுதற்கு என்ன உள்ளது? நம் நலத்திற்குக் காரணமாக இருக்கும் தலைவனை நம் பெருந்தன்மையால் அத்தலைவியிடத்து அனுப்பினேன். ஆனால் அவ்வாறு அனுப்பியதை அறியாமல், யானையின் முகத்தில் உள்ள கோடுகளைப் போலப் போதிந்த எல்லா அரும்புகளும் மலர்ந்த செங்காந்தளையும் வாழைகளையும் உடைய மலையில் மணம் கமழ யாழ் ஓசை கேட்டதுபோன்று இனிய குரலை உடைய வண்டுகள் திரண்டு புகுந்து அருவியாகிய முழவிய ஒலியொடு ஒலிக்கின்ற சாரலில் உள்ள ஊரில் அங்குள்ளோர். தலைவியிடம் அப்பரத்தை மிக்க அன்புடையவள் அதனால் தலைவி தலைவனை அங்கு அனுப்பினாள் என்று கூறுவாரோ? தோழி எது சரி என்று உரைப்பாயாக, அவ்வாறாயின் மீண்டும் நமது

ஆற்றலால் தலைவனை இங்கே கொண்டு வந்து சேர்ப்போம் எனக் கூறுகிறாள். தலைவன் இல்லறத்தை ஓம்புவதே சிறந்த மாண்பு என்று உணர்ந்து பரத்தமை மேற்கொண்ட செயல் புலப்படுகிறது.

**புறவாழ்வியல்**

குறிஞ்சிநில மக்களின் தொழில் நம்பிக்கைகள் முதலான புறவாழ்வியல் செய்திகளும் இலக்கியத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவை, நம்வாழ்வியலை அறிய உதவுகின்றது.

**தினைப்புனம்**

தினைப்புனம் உருவாக்கி விவசாயம் செய்தமையை இக்கூற்றால் அறியமுடிகிறது. இதனை

**“கயம்கண் அற்ற பைதுஅறு காலைப்**

**பீளோடு திரங்கிய நெல்லிற்கு”**[41]

பக்கமலையில் கொடிச்சியால் காக்கப்படும் பசுமையான தினைப்பயிரில் முற்றிய பெருங் கதிர்களை மந்திக் குரங்கு கொய்து கொண்டு, பின்வருகின்ற பிற தொழில் அறியாத ஆண் குரங்கோடு மலைமீது ஏறியது. கொய்த கதிர்களை உள்ளங் கையில் வைத்துக் கசக்கித் தூய்மை செய்து தன்னுடைய கவுள் நிறைய உண்டது.

**வரலாற்றுச் செய்திகள்**

சில மன்னர்களின் வரலாற்றுச் செய்திகளும் அறியகிடக்கின்றன. அதில்

**“பரிசில் பெற்ற விரி உளை நல் மான்**

**கவி குளம்பு பொருத கல் மிசைச் சிறு நெறி**

**இரவலர் மெலியாது ஏறும் பொறையன்**

**உரை சால் உயர் வரைக் கொல்லிக் குடவயின்”**[42]

அதாவது, பாணர், பரிசிலாகப் பெற்ற கழுத்து மயிரைக் கொண்ட குதிரைகளின் கால் குளம்பு மோதியதால் செப்பமாகப் பெற்ற மலையில் உள்ள சிறிய வழியில் இளைக்காமல் இரவலர் ஏறுகின்ற பொறையனின் புகழ்மிக்க கொல்லி மலையில் உயர்ந்த இடத்து அகன்ற இலையை

உடைய காந்தளின் பூங்கொத்துக்களில் உள்ள தேனை வண்டுகள் பாய்ந்து நுகரும். எனும் கூற்றால் பொறையனின் வரலாறு அறியப்படுகிறது. அதோடு அழிசி என்பவனின் வரலாறும் அறியமுடிகிறது.

**“மேவார்**

**ஆர் அரண் கடந்த மாரி வண் மகிழ்த்**

**திதலை எ.்.கின் சேந்தன் தந்தை**

**தேம் கமழ் விரி தார் இயல் தேர் அழிசி**

**வண்டு மூசு நெய்தல் நெல்லிடை மலரும்**

**அரியல் அம் கழனி ஆர்க்காடு அன்ன”**[43]

பகைவரின் வெல்லுதற்கு அரிய அரண்களை வென்று, மலை போன்ற வள்ளன்மையையும் கள் உணவையும் தேமல் படர்ந்த வேர்ப்படையையும் கொண்டவன் சேந்தன் தந்தையாகிய அழிசி என்பவன். அவன் மணம் கமழும் மாலையை கடற்கரைச் சோலையில் தன் அழகை இழந்தது. இப்போது உடைய தேரினை உடையவன். அழிசியின் நெற்கதிர்களிடையே வண்டுகள் மொய்க்க மலரும் நெய்தல் பூக்களில் இருந்து தேன் வடிகின்ற வயல்கள் சூழ்ந்த ஆர்க்காடு என்னும் ஊரைப் பகைவர் அணுக இயலாது என்பதன் மூலம் அறியமுடிகிறது.

**தேன் அளித்தல்**

அதேபோல் மலையின மக்கள் தேனை உண்டு மகிழ்ந்தமையை

**“சுரும்பு உண விரிந்த கருங் கால் வேங்கைப்**

**பெருஞ் சினைத் தொடுத்த கொழுங் கண் இறாஅல்**

**புள்ளுற்றுக் கசிந்த தீம் தேன் கல் அளைக்**

**குறக் குறுமாக்கள் உண்ட மிச்சிலைப்**

**புன் தலை மந்தி வன் பறழ் நக்கும்”**[44]

இப்பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

அதாவது வேங்கை மரத்தின் பெரிய கிளைகளில் மலர்ந்த மலர்களை வண்டுகள் உண்ணும். அம்மரக்கிளைகளில் தேனிக்கள் தேனடை வைக்கும் தேன் கசிந்து கீழே உள்ள கல்லின் குழிகளில்

வடியும். குறமக்களின் இனம் குழந்தைகள் அதனை வழித்து உண்பர். இளங்குழந்தைகள் உண்டது போக எஞ்சிய மென்மையான தலையுடைய மந்தியின் குட்டிகள் சென்று உண்ணும் என்பது தெளிவாகிறது.

**இரும்படிக்கும் தொழில்**

இரும்படிக்கும் கொல்லன் தொழில் நடைபெற்றமையும்

**“இரைதேர் எண்கின் பகுவாய் ஏற்றை**
**கொடுவரிப் புற்றம் வாய்ப்ப வாங்கி,**
**நல்அரா நடுங்க உரறி, கொல்லன்**
**ஊதுஉலைக் குருகின் உள் உயிர்த்து,**
**வேங்கைக் கண்ணியர் எருதுஎறி களமர்**
**நிலம் கண்டன்ன அகன்கண் பாசறை**
**மென்திணை நெடும்போர் புரிமார்**
**துஞ்சுகளிறு எடுப்பும்தம் பெருங்கல் நாட்டே”**[45]

தனக்குத் தேவையான இரையைத் தேடி அகன்ற வாயை உடைய ஆண்கரடி வளைந்த வரிகளை உடைய புற்றைக் கண்டு அதனைப் பெயர்க்கும் அப்புற்றில் உள்ள பாம்பும் நடுங்கும் படி முழக்கமிடும் ஆற்றல் கொண்டது. கொல்லன் தொழில் புரியும் உலை மூக்கினைப் போல் காற்றை உள் விட்டு வெளியேற்றி நெட்டுயிர்ப்புக் கொள்ளும் என்பதன் மூலம் புலப்படுகிறது.

எருதுகளைக் கொண்டு கதிர்போல் அடிக்கும் மருதநிலத்தார் களம் செம்மை செய்ததுபோன்ற அகன்ற பரப்புடைய பசுமையான கற்பாறையிடத்து விழும் வேங்கை மலர்களைக் கதிரடிக்கும் குறவர் மாலையாகச் சூடுவர்.

**பறையிசைத்தல்**

குறிஞ்சி நிலமக்கள் பறையிசைத்து யானையை ஓட்டியமையை

**“மலைஅயல் கலித்த மைஆர் ஏனல்**
**துணையின் தீர்ந்த கடுங்கண் யானை**
**அணையக் கண்ட அம்குடிக் குறவர்,**

**கணையர், கிணையர், கைபுனை கவணர்"**[46]

மலைப்பக்கத்தில் முளைத்துச் செழித்த தினைக் கொல்லையில் உள்ள தினையை உண்ணும் பொருட்டுப் பெண்யானையைப் பிரிந்து வந்தது ஆண் யானை. அதனைக் கண்ட குறவர்கள் அம்பினைக் கொண்டும் கிணைப் பறையைக் கொண்டும், கைவிரவில் கோர்த்த கவணைக் கொண்டும், கூவி பேரியைச்சல் இருவராகிக் குடியிருப்பின் வெளியிடங்களில் எங்கும் ஆர்ப்பரிக்கும் எனும் இவ்வரிகளால் புலப்படுகிறது.

**கழங்கு பார்த்தல்**

கழங்குபார்த்துப் பின் வெறியாட்டு நிகழ்த்தி ஆடு பலியிடும் முருகவழிபாட்டு முறையும் சங்கப் பாடல்களினால் அறியப்படுகின்றது. இதனை,

**"அணங்குஅறி கழங்கின் கோட்டம் காட்டி**
**வெறிஎன உணர்ந்த உள்ளமொடு மறியறுத்து**
**அன்னை அயரும் முருகு………………..."**[47]

எனும் தோழிகூற்றுப் பாடலடிகள் உணர்த்துகின்றன. இதைப்போலவே,

**"மெய்ம்மலி கழங்கின் வேலற் றந்தே"**[48]

எனும் அடியும் முருகவழிபாட்டின்போது பார்க்கப்படும் கழங்கு குறித்துக் கூறுகின்றது.

**தொகுப்புரை**

இல்லற வாழ்வே மகிழ்வு தருவது என்பதும், அதிலும் காதல் திருமணமே தலைவன், தலைவியரால் விரும்பி மேற்கொள்ளப்பட்டதென்றும் அறியமுடிகின்றது.

இக்காதல் பெரும்பாலும் குறிஞ்சி நில மக்கள் உழவு தொழில் செய்யக்கூடிய இடமான தினைப்புனத்திலே தான் தோன்றி அரும்பு விட்டமையும், தினைப்புனமே காதலுக்கான களமாக விளங்கியமையும் தெரியவருகின்றது.

தலைவியின் தோழி பன்முகத் தன்மைகள் கொண்டவளாக விளங்குகிறாள். களவு வாழ்வைத் தலைவன் நீட்டித்த போதும், தலைவியை மறந்து நெடுநாள் காண வராத போதும் வரைவு கடாதலை வலியுறுத்தி இல்லற வாழ்க்கைக்கு இருவரையும் இட்டுச் செல்கிறான். அதோடு தலைவனுக்கு நனி நாகரிக பண்பும், வாக்குத் தவறாத வாய்மையும் வேண்டும் எனத் தேவைப்படும் இடங்களில், காலங்களில் இடித்துரைத்து கற்பு வாழ்வை வலியுறுத்தி இல்லறவாழ்வுக்கு வழிகோளுகிறாள் என்பதும் தெளிவுபடுகிறது.

தலைவன் தலைவியின் காதலுக்கு ஏங்கியமையும், காதல் பிரிவில் ஆற்றாதவனாய் நெரூசொடும், பாங்கன், பாங்கியிடமும் தன் கவலைகளை வெளிப்படுத்தி தலைவியை அடையும் முயற்சிகளை மேற்கொண்டமையும் புலனாகிறது.

தலைவி தன்னைச் சந்திக்க இரவுக் குறியில் வரும் பொழுது அவனுக்கு உண்டாகும் ஆபத்துக்களை எண்ணி அன்பின் மிகுதியால் இரவுக் குறியைத் தவிர்த்தமையும், தலைவன் உம் நினைவும், கண்ணின் ஒளியுமே எனக்கு ஏமம் என்று சொல்லி அச்சம் தெளீவித்து இரவில் சந்தித்தையும் உய்த்துணரமுடிகிறது.

தலைவன் பரத்தையும் சென்று தங்கிய போது அவளே அவனை அவன் மனைவியிடம் அனுப்பிய செய்தியும் தெரிய வருகிறது.

புற வாழ்வியலாகத் தினைப்புணம் காத்தல், தேனழித்தல், இரும்பிடித்தல், கழங்குப் பார்த்தல் போன்ற தொழிலம், நம்பிக்கையும் விளங்கியமையும் புலப்படுகிறது.

## சான்றெண் விளக்கம்

1. குறுந்தொகை பா.எ.201
2. நா.பி.சேசுபிள்ளை தமிழின்பம், ப.72.
3. நற்றிணை, பா.எ.22
4. மு.வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, ப.30
5. நற்றினை, பா.எ.160
6. நற்றிணை, பா.எ.185
7. ராஜ்கௌதமன், தமிழ் சமூகத்தில் அறமும் ஆற்றலும், ப.338-339.
8. நற்றிணை, பா.எ.190.
9. நற்றிணை, பா.எ.192.
10. கார்த்திகேசு சிவத்தம்பி, சங்கஇலக்கிய கவிதையும் கருத்தும், ப.19.
11. கே.பி.அழகம்மை, சமூக நோக்கில் சங்க மகளிர், ப.73.
12. நற்றிணை, பா.எ.168.
13. குறுந்தொகை, பா.எ.375.
14. நற்றிணை, பா.எ.125.
15. மேலது, பா.எ.134.
16. மேலது, பா.எ.8.
17. மேலது, பா.எ.188.
18. மேலது, பா.எ.396.
19. நற்றிணை, பா.எ.355.
20. மேலது, பா.எ.182.
21. மேலது, பா.எ.108.
22. குறுந்தொகை, கடவுள் வாழ்த்து
23. சூளாமணி, பா.எ.13.
24. சு.பாண்டுரங்கன், தமிழர் சிந்தனைமரபு, ப.70.
25. குறுந்தொகை, 362:1-5.
26. சு.வேங்கடராமன், சங்கஇலக்கிய ஆய்வுகள் செய்தனவும் செய்ய வேண்டுவனவும்
27. குறுந்தொகை, பா.எ.111-1-3.
28. மேலது, பா.எ.360:1-2

29. நற்றிணை, பா.எ.34.
30. மேலது, பா.எ.47:8-10
31. நற்றிணை, பா.எ.268:9
32. மேலது, பா.எ.82:4-11
33. மேலது, பா.எ.225:1-2
34. மேலது, பா.எ.51:6
35. மேலது, பா.எ.273:4-5
36. மேலது, பா.எ.322:9-12
37. குறுந்தொகை, பா.எ.379
38. நற்றிணை, பா.எ.173.
39. நற்றிணை, பா.எ.176.
40. நற்றிணை, பா.எ.176.
41. நற்றிணை, பா.எ.22.
42. நற்றிணை, பா.எ.185.
43. நற்றிணை, பா.எ.190.
44. நற்றிணை, பா.எ.168.
45. நற்றிணை, பா.எ.125.
46. நற்றிணை, பா.எ.108.
47. நற்றிணை, பா.எ.47.
48. நற்றிணை, பா.எ.268.

# இயல்-5

# சங்கம் மருவிய காலஇலக்கியங்களில் குறிஞ்சிநிலமக்களின் வாழ்வியல்

## முன்னுரை

சங்கம் மருவிய காலம் என்பது சங்க காலத்திலிருந்து எல்லாம் மாறுபட்ட நிலை எனலாம். அதாவது அயலவர் ஆட்சி, பிறமொழி ஆதிக்கம், மக்களிடையே சாதியம் வேரூன்ற தொடங்கிய பிரிவினை கொண்ட நிலை என எல்வாம் வேறொரு நிலைக்கு இடடுச் சென்ற காலம். இக்கால சமூக நிலை கீழ்கணக்கின் அறநூல்களில் பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது. சங்க இலக்கியத்தில் புறப்பாடல்கள் மிகுந்திருக்க மருவிய கால இலக்கியத்தில் ஒரேயொரு புறநூலே படைக்கப்பட்டுள்ளது. ஆனால், அதே சமயத்தில் அக நூல்கள் அகத்தினை மரபுகள் பெரிதும் போற்றப்பட்டு அவை வாழ்வியலாக வாழப்பட்டமையும் வெளிப்படுகிறது. புறவாழ்வியலும் தொழில், பழக்க வழக்கம், நம்பிக்கை என பழந்தமிழரின் வாழ்வியல் முறையே தொடரக் கூடியதாக விளங்கியமை அறியமுடிகிறது. அதை விளக்குவதே இவ்வியலின் நோக்கமாக அமைகிறது.

## ஐந்திணை எழுபது

### தலைவி தலைவன் மீது கொண்டிருந்த மதிப்பு

ஐந்திணை எழுபது நூலில் மூவாதியார் தலைவி தலைவன் மீது கொண்டிருந்த மதிப்பு மிக்க பார்வையையும் நட்பையும் தமது பாடல்களில் வெளிப்படுத்தி இருப்பது தெளிவுப்படுகிறது.

தலைவி தோழியிடம் மலைநாட்டுத் தலைவன் வாய்மை முதலிய பண்புகள் உள்ளவன் என்பதால் அவன் பொருள் தேட என நீங்கிச் சென்றாலும் என் தோல்கள் பிரிவு வருத்தத்தினால் மெலியவில்லை. காரணம் அவன் மீது நான் கொண்ட நம்பிக்கையே. தலைவன் திருமணம் செய்து கொள்ள ஏற்றுக்கொண்டமையே மகிழ்ந்து தலைவி தோழியிடம் கூறுவதாக,

**“நாடன் நயம் உடையன் என்பதனால், நீப்பினும்**

**வாடல் மறந்தன, தோள்”[1]**

கூறுவதாக இப்பாடல் வரிகள் அமைந்துள்ளன. இது தலைவி தலைவன் மீது கொண்டிருந்த நன்மதிப்பினை காட்டுகின்றது. தலைவனின் வாய்மையும் வெளிப்படுகிறது. மேலும் தலைவனுடைய பண்பையும் தலைவி தோழியிடம் கூறுவதனை காணமுடிகிறது. இதனை,

**“மன்றப் பலவின் சுளை விளை தீம் பழம்**

**ஊண்டு உவந்து மந்தி முலை வருட, கன்றுஅமா்ந்து**

**ஆமா சுரக்கும் அணி மலை நாடனை”[2]**

எனும் இப்பாடலால் அறிய முடிகிறது. அதாவது தலைவனின் அன்பான இயல்பினை குறைத்து பேசிய தோழியிடம் தலைவி, பொதுமன்றத்தில் உள்ள பலாமரத்து முதிா்ந்து நன்கு பழுத்த பலாப்பழததை தின்று மகிழ்ந்து நீா்வேட்கை மிக்க அங்கு தங்கி இருக்கும் காட்டுப்பசுவின் மடியைத் தடவ, அப்பசு தன் கன்றுக்குப் பால் சுரந்து கொடுப்பதைப்போல குரங்குக்கு பால் சுரந்து கொடுக்கும் பண்புடைய மலைநாட்டு தலைவனை நாம் பிரிந்து வாழ இயலாது என்று கூறுவதன் மூலம் தலைவனின் பண்பை வெளிப்படுத்துகிறாள்.

அதே நேரத்தில் தலைவனின் அன்பையும் உயா்வாக நினைப்பதை அறிய முடிகிறது. இதனை

**“சான்றவா் கேண்மை சிதைவு இன்றாய், ஊன்றி**

**வலி ஆகி, பின்னும் பயக்கும், மெலிவு இல்**

**கயம் திகழ் சோலை மலை நாடன் கேண்மை**

**நயம் திகழும் என்னும், என் நெஞ்சு”[3]**

இப்பாடலால் உணர முடிகின்றன. அதாவது தோழி சான்றோரின் நட்பு சிதைவு இல்லாமல் நிலைத்து நின்று வலிமையுடன் பலவகை நன்மைகளைத் தரும். அதுபோன் நீா்நிலைகளால் வளமாகக் காணப்படும் சோலைகள் சூழ்ந்த மலைநாட்டுத் தலைவனின் நட்பு நெஞ்சம் நினைக்கிறது என்று தலைவி தலைவனின் அன்பை குறைத்துபேசிய

தோழியிடம் தலைவனின் அன்பை எடுத்து கூறுவதன் மூலம் வெளிப்படுகிறது. மேலும் ஒரு பாடலில் நம் தலைவன் இயற்கையாக இணைந்த காலததில் நாம் தெளிவு பெரும்படி கூறிய சொற்கள் நன்மை தரக்கூடியவை. ஆதனால்தான் அவனுடன் இணைந்தேன். அவன் காட்டிய அன்பு சிறந்தது என்றும் அவன் எனக்கு துணையாக இருப்பான். அதனால் நீ தலைவனை பழிகூறவேண்டாம் என்று தலைவி தோழிக்கு சொல்லுவதை

**"குன்றந நாடன் தெளித்த தெளிவினை**
**நுன்று என்று தேறித் தெளிந்தேன், தலையளி**
**ஒன்று, மற்று ஒன்றும் அனைத்து"[4]**

இப்பாடல் வரிகளால் அறிய முடிகிறது.

**தலைவி தலைவன் உயிரைத்தன் உயிராகப் போற்றல்**

தலைவன் இரவில் தன்னை பார்க்க வரும் போதுமரணத்தை ஏற்படுத்தும் பாம்புகளால் அவனுக்கு ஏதாவது நிகழ்ந்து விடுமோ என்று வருந்துகிறாள் அந்நிலையில் அவள் தோழியிடம்

**"குறை ஒன்று உடையேன்மன்-தோழ-நிறை இல்லா**
**மண்ணுயிர்க்கு எமம் செயல் வேண்டும். குன்னே அரா**
**வழங்கு நீள்சோலை நாடனை நம் இல்,**
**இரா வாரல் என்பது உரை"[5]**

இவ்வாறு கூறுவதன் மூலம் அறிய முடிகிறது. அதாவது தோழி எனக்கு ஒரு குறை உண்டு அதனை நீ நீக்க வேண்டும். மனக்கவலைக் காரணமாக என் உயிர்க்கு பாதுகாவல் தேவை, அதனை நீ செய்தல் வேண்டும். பாம்புகள் நடமாடுகின்ற இரவு வேளை நம் தலைவர் இங்கு வருகிறார். அவருக்கு தீமை வரலாம் என்று என் நெஞ்சம் வருந்துகிறது. ஆதனால் அவரை இரவு வரவேண்டாம் என்று கூறி விரைவில் திருமணம் செய்து கொள்ளுமாறஅவரிடம் கூறுக என்று தோழியிடம் கூறுகிறாள். இதில் என் உயிர்க்கு பாதுகாவல் தேவை என்பதன் மூலம் தலைவன் உயிரை தன் உயிராகப் போற்றுவது புலப்படுகிறது.

**தலைவனின் வாய்மை வெளிப்படல்**

தலைவி தலைவன் மீது கொண்டிருந்த நம்பிக்கையை காப்பாற்றுபவனாக வாய்மைக் கொண்டு விளங்கியமை அறிய முடிகிறது. தோழி தலைவியிடம் மலைநாட்டுத் தலைவன் மணம் பேசி வருவதற்காகச் சான்றோர்களை அனுப்பியுள்ளான் அதனால் நம் செவிலித்தாய் மணத்தை விரும்பி வருந்தும் துயரம் இப்போது நீங்கியது எனக் கூறுவதன் மூலம் தலைவனின் வாய்மை வெளிப்படுகிறது.

**வரைவு கடாதல்**

சங்க இலக்கியத்தை போலவே இச்சங்க மருவிய கால இலக்கியத்திலும் வரைவு கடாதலும் அறத்தொடு நிற்கும் உயரிய குணமும் தொடந்துள்ளமை அறிய முடிகிறது. தோழி தலைவனிடம்

**"கானக நாட மறவல், வயங்கிழைக்கு**
**யான் இடை நின்ற புனை"**[6]

இவ்வாறு கூறுகிறாள். ஆணிகலன்களை அணிந்த தலைமகளுக்கும் உமக்கும் நடுவே புணையாக இருந்த என் உதவியை மறவாமல் அவளை மணந்து மகிழ்விப்பாயாக என்று தோழி தலை மகனிடம் கூறுவதனால், அறத்தொடு நிற்றல் காணமுடிகிறது. மேலும் பூஞ்சோலைகள் மிக்க நல்ல மலைநாட்டுத் தலைவனே தலைவியை நீ மறக்காமல் பாதுகாப்பாயா? அவளுக்கு உன்னை அல்லாமல் வேறுயாரும் உதவுபவர் இல்லை. உன் அருள் பார்வையினால் அவள் இனிய உயிரை நிலைபெறச் செய்யும் மருந்தாக அமைந்து திருமணதகை விரைவில் செய்து காப்பாயாக என வலியுறுத்துவத காண முடிகிறது. இதனை

**"நல் மலை நாட! மறவல், வயங்கிழைக்கு**
**நின் அலது இல்லையால், ஈயாயோ, கண்ணோட்டத்து**
**இன் உயிர் தாங்கும் மருந்து?"**[7]

இவ்வரிகளால் அறியலாம். அதோடு மட்டுமல்லாது தலைவனே உன்னிடம் அறியாமை என்பது இருக்க முடியாது. அதனால் தலைவியை விரைவில் மணந்து கொள்வது நல்லது என

**"வெறி கமழ் நண் சோலை நாட! ஒன்று உண்டோ**

**அறிவின்கண் நின்ற மடம்?"[8]**

கூறுவதை காண முடிகிறது. மேலும் தோழி ஆனவள் அவ்வாறு மணக்க தாமதப்பட்டால்,

**"வரையக நாட! வரையாய் வரின், எம்**

**நிரைதொடி வாழ்தல் இலள்"[9]**

இவ்வாறு நிகழலாம் என கூறுகிறாள். அதாவது நீ விரைவில் மணக்க தவறினால் தலைவி இறந்துபடவும் நேரலாம் என்கிறாள். இதன் மூலம் தலைவியின் அன்பும் திருமணத்தின் அவசியமும் தோழியாள் வலியுறுத்துப்படுவதை காணமுடிகிறது.

**தலைவி அறத்தொடு நிற்றல்**

வேலனுக்கு வெறியாட்டு நிகழ்த்துவது என்பது சங்க இலக்கியங்களிலிருந்து காண முடிகிறது. தலைவிக்கு காதல் மிகும் போது காதலன் நினைவாள் தனது இயற்கை குணாதிசயங்களிலிருந்து மாறுபட்டு சோர்வுடனும் தனிமையை விரும்பியும் காணப்படுவாள். அதைக் கண்ட அவளது தாயார் பேய் தான் பிடித்துவிட்டது என்று வேலனுக்கு ஆட்டினை பலிகொடுத்து வெறியாட்டு நிகழ்த்துவர். அவ்வழக்கம் சங்க மருவிய காலத்திலும் இருந்ததை ஐந்திணை எழுபது என விளக்கியும் நமக்கு காட்டி நிற்கின்றது. இதனை,

**"வார்குரல் ஏனல் வளை வாய்க் கிளி கவரும்**

**நீரால் தெளி திகழ், கான் நாடன் கேண்மையே**

**ஆர்வததின் ஆர முயங்கினேன், வேலனும்**

**ஈர, வலித்தான் மறி"[10]**

இப்பாடலால் அறிய முடிகிறது. அதாவது தலைவி தோழியிடம் தோழி! நீண்ட திணைக்கதிர்களை வளைந்த வாயினை உடைய கிளிகள் கவர்ந்து செல்லாதிருக்க, என் ஐயன்மார் திணைப்புனக் காவலில் என்னை நிறுத்தினர். அப்போது, மழை காரணமாக நான் அவனை ஆரதழுவினேன். அதனால் என் மேனியில் மாற்றம் ஏற்பட்டது. அம்மாற்றம் தெய்வத்தால் உண்டானது என்று எண்ணி வேலை வெறியாடன் வேலனை அழைத்து ஆட்டுக்குட்டியை முருகனுக்குப் பலியாக

தந்து வெறியாட துணிந்து விட்டாள் செவிலித்தாய் நீ செவிலித்தாயிடம் உண்மையைக் கூறி வெறியாட்டடையை தவிர்ப்பாயாக! என்று கூறி தலைவி தோழியிடம் அறத்தொடு நிற்பதை காண முடிகிறது.

இங்கே “மந்திரங்கள் கூறி யாகங்கள் செய்வதே ஆரியருக்குழு சிறப்பாக உரிய வழிபாட்டு முறை தமிழருடைய வழிபாட்டிலே வெறியாட்டு முதலிய ஆட்டங்கள் முக்கிய இடம் பெற்றன. முருக வழிபாடு கூறப்படும் இடங்களில் இத்தகைய கூத்துக்கள் வருணிக்கப்படுகின்றன. இவ்வழிபாடுகளில் பூசாரிகள் இல்லை. வழிபடுவோர் இறைவன் தம்மிலே வந்து வெளிப்படுவான் என்னும் நம்பிக்கையுடன் கூத்தாடினர்.”[11] எனும் சு.வித்தியானந்தன் கருத்து குறிஞ்சி நில மக்கள் வழிபாட்டு நெறியை விளக்குவதாக அமைந்துள்ளது.

**ஐந்திணை ஐம்பது**

ஐந்திணை ஐம்பது ஆசிரியர் மாறன் பொறையனார் இவர் இயற்றிய ஐந்திணை ஐம்பதில் முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்ற அடைவில் ஐந்திணைக்கும் பத்துப்பத்து பாடல்களே பெற்றுள்ள நூலில் ஆதலின், இதனை ஐந்திணை ஐம்பது என்று கூறிக்கின்றார். இந்நூலில் குறிஞ்சி திணைக்குரிய பத்துப்பாடல்கள் சிறப்புடன் விளங்குகின்றன. இப்பாடல்கள் திணை புனத்தை காப்பதை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டள்ளன.

**திணைப் புனக்காவலும் இற்செறிப்பும்**

குறிஞ்சி நிலத்தில் தலைவி நினைப்புனத்தை காவல் புரிய வருகிறாள் அப்போது தலைவனோடு காதல் உண்டாகிறது தினைப்புனம் முற்றிய நிலையில் காவல் செய்வதை விட்டுவிட்டு வீட்டிற்கு செல்லும் காலம் வருகிறது. இந்நிலையில் தோழி தலைவி உடன்,

**“பொன் இணர் வேங்கை கவினிய பூம்பொழிலுள்**
**நன்மலை நாடன் நலம்புனைய, மென்முலையாய்**
**போயின, சுல்நாள் புனத்து மறையினால்**
**ஏயினர் இன்றி, இனிது”[12]**

இவ்வாறு கூறுகிறாள் அதாவது மென்மையான மார்பகங்களையுடைய தலைவியே! போன்போன்று பூக்கும் வேங்கை மரங்கள் நிறைந்துள்ள சோலையில், நம் தலைவனாக மலைநாடன் உன்னோடு கலந்தபின்பு எவருடைய குறுக்கீடும் இல்லாமல் இன்பமாய்ச் சிலநாட்கள் கழிந்தன. இனி, எவ்வாறு அமையுமோ? நாம் அறியோம் என்று கூறுவதன் மூலம் காதலுக்கு இடையூறு வந்து விட்டது எனக்கூறுகிறாள். அந்த இடையூறு என்னவென்று அடுத்த பாடலிலே வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

**“மால்வரை வெற்ப வணங்க குரல்ஏனல்**
**காவல் இயற்கை**
**பூக்கண் கழூஉம் புறவிற்றாய், பொன் விளையும்**
**பாக்கம், இது எம் இடம்”[13]**

என பாடல் அமைந்துள்ளது. அதில் தோழியானவள் தலைவனிடம் உயரங்களையுடைய மலைநாட்டுத் தலவைனே! தினைப்புனம் முற்றிய தன் காரணமாகத் தினைப்புனத்தைக் காவல் செய்கின்ற வேலையை நாங்கள் கைவிட்டோம். தூய்மையான அருவிகள் பூக்களைக் கழுவிக் கொண்டு வரும்படியான சூழலில் எங்கள் வீடு அமைந்துள்ளது. எங்களைக் காண விரும்பினால் அங்கு நீங்கள் வரலாம் என தாங்கள் இயற்கையால் அதாவது தினைப்புனம் விளைச்சலாள் இற்செறிக்கப்பட்டமையே கூறுகிறாள்.

**தலைவியின் காதல் உணர்வு**

இவ்வாறு தோழி தலைவனிடம் கூறியபின் தலைமகன் சிறைப்புறத்தானாக இருக்க தன்னுடைய காதல் உணர்வை அவன் அறியும்படி வெளிப்படுத்துகிறான். இதனை

> **“கானக நாடன் கலவான்என் தோள்! என்று**
> **மான்மௌ் கண்ணாய் - மயங்கல்நீ! நானம்**
> **கலந்து இழியும் நல்மலை மேல் வால்அருவி ஆட,**
> **புலம்பும் அகன்றுநில் லா!”[14]**

இப்பாடலால் அறிய முடிகிறது. தோழியே தலைவன் வீட்டுக் காவலில் இருக்கும் என் தோல்களை சேரமாட்டான் என்று நீ வருந்த வேண்டாம் தலவைனது நாட்டைச் சேர்ந்த மலையிலிருந்து வீழ்கின்ற அருவியில் நாம் நீராடினால் தலைவனுக்குச் சேராமையால் ஏற்படும் துன்பங்கள் எல்லாம் நீங்கிவிடும் என்று தலைவி தோழியிடம் கூறுவதன் மூலம் அவளுடைய காதல் உணர்வையும் இயலாமையும் வெளிப்படுத்துவதே அறிய முடிகிறது.

**வரைவு கடாதல்**

ஐந்திணை ஐம்பதில் வரைவு கடாதல் பற்ற தோழி நான்கு பாடல்களில் கூறுவதாக அமைந்து உள்ளது. தோழி சிறைப்புறத்தானாக இருக்கும் தலைவனைப் பார்த்து நாங்கள் மலையிடத்தில் உள்ள வேங்கை மரத்தின் பூக்களை பறித்து விளையாடியதால் மாந்தளிர் போன்ற என் உடல் வியர்த்து அதனால் மலையில் உள்ள எல்லா அருவிகளிலும் நீராடினோம். அதனால் மென்மையான சொல்லின் உடையதலைவிக்கு சிவந்த வரிகள் படர்ந்த கண்கள் சிவந்தன என்று தோழி செவிலித்தாய் தலைவனுக்கு வெளிக்காட்டுகிறாள். அடுத்தப் பாடலிலேயே தோழி தலைமன்னனிடம் நேரடியாக வளைந்த, வரிகளையுடைய வேங்கைப் புலியால் தாக்கப்பெற்று அப்பிடியினின்றும் தப்பிய மடிந்த காதுகளைக் கொண்ட யானை அஞ்சுப் பின்வாங்கித் தன் நடையினால் உண்டாகும் ஒலி புலிக்குக் கேட்குமே என்று அஞ்சி மெல்ல நடக்கின்ற வழியானது நீ திரும்பிப் போகும் வழி என்று எண்ணியதால் ஒளியுடைய வளையலை அணிந்த தலைவியின் கண்கள் நேற்று இரவு முழுவதும் தூக்கம் கொள்ளவில்லை. அதனால் நீ

விரைவில் தலைவியை மணந்துகொள்க என்று தோழி தலைவனிடம் கூறினாள். இதனை,

**“கொடுவரி வேண்கை பிழைத்து, கோட்பாடு**
**முடிசெவி வேழம்-இரீஇ, அடிஓசை**
**அஞ்சி, ஒதுங்கும் அதர்உள்ளி, ஆர்இருள்**
**துஞ்சா, சுடர்க்கொடி கண்”[15]**

இப்பாடலால் அறியலாம். மேலும் நீ தலைவியை பார்க்க கொடிய வழியில் வருவதால் உனக்கு என்ன தீங்கு நேருமோ என்ற அஞ்சி மனத்துன்பம் அதிகமாக வாட்டமுற்று மெலிந்து நிற்கின்றாள் நீ விரைவில் திருமணம் செய்து கொள்க என்பதனை

**“திரு ஒருங்கும் மென்சாயல் தேம்கோதை மாதர்**
**உருஒடுங்கும், உள்உருகி நின்று”[16]**

எனும் வரிகளால் அறியலாம். இவ்வாறு வருந்தும் தலைவி தன் நிலையிலிருந்து மாறுபடுகிறாள். ஆதனால் செவிலித்தாய் வேலன் வெறியாட்டு நிகழ்த்த முடிவு செய்கிறாள்.

**தலைவி அறத்தொடு நிற்றல்**

செவிலித்தாய் வெறியாடுதலுக்கு தயார் செய்ய வேலையில் தலைவி தோழியிடம் தோழி நம் மலைநாட்டுத் தலைவனால் ஏற்பட்ட என்மேனி மாற்றத்தைக் கண்ட செவிலித்தாய் தெய்வம் என்னை வருத்திற்று என்று கருதி, வேலனை வரவழைத்து முருகனுக்குப் பூசையிடுதலால் வெறியாடுதலை செய்கின்றாள். நீ அதனைத் தடுத்து செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்பாயாக என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள். இதனை

**“வெறி கமழ் வெற்பன என் மெற்ந் நீர்மை கொண்டது**
**அறியாள், மற்று அன்னே! அணங்கு சுணங்கிற்று - என்று**
**மறி ஈர்த்து உதிரம் தூய், வேலன் - தரீஇ**
**வெறியோடு அலம்வரும் யாய்”[17]**

இப்பாடல் வரிகளால் அறியலாம். இந்நூலில் தினைப்புனம் காவல் காக்க சென்ற தலைவி தலைவனோடு காதலால் இணைவதும் தினைப்புனம் முற்றிய நிலையில் தலைவி தினைப்புனத்திற்கு செல்ல முடியாமல் வீட்டில் இற்செறிக்கப்படுவதும் தோழி தலைவனிடம் வரைவு கடாதல் கூறுதலும் செவிலித்தாய் தலைவிக்கு வேலன் வெறியாட்டு நிகழ்த்து நிலையில் தலைவி தோழியிடம் அறத்தொடு நிற்கக்கூறி அந்தஅகவாழ்க்கையில் களவு வாழ்வில் இருந்து கற்பு வாழ்க்கைக்கு அவர்கள் அடியெடுத்து வைப்பதும் அறியமுடிகிறது.

**திணைமொழி ஐம்பது**

இந்நூலின் ஆசிரியர் கண்ணஞ்சேந்தனார். ஐந்திணைகளைப் பற்றி பத்துப்பத்துப்பாடல்களாக ஐம்பது பாட்களைக் கொண்டுள்ளது இந்நூல். ஐந்திணைகளைப் பற்றிக் கூறும் மற்ற நூல்களைக் காட்டிலும் இதற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அதாவது இந்நூல் ஐந்திணைகளையும் வரிசையாக அமைத்திருக்கும் முறை சிறந்ததொன்று எனலாம். இதனை “முதலில் குறிஞ்சித்திணை – குறிஞ்சி நிலத்தில் தான் காதலனும் காதலியும் முதல் முதலாகச் சந்திப்பார்கள். அவர்களிடம் காதல் பிறக்கும். மணமக்களாவதென்று உறுதி செய்து கொள்ளுவார்கள்.

இரண்டாவது பாலைத்திணை - இது காதலன் காதலிலை விட்டும் பிரிவதை பற்றிப் பேசவது காதலன் மணம் புரிவதற்கு முண்போ மணம் புரிந்து கொண்ட பிறகோ பொருள் தேடம் பிரிவான். அவனை அவள் மணம் புதிவதற்கு முன்பே அவள் பெற்றோர் அறியாமல் தன்னுடன் அழைத்துச் செல்வான். இவ்வாறு பிரிவை உணர்த்துவது பாலைத் நிணையாகும்.

மூன்றாவது முல்லைத்திணை- காதலன் பிரிந்ததனால் வரும் துன்பத்தை பொறுந்துக் கொண்டித்தல். தன் உள்ளத்திலே எவ்வளவு துயரம் பெருகினாலும். அதை அடக்கிக் கொண்டு காதலன் வருகையை எதிர்பார்த்திருப்பாள் கற்புள்ள காதலி. இந்த நிகழ்ச்சியை உரைப்பதே முல்லைத்திணை. நான்காவது மருதத்திணை இத்திணையிலே இல்லறம் நடத்தும் காதலன் காதலிக்குக்குள் நிகழும் ஊடல் கூறப்படும். எந்தெந்தக் காரணங்களால் என்றெல்லாம் சொல்லப்படும்.

ஐந்தாவது நெய்தல் திணை-காதலன் பிரிவுக்காகக் காதலி வருந்துதல், தன் துன்பத்தைக் காதலி வெளிப்படையாகக் கூறுவாள். இவைகளே ஐந்திணை ஒழுக்கங்கள் இவற்றைச் சுருக்கமாகக் கூறினால், கூடல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்று கூறிவிடலாம்.

மேலே காட்டிய வரிசைப்படியே இந்நூலில் ஐந்திணைகளும் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு திணையைப் பற்றியும் பத்துப்பத்து வெண்பாக்கள் பாடப்பெற்றிருக்கின்றன. இவ்வெண்பாக்கள் படிப்பதற்கு இனிமையானவை. எளிமையானவை, அழகிய கற்பனைகள் அமைந்தவை. அகப்பொருளைப் பற்றிச் சொல்லும் பதிணென்கீழ்க்கணக்கு நூல்களில் இது ஒரு சிறந்த நூல்”[18] என குறிப்பிடுவர். இந்நூலின் குறிஞ்சித்திணையில் முதல் மூன்று பாடல்களும் வரைவு கடாதலைப் பற்றி தோழி கூறுவதாக அமைந்துள்ளது.

**வரைவு கடாதல்**

தோழி தலைவனை நோக்கி உயர்ந்த மலைகளையுடைய தலைவனே! நீ கடந்துவரும் வழி யானைகள் உலவும் இடமாகும். ஆதனால் இரவுக் காலத்து வரவேண்டாம் என்று தோழி கூறினாள். விரைவில் திருமணம் செய்து கொள்க எனக் கூறினாள்.

**“வான்உயர் வெற்ப இரவின் வரல் வேண்டா**
**யானை உடைய சுரம்”[19]**

என வரிகளால் அறியலாம். மேலும் அடுத்தப் பாடலிலேயெ தினைப்புனமும் கதிர்கள் கொய்யப் பெற்றுக் காவல்நீங்கின. ஆதனால் நீ இங்கு வருதல் அரிதாக அமையும். தலைவியை வீட்டுக்காவலில் வைப்பர். நீ விரைந்து திருமணம செய்துகொள்க என அறிவுறுத்துகிறாள் இதனை

**“விறல்மலை நாட! வரவு அரிதாம் கொல்லோ?**
**புனமும் அடங்கின காப்பு”[20]**

இப்பாடல் வரிகளால் அறியலாம்.

தலைமகனைத் தோழி இரவுக்குறி நயப்பித்தது தலைவன் பிரிவால் தலைவி மெலிந்து போகிறாள். மிகவும் வாட்டத்தோடு காணப்படுகிறாள். அவளுடைய துயரினை போக்கும் பொருட்டு தலைமகனை தோழி இரவுக்குறி நயப்பிக்கிறாள். இதனை,

**“ஏனம் இடந்திட்ட ஈர்மணி கொண்டு எல்லிடை**
**கானவர் மக்கள் கனல்எனக் கைகாய்த்தும்**
**வான்உயர் வெற்பன் வருவான்கொல், என்தோழி**
**மேனி பசப்புக் கெட?”[21]**

என்னும் பாடலால் அறியலாம். அதாவது குறிஞ்சித் தோன்றிய மாணிக்க மணிகளை இரவு நெருப்பு என நினைத்து கைகளைக் காட்டிக் குளிர்காய்வாள். இத்தகைய உயர்ந்த மலைநாட்டுத தலைவன் தலைவியை உடல், பசலை நிறமானது நீங்குவதற்காக இரவுக்குறியை வந்து அருள் செய்வானோ என்று தோழி கூறுவதனை காணமுடிகிறது.

**பின்னின்ற தலைமகனைக் காவல் சொல்லிச் சேட்படுத்தியமை**

தலைவியைக் காண இரவில் தலைவன் வருகிறான். அப்போது தோழி இரவில் இங்கே வந்து தலைவியை சந்திப்பது என்பது ஆபத்தான ஒன்றாகும். இதனை

**“விரைகமழ் சாரல் விளையுனம் காப்பார்**
**வரையிடை வாரன்மின்-ஐய-உரைகடியர்**
**வில்லினர், வேலர், விரைந்துசெல் அப்பினர்,**
**கல்லிடை வாழ்நர் எமர்”[22]**

இதனை பாடல் வரிகளால் அறிய முடிகிறது. அதாவது தலைவனே! இம்மலையில் வாழும் எம்மவர், வேடுவர். ஆதனால் தினைப்புனத்தைக் காக்கும் கடுஞ்சொல்லை உடையவராய் வில்லேந்திய கையினராய் வேலோன் அறியும் தன்மையராய் விரைந்து செல்லும் அம்புகளுடைய வில்லினராய் இரவில் காவல் செய்க. அதனால், விரைந்து நீ வரவேண்டாம் எனத் தோழி அறிவுறுத்துகிறாள். மேலும்

எம்மவா் உமமைக் கண்டாள் சினத்து உமக்குத் தீங்கு செய்வா். அதனால் நீா் இங்கு வரவேண்டாம் என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள். இதனை

**“ஏனலுள், ஐய!-வரவுமற்று என்னைகொல்**

**காணினும், காய்வர் எமர்”[23]**

எனப்பாடல் வரிகளால் அறியமுடிகிறது.

**மீண்டும் வரைவு கடாதல்**

தலைவனைப் பாா்த்து தோழி மலைநாட்டுத்தலைவன் நீ இரவில் வந்தால் உனக்கு நேரும் இடைற்றை எண்ணித் துன்பப்பட்டு விளங்குவதால் ஊரார் அறியும் பழிச்சொற்கள் பரவும். அதனால் இரவில் வராமல் விரைவில் மணந்து கொள்க என உரைக்கிறாள். இதனை

**“மாழைமான் நோக்கியும் ஆற்றாள், இரவரின்**

**ஊா்அறி கௌவை தரும்”[24]**

இதனை இவ்வரிகளால் அறியலாம். இதனடையே பகலில் தலைவியை சந்திக்க வரும் தலைவனை நெருங்க விடாமல் தோழி தடுக்கிறாள். அதோடு சிற்ப்புறத்தானாக இருக்கும் தலைவன் கேட்கும்படி திருமணம் செய்ய தூண்டுகிறாள். இதனை

**பலவின் பழம்பெற்ற பைங்கண் கடுவன்**

**செல்வம் கடிந்தாள், புனத்து”[25]**

எனப்பாடல் வரிகளால் அறிய முடிகிறது. அதாவது என் தோழியாகிய தலைவியே நம் தலைவனுடன்நாம் கொண்ட களவொழுக்கத்தினை அறிந்த செவிலித்தாய் நாம் சோலைக்குச் செல்வதை தடுக்கிறாள். அதனால் தலைவனைப் பகற்பொழுதிற் காணமுடியாது. பலாப்பழத்தைப் பெற்ற பசுமையான கண்களையுடய ஆண் குரங்கு ஏவீ! என்று தன் பெண்குரங்கை அன்புடன் அழைத்துப்பழகும். மலைநாட்டில் நம் தலைவன் நம்மொடு மாறுபட்டு ஊடல்கொள்ளமாட்டான் என்று தலைவன் தலைமகள் சிறைப் புறந்தானாகத் தோழி தலைவிக்குக் கூறி, விரைந்து

மணங்கொள்ளுமாறு அறிவுறுத்துகிறாள். இவ்வாறு இத்திணை மொழி ஐம்பது நூலில் குறிஞ்சித்திணை பாடல்கள் அமைந்துள்ளன.

**திணைமாலை நூற்றைம்பது**

இந்நூலின் ஆசிரியர் ஏலாதி இயற்றிய கணிதேமாவியார். ஐந்திணை ஒடுக்கங்களைக்கோவையாக அமைத்து மாலை போலத் தந்துள்ளமையின் திணைமாலை என்றும் பாடல் அளவினால் திணைமாலை நுற்றைம்பது என்றும், இந்நூல் பெயர் பெற்றுள்ளது. கீழ்க்கணக்கில் அமைந்த ஐந்திணை நூல்களில் அளவால் பெரியது. இதுவே, குறிஞ்சி, நெய்தல், பாலை,முல்லை, மருதம் என்னும் வரிசையில் ஐந்திணைகளை இந்நூல் முறைப்படுத்தியுள்ளது. நூற்றைம்பது என்னும் எண் வரையறைக்கு ஏற்ப திணை ஒவ்வொன்றும் 30 பாடல்களைக் கொண்டிருத்தலே முறை. அங்ஙனமாகவும் குறிஞ்சி, நெய்தல், முல்லைத்திணைகள் மூன்று 31 பாடல்களைப் பெற்றுள்ளன. இதனால், இந்நூலும் 153 பாடல்களைப் பெற்றுள்ளன. இங்கே "ஒவ்வொரு திணையைப் பற்றிய பாடல்களும், அந்தந்த நிலத்தில் உள்ள இயற்கைக் காட்சிகளைப் படம் பிடித்தது போல எடுத்துக்காட்டும். இயற்கை நிகழ்ச்சிகளை எடுத்துரைப்பதாலே இந்நூலாசிரியர் மிகவும் வல்லுநர். தமிழர் பண்பாட்டையும், பழக்க வழக்கங்கள் சிலவற்றையும் இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்."[26] என்று ஆசிரியர் சிறப்பை சாமிசிதம்பரனார் கூறியுள்ளமை காணத்தக்கதாகும்.

இதில் ஆணின் கற்புத்திறமும் சிறப்புற கூறப்பட்டு உள்ளது. பழங்காலத்தில் உடன்போக்கு என்ற ஓர் துறை இருந்தது. அதாவது, தலைவனும் தலைவியும் பெற்றோர் இருவரும், அவர்கள் காதலை ஏற்றுக் கொள்ளாதபோது தலைவியைத் தலைவன் உடன் அழைத்துச் சென்று திருமணம் செய்து கொள்வது வழக்கமாக இருந்தது. அதனை உடன்போக்கு என்று கூறுவர். சேவிலித்தாய் தலைவியைத் தேடிச் செல்வாள். எதிலே வருகின்றவர்களிடம் ஓர் ஆணையும் பெண்ணையும் பார்த்தீர்களா? என்று கேட்பாள். பழங்காத்தில் ஒரு வழக்கம் இருந்தது. ஆடவர் பிற பெண்டிரைப் பார்ப்பதில்லை. பெண்டிர் பிற ஆடவரைப் பார்ப்பதில்லை. எதிரே வந்த தலைவனிடம் செவிலி கேட்கிறாள்.

அவன்நான் சூரியன் போன்ற தண்மை ஒளியுடைய பெண்ணைக் கண்டாளாம் என்று பதில் கூறுகிறான்.

**“நண்ணீநீா் செல்மின்! நமா் அவா் ஆடவேல்**
**எண்ணிய செல்மின்! எளிது அரோ!-எண்ணிய**
**வெம்சுடா் அன்னானை யான்கண்டேன், கண்டாளாம்**
**தண்சுடா் அன்னாளைத் தான்”[27]**

மேற்கண்ட பாடல் மூலம் தலைவன் தலைவியைத் தவிர வேறொரு பெண்ணை ஏறெடுத்தும் பாராத கற்பு மாண்பு வெளிப்படுகிறது. குறிஞ்சி திணையில் உள்ள 31 பாடல்களில் மதியுடம்படுத்துவது தலைவியை காணாமல் தலைவன் தானே புலம்புவது ஆற்றாமையால், தோழியிடம் புலம்போது தலைவி அன்பின் மிகுதியால் தலைவனை பாா்க்காமல் இரவுக்குறியை தவிா்த்தல் தோழி நெறி விளக்கல் தலைவன் மடல் ஏறல் தலைவி இற்செறிப்பு தோழி, கையுறை உணா்த்தலும், ஏற்றலும் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது, நற்றாய் அறத்தொடு நிற்றல் என பல அகத்துறை கூறுகள் திணைமாலை நூற்றைம்பதில் இடம் பெற்றுள்ளன.

**மதியுடம்படுத்தல்**

தலைவன் இத்தலைவியை பாா்க்க செல்கிறான். தலைவி தோழியோடு தினைப்புனத்தை காவல் செய்துக் கொண்டிருக்கிறாள். அப்போது

**“நறைபடா சாந்தம் அறஎறிந்து நாளால்**
**உறை எதிா்ந்து வித்திய ஊழ் ஏனல், - பிறை எதிா்ந்த**
**தாமரை போல் வாள்முகத்துக் தாழ்குழலீல்-காணீரோ**
**ஏமரை போந்தன ஈண்டு”?[28]**

இவ்வாறு உரைக்கிறான். அதாவது மணம்மிக்க பூங்கொடிகள் படா்ந்து உயா்ந்த சந்தன மரங்களை வேறொடு வெட்டி, நல் நாளில் மழைபெய்யும் காலத்தை எதிா்பாா்த்து விதைத்தால் முதிா்ந்த தினைப்புனத்தை காவல் செய்யும் பிறைபோன்ற நெற்றியையும்

தாமரைமலர் போன்ற ஒளி மிக்க முகத்தையும் தாழ்ந்த கூந்தலையுடைய பெண்களே! இவ்விடத்தை நோக்கி எனது வில்லினின்றும் புறப்பட்ட அம்பு பாய்ந்த மான்கள் இங்கு வந்தனவோ? என்று தலைவன் கேட்பதைக் காண முடிகிறது. இங்கே “இல், மனை தொடர்பான சில பொதுநடைமுறைகள் இருந்ததையும் சங்க பாடல்கள் காட்டுகின்றன. பெண்ணின் ஒழுக்கம் தொடர்பாக தங்குமிடம் இன்றியமையாததாக இருந்தது. களவொழுக்கம், கற்பொழுக்கம் என்ற அகவொழுக்க நிலையில் ஆணும், பெண்ணும் தொடர்பு கொண்டபோது சில நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. பெற்றோர் அறியாது பெண் வெளியே சென்று ஆணுடன் தொடர்பு கொண்டபோது அவளைத் தாய் இல்லத்திலே தடுத்து வைத்துக் காவல் செய்யும் நடைமுறை இருந்துள்ளது.”[29] என்பதும் நோக்கத்தாய் உள்ளது.

**தலைவன் தலைவியை காணாத நெஞ்சுக்கு சொல்லுதல்**

அகமாந்தர்கள் தமக்குத்தாமே கூறுவதும், ஒருவர் மற்றொருவருக்குக் கூறுவதும், மேலே குறிக்கப்படாத தூதுப் பொருட்கள் சில கண்டு கூறுவதும் சங்கப் பாடல்களில் காணப்படும். இவற்றுள் நெஞ்சுக்குக் கூறுவதாக அமைவதும் ஒன்று. உயர்திணைப் பொருட்களேயன்றி அக்றிணைப் பொருட்களும் கூற்றினைக் கேட்பனவாக அகப்பொடல்களில் அமையும் கூற்றுக் கூறுவார் தம் நெஞ்சினை விளித்தும், முன்னிலைப்படுத்தியும் கூறுவதாகப் பாடப்பெறும். நெஞ்சுக்கு மானிடத் தன்மைகளையெல்லாம் ஏற்றிக் கூறுவதுண்டு.

தலைவி பருவம் கண்டும், பொழுது கண்டும் கண்ணுள்ளே கூறியது; மகட்போக்கிய நற்றாய் கூறியதாக மகட்போக்கிய செலிவி கூறியது என்றிவ்வாறு வரும் சில கூற்றுக்கள் தன்மைக் கூற்றுக்களாக, நாடகத்தன்மையில் தனிமொழி போல அமைவன. இவைபோல நெஞ்சுக்குக் கூறுதல், மேலோட்டமாகப் பார்க்கின்றபோது ஒருவர் கூற்றாக, தனிமொழி போலத் தோன்றினும் அவ்வாறு கூறுதற்கில்லை. நெஞ்சுக்கு கூறுதல் தனிமையில் இருந்து கூறும் கூற்றாயினும் இங்கே கேட்கும பொருளும் உண்டு. இது கேட்போர் உள்ள சிளலா இக்கூற்றிற்குறியோரே தம் நெஞ்சைக் கேட்கும் பொருளாக்குவர்.

இந்நிலை அகப்பொருள் மாந்தா் ஒருவா் பிறிதொருவருக்குக் கூறும் கூற்றினும் தனிமொழியினும் வேறுபட்டது.

நெஞ்சும் கூற்றினைக் கேட்கும் பொருளாக அமையுமேயன்றிக் கூற்றினை உடைய பொருளாகக் கற்பித்துக் கொண்டு பாடப்படுதலும் உண்டு. இவ்வகை நிலைக்கு

**“கேட்குந போலவும் கிளக்குந போலவும்**
**இயக்குந போலவும் இயங்குந போலவும்**
**அற்றிணை மருங்கின் அறையவும் படுமே”**[30]

எனவும்

**“புள்ளும் மாவும் புனரியும் கானலும்**
**உள்ளுறுத் இயன்றவும் ஒழிந்தவை பிரிவும்**
**தன்சொற் கேட்குந போலவும் தனக்கவை**
**இன்சொற் சொல்லுந போலவும் ஏவல்**
**மெய்குந போலவும் தோற்றுந போலவும்**
**மெய்குழற் கிழத்தி மொழிந்தாங் கமையும்”**[31]

எனவும் வரும் இலக்கண மரபுகள் பொருந்தக் கூறப்படும்

**“முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுதல்**
**நுனையம் உரைத்தல்…”**[32]

என்னும் தொல்காப்பியத் தொடா்களுக்கு நச்சினாா்க்கினியா் எழுதும் உரையும் இத்தன்மைக்குப் பொருந்தும்.

சங்க இலக்கியததில் நெஞ்சொடு கிளத்தல்- நெஞ்சுக்கும் சொல்லியது எனப் பாடப்பெற்ற பல பாடல்கள் காணப்படுகின்றன. இப்பாடல்களின் கீழ்ததரப்பட்டுள்ள குறிப்புகளில், ‘நெஞ்சிற்குச் சொல்லியது’, ‘நெஞ்சினைக் கழறியது’, ‘நெஞ்சிற்குச்சொல்லி செலவழுங்கியது’, ‘நெஞ்சிற்கு சொல்லிச் செலவழுங்குவாத்தது’ எனக் காணப்படுகின்றன. கூற்று வகைகளையம், கூற்று நிலைகளையும்

விரித்துரைக்கும் தொல்காப்பியர், நெஞ்சிற்கும் சொல்லியது என்று கூற்று நிகழ்வினைக் குறிப்பிடவில்லை. ஆயினும் நெஞ்சுக்குக் கூறும் வகையில் அமையும் கூற்று வகைகளும் தொல்காப்பியத்தில் இடம்பெறுகின்றன. அவை 'பாசறைப் புலம்பல்', 'விரிந்த வழிக் கலங்கள்', 'நின்று நனி பிரிவின் அஞ்சிய பையுள்', 'வேற்று நாட்டு அகல்வயின் விடுமத்தான்' போன்றன (தொல் பொருள் 102, 146) பிற்காலத்து இலக்கண நூலாகிய நம்பியகப் பொருள், நெஞ்சொடு சொல்லலைக் குறிப்பிடும்.

**"உடன்போய் மீண்ட கொடுங்குழை மடந்தை**
**பிரிவழித் தலைவனொடு அரத்தியல் பேசலும்**
**பிரிந்துழி நெஞ்சொடும் பிறரொடும் வருந்திச்**
**சொல்லலும் உரியர் சொல்லுங் காலை"**[33]

அகப்பொருட் கூறுகளை நானூறு பாடல்களில் விளக்கும் திருக்கோலையாரில் நெஞ்சொடு வகுந்தல், நெஞ்சோடு நோ்தல், நெஞ்சோடு புலத்தல், நெஞ்சோடு மறுத்தல் பற்றிய பாடல்கள் இடம் பெறுதல் காணலாம் (திருக்கோவை 273, 342, 343, 344) இவை நெஞ்சோடு கூறுகளில் அமைவன. வள்ளுவரின் திருக்குறளில் அமைந்த ஓரதிகாரம் நெஞ்சொடு கிளத்தலாகும். நெஞ்சோடு புலத்தலும் இதனோடு தொடர்புடையது.

இணைமாலை நூற்றைம்பதல் காணப்படும் குறிஞ்சித் திணை பாடல் ஒன்றில் தலைவன் தலைவியை காணாத போது தன் நெஞ்சோடு கூறுகிறார். இதனை

**"கோடாப் புகழ்மாறன் கூடல் அனையாளை**
**ஆடா அடகினும் காணேன்போர் வாடாக்**
**கருங்கொல்வேல் மன்னர் கலம் புக்க கொல்லோ**
**மருங்குல் கொம்பு அன்னாள் மயிர்?"**[34]

இப்பாடல் மூலம் காணமுடிகிறது. அதாவது மாறுபாடு அல்லாத புகழினையுடைய பாண்டியனது மதுரையைப் போன்ற தலைவியினை விளையாட்டுப் பண்ணையிலும் காணவில்லை. பூங்கொம்பு இணையைப்

போன்ற இடையையும் கூந்தலாகிய மயிர்கள், போர்களத்தில் பின்வாங்கா மேல் படையை ஏந்திய மன்னர் அணியும் முதன்மை வரையாக உள்ள முடியாக ஒன்று கூடி வளர்ந்து அவள் பேரறிவைக் காட்டினவோ என்று தலைவன் நெஞ்சோடு சொல்லிக் கொண்டான். இதன் மூலம் சங்க இலக்கிய காதல்மரபு சங்க மருவிய நூல்களிலும் தொடர்ந்துள்ளன தெரியவருகிறது. இங்கே **"காதல் உணர்வில் தலைவன் இருவேறு முரண்பட்ட எண்ண அலைகளால் துன்புறுகின்றான். முதல் நிலையில் இன்ப உணர்வுகளும், அடுத்த நிலையில் துன்ப உணர்வுகளும் தனிமொழியின் வெளியீடாக திகழ்கின்றன"**[35] எனும் கருத்திற்கிணங்க தலைவன் தலைவியரின் கூற்றுகளும் திகழ்கின்றன.

**தோழி நெறி விலக்கல்**

தலைவன் தலைவியைத் தேடி மலைக்கு வருகிறாள். அப்போது இங்கு வரவேண்டாம் என நெறி விலக்குகிறாள். இதனை

**"………… பெரு வரைமேல்**
**தேன் தேவாக்கு ஒக்கும் மலை நாட! வாரலோ,**
**வுான் தேவர் கொட்டும் வழி!"**[36]

என இவ்வரிகளில் அறியலாம்

**தலைவியின் ஆற்றாமையால் தோழியிடம் புலம்பல்**

தலைவியை காண முடியாமல் தலைவன் ஆற்றாமையில் தோழியிடம் தன் காதல் துயரினை சொல்லி புலம்பியுள்ளான். இதனை,

**"பால்ஒத்த வெள்துருவா பாய்ந்துஆடி, பல்பூப்பெய்**
**தாலொத்த ஐவனம் காப்பாள் கண்வேல் ஒத்துஎன்**
**நெஞ்சம்வாய்ப் புக்குஒழிவு காண்பானோ, காண்கொடா?**
**மேசாயற் கேநோவல் யான்"**[37]

இப்பாடல் மூலம் அறியமுடிகிறது. அதாவது பால்போன்ற வெண்மையான நீர்வீழ்ச்சிகளில் பாய்ந்து நீராடுதலைச் செய்து பலமலர்கள் பரப்பி

வைத்தாற் போன்ற மலை நெல்விளையும் புனத்தின் காவல் செய்யும் தலைவியின் கண்கள் வேல் போன்று என் நெஞ்சில் புகுந்து தங்கின. ஏன் உயிர் நீக்கம் காணவேண்டின் புறம்போகாது அங்கேயே தங்கிவிட்டன. அவள் அழகில் நான் நோயுடன் நிற்கின்றேன். அதனால் எனது ஆற்றாமையைத் தலைவியிடம் கூறுக என்று தலைவன் தோழியிடம் புலம்புவதைக் காணமுடிகிறது. மேலும், மற்றொரு பாடலில் தோழியிடம் தலைவன் பெரிய மலைப்பக்கங்கள் எங்கும் தாம் புகுந்து தேடித் தேன்முழுவதையும் நுகர்ந்து பிறவற்றைப் பொருட்படுத்தாது மலைகளைப் போன்றிருந்த யானைகளை அகப்பனத்துச் சொல்வார் உடைய கங்கையானது திருமார்புக்குத் தோற்று, நாணழிந்து, அறிவு, ஆண்மை, உயர்வு, ஒழுக்கம் ஆகிய குணங்கள் நான்கினையும் இழந்து தளர்ந்து உருகி வலிமை அழிவதற்கு எடுத்துக்காட்டாக நான் அமைந்துள்ளேன் என்று தலைவன் கூறுவதும் இங்கு நோக்கத்தக்கது. இதனை

**“நாண் அழிந்து, நல்ல நலன் அழிந்து, நைந்து உருகி,**

**ஏண் அழிதற்கு யாபடபொ னம்”**[38]

இவ்வரிகள் உணர்த்துகின்றன. இதனோடு மற்றும் ஒரு பாடலில் மணம்மிக்க குளிர்ந்த தகாமரம் வகுளமரம் என்னும் இவற்றைப் பயனற்ற புதர்கள் என விரும்பாது வேருடன் வெட்டி எறிந்து பயிர் செய்தலை விரும்பி உழுது செந்திணையை விதைக்கின்றவர்களின் தங்கையாகிய தலைவி பிறர்படும் துன்பத்திற்கு நொந்து இலங்க தலைவன் தோழியிடம் கூறியதை

**“நறுந்தண் தகரம், வகுளம், இவற்றை,**

**வெறும்புகல்போல் வேண்டாது, வேண்டி, எறிந்து உழுது**

**செந்திணை வித்துவார் தங்கை பிறர்நோய்க்கு**

**நொந்தஇனைய வல்லளோ? நோக்கு!”**[39]

இப்பாடலால் வெளிப்படுகிறது.

**தலைவன் பாங்கனிடம் புலம்பல்**

தலைவன் தம்முடைய தோழன் ஆன பாங்கனிடமும் தன்னுடைய தவிப்பை வெளிப்படுத்தி இருக்கிறான். என் வேட்டைகாலத்து விடுபெற்று வந்த விலங்கினைக் கண்டதுண்டோ என்று கேட்டுக்கொண்டு தனியாகத் தினைப்புனத்திற்குச் சென்றேன். சென்ற இடத்தில் அழகுடைய பூங்குழலாள் என் திறமையைக் கண்டு என் மனத்தை தனக்கு இடமாகக் கொண்டார். இது என்ன மாயம்? என்று வியப்பாக உள்ளதாகத் தன் தோழனிடம் தலைவன் தன் இயலாமையை வெளிப்படுத்துவதனை அறியமுடிகிறது.

இதனை

**"வஞ்சமே என்னும் வகைத்தால், ஓர் மா வினாய்,**
**தஞ்கம் தமியனாய்ச் சென்றேன், என் நெஞ்சை,**
**நலம் கொண்டு ஆர் பூங்குழலாள், நன்று ஆயத்து அன்று, என்**
**வலம் கொண்டாள், கொண்டாள் இடம்"[40]**

இப்பாடலால் அறிய முடிகிறது.

**மடலேறுதல்**

தலைவி தனக்கு கிடைக்க பச்சத்தில் மடல் ஏறுதலை தேர்ந்தெடுத்து உள்ளான். இவ்வழக்கம் சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. தோல்காப்பியமும் இதனை பெருந்திணை பிரிவில் கூறியுள்ளது தொல்காப்பியர்,

**"ஏறிய மடற்றிம் இளமை தீர்திறம்**
**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்**
**மிக்க காமத்து மடலொடு தொகைக்கும்**
**செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே"[41]**

எனக் கூறுகிறார்.

பெருந்திணை நான்கு துறைகள் கொண்டது.

1. காதலியைப் பெறாத நிலையில், காதலன் மடலேறி செல்லுதல்

2. கட்டிளமைக் காலத்து இன்பம் துய்க்காது கணவன் நெடுங்காலம் பிரிந்திருத்தல்
3. எவ்வனையானும் தேறுதல் அடையாமல் மனைவி காமம் முற்றுதல்
4. காமம் கொண்ட மனைவியின் துணிவும் செயல்

இதில் இந்நூலில் முதலாவது துறையாக விளங்கும் காதலியை பெறாத நிலையில் காதலன் மடலேறுதல் என்னும் உணர்வு நிலையில் பாடப்பட்டுள்ளது. இதனை

**"நாள்நாகம் நாறும் நனைகுழலாள் நல்கிதன்**
**பூண்ஆகம் நேர்வுஅளவும் போகாது, பூண்ஆகம்**
**என்றேன், இரண்டாவது உண்டோ? மடல்மாமேல்**
**நின்றேன், மறுகிடையே நேர்ந்து"[42]**

இப்பாடலால் அறிய முடிகிறது. அதாவது அன்று புத்த சுரபுன்னை மலரைமணக்கும் படி தலையில் அணிந்துக் கொள்ளத்தலைவி அவளுடையஅன்பை எனக்குத்தந்து அவளுடைய மார்பினையும் எனக்குக் கொடுத்தார். அதனால் அவளைப்பெறாமல் நான் இருக்க இயலாது. ஆதன் காரணமாக பனைமடலால் செய்யப்பெற்ற குதிரை மீது அமர்ந்து அவள் இருக்கும் தெரு வழியே மடலேறிச் செல்வது என்று முடிவு செய்துள்ளேன் எனத் தலைவன் கூறுவர் இங்கு நோக்கத்தக்கதாகும்.

**தோழி கையுறை மறுத்தலும் ஏற்றலும்**

கையுறை என்பது தெய்வத்திற்கு காணிக்கையாக கொடுக்கப்படும் பொருளாக மட்டும் விளங்கவில்லை அன்பின் மிகுதியால் ஒருவருக்கு கொடுக்கப்படும் பொருள் கையுறை ஆகும். இங்கே தலைவனும் தலைவியைக் கைப்பிடிப்பதற்காக கையுறை அணிகிறான். இங்கே கையுறை என்பது தலைவியிடம் உள்ள அன்பை வெளிப்படுத்தும் வகையில் தலைவன் அன்பு பாராட்டி அளிக்கப்படும் பூ, தழை முதலியனவும் கையுறை ஆகும்.

தலைவன் தலைவிக்காக கையில் கையுறையோடு தோழியை வந்து சந்திக்கிறான். அப்போது அவன் என் தமையன் மார்கள் புலிபோன்ற வளமையும் கொடுமையும் மிக்கவர்கள். நீயும் வலிமைமிக்க

பெரும் பலியை ஒத்துள்ளாய். அதனால் நீ கொணர்ந்த தழையை இன்று ஏற்றுக் கொள்ள இயலாது. நாளை கொண்டு வந்தால் ஏற்றுக் கொள்ளலாம் என கையுறை வாங்க மறுக்கிறாள். இதனை

**“அன்னையால் நீயும், அருந்தழையாம் ஏலாமைக்கு**

**என்னையோ? நாளை எளிது”[43]**

எனக் கூறுவதை காண முடிகிறது. அடுத்தநாள் கொண்டு வந்த கையுறையை வாடாமல் தான் தலைவியிடம் சேர்ப்பதாகவும் கூறுகிறாள். இதனை

**“அண்கண்ண வாடாமை, யான் நல்ல என்றால்தான்**

**உண்கண்ணி வாடாள் உடன்று”[44]**

இப்பாடல் வரிகளால் உறுதிப்படுகிறது.

**தோழி தலைவியிடம் தலைவனுக்காக குறை நயத்தல்**

தோழி தன் கூறியவாறே தலைவியிடம் தலைவனை இணைக்கும் பொருட்டு குறை நயத்தலை மேற்கொள்கிறாள். இதனை குளிர்ந்த மலைநாட்டுத் தலைவன் சொல்லவில்லை. ஆனால் அடிக்கடி பூந்தழைகளைக் கொண்டு வருகின்றான். உன்னால் முடிய கூடிய செயல் என்று நினைத்து மலைகளிலிருந்து மர நிழலிலும் சிறிது பொழுது தங்கியிருக்கின்றான். இதனால் வந்தவன் மனக்கருத்து எதுவாக இருக்கலாம் என்று தோழி தலைவியை கேட்கிறாள். இதனை,

**“தன்குறை ஈது என்னான், தழை கொணரும் தண் சிலம்பன்**

**நின்குறை என்னும் நினைப்பினனாய், பொன் குறையும்**

**நாள் வேங்கை நீழலுள் நண்ணான் எவன் கொலோ**

**கோள் வேங்கை அன்னான் குறிப்பு?”[45]**

என்பதன் மூலம் உறுதிப்படுகிறது.

**பகற்குறிக்கான இடம்**

பகலில் தலைவியை தலைவன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திக்கும் இடமே பகற்குறி ஆகும். பகற்குறிக்கான இடத்தை தோழி தலைவனிடம் கூறுவதாக கீழ்க்கண்ட பாடல் அமைந்துள்ளது.

**“பலா எழுத்த பால்வருக்கைப் பாத்தி அதன்நேர்**
**நிலா எழுந்த வார்மணல் நீடிச் சுலா எழுந்து,**
**கான்யாறு கால் கீத்த காந்தள் அம்பூந் தண் பொதும்பர்**
**தான் நாறத் தாழ்ந்த இடம்”**[46]

எனப் பாடல் பாடப்பட்டுள்ளது. இப்பாடலானது உயர்ந்த பலா மரங்களின் பக்கத்தில் வருகைப் பலாமரங்களால் பகுத்துப் பிரிக்கப்பெற்ற பாலத் தோப்பின் நடுவே நிலவொளி காணும் மிகுந்த மணல் உயர்ந்து வட்டமாய்ப் பூக்கள் மிகுந்து காணப்பெறும் குளிர்ந்த சோலையில் நானும் தலைவியும் பகற் பொழுதில் தங்கி விளையாடும் இடமாகும் என்று தோழி தலைவனிடம் கூறுவதை காணமுடிகிறது.

**அன்பின் மிகுதியால் இரவுக் குறியைத் தவிர்த்தல்**

தலைவன் தலைவியை இரவிலே சந்திக்க வருகிறான். அவன் வரும் வழியில் பல அபாயங்கள் நிறைந்துள்ளன. அவன் மீது கொண்டுள்ள அன்பால் அவனுக்கு ஏதும் நேரக்கூடாது என்று அவள் இரவுக்குறியை தவிர்த்தலை காணமுடிகிறது.

இதனை,

**“மால் நீலம் மாண்ட துகில் உமிழ்வது ஒத்து, அருவி**
**மால் நீல மால் வரை நாட! கேள் மா நீலம்**
**காயும் வேற் கண்ணாள், கனை இருளில் நீ வர**
**ஆயுமோ? மன்ற நீ ஆய்!”**[47]

எனும் பாடல் வெளிக்காட்டி நிற்கிறது. மலை நாட்டவனே நான் சொல்வதை கேட்பாயாக. நீல மலர்களையும் வெறுத்து ஒதுக்கும் படியான நிலையை நீல நிறமுடைய வேல் போன்ற கண்களையுடைய

தலைவி நீ இரவுக்குறியில் வரும்போது வருகின்ற துன்பத்தினை ஆராய்ந்து அவள் துன்புறுகின்றாள் என்பதை நீ எண்ணி பார்க்க வேண்டும் என்று தோழி தலைவனிடம் கூறுவதை காணமுடிகிறது. மற்றும் ஒரு பாடலில் குற்றமில்லாத வளங்களையுடையதும், கல் என்ற ஓசையுடன் ஒலிக்கும் அருவிகள் பாயும், மலைநாட்டுத் தலைவனே..! ஒப்பற்றவனாகிய நீ இரவில் வளமையான வில்லைத் துணையாகக்கொண்டு வருகின்ற வழிகள் மிகவும் அரியனவாய் இருக்கின்றன. யானைகள் திரிகின்ற அக்காட்டு வழி நீ வராதே என்று தோழி தலைவனிடம் வேண்டுவதாக அமைந்துள்ளது. இதனை,

**"இரவுஇல் வளமலைக் கல் அருவி நாட**
**உரவில் வலியாய், ஒரு நீ, இரவின்**
**வழிகள் தாம் சாலவர அரிய, வாரல்**
**இழிகடா யானை எதிர்!"**[48]

இப்பாடல் வெளிப்படுத்தி நிற்கிறது. இங்கே "வரைவுகடாவித் திருமணம் செய்துகொள்ள வேண்டுவதும், பகற்குறி இரவுக்குறி மறுத்துரைப்பதன் மூலம் திருமணத்தை வலியுறுத்துவதும், நொதுமலர் வரவுணர்த்தி வரைவுகடாவுவதும், வரையாது வருபவரை வரைந்து கொள்ளச் சொல்லி அறிவுறுத்துவதுமான தோழியின் செயற்பாடுகள் அனைத்தும் காதலைக் கற்பாக்க முயலும் செயற்பாடுகளாகவே உள்ளன."[49] எனும் இக்கருத்து தமிழரின் அகவாழ்வியலை எடுத்தியம்புகிறது.

**இற்செறிப்பு**

தலைவியினுடைய காதல் அவளுடைய குடும்பத்தாருக்கு தெரியும் நிலையில் அவள் இச்செறிக்கபடுகிறாள். இதனை,

**"சாந்தம் எறிந்து உழுத சாரல் சிறுதிணை**
**சாந்தம் எறிந்த இதண் மிசை, சாந்தம்**
**கமழக் கிளாகடியும் கார்மயில் அன்னாள்**
**இமிழ, கிள எழா ஆர்த்து"**[50]

எனும் பாடல் வெளிப்படுத்தி நிற்கிறது. அதாவது சந்தன மரங்களை வெட்டி உழுது பயிர் செய்யப்பெற்ற திணைபுனத்து சந்தனக் கட்டைகளைக் கால்களாகக் கொண்டு அமைத்த பரண்மீதில் சந்தனக் குழம்பு உடம்பில் மணக்கும் படி இருந்த கிளிகளை விரட்டிய கார் காலத்தில் மயிலைப் போன்ற சாயலையுடைய எம் தலைவி வாய்திறந்து ஆலோலோ என்று கூறியும் கிளிக்கூட்டம் செல்வதில்லை. அதனால் அவளை வீட்டிற்கு அழைத்துச் செல்கின்றனர் என்று தோழி தலைவனிடம் கூறுவதைக் காணமுடிகிறது.

**தோழி செவிலித்தாயிடம் அறத்தொடு நிற்றல்**

அறம் எனப்படுவது பல பண்புகளையும் தழுவிய பொதுச் சொல்லாயினும் ஈண்டு பெண்ணுக்கு உரிய முதற் பண்பான கற்பையே குறிக்கும். கற்பென்னும் கடைப்பிடியில் நின்று களவொழுக்கத்தை பெற்றோருக்கு வெளிப்படுத்தல் என்பது இத்துறையின் பொருளாகும். பெற்றோருக்கு அறிவித்தல் தோழியின் நோக்கமில்லை. அங்ஙனம் அறிவிப்புழி, தலைவி ஏற்கனவே கற்பு நெறிப்பட்டு விட்டாள் என்பதை முதன்மையாக வலியுறுத்துவதே அவள் நோக்கமாகும்.

இந்நன்னோக்கம் சங்கப் புலவர்களின் நெஞ்சைப் பிணிந்து ஆண்மை சென்ற பல பாடல்களை உருவாகியுள்ளது. வேறு வழியெல்லாம் பயனற்றுப் போன காலை, அறத்தொடு நிற்றல் என்னும் நேர்நெறியைத் தலைவியும் தோழியும் மேற்கொள்ள நாணமும், கற்பும் ஒருவந்தம் காக்கத்தரும் இரு பேரொழுக்கங்கள் ஆயினும், குழந்தை இறப்பினும் தாய் பிழைக்க என்பது போல, நாண் விட்டேனும் கற்பைத் தலையாகப் போற்றியொழுக வேண்டும் என்பது தமிழ் முன்னோர் கண்ட மனையியல்,

**“உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்று”**[51]

நாணத்தைக் காக்க உயிர்விடுக. காற்பைக் காக்க நாணத்தை விடுக’ என்று தமிழ்த்துறை முற்றிய தொல்காப்பியர் தெளிவிப்பவர். அறத்தொடு நிற்பது பெற்றோர்க்கு முன்பேயாயினும், அவ்வளவிற்கு நாணம் என்னும்

அணியைக் கழற்றி வைக்க வேண்டுமாதாலால், அறத்தொடு நில்லா வகை தோழி மணவினை முடிக்க முயல்வாள். களவுச் சுவடு படாமல் பல தீமைகளை தோன்றுவிதற்கு முன்னரே தலைவன் வரைந்து கொள்ள வேண்டும் என்பது தோழியின் ஆசை. இரவுக்குறிக்கண் வந்த தலை மகளைக் கண்ட தோழி, மலைநாடனே.. இனி மணந்து கொண்டால் என்ன? மான் கூட்டமும் மிளகுக் கொடியும் படரும் மலைப்பகுதியில் நீ நிகழ்த்திய கலவொழுக்கத்தை எம் சுற்றத்தார் அறியாரன்றோ? அவர் கொள்வையாயின், நின்னை முன்பின் அறியாதார் போல நாங்கள் நடந்து கொள்வோம். இவளும் முதன் முதலில் நின்னைக் காண்பவள் போல நாணல் அடைவாள். அவள் பொய்யாக நாணிக் கோணி நிற்பதைக் கண்டு நாங்கள் மகிழ்வோம்.

**“வரையின் எவனோ வான்தோய் வெற்ப**
**கணக்கலை இருக்கும் கறியிவர் சிலம்பின்**
**மணப்பருங் காமம் புணர்ந்தமை யறியார்**
**தொன்றியல் மரபின் மன்றல் அயரப்**
**பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி**
**நொதுமல் விருந்தினம் போலவாவள்**
**புதுநாண் ஒடுக்கமும் காண்குவம் யாமே”**[52]

என்று தன் ஆசையைச் சொல்லுதல் போல அறிவு சொல்லுதல் காண்க. அகத்திணை இலக்கியத்துத் தோழி வரம்பற்ற உரிமையுடையவள்; தலைவியின் உரிமையையும் செயலையும் தன் உரிமையும் செயலுமாகக் கொள்ளும் உறைவுடையவள் எனினும், தலைவியின் இசைவின்றி அறத்தோடு நிற்கும் உரிமை மட்டும் தோழிக்கு இல்லை. இவ்வரம்பை

**“அறத்தோடு நிற்கும் காலத் தன்றி**
**அறத்தியல் மரபியள் தோழி என்ப”**[53]

என்னும் தொல்காப்பியயத்தால் (நூ.1151) அறிகின்றோம். ஏன்? அறத்தோடு நிற்பதால் நாணத்துக்கு இழுக்கு வரும் அந்நாண் இழுக்குக்கு வாயவள் தலைவர். கற்பின் பொருட்டு நாணக் குறைவு

வரினும், வருக என்று துணிய வேண்டியவள். அவள் அத்துணிவை அறிந்த பின்னரே தோழி அறத்தொடு நிற்றலை மேற்கொள்ள வேண்டும்.

திணைமாலை நூற்றைம்பதில் தோழி செவிலித்தாயிக்கு அறத்தொடு நிற்பதாக மூன்று பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அதில் யானையிடமிருந்து தலைவியை காப்பாற்றியதற்காக தலைவனையே காதல் செய்து மணக்கும் மனதுடையவர்களாக இருதலைவியரும் கடும் புனலிலிருந்து தன்னை காப்பாற்றியமைக்காக அத்தலைவனையே மணக்க உந்திபூண்ட ஒருத்தலைவியையும் காணமுடிகிறது. அதில் உயிரை காப்பது பேரறம் என்று எண்ணி பரணில் தன்னைக் காத்துகொள்ள இயலாத நிலையில் இருந்த தலைவியை தாக்க வந்த யானையைத் தன் அம்பினால் எய்து விலகியோடச் செய்து எம் தலைவியைக் காப்பாற்றினான். பின்பு அவன் அனிச்சமலரையும் சுனையில் மலராத நீலோற்பது மலர்களையும் ஒளிமிக்க அசோக மலரையும் கொண்டு வந்து கொடுத்து, எம் தலைவியின் கூந்தலில் அழகாக புனைந்தான். அத்தகைய உதவி செய்த ஆணழகன் எம் தலைவியின் அகத்தே சிறப்புற்று விளங்குகின்றான் என்று கூறி தோழி அறத்தொடு நிற்கிறாள். இதனை,

**“சுள்ளி சுனைநீலம் சோபா லிகை செயலை**
**அள்ளி அளக்கத்தின் மேல் ஆய்ந்து - தெள்ளி**
**இதனால் கடி நடுங்கா ஈர்ங்கடா யானை**
**உதணால் கடிந்தான் ஊன்”**[54]

என்னும் இப்பாடல் வழி அறத்தோடு நின்றலின் வெளிப்படுகிறது. மற்றும் ஒரு பாடலும் இதே போன்று செவிலிக்கு தோழி அறத்தொடு நின்றமையை வெளிக்காட்டி நிற்கின்றது.

வருக்கைப் பலமரங்கள் நிறைந்த மலையில் நானும் என் தலைவியும் திணைப்புனத்திற் பரண்மேல் இருந்தோம். அப்ஜபோது எங்களுக்கு இடையூராகப் பெரிய துதிக்கையினையும் மதநீரையும் கொண்ட யானை வந்தது. அதனால் ஏற்படும் ஒன்பத்தினன்றும் காளைப் போன்ற வருவன் எங்களைப் பாதுகாத்தான் காப்பாற்றினான். அவனைத்

தவிர வேறு எவர்க்கும் தலைவியின் தோள்கள் சீண்டுவதற்கு உரியன அல்ல என்று தோழி செவிலியிடம் கூறுவது புலப்படுகிறது. இதனை,

**“வருக்கை வளமலையுள், மாதரும் யானும்**
**இருக்கை இதண்மேலேம் ஆகப் படுக்கைக்**
**கடாஅம்மால் யானை கடிந்தானை அல்லால்**
**தொடா அவால், என் தோழி தோள்”[55]**

இப்பாடலின் மூலம் அறிய முடிகின்றது. அதோடு மற்றொரு தலைவி தன்னை கடும்புனலிலிருந்து தன் உயிரைக் காப்பாற்றிய தலைவனையே மணப்பாள் என்று அவளுடைய நன்றி குணத்தையும் உள்ளத் தூய்மையினையும் வெளிப்படுத்தி தோழி அறத்தொடு நின்றமை வெளிப்படுகிறது. இதனை,

**“வேலனார் போக மறிவிடுக்க வேரியும்**
**பாலனார்க்கு ஈக - பழியிலாள் பாலால்**
**கடும்புனலின் நீந்தி, கரை வைத்தாற்கு அல்லால்**
**நெடும் பணைப்போல் தோள்நேராள் நின்று”[56]**

இதனை இப்பாடல் வழி அறிய முடிகிறது. அதாவது வெறியாடும் பொருட்டு வரவழைத்த வேலேந்திய பூசாரியைத் திருப்பிஅனுப்புக. பலி கொடுக்கக் கொணர்ந்த ஆட்டுக் குட்டியினை விட்டு விடுக. பூசைக்குக் கொண்டுவந்த கள்ளை அதனை பருகுகின்ற மக்களிடம் கொடுத்துவிடுக. பழியில்லாத என் தலைவி ஊழ்வினையால் கடும்புனலுள் பாய்ந்து தன்னை எழுப்பிக் கரையின்கண் சேர்த்த காதலனுக்கு அல்லாமல் வேறுயவர்க்கும் தன் மூங்கில் போன்ற தோள்களைத் தரமாட்டாள் என்று தோழி செவிலியிடம் கூறி, அவளுடைய தூயத் தன்மையையும் தமிழரின் கலாச்சாரத்தையும் வெளிப்படுத்தும் விதமாக அறத்தொடு நிற்பது நம் அகவாழ்வியலை போற்றுவதாக அமைந்துள்ளது.

**நற்றாய் அறத்தொடு நிற்றல் :**

தலைவன் தலைவியினைக் காதல் செய்கிறான். அப்பொழுது சான்றோரோடு பெண் கேட்கின்றனர். அப்போது நற்றாய்,

**“வாடாத சான்றோர் வரவுஎதிர் கொண்டிராய்க்**
**கோடாது நீர் கொடுப்பின் அல்லது - கோடா**
**எழிலும் முலையும் இரண்டிற்கும் முந்நீர்ப்**
**பொழிலும் விலைஆமோ போந்து?”**[57]

எனக் கூறுகிறாள். அதாவது தலைவியை திருமணம் செய்துகொள்ள வேண்டி தலைவனைச் சார்ந்த சான்றோர்கள் வந்தனர். திருமணத்தின் பெண்ணை நீர் வார்த்துக்கொடுத்தது என்பதைத் தவிர, இப்பெண்ணின் தளர்ச்சியடையாத அழகுக்கும், மார்பினுக்கும் இந்த இரண்டுக்கும் கடல் சூழ்ந்த இவ்வுலகத்தையே கொடுத்தாலும் அது விலையாகுமா? பொருந்தாது என நற்றாய் அறத்தோடு நிற்றலை அறிய முடிகின்றது.

திணைமாலை நூற்றைம்பது என்னும் இந்நூலில் தமிழரின் அகவாழ்வியல் சிறப்புடன் விளங்குவதை உய்த்துணர முடிகிறது. தலைவன், தலைவியின் காதல், அவர்களின் மன உறுதி, தலைவி பேசாத பொழுது தலைவனின் காதல் உள்ளம் படும்பாடு தோழி காதலை கையுறை பெற்று சேர்த்து வைக்கும் குணப்பாங்கு அன்பின் மிகுதியால் தலைவனுக்கும் ஏதும் துயரம் நேர கூடாது என்று தலைவி இரவுக்குறியை தவிர்த்தல் தோழி செவிலிக்கு அறத்தோடு நிற்கும் நல்ல உயர்ந்த குணப்பாங்கு நற்றாய் அறத்தொடு நிற்கும் குணப்பங்கு தன்னை ஆபத்திலிருந்து உயிரை காப்பாற்றிய நன்றியுணர்வோடு கூடிய காதல் என்னும் உறுதியான ஒழுக்கம் கொண்ட தலைவிகள் என தமிழர் அகவாழ்வியலை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தி இந்நூல் நிற்கிறது.

### கைந்நிலை

இந்நூலின் ஆசிரியர் புல்லங்காடனார். இந்நூல் ஐந்திணை அறுபது என்று வழங்கும் நிலையில் உள்ள நூலாகும். ஐந்திணைப் பற்றிய நூல். அறுபது பாடல்கள் உடைய நூல். இந்நூல் செய்யூட்களில் 18 பாடல்கள் சிதைந்துள்ளன. குறிஞ்சித்திணையில் 12 பாடல்கள் உள்ளன. அதில் 9 பாடல்கள் தலைவனைப் பிரிந்து தலைவி வாட்டம் கொண்டு புலம்புவதாக அவனை எண்ணி கலங்குவதாக பாடப்பட்டுள்ளன. முதல் பாடலில் மலைநாட்டு தலைவன் என்னை சேர்ந்தான். இங்கு

இல்லாதவனாகி என்னை கைவிட்டு பிரிந்து சென்றான். அதனால் என்மேனி பசைந்து அழகு இழந்தது என்று புலம்புகின்றாள் இதனை,

**“கானக நாடன் கலந்தான் இலன் என்று**

**மேனி சிதையும் பசந்து”**[58]

என்று கூறுகிறாள். அடுத்த பாடலிலேயே கள்ள மனம் கொண்ட நம் மலைநாட்டுத் தலைவன் இங்கு வராமல் இருப்பானோ? என்று என் நெஞ்சம் நடுங்கி வருந்துகின்றது என்று தோழியிடம் கூறுவதை,

**“வஞ்ச மலை நாடன் வாரான் கொல்? - தோழி! என்**

**நெஞ்சம் நடுங்கி வரும்”**[59]

இப்பாடல் வரிமூலம் அறியமுடிகின்றது. மேலும் மற்றொரு பாடலில்,

**“பாசம் பட்டு ஓடும் படுகல் மலை நாடற்கு**

**ஆசையின் தேம்பும் என் நெஞ்சு”**[60]

என தலைவி தோழியிடம் கூறுகின்றாள். அருவிநீர் ஓடுகின்ற மலைநாட்டுத் தலைவன் மீதுள்ள அன்பு காரணமாக என் மனம் அவன் காலம் நீட்டிப்பானோ என்று வருந்துகின்றது. மேலும் அவள் தலைவன் தன்னோடு இயற்கை புணர்ச்சியில் கலந்திருந்தபோது தேன் கலந்த சொற்களைக் கூறி என்னைத் தெளிவித்து பின்னர் அவற்றை எண்ணாது மறந்து விடுவானோ என தோழியிடம் கூறுகிறாள்.

மேலும் அவள் தலைவன் என் தோளோடு சேர்ந்திருந்த இன்பம் இப்போது நரகத்தில் இருப்பது போல இருக்கின்றது (ப.5) என்று புலம்புகின்றாள். மேலும் அவனால் என் கை வளையல்கள் கழன்று நெகிழ்ந்து விழுகின்றன, அவன் வந்தால் மட்டுமே பிரிவாற்றாமையாகிய நோய் குறையும். மேலும் அவர்நம் இன்பத்தை வெறுத்து விட்டதை போல தோன்றுகிறது என்று புலம்புகின்றாள். இவ்வாறு கூடலுக்குரிய இத்திணையில் பிரிவையும் பிரிவினால் உண்டான துயரையும் தோழியிடம் கூறுகிறாள் தலைவி.

பத்தாவது பாடலில்தான் தோழி, தலைவியை ஆற்றுப்படுத்தும் விதமாக நல்லதொரு செய்தியை கூறுகிறாள். தோழி, பொன் போன்ற மலர்கொத்துக்களை உடைய வேங்கை மரங்கள் நிறைந்திருக்கும் காடுகள் சூழ்ந்த நம் மலைநாட்டுத் தலைவன் இரவில் மின்னல் ஒளியை வீசும் வேலினை ஏந்தி இப்போது வருவான். அதனால் என் கண் இமைகள் உறங்காதிருக்கின்றன எனத் தலைவி தோழியிடம் இரவுக்குறி பற்றி பேசினாள் என்பதை,

**"பொன் இணர் வேங்கை புணம் சூழ்மலை நாடன்**
**மின்னின் அனைய வேல் ஏந்தி இரவினுள்**
**இன்னே வரும் கண்டாய் - தோழி! இடையாமத்து**
**என்னை இமை பொருமாறு?"**[61]

இப்பாடல் வெளிப்படுத்துகின்றது. மேலும் தலைவி அவளிடம் நம் மலைநாட்டுத் தலைவன் நம்மிடம் சொற்கள் சில பேசவே வருகின்றான் (ப.11) எனவும் கூறுகின்றாள். மேலும் இறுதியாக தலைவன் வருவதை புலவர் திணைக்கு ஏற்ப நிறைவு செய்துள்ளார்.

**"நாகநறுமலர் நாள் வேங்கைப் பூ விரவி**
**கேசம் அணிந்த கிளர் எழிலோள் ஆக**
**முடியும் கொல்? என்று முனிவான் ஒருவன்**
**வடிவேல் கை ஏந்தி வரும்"**[62]

எனும் இப்பாடல் குறிஞ்சி திணைக்கான கூடலை அகமரபு பிறழாமல் நிறைவு செய்கிறது. அதாவது புன்னையில் மணம் மிக்க மலரையும் அன்று அலர்ந்த வேங்கை மலரையும் ஒன்று சேர்த்து கலந்து தம் கூந்தலுக்கும், மார்புக்கும் அணிந்துள்ள தலைவியின் உள்ளம் வருந்துமா? என்று ஐயம் கொண்டு தலைவன் தன் உயிரையும் வெறுத்து தலைவியின் உயிரை காப்பதற்கு இரவில் கூர்மையான வேலை எறிந்து வருகின்றான், என்பதன் மூலம் குறிஞ்சித் திணைக்கான ஒழுக்கம் அமைந்து விடுவதை காணமுடிகிறது. இங்கே "குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடமும் ஆகும். ஆனால் அங்குள்ள ஆண் பெண் உறவின் தன்மை என்ன? புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

ஆகும். அதாவது குறிஞ்சிப் பிரதேசத்தில் வாழும் சமூகம் ஒரு குறிப்பிட்ட அளவு சமூக கட்டமைப்பும் சமூக ஒழுங்கமைப்பும் கொண்ட ஒரு பிரதேசமாக இருந்திருக்க முடியாது. தாய், தகப்பன், பெற்றோர், பிள்ளைகள் என்ற கருநிலைக் குடும்ப உறவு இல்லாமல் இல்லை. தங்களுடைய ஐந்திணை மரபில் குறிஞ்சிக்கு புணர்தல் உரியது என்பர். புணர் என்பதற்கு நாங்கள் கொள்ளும் கருத்து இணைதல், சேர்தல் என்பதாகும். அதாவது புணர்தல் எனும் பொழுது இரண்டு விடயங்கள் அல்லது இருவர் ஒன்றாக இயங்கும் நிலையையே கருதுகின்றோம்."[63] எனும் கருத்து நோக்கத்தக்கதாகும்.

**புறவாழ்வியல்**

சங்கம் மருவிய கால இலக்கியங்களில் குறிஞ்சித் திணைப் பாடல்களால் புறவாழ்வியலும் உவமையாகவோ பிறவழியாகவோ வெளிப்பட்டு நிற்கின்றன.

**திணைப்புனம்**

திணைப்புனத்தை காத்தல் முக்கிய தொழிலாக குறிஞ்சி நிலமக்கள் செய்துள்ளனர். தொழில் நீண்ட திணைக் கதிர்களை வளைந்த வாயினை உடைய கிளிகள் கவர்ந்து செல்லாதிருக்க, என் ஐயன்மார் தினைப்புன காவலில் என்னை நிறுத்தினார் என தலைவி கூறுகிறாள். இதன் மூலம் பெண்கள் திணைபுன காவலை மேற்கொண்டமை புலனாகிறது. இதனை,

**"வார்குரல் ஏனல்வளை வாய்க்கிளி கவரும்**
**நீரால் தெளி திகழ் கான்நாடன் கேண்மையே"**[64]

என்னும் இவ்வரிகளால் அறிய முடிகிறது.

தோழி திணைப்புனம் முற்றியதன் காரணமாக திணைபுனத்தை காவல் செய்கின்ற வேலையை நாங்கள் கைவிட்டோம் என கூறுகிறாள். இதனை,

**"மால்வரை வெற்ப வணங்கு குரல் எனல்**
**காவல் இயற்கை ஒழிந்தோம் யாம்"**[65]

என கூறுவதை காண முடிகிறது.

**மரம் வெட்டி உழவுத்தொழில் புரிதல்**

மேகங்கள் படிந்திருக்கும் சந்தன மரங்கள், விசை மரங்கள், வேங்கை மரங்கள் வயிரம் பாய்ந்த அகில் மரங்கள், தேவர் உலகில் எட்டி நிற்கும் சுரபுன்னை மரங்கள் இவற்றை எல்லாம் வெட்டி உழுது திணைப்பயிர் செய்பவராகிய மலைநாட்டவர்கள் எனும் அவர்களுடைய உழவுத் தொழிலையும் குறிஞ்சி திணை பாடல்கள் பதிவு செய்துள்ளன. இதனை,

**"மேகம் தோய் சாந்தம் விசைதிமிசு, காழ் அகில்**
**நாகம் தோய் நாகம் என இவற்றைப் போக**
**எறிந்து உழுவார்"[66]**

இவ்வரிகளால் அறியலாம். மேலும் திணைமாலை நூற்றைம்பதே மரங்களை அழித்து விவசாயம் செய்ததை மற்றொரு பாடலிலும் குறிப்பிட்டுள்ளது.

**"நறுந்தண் தகரம், வகுளம் இவற்றை**
**வெறும்புதல் போல் வேண்டாது வேண்டி எறிந்து உழுது**
**செந்தினை வித்துவார்"[67]**

எனும் இப்பாடலும் மணமிக்க குளிர்ந்த தகரமரம், வகுள மரம் எனும் இவற்றைப் பயனற்ற புதர்கள் என விரும்பாது வேருடன் வெட்டி எறிந்து பயிர் செய்தலை விரும்பி உழுது செந்திணையை விதைக்கின்றவர்கள் என அவர்கள் செய்த உழவுத்தொழிலைக் குறிப்பிடுகின்றது. மேலும் சந்தன மரங்களை வெட்டி உழவுத் தொழில் செய்தமையும் தெரிய வருகின்றது. இதனை,

**"நறைபடர் சாந்தம் அறஎறிந்து நாளால்**
**உறை எதிர்ந்து வித்திய ஊழ் ஏனல்"[68]**

இப்பாடல் வரிகளால் அறியலாம். இங்கே **“மனித குடியிருப்புக்களின் வளர்ச்சி முற்றிலுமாகச் சுற்றுச்சூழல் அம்சங்களைச் சார்ந்தமைகிறது என்பதைத் திணை மரபு நமக்கு உணர்த்துகிறது”**[69]என்பர்.

**நீர் நிலைகள்**

நீர் நிலைகளைப் பெருக்கி அதை பாதுகாத்து வளமான வாழ்வை மேற்கொண்டமையும் புலப்படுகிறது.

**”சான்றவர் கேண்மை சிதைவு இன்றாய், ஊன்றி**
**வலி ஆகி பின்னும் பயக்கும், மெலிவு இல்**
**கயம் திகழ் சோலை மலை நாடன் கேண்மை**
**நயம் திகழும் என்னும் என் நெஞ்சு”**[70]

எனும் இப்பாடல் தோழி சான்றோரின் நட்பு சிதைவு இல்லாமல் நிலைத்து நின்று வலிமையுடன் பலவகை நன்மைகளைத் தரும். அதுபோன்று நீர்நிலைகளால் வளமாக காணப்படும் சோலைக்கள் சூழ்ந்த மலைநாட்டுத் தலைவனின் நட்பு குறைவின்றி இன்பம் பயக்கும் என என் நெஞ்சம் நினைக்கிறது என்று தலைவி தலைவி தலைவனின் அன்பை குறைத்து பேசிய தோழியிடம் அவன் சிறந்த பண்புகளை எடுத்துகூறினாள்.

**விலங்குகளை அகப்படுத்துதல்**

விலங்குகளை பழந்தமிழர்கள் வீரத்தோடு வேட்டையாடியும் உயிரோடு பிடித்தும் அகப்படுத்தியுள்ளனர். அதனை சங்க மருவிய கால இலக்கியங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. திணைமாலை நூற்றைம்பது யானைகளை பிடித்து அகப்படுத்தியமைப் பற்றி பதிவு செய்துள்ளது.

**“பெருமலை தாம்நாடித் தேன் துய்ந்துப் பேணாது**
**அருமலை மாய்க்குமவர்”**[71]

எனும் இவ்வரிகள் யானைகளை அகப்படுத்தியமையை கூறுகிறது. பெரிய மலைப்பக்கங்கள் எங்கும் தாம் புகுந்துத்தேடி தேன் முழுவதையும் நுகர்ந்துப் பிறவற்றை பொருட்படுத்தாது மலைகளை போன்றிருந்த

யானைகளை அகப்படுத்தி கொள்வார் என்பதன் வாயிலாக நமக்கு புலப்படுகிறது. மேலும் மற்றொரு பாடலில் கொல்லும் தன்மையுடைய யானையின் தந்தங்களையும் கொலை புரியும் தொழிலை செய்யும் புலியின் தோல்களையும் நம் யானைப் போன்ற உன் அண்ணன் மார் திறையாகக் கொண்டு செல்பவராகி இத்தினை புனத்தின் கண் எதிர் வந்தவரை அம்பினால் தாக்கி ஒழிப்பர் இதனை,

**“கொல்யானை வெண்மருட்டும் கொல்வல்புலி அதளும்**
**நல்யானை நின்ஐயர் கூட்டுண்டு செல்வார்தாம்**
**ஓர் அம்பி னான்எய்து போக்குவர்..”[72]**

எனும் வரிகளால் இதனை அறியமுடிகிறது.

**பசு வளர்ப்பு**

மலையில் பசுவும், நல்ல இழைத்தழைகளை உண்டு வளர்ந்துள்ளது. அம்மலையின் இயற்கை வளத்தினை பற்றி குறிப்பிடும் போது பசு வளர்ப்பினையும் குறிப்பிட்டு உள்ளனர்.

**“மன்றப் பலவின் சுளை விளை தீம்பழம்**
**உண்டு உவந்து மந்திமுலை வருட கன்று அமர்ந்து**
**ஆமா சுரக்கும் அணி”[73]**

எனும் இவ்வரிகள் பொதுமன்றத்தில் உள்ள பலாமரத்தில் முதிர்ந்து நன்கு பழுத்த பலாப்பழத்தை தின்று மகிழ்ந்து நீர் வேட்டை மிக்க அங்கு தங்கியிருக்கும் காட்டு பசுவின் மடியைத் தடவ, அப்பசு தன் கன்றுக்கும் பால் சுரந்து கொடுப்பதைப் போல குரங்குக்கும் பால் சுரந்து கொடுக்கும் பண்புடையது மலைநாடு எனும் கருத்தால் பசு வளர்ப்பு பற்றி தெரிவிக்கின்றது.

**தேன் அழித்தல்**

மலையில் தேன் அழித்தல் தொழிலை வேடர்கள் மேற்கொண்டு இருந்தமையை,

**“பிரைசம் கொள வீழ்ந்த தீம் தேன் இறாவுல்**

**மரையான் குழவி குளம்பின் துகைக்கும்..”[74]**

இவ்வரிகள் குறிப்பிட்டுள்ளன. அதாவது வேடர்கள் தேன் அடைகளைக் கவர்ந்து சென்றபோது கீழே நழுவி விழுந்த தேன் அடைகளை மான்குட்டிகள் கால் குழம்புகளால் சிதைக்கும் மலைநாட்டு தலைவனே..! என்பதன் மூலம் தேன் அழித்தல் தொழில் நடந்ததை அறிய முடிகிறது.

**பழக்கவழக்கங்கள்**

நல்ல காரியங்களுக்கு சான்றோரை அழைத்து செல்லும் மரபு எக்காலமும், இருந்தது அறியலாம். அதைபோல் இசையும், ஆடையும் சிறப்பானதாக நம் தமிழர் பழக்கங்களில் இருந்திருக்கிறது.

**மணம் பேச சான்றோரை அழைத்து செல்லல்**

தலைவியே.. தழைகள் அடர்ந்து குளிர்ந்த காட்டு மல்லிகையின் கொடிகள் படர்ந்துள்ள சோலையில் கொத்து கொத்தாய் விளங்கும் காந்தள் மலர்களில் வண்டின் கூட்டம் தேனுண்டு பாடும் மலைநாட்டு தலைவன் மணம் பேசி வருவதற்காகச் சான்றோர்களை அனுப்பியுள்ளான் என தோழி கூறுகிறாள். இதனை,

**“இலை அடர் தண்குளவி வேய்ந்த பொதும்பில்**

**குலையுடையக் காந்தள், இனவண்டு இமிரும்**

**வரையக நாடனும் வந்தான்”[75]**

எனும் வரிகளால் அறியமுடிகிறது.

**தழை ஆடை**

அன்றைக்கு தழையாடைகள் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டு அவை மிக்க மகிழ்வோடு உடுத்தியமை ஐந்திணை ஐம்பதின் வாயிலாக வெளிப்படுகிறது. இதனை,

**“புனைபூந் தழைஅல்குல் பொன் அன்னாய்!”[76]**

இவ்வரியால் அறிய முடிகிறது. அதாவது தொடுக்கப்பெற்ற மலர்களுடன் கூடிய தழைகள் அமைந்த தழையாடையை உடுத்திய அடிவயிற்றினையுடைய திருமகளை போன்றத் தலைவியே… என

விலித்தன் வாயிலாக அறிய முடிகிறது. அதே நேரத்தில் **"தமிழகத்திற் பழங்காலத்திலேயே நெசவு தோன்றி விட்டதென ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். வயவர் யோவான் மார்ஷல் தம் மொகஞ்சோ-தாரோவும், சிந்து நாகரீகமும் எனும் நூலில் கி.மு.3000 ஆண்டுகட்கு முன் மேனாடு கட்கு இந்தியா வினின்றே துணி ஏற்றுமதியானதென்று கூறியிருக்கின்றார். அக்கால இந்தியா தமிழகமே"**[77] என பாவாணர் கூறுவதும் நோக்கதக்கதாய் உள்ளது. பருத்தியாடையாக இருந்தாலும் கூட தலைவிக்கு தலையாடை உடுத்துவது என்பது சிறப்பானதொரு அலங்காரமாக போற்றப்பட்டமை தெளிவுபடுகிறது.

**இசை**

இசை நம் மனதை வருட கூடியது. அவ்விசைகள் சங்கம் மருவிய காலத்திலும் போற்றப்பட்டு இசைக்கப்பட்டமை அறிய முடிகிறது.

**"யாழும் குழலும் முழவும் இயைந்தென"**[78]

இப்பாடல் வரியின் மூலம் அறியப்படுகிறது. யாழின் இசையும் குழலின் ஓசையும் முழவின் ஒலியும் இணைந்து சேர்ந்தாற்போன்று ஒலியை எழுப்பும் எனும் இவ்வரிகள் இசைப் போற்றும் சங்கக்காலச் சமூகத்தைக் காட்சிப்படுத்துகின்றன.

**தொகுப்புரை**

தலைவி தலைவன் மீது கொண்டிருந்த நம்பிக்கை, நன்மதிப்பு முதலியன வெளிப்படுகின்றன. தலைவனின் அன்பையும் பண்பையும் போற்றக் கூடியவளாகத் தலைவி விளங்கியுள்ளாள்.

தலைவி தலைவன் உயிரைத் தன் உயிராகப் போற்றியமையும் புலப்படுகிறது.

தினைப்புனம் விளைந்த நிலையில் தலைவனைப் பகற்குறியில் சந்திக்க வீட்டிற்கு செல்லும் நிலையில் தலைவி அதை ஒரு சிறைப்புறமாக எண்ணித் தவிப்பதும் புலப்படுகிறது.

காதல் பிரிவில் வாடும் தலைவி அயலவர் பெண் கேட்டு வரும் நிலையில் தோழியிடம் அவளே (தலைவியே) அறத்தொடு நிற்கும் நிலை காணப்படுகிறது. தலைவன் வரும் வழிகளை எண்ணி தலைவியும், தோழியும் வரைவு கடாதலை வலியுறுத்தியுள்ளனர். சங்க இலக்கியத்தில் வரும் தலைவனைப் போலவே காதல் கைக்கூடாத வேளையில் நெஞ்சொடு புனத்தலைத் தலைவனும் மேற்கொண்டுள்ளான். சங்க இலக்கிய மரபு இங்கேயும் வெளிப்படுகிறது. காதலியை திருமணம் செய்யும் பொருட்டுத் திணைமாலை நூற்றம்பதில் காணப்படும் தலைவனும் மடலேறு முற்படுவதைக் காணமுடிகிறது.

தலைவன் தலைவியை அடைவதற்கு இல்லறவாழ்வில் இணைவதற்கு தோழியே முழுமுதற் காரணமாகத் திகழ்கிறாள். தழையாடை என்பது தலைவிக்கானதாக விளங்குவதும் அறிய முடிகிறது. இச்செறிக்கப்பட்டாலும் தலைவி தலைவனுக்காகவே காத்திருக்கு கூடியவளாக விளங்குகிறாள். அதே போல் தன் உயிரை வெள்ள பெருக்கிலிருந்தும், யானைகளிடமிருந்தும் காப்பாற்றிய தலைவனையே காதலித்து, அவனைத் தவிர வேறு யாரையும் கைப்பிடிக்க மாட்டோம் எனும் மன உறுதிமிக்க தலைவியரை காணமுடிகிறது.

புறவாழ்வியலில் தினைப்புனம் அமைத்து உழவுத் தொழில் செய்ததையும், மரங்களை வெட்டி அழித்தலையும், நீர் நிலைகள் பெருக்கி விவசாயம் மேற்கொண்டமையும், விலங்குகளை அகப்படுத்தலையும் தேனலித்தலையும், பசு வளர்ப்பில் ஈடுபட்டமையும், திருமணத்திற்கு பெண் கேட்க சான்றேதரை அழைத்து சென்றமையும் புலப்படுகிறது.

## சான்றெண் விளக்கங்கள்

1. ஐந்திணை எழுபது., பா.எ.2:3-4
2. மேலது., பா.எ.4
3. மேலது., பா.எ.5
4. மேலது., பா.எ.9:2-4
5. மேலது., பா.எ.14
6. மேலது., பா.எ.1:3-4
7. மேலது., பா.எ.6
8. மேலது., பா.எ.8
9. மேலது., பா.எ.10:3-4
10. மேலது., பா.எ.13
11. சு.வித்தியானந்தன்., தமிழர் சால்பு., ப.78
12. ஐந்திணை ஐம்பது., பா.எ.11
13. மேலது., பா.எ.12
14. மேலது., பா.எ.13
15. மேலது., பா.எ.16
16. மேலது., பா.எ.17
17. மேலது., பா.எ.20
18. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்., ப.342
19. திணைமொழி ஐம்பது., பா.எ.1:3-4
20. மேலது., பா.எ.2:3-4
21. மேலது., பா.எ.4
22. மேலது., பா.எ.5
23. மேலது., பா.எ.6:3-4
24. மேலது., பா.எ.7:3-4
25. மேலது., பா.எ.10:3-4
26. சாமி சிதம்பரனார்., பதினெண் கீழ்க்கணக்கு., ப.39

27. திணைமாலை நூற்றைம்பது., பா.எ.89

28. மேலது., பா.எ.1

29. வ.சுப.மாணிக்கம்., தமிழ்க்காதல்., ப.38

30. பவணந்தியார்., நன்னூல்., நூ.40

31. நம்பியகப்பொருள்., நூ.223

32. தொல்.பொருளதிகாரம்., நூ.101

33. நம்பியகப்பொருள்., நூ.217

34. திணைமாலை நூற்றைம்பது., பா.எ.4

35. சங்க இலக்கிய உரையாடல்., ப.198

36. திணைமாலை நூற்றைம்பது., பா.10

37. மேலது., பா.எ.19

38. மேலது., பா.எ.23

39. மேலது., பா.எ.24

40. மேலது., பா.எ.9

41. தொல்காப்பியம்., நூ.996

42. திணைமாலை நூற்றைம்பது., பா.எ.16

43. மேலது., பா.எ.20

44. மேலது., பா.எ.21

45. மேலது., பா.எ.31

46. மேலது., பா.எ.30

47. மேலது., பா.எ.6

48. மேலது., பா.எ.11

49. பெ.மாதையன்., சங்க இலக்கியத்தில் குடும்பம்., பக்.42-43

50. திணைமாலை நூற்றைம்பது., பா.எ.3

51. மனோன்மணி சண்முகதாஸ்., பண்டையத் தமிழர் வாழ்வியல்., ப.86

52. தொல்காப்பியம்., நூ.1058

53. அகப்பொருள்., நூ.112

54. தொல்காப்பியம்., நூ.1151

55. திணைமாலை நூற்றைம்பது., பா.எ.2

56. மேலது., பா.எ.14

57. மேலது., பா.எ.12

58. கைந்நிலை., பா.எ.1

59. மேலது., பா.எ.2

60. மேலது., பா.எ.3

61. மேலது., பா.எ.10

62. மேலது., பா.எ.12

63. கா.சிவதம்பி., சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும்., ப.39

64. ஐந்திணை எழுபது., பா.எ.13

65. மேலது., பா.எ.12

66. திணைமாலை நூற்றைம்பது., பா.எ.28

67. மேலது., பா.எ.24

68. மேலது., பா.எ.1

69. கா.சிவதம்பி., பண்டையத் தமிழ் சமூகம்., ப.60

70. ஐந்திணை எழுபது., பா.எ.5

71. திணைமாலை நூற்றைம்பது., பா.எ.23

72. மேலது., பா.எ.22

73. ஐந்திணை எழுபது., பா.எ.4

74. மேலது., பா.எ.10

75. மேலது., பா.எ.3

76. மேலது., பா.எ.14

77. தேவநேய பாவாணர்., பண்டை தமிழ் நாகரீகமும் பண்பாடும்., ப.53

78. திணைமொழி ஐம்பது., பா.எ.7

# முடிவுரை

தமிழ் இலக்கண நூல்களில் குறிஞ்சி என்ற தலைப்பின் கீழ் தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், அகப்பொருள் விளக்கம், மாறன் அகப்பொருள் இலக்கண விளக்கம் தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் என்ற நூல்கள் யாவும் பெரும்பாலும் ஒத்த தன்மையுடைய கருத்துகளையே விளக்குகின்றன.

சில நூல்கள் இதிலிருந்து மாறுபட்டும் உள்ளன. அறுவகை இலக்கணம் என்ற நூல் ஏனைய இலக்கண நூல்களைப் போல் முப்பொருள் பற்றி விரிவாக எடுத்துக்கவில்லை.

தொல்காப்பியம், யாப்பருங்கலம் காரிகை, தண்டியலங்காரம், நன்னூல் ஆகிய நூல்களைப் பின்பற்றியும் திருத்தியும் மாற்றியும் ஏற்றுக் கொண்டு இயன்றுள்ளது.

பல நூல்கள் விரித்த செய்தியை சிறிது விரித்தும், மாற்றியும் குறிஞ்சி பற்றி செய்தியை அழகுற இலக்கண நூல்கள் முதற்பொருள் (நிலம், பொழுது) கருப்பொருள், உரிப்பொருள் என முப்பொருளையும் வகைப்படுத்தியுள்ளது.

அகவொழுக்கம், களவொழுக்கம், கற்பொழுக்கம் என இலக்கண நூல்கள் வகைப்படுத்தி திணையின் இயல்பை மேம்படுத்தியுள்ளது. குறிஞ்சித் திணைக்கு இலக்கண நூல்களில் சிறப்பிடம்பிடித்துள்ளது. இலக்கண நூலாசிரியர்கள் குறிஞ்சியை அழகுற கையாண்டுள்ளது வெளிப்படுகிறது.

பத்துப்பாட்டில் எட்டாவதும் பாட்டாக அமையும் இக்குறிஞ்சிப்பாட்டு 261 அடிகளையும் 1440 சொற்களையும் கொண்டதாகும். அறத்தோடு நிற்றல் என்னும் துறையில் அமைந்த இக்குறிஞ்சிப் பாட்டு முழுவதும் தோழி செவிலிக்காக கூறுவதாக அமைந்துள்ளது.

சங்க இலக்கியத்துள் காணப்பெறும் கபிலரின் பாடல்களின் எண்ணிக்கை 235 ஆகும். இவை முறையே நற்றிணை 20, குறுந்தொகை

29, ஐங்குறுநூறு 100, பதிற்றுப்பத்து 10, அகநானூறு 12, புறநானூறு 28, கலித்தொகை 29, குறிஞ்சிப்பாட்டு 1 என்றவாறு அமைந்துள்ளன. பத்துப்பாட்டிலும் பரிபாடல் தவிர்த்த பிற எட்டுதொகை நூல்களிலும் கபிலர் பாடல்கள் காணக்கிடக்கின்றன. கபிலர் பாடியுள்ள 235 பாடல்களில் 197 பாடல்கள் அகப்பாடல்களாகும். இவற்றுள் 182 களவிற்கும், 12 கற்பிற்கும், 3 கைக்கிளைக்கும் உரியவை என்பார் வ.சுப. மாணிக்கம். 38 பாடல்கள் புறத்திணை பற்றியனவாகும்.

கபிலர் பாடல்களில், அகத்திணை மரபுகள் அனைத்தும் ஒருசேர எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. ஐவகைத் திணைகள், மூவகைப் பொருள்கள் ஆகியன சிறப்புற இடம்பெற்று உள்ளன.

சங்க அகப்பாடல்களில் குறிப்பாகக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் பல்வேறு குறிஞ்சி நிலப்பகுதிகள் சுட்டப்பட்டுள்ளன. இத்தகைய மலைப்பகுதிகளை ஆட்சிபுரிந்த குறுநில மன்னர்கள் பற்றிய செய்திகளும் மலைநில மக்களின் வாழ்வியலில் இடம்பெற்றுள்ள நிகழ்வுகளையும் செயல்பாடுகளையும் சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் முன்வைக்கின்றன.

சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களிலும் தொல்காப்பியர் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவை தொல்காப்பிய – சங்க இலக்கிய ஒற்றுமையை உணர்த்துவனவாக அமைந்துள்ளன.

பல்வேறு களவுக்கால நிகழ்வுகள் நிகழ்வதை நற்றிணையின் குறிஞ்சித்திணைப் பாடல்கள் தலைவன் கூற்றிலமைந்து நமக்கு வெளிப்படுத்துகின்றன. அதாவது,

தலைவனைத் தலைவி குறியிடத்திற்கு அழைத்துச் செல்லுதல், தலைமக்கள் இருவரும் நெருக்கமாகத் தழுவிக் கொள்ளுதல், தலைவி தோழிகளுடன் நீராடுதல், தலைவி தோழியருடன் பந்தாடுதல், தலைவன் தலைவியது அழகு நலன்களைப் புகழ்ந்து பேசுதல், தலைவி இற்செறிப்பில் அதாவது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருத்தல், உலகமே எதிர்த்தாலும் தலைவியை விட்டுப் பிரியமாட்டேன் எனத் தலைவன் கூறுதல், தலைவன் அன்பு மிகுதியால் துன்பப்படுதல், தலைவன்

மடலேறுதலைக் கூறுதல், தலைவன் மடலேறாமல் சாவேன் எனக் கூறுதல் முதலிய களவுக்கால நிகழ்வுகளைத் தலைவன் கூற்றுக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன.

களவு வாழ்வில் ஈடுபடும் தலைவியைத் தலைவன் மனைவி என குறிப்பிடும் பதிவும் குறிஞ்சித்திணைப் பாடலில் இடம்பெற்றுள்ளது.

குறிஞ்சிநில மக்களின் வாழ்விடமான குடியிருப்புகள் பற்றிய செய்திகள் சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணப்படுகின்றன.

மக்கள் வேட்டையாடியும் உழவு செய்தும் தங்கள் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டதை அறியலாம்.

குறிஞ்சிநில மக்கள் தினை விதைப்பு எனும் வேளாண்மையைச் செய்து உணவைப் பெற்றுள்ளனர். பெரும்பாலான குறிஞ்சித்திணைப் பாடல்கள் இதை நமக்குக் காட்டுகின்றன.

குறிஞ்சிநில மக்கள் தங்களுக்கென தனித்த வழிபாட்டையும் நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் கொண்டிருந்தனர்.

தலையாடை உடுத்தல் என்னும் மரபு சங்ககாலத் தலைமக்களின் களவியல் வாழ்வின் ஓர் அங்கமாக இருந்ததை இப்பாடலின் வழி உணர முடிகின்றது.

கபிலர் நூறு பாடல்களில் அறத்தொடு நிற்றல் எனும் துறைக்கே அதிக முக்கியத்துவம் தருவதால் அக்கால வாழ்வியலில் குறிப்பாகக் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலில் அறத்தொடு நிற்றல் முக்கிய இடம் வகித்ததை இதன் மூலம் அறியமுடிகிறது.

தலைவன் கூற்றிலமைந்துள்ள குறிஞ்சித்திணைப் பாடல்கள் பெரும்பாலானவை தலைவியின் அழகு நலன்களைப் புகழ்வனவாகவே அமைந்துள்ளன. இது சங்க காலக் குறிஞ்சிநில மக்களின் காதல் வாழ்வைப் புலப்படுத்துவதாக உள்ளது.

காதல் வாழ்வில் ஏற்படுகின்ற தலைவனின் காம மிகுதியையும் அதனால் ஏற்படுகின்ற துன்பத்தினையும் பல குறிஞ்சித்திணைப் பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

தலைவனின் காதல் மிகும்போதும் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள முடியாத நிலை ஏற்படும்போதும் தலைவன் மடலேறுவேன் என்று கூறும் நிகழ்வு சங்ககாலக் காதல்வாழ்வின் ஒரு பகுதியாக இருந்ததைக் குறுந்தொகைப் பாடல்களின்வழி அறியமுடிகின்றது.

குறிஞ்சிநில மக்களின் வேட்டைத் தொழிலோடு வேளாண்மை, வியாபாரம், கைத்தொழிகள் முதலிய தொழில்களையும் செய்துவந்ததைக் குறுந்தொகைப் பாடல்களின்வழி அறியமுடிகின்றது.

குறிஞ்சிநில மக்களின் மரபு சார்ந்த பண்பாட்டில் கடவுள் வழிபாடு என்பது இன்றியமையாத பண்பாடாக அமைந்துள்ளது.

குறிஞ்சிநிலத் தலைமக்கள் தமது களவு வாழ்வின்போது குளிர்ச்சி மிக்கத் தழையாடையை அணிந்து கொள்வதை மரபாகக் கொண்டிருந்தனர்.

தலைமக்களது களவு வாழ்க்கையில் தலைவன் தலைவியின் அழகுநலன்களைப் புகழ்தல் எனும் மரபு குறிஞ்சிநிலத்துக்குரிய பண்பாட்டு மரபாக நிலைத்திருப்பதை அறியமுடிகின்றது.

வேறு எத்திணைக்குரிய உரிப்பொருளும் குறிஞ்சியிற் கலக்கவில்லை. இது குறிஞ்சித்திணையின் தனிச்சிறப்பாகும்.

சங்ககால மன்னர்கள் சார்ந்த பல வரலாற்றுக் குறிப்புகள் அகநானூற்றுக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளமையே இதன்அடி நீட்சிக்குக் காரணம் எனலாம்.

பாடுபொருளின் அடிப்படையில் குறிஞ்சிப்பாட்டிற்கான துறை தோழி செவிலிக்கு அறத்தொடுநிற்றல் என்பதாகும். பாடல் முழுவதும் தோழி கூற்றாகவே அமைந்து தலைவியின் களவொழுக்கத்தினைச் செவிலிக்கு வெளிப்படுத்துவதால் ‘தோழி செவிலிக்கு அறத்தொடுநிற்றல்’ என்பது குறிஞ்சிப்பாட்டிற்குரிய துறையாகக் கொள்ளப்படுவது பொருத்தமுடையதாகிறது. தலைமக்களது களவுவாழ்வைக் கற்பாக்கும் பொருட்டுக் கைக்கொள்ளப்பட்ட ஓர் உத்திமுறையாக ‘அறத்தொடுநிற்றல்’ என்னும் துறை விளங்குவதால் குறிஞ்சிப்பாட்டில் அறத்தொடுநிற்றல் என்பது முக்கியத்துவம் பெறுகின்றது.

குறிஞ்சிப்பாட்டு முழுவதும் தோழியின் கூற்றாகவே வெளிப்படினும் அதனுள் தலைவியின் கூற்றும் தோழிவாயிலாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தலைவி தனது காதல் குறித்துத் தோழியிடம் கூறிய செய்திகள் தோழி கூற்றாக வெளிப்பட்டுச் செவிலித்தாயிடம் எடுத்துரைக்கப்படுகின்றன.

மனிதன் வாழ்வதற்கு ஏற்ற இடமாக பூமி எனும் மிகப்பெரிய நிலப்பரப்பு தேவையான ஒன்றாக இருந்து வருகின்றது. இந்நிலப்பரப்பைத் தவிர வேறு வாழிடம் மனிதனுக்கு இப்போதைக்கு இல்லை என்று கூறலாம்.

சங்க காலக் குறிஞ்சிநில மக்கள் கூத்தாடுதல் எனும் செயலில் ஈடுபட்டிருந்ததும் அதற்கென தனியே ஓர் களம் அதாவது இடம் இருந்ததும் (அகம்.) 82ஆம் பாடலின் வழி வெளிப்படுகின்றது.

முருகனுக்கு அக்காலத்திலேயே கோயில்கள் எழுப்பப்பட்டன என்பதை அறிய முடிகிறது. எனினும், சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் கோயில் இருந்ததற்கான பதிவுகள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சங்க இலக்கியத் தோழி தலைவனைப் பற்றிப் பேச அதற்கு தலைவி தலைவனுக்கு ஆதரவாகப் பரிந்து பேசி இயற்பட மொழிதல் என்னும் களவுச் செயல்பாடும் கபிலர் பாடல் மூலம் அறியப்படுகின்றது.

களவுப் பாடல்களில் பெரும்பாலும் தலைவியின் அழகு நலன்களே புகழப்பட்டுள்ளன. இப்புகழ்ச்சியில் தலைவன் ஈடுபடுவது இயல்பு. எனினும் நற்றிணையில் இதற்கு மாறாகத் தலைவி தலைவனைப் பற்றிப் பாடுகிறாள் என்பது குறிப்பிடத்தக்தாக உள்ளது.

சங்ககாலக் குறிஞ்சிநில மக்கள் கடவுள் பற்றிய நம்பிக்கையில் இருந்ததை வேலன் வெறியாட்டு உணர்த்தி நின்ற போதிலும் பிற கடவுள்கள் பற்றிய பதிவுகளையும் கபிலர் முன்வைப்பது குறிப்பிடத்தக்கது.

குறிஞ்சி நில மக்கள் அணியத்தக்க கொடி, வளையல் முதலியவற்றைச் செய்து கொடுக்கும் திறன் படைத்த தொழில் வல்லுநர்கள் குறிஞ்சி நிலச் சமூகத்திலிருந்ததை அறிய முடிகிறது.

சங்க காலக் குறிஞ்சி நில மக்களில் ஊசல் எனும் விளையாட்டை மேற்கொண்டனர் என்றும், அப்போதுதான் தலைவனைச் சந்திக்கும் வாய்ப்பு பெற்றுக் களவில் ஈடுபட்டனர் என்பதையும் கபிலர் தம் பாடலில் உணர்த்துகின்றார்.

சங்ககால குறிஞ்சி நில மக்கள் வேளாண்மை தொழிலில் ஈடுபட்டதை அதுவும் நிலத்தைப் பண்படுத்தி கரும்பு முதலிய பயிர்களை விளைவிப்பதையும் கபிலர் பாடல்களால் அறிகிறோம்.

இயற்கை நிகழ்வுகளைத் தன் பாடல்களில் சுட்டும் பரணர் 'இயற்கை' எனும் சொல்லை எங்குமே பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

களவு ஒழுக்கம் என்பது குறிஞ்சிநில சமூகத்துக்கு உரியது என்றாலும் அதற்கான எதிர்ப்பும் குறிஞ்சிநிலச் சமுதாயத்தில் நிலவியதை உணரமுடிகின்றது. இந்த எதிர்ப்புநிலை குடிச்சிறப்பு பாழ்படக்கூடாது என்ற நோக்கில் தோன்றியதையும் அறியமுடிகின்றது.

தித்தன் என்பவன் பாணர்களை ஆதரித்தமையையும், நன்னன் என்பவன் இரவலர்க்கு களிறுகளை வழங்கியமையையும், ஆய் என்பவன் தன்னிடம் வருவோர்க்கு கலம் நிறையச் சோறளித்து உபசரித்தமையையும் அறியமுடிகின்றது.

தலைவி பெறுவதற்கு அரியவள் என்ற கருத்தினை ஒவ்வொரு பாடலிலும் பரணர் எடுத்தியம்புகின்றார். இந்த வகையில் பரணரின் அகநானூற்றுப்பாடல்கள் பெரும்பாலும் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்வதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் சங்ககால மக்களின் களவுவாழ்வில் அல்லகுறிப்பிடுதல் என்பது மிகமுக்கிய வாழ்வியல் செயல்பாடாக அமைந்திருத்தலை அறியமுடிகின்றது.

சங்ககால வாழ்வியலில் இற்செறிப்பு உணர்த்தல் எனும் நிகழ்வு பெரும்பாலும் தோழி வாயிலாகவே நிகழ்ந்துள்ளதை அறியமுடிகின்றது.

சங்க காலத் தலைமக்களது களவு வாழ்வியலுக்கு எதிராகக் காவல் எனும் இற்செறிப்பு தலைவிக்கு மட்டும் உரியதாக

அமைந்திருத்தலையும் இக்கட்டுப்பாடு தலைவனுக்கு எந்நிலையிலும் அவன் உறவினர்களால் ஏற்படுத்தப்படவில்லை என்பதையும் அறிய முடிகின்றது.

ஆண்கள் பொருள் ஈட்டுவதைக் கடமையாகக் கொண்டிருந்தனர். பொருளைக் கொண்டுதான் ஏனைய அறங்களைச் செய்ய முடியுமென்று அவர்கள் உறுதியாக எண்ணியதை அறியமுடிகின்றது.

வரைவு மறுத்தல், வரைவு மலிவு ஆகியவற்றை உணர்த்தும் பரணர் களவு வாழ்வை கற்பு வாழ்வாக மாற்றுவதற்குரிய அறத்தொடு நிற்றல் என்னும் துறையில் அமைந்த பாடல் ஒன்றினைக் கூட பாடவில்லை என்பது வியப்புக்குரியது. இயற்கைப் புணர்ச்சி மற்றும் பாங்கற்கூட்டம் தொடங்கி இரவுக்குறி, அல்லகுறி, இற்செறிப்பு, வரைவு கடாதல், வரைவுமறுத்தல், வரைவு மலிதல் என்னும் துறைகளில் பாடல்களைப் பாடியுள்ள பரணர் குறிஞ்சித்திணைக்குரிய முக்கிய துறையான அறத்தொடு நிற்றலைப் புறக்கணித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இல்லற வாழ்வே மகிழ்வு தருவது என்பதும், அதிலும் காதல் திருமணமே தலைவன், தலைவியரால் விரும்பி மேற்கொள்ளப்பட்டதென்றும் அறியமுடிகின்றது.

இக்காதல் பெரும்பாலும் குறிஞ்சி நில மக்கள் உழவு தொழில் செய்யக்கூடிய இடமான தினைப்புனத்திலே தான் தோன்றி அரும்பு விட்டமையும், தினைப்புனமே காதலுக்கான களமாக விளங்கியமையும் தெரியவருகின்றது.

தலைவியின் தோழி பன்முகத் தன்மைகள் கொண்டவளாக விளங்குகிறாள். களவு வாழ்வைத் தலைவன் நீட்டித்த போதும், தலைவியை மறந்து நெடுநாள் காண வராத போதும் வரைவு கடாதலை வலியுறுத்தி இல்லற வாழ்க்கைக்கு இருவரையும் இட்டுச் செல்கிறாள். அதோடு தலைவனுக்கு நனி நாகரிக பண்பும், வாக்குத் தவறாத வாய்மையும் வேண்டும் எனத் தேவைப்படும் இடங்களில், காலங்களில்

இடித்துரைத்து கற்பு வாழ்வை வலியுறுத்தி இல்லறவாழ்வுக்கு வழிகோளுகிறாள் என்பதும் தெளிவுபடுகிறது.

தலைவன் தலைவியின் காதலுக்கு ஏங்கியமையும், காதல் பிரிவில் ஆற்றாதவனாய் நெருசொடும், பாங்கன், பாங்கியிடமும் தன் கவலைகளை வெளிப்படுத்தி தலைவியை அடையும் முயற்சிகளை மேற்கொண்டமையும் புலனாகிறது.

தலைவி தன்னைச் சந்திக்க இரவுக் குறியில் வரும் பொழுது அவனுக்கு உண்டாகும் ஆபத்துக்களை எண்ணி அன்பின் மிகுதியால் இரவுக் குறியைத் தவிர்த்தமையும், தலைவன் உம் நினைவும், கண்ணின் ஒளியுமே எனக்கு ஏமம் என்று சொல்லி அச்சம் தெளிவித்து இரவில் சந்தித்தையும் உய்த்துணரமுடிகிறது.

தலைவன் பரத்தையும் சென்று தங்கிய போது அவளே அவனை அவன் மனைவியிடம் அனுப்பிய செய்தியும் தெரிய வருகிறது.

புற வாழ்வியலாகத் தினைப்புணம் காத்தல், தேனழித்தல், இரும்பிடித்தல், கழங்குப் பார்த்தல் போன்ற தொழிலம், நம்பிக்கையும் விளங்கியமையும் புலப்படுகிறது.

தலைவி தலைவன் மீது கொண்டிருந்த நம்பிக்கை, நன்மதிப்பு முதலியன வெளிப்படுகின்றன. தலைவனின் அன்பையும் பண்பையும் போற்றக் கூடியவளாகத் தலைவி விளங்கியுள்ளாள்.

தலைவி தலைவன் உயிரைத் தன் உயிராகப் போற்றியமையும் புலப்படுகிறது.

தினைப்புனம் விளைந்த நிலையில் தலைவனைப் பகற்குறியில் சந்திக்க வீட்டிற்கு செல்லும் நிலையில் தலைவி அதை ஒரு சிறைப்புறமாக எண்ணித் தவிப்பதும் புலப்படுகிறது.

காதல் பிரிவில் வாடும் தலைவி அயலவர் பெண் கேட்டு வரும் நிலையில் தோழியிடம் அவளே (தலைவியே) அறத்தொடு நிற்கும் நிலை காணப்படுகிறது. தலைவன் வரும் வழிகளை எண்ணி தலைவியும், தோழியும் வரைவு கடாதலை வலியுறுத்தியுள்ளனர். சங்க இலக்கியத்தில்

வரும் தலைவனைப் போலவே காதல் கைக்கூடாத வேளையில் நெஞ்சொடு புனத்தலைத் தலைவனும் மேற்கொண்டுள்ளான். சங்க இலக்கிய மரபு இங்கேயும் வெளிப்படுகிறது. காதலியை திருமணம் செய்யும் பொருட்டுத் திணைமாலை நூற்றம்பதில் காணப்படும் தலைவனும் மடலேறு முற்படுவதைக் காணமுடிகிறது.

தலைவன் தலைவியை அடைவதற்கு இல்லறவாழ்வில் இணைவதற்கு தோழியே முழுமுதற் காரணமாகத் திகழ்கிறாள். தழையாடை என்பது தலைவிக்கானதாக விளங்குவதும் அறிய முடிகிறது. இச்செறிக்கப்பட்டாலும் தலைவி தலைவனுக்காகவே காத்திருக்கு கூடியவளாக விளங்குகிறாள். அதே போல் தன் உயிரை வெள்ள பெருக்கிலிருந்தும், யானைகளிடமிருந்தும் காப்பாற்றிய தலைவனையே காதலித்து, அவனைத் தவிர வேறு யாரையும் கைப்பிடிக்க மாட்டோம் எனும் மன உறுதிமிக்க தலைவியரை காணமுடிகிறது.

புறவாழ்வியலில் தினைப்புனம் அமைத்து உழவுத் தொழில் செய்ததையும், மரங்களை வெட்டி அழித்தலையும், நீர் நிலைகள் பெருக்கி விவசாயம் மேற்கொண்டமையும், விலங்குகளை அகப்படுத்தலையும் தேனலித்தலையும், பசு வளர்ப்பில் ஈடுபட்டமையும், திருமணத்திற்கு பெண் கேட்க சான்றேதரை அழைத்து சென்றமையும் புலப்படுகிறது.

**மேலாய்விற்கான களங்கள்**

1. சங்கஇலக்கியங்களில் காணலாகும் கருப்பொருள் மயக்கம் குறித்து விரிவாக ஆராய இடமுள்ளது.
2. சங்கஇலக்கிய குறிஞ்சித்திணைப்பாடல்களையும் சிற்றிலக்கியங்களில் காணலாகும் குறவஞ்சி இலக்கியங்களையும் ஒப்பிட்டு ஆய்வு செய்ய இடமுள்ளது.

# துணை நூற்பட்டியல்

**முதன்மை ஆதாரங்கள்**


1. சுப்பிரமணியன், ச.வே.(உ.ஆ.), - சங்க இலக்கியத்தில் குறிஞ்சிப்பாடல்கள், (மூலமும் தெளிவுரையும்) மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 608001. முதல் பதிப்பு – டிசம்பர் 2010.

2. சுப்பிரமணியன், ச.வே.(ப.ஆ.), - தமிழ் இலக்கண நூல்கள் (மூலம் முழுவதும் - குறிப்பு விளக்கங்களுடன்) மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 608001. மூன்றாம் பதிப்பு – நவம்பர் 2013,

3. சுப்பிரமணியன், ச.வே.(ப.ஆ.), - பதினெனண் கீழ்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும் மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600108, முதல் பதிப்பு – ஜீன் 2010

4. சுப்பிரமணியன், ச.வே.(உ.ஆ.), - சங்க இலக்கியம் - பத்துப்பாட்டு, மூலமும் தெளிவுரையும் மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600108, முதல் பதிப்பு – ஜீன் 2010

**துணைமை ஆதாரங்கள்**


5. அமிர்த கௌரி.ஆ - சங்க இலக்கியத்தில் உரையாடல்
பாரிநிலையம்,
சென்னை – 600108
முதல் பதிப்பு – டிசம்பர் 1989

6. அறவாணன். க.ப - அற்றைநாட் காதலும் வீரமும்,
மெய்யப்பன் தமிழாய்வகம்
சிதம்பரம் - 608001
முதற்பதிப்பு – டிசம்பர் 2002.

7. ஆதிநாராயணன் - சங்க காலம்
பாரி புத்தகப் பண்ணை
184/88, பிராட்வே,
சென்னை – 600108
முதற்பதிப்பு – 2016

8. இராம.சுப்பிரமணியன். வ.த - நம்பியகப்பொருள் விளக்கம்
(மூலமும் தெளிவுரையும்)
முல்லை நிலையம்,
சென்னை-17
மறுபதிப்பு – 2015

9. இராம வெங்கடேசன்.கலை நாஞ்சில் நீல மாதவன்.பேரா ப.ஆ) - பன்முகப்பார்வையில்
தமிழிலக்கியக் களம்
செம்மூதாய் பதிப்பகம்,
சென்னை – 600064
முதற்பதிப்பு – பிப்ரவரி 2012

10. காந்திதாசன். க - சங்க இலக்கியத்தில் பாணர் வாழ்வியல்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600113
முதல் பதிப்பு – 2011

11. கார்த்திகேசு சிவத்தம்பி - பண்டைத் தமிழ்ச் சமூகம்
வரலாற்றுப் புரிதலை நோக்கி
நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
சென்னை – 600098,
இரண்டாம் பதிப்பு – பிப்ரவரி 2011

12, கார்த்திகேசு சிவத்தம்பி - சங்க இலக்கியம் கவிதையும்,
கருத்தும்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600113
முதல் பதிப்பு 2009.

13. கோவை வாணன் - சங்க இலக்கிய மெய்பியல்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல
எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை – 600098
முதற்பதிப்பு – ஜீலை 2013

14. கௌமாரீஸ்வரி. எஸ் - இறையனார் அகப்பொருள்
சாரதா பதிப்பகம்
சென்னை – 14
முதற்பதிப்பு – ஜீன் 2010

15. சதாசிவம். சு
வாழிவியல் கௌசல்யா தேவி. சு
(ப.ஆ.) - தமிழிலக்கிய வகைமைகளும்
சிந்தனைகளும்
செம்மூதாய் பதிப்பகம்
சென்னை – 600059
முதற்பதிப்பு – டிசம்பர் 2014

16. சிதம்பரனார். சாமி - பதினெண் கீழ்கணக்கும் தமிழர்
வாழ்வும்
அறிவுப் பதிப்பகம்
சென்னை – 600014
இரண்டாம் அச்சு – பிப்ரவரி 2007

17. சிலம்பொலி செல்லப்பன், சு. - சங்க இலக்கியத் தேன்
அன்றில் பதிப்பகம்
சென்னை.
முதற்பிதிப்பு – 1996

18. சுப்பிரமணியன். ந - சங்ககால வாழ்வியல்
(சங்கத் தமிழான் அருசு
முறையும், சமூக வாழ்வும்)
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை – 600098
இரண்டாம் பதிப்பு – ஜனவரி 2010

19. சுப்பிரமணியன் ச.வே. (உ.ஆ.) - சங்க இலக்கியம் பத்துப்பாட்டு
கோவிலூர் மடாலயம்
வெளியீடு கோவிலூர்
தற்பதிப்பு-2003.

20. சுப்பு ரெட்டியார். ந - தொல்காப்பியம் காட்டும் வாழக்கை
பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை – 600014
ஐந்தாம் பதிப்பு – 2011

21. தமிழண்ணல் - சங்க மரபு
மீனாட்சி புத்தக நிலையம்
மதுரை – 625001
முதற்பதிப்பு – அக்டோபர் 2009

22. தாமோதரம் பிள்ளை.சி.வை - வீரசோழியம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600113
மறுபதிப்பு – 2008

23, தியாகராசன், பெரு - சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்கள்
மெய்யப்பன் பதிப்பகம்
53, புதுத் தெரு, சிதம்பரம் - 608001
முதல் பதிப்பு – செப்டம்பர் 2012

24. தேவநேயப்பாவாணர். ஞா - பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்,
பூம்புகார் பதிப்பகம்,
சென்னை – 600108,
முதற்பதிப்பு – மார்ச் 2009.

25. பசுமைக் குமார் - தமிழகச் சுற்றுச்சூழலல்
முதற்பதிப்பு – 2007.

26. மனோன்மணி சண்முகதாஸ் - பண்டைத் தமிழர் வாழ்வியல்
கோலம், இருப்பிடம்
குமரன் புத்தக இல்லம்
சென்னை – 26
முதல் பதிப்பு 2002

27. மாணிக்கம். வ.சுப - தமிழ்க்காதல்
மெய்யப்பன் பதிப்பகம்,
சிதம்பரம் - 608001,
முதல் பதிப்பு - சூலை 2007.

28. மாதையன். பெ - சங்க இலக்கியத்தில் குடும்பம்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
சென்னை – 600 098.
முதல் பதிப்பு ஜீன் 2010

29. மாதையன். பெ - சங்க இலக்கியத்தில் வேளாண்
சமுதாயம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
சென்னை – 600098
இரண்டாம் பதிப்பு – மார்ச் 2010

30. மாரியப்பன். க (மு.ப.ஆ) - காலந்தோறும் தமிழ் இலக்கியப் போக்குகள், சாய் வெங்கடேஸ்வரா பதிப்பகம் குப்பம் - 517425 முதற்பதிப்பு – அக்டோபர் 2015

31. ராதா. வி., - சுற்றுச்சூழல் கல்வி முதற்பதிப்பு – 2006.

32. வசந்தாள். த - தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் - ஒரு வரலாற்றுப் பார்வை சென்னை – 600105 முதற்பதிப்பு – 1990.

33. வரதராசன். மு - பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை பாரிநிலையம் சென்னை – 108 மறுபதிப்பு – 2011

34. வித்தியானந்தன். சு - தமிழர் சால்பு (சங்ககாலம்) குமரன் புத்தக இல்லம், சென்னை – 600026 முதல் பதிப்பு 2014

35. விஜயலட்சுமி. ர - தமிழக மகளிர் (தொடக்ககால முதல் ஆறாம் நூற்றாண்டு வரை) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மை சாலை மையத் தொழில்நுட்ப பயில வளாகம் தரமணி, சென்னை – 600113 முதல் பதிப்பு – 2009.

36. ஜெயரதி பொன்மலர். ஜே (தொ.ஆ.) - பன்முக நோக்கில் சங்க இலக்கியங்கள்
பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்
சென்னை – 600014
முதற்பதிப்பு – பிப்ரவரி 2012

**ஆய்வேடுகள்**

1. குளோறியா சுந்தரமதி. இலா - சங்க இலக்கியத்தில் குறிஞ்சித்திணைப் பாடல்கள் பகுப்பாய்வு அணுகுமுறை (குறுந்திட்ட ஆய்வேடு)
திருவனந்தபுரம் - 695581
2009.

2. ரமேஷ்குமார்.ம.ப. - குறிஞ்சிப்பாட்டின் கவிதையியல்
ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்-636011
2009.

# பின்னிணைப்பு

## குறுந்தொகை பாடிய புலவர்களும் பாடல் எண்களும் கூற்றுகளும்

| வ. எண் | பாடல் எண் | புலவர் பெயர் | கூற்று |
|---|---|---|---|
| 1 | 1 | திப்புத்தோளர் | தோழி |
| 2 | 2 | இறையனார் | தலைவன் |
| 3 | 3 | தேவகுலத்தார் | தலைவி |
| 4 | 13 | கபிலர் | தலைவி |
| 5 | 14 | தொல்கபிலர் | தலைவன் |
| 6 | 17 | பெரெயின் முறுவலார் | தலைவன் |
| 7 | 18 | கபிலர் | தோழி |
| 8 | 22 | சேரமான் எந்தை | தோழி |
| 9 | 23 | ஔவையார் | தோழி |
| 10 | 25 | கபிலர் | தலைவி |
| 11 | 26 | கொல்லன் அழிகி | தோழி |
| 12 | 29 | ஔவையார் | தலைவன் |
| 13 | 32 | அள்ளூர் நன்முல்லையார் | தலைவன் |
| 14 | 36 | பரணர் | தலைவி |
| 15 | 38 | கபிலர் | தலைவி |
| 16 | 40 | செம்புலப் பெயல் நிரார் | தலைவன் |
| 17 | 42 | கபிலர் | தோழி |
| 18 | 47 | நெடுவெண்ணிலவினார் | தோழி |
| 19 | 52 | பனம்பாரனார் | தோழி |
| 20 | 54 | மீனெறி தூண்டிலார் | தலைவி |
| 21 | 58 | வெள்ளி வீதியார் | தலைவன் |
| 22 | 60 | பரணர் | தலைவி |
| 23 | 62 | சிறைக்குடி அந்தையார் | தலைவன் |
| 24 | 68 | அள்ளூர் நன்முல்லை | தலைவி |
| 25 | 69 | கடுந்தோட் கரவிரன் | தோழி |
| 26 | 70 | ஓரம்போகியார் | தலைவன் |
| 27 | 72 | மள்ளனார் | தலைவன் |
| 28 | 73 | பரணர் | தோழி |
| 29 | 74 | விட்டக்குதிரையார் | தோழி |
| 30 | 76 | கிள்ளி மங்கலம் கிழார் | தலைவி |
| 31 | 78 | நக்கீரனார் | மாங்கன் |
| 32 | 81 | வடம வண்ணக்கண் பேரிசாத்தன் | தோழி |
| 33 | 82 | கடுவண் மள்ளன் | தலைவி |
| 34 | 83 | வெண்பூதன் | மோழி |
| 35 | 86 | வெண்கொற்றன் | தலைவி |

# குறுந்தொகை

| வ. எண் | பாடல் எண் | புலவர் பெயர் | கூற்று |
|---|---|---|---|
| 36 | 87 | கபிலர் | தலைவி |
| 37 | 88 | மதுரை கதக்கண்ணன் | தோழி |
| 38 | 90 | மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதன் | தோழி |
| 39 | 95 | கபிலர் | தலைவன் |
| 40 | 96 | அள்ளூர் நண்முல்லை | தலைவி |
| 41 | 100 | கபிலர் | தலைவன் |
| 42 | 101 | பருஉ மோபவாய் பதுமன் | தலைவன் |
| 43 | 105 | நக்கீரர் | தலைவி |
| 44 | 106 | கபிலர் | தலைவி |
| 45 | 111 | தீன்மதிநாகன் | தோழி |
| 46 | 112 | ஆலத்தூர் கிழார் | தலைவி |
| 47 | 115 | கபிலர் | தோழி |
| 48 | 116 | இளங்கீரன் | தலைவன் |
| 49 | 119 | சத்திநாகனார் | தலைவன் |
| 50 | 120 | பரணர் | தலைவன் |
| 51 | 121 | கபிலர் | தலைவி |
| 52 | 132 | சிறைக்குடி ஆந்தையார் | தலைவன் |
| 53 | 133 | உறையூர் முதுகண்ணன் சாத்தன் | தலைவி |
| 54 | 134 | கோவேங்கைப் பெருங்கதவன் | தலைவி |
| 55 | 136 | மிளைப் பெருங்கதவன் | தலைவன் |
| 56 | 138 | கொல்லன் அழிசி | தோழி |
| 57 | 141 | மதுரைப் பெருங்கொல்லன் | தலைவி |
| 58 | 142 | கபிலர் | தலைவன் |
| 59 | 143 | மதுரை கணக்காயன் மகன் நக்கீரன் | தோழி |
| 60 | 143 | வெள்ளி விதியார் | தோழி |
| 61 | 150 | மாடலூர் கிழார் | தலைவி |
| 62 | 152 | கிள்ளி மங்கலங் கிழார் | தலைவி |
| 63 | 153 | கபிலர் | தலைவி |
| 64 | 156 | பாண்டியன் ஏனாதி நெடுகண்ணன் | தலைவன் |
| 65 | 158 | ஔவையார் | தலைவி |
| 66 | 159 | வுடம வண்ணக்கண் பேரிசாத்தன் | தோழி |
| 67 | 160 | மதுரை மருதன் இளநாகன் | தலைவி |
| 68 | 161 | நக்கீரர் | தலைவி |
| 69 | 165 | பரணர் | தலைவன் |
| 70 | 170 | கருவூர் கிழார் | தலைவி |
| 71 | 173 | மதுரைக்காஞ்சிப் புலவன் (அல்லது) மாங்குடி மருதனார் | தலைவன் |

# குறுந்தொகை

| வ. எண் | பாடல் எண் | புலவர் பெயர் | கூற்று |
|---|---|---|---|
| 72 | 176 | வருமுலையாரித்தி | தோழி |
| 73 | 179 | குட்டுவன் கண்ணன் | தோழி |
| 74 | 182 | மடல்பாடிய மாதங்கிரன் | தலைவன் |
| 75 | 185 | மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் | தலைவி |
| 76 | 187 | கபிலர் | தலைவி |
| 77 | 198 | பரணர் | தோழி |
| 78 | 199 | பரணர் | தலைவன் |
| 79 | 201 | --- | தலைவி |
| 80 | 204 | மிளைப்பெருங்கந்தன் | பாங்கன் |
| 81 | 206 | ஐயூர் முடவன் | தலைவன் |
| 82 | 207 | உறையன் | தலைவி |
| 83 | 208 | கபிலர் | தலைவி |
| 84 | 214 | கூடலூர் கிழார் | தோழி |
| 85 | 217 | தங்கால் முடக்கொல்லனார் | தோழி |
| 86 | 222 | சிறைக்குடி ஆந்தையார் | தலைவன் |
| 87 | 223 | மதுரைக்கடையத்தார் மகன் வெண்ணாகன் | தலைவி |
| 88 | 225 | கபிலர் | தோழி |
| 89 | 239 | ஆசிரியன் பெருங்கண்ணன் | தலைவி |
| 90 | 241 | கபிலர் | தலைவி |
| 91 | 244 | கண்ணனார் | தோழி |
| 92 | 247 | சேந்தம்பூதனார் | தோழி |
| 93 | 249 | கபிலர் | தலைவி |
| 94 | 252 | கிடங்கில்குலபதி நக்கண்ணன் | தலைவி |
| 95 | 257 | உறையூர்ச் சிறுகந்தன் | தலைவி |
| 96 | 259 | பரணர் | தோழி |
| 97 | 261 | கழார்க்கீரன் எயிற்றியனார் | தலைவி |
| 98 | 263 | பெருஞ்சாத்தன் | தோழி |
| 99 | 264 | கபிலர் | தலைவி |
| 100 | 265 | கருவூர்க்கதப்பிள்ளை | தோழி |
| 101 | 268 | கருவூர்ச் சேரமான் சாத்தன் | தோழி |
| 102 | 272 | ஒருசிறைப் பெரியன் | தலைவன் |

# குறுந்தொகை

| வ. எண் | பாடல் எண் | புலவர் பெயர் | கூற்று |
|---|---|---|---|
| 103 | 276 | கோழி கொற்றன் | தலைவன் |
| 104 | 280 | நக்கீரர் | தலைவன் |
| 105 | 284 | மிளைவேல் தித்தன் | தோழி |
| 106 | 286 | எயிற்றியனார் | தலைவன் |
| 107 | 288 | கபிலர் | தலைவி |
| 108 | 291 | கபிலர் | தலைவன் |
| 109 | 292 | பரணர் | தோழி |
| 110 | 297 | காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணன் | தோழி |
| 111 | 298 | பரணர் | தோழி |
| 112 | 300 | சிறைக்குடி ஆந்தையார் | தலைவன் |
| 113 | 301 | குன்றியன் | தலைவி |
| 114 | 302 | மாங்குடிகிழார் | தலைவன் |
| 115 | 308 | பெருந்தோட் குறுஞ்சாத்தன் | தோழி |
| 116 | 312 | கபிலர் | தலைவன் |
| 117 | 315 | மதுரை வேளாதத்தன் | தலைவி |
| 118 | 317 | மதுரைக்கண்டாத்தன் | தோழி |
| 119 | 321 | ---- | தோழி |
| 120 | 322 | ஐயூர் முடவன் | தலைவி |
| 121 | 327 | அம்மூவனார் | தலைவி |
| 122 | 332 | மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன் | தோழி |
| 123 | 333 | உழுந்தினைம் புலவன் | தோழி |
| 124 | 335 | இருந்தையூர்க் கொற்றன் புலவன் | தோழி |
| 125 | 337 | பொதுக்கயத்துக் கிரந்தை | தலைவன் |
| 126 | 339 | பேயார் | தோழி |
| 127 | 342 | காவிரிப்பூம்பட்டினத்துக் கநடாரத்தினார் | தோழி |
| 128 | 346 | வாயில் இளங்கண்ணன் | தோழி |
| 129 | 353 | உறையூர் முதுகூத்தன் | தோழி |
| 130 | 355 | கபிலர் | தோழி |
| 131 | 357 | கபிலர் | தோழி |
| 132 | 360 | மதுரை ஈழத்துப் பூதன் தேவன் | தலைவி |
| 133 | 361 | கபிலர் | தலைவி |

## குறுந்தொகை

| வ. எண் | பாடல் எண் | புலவர் பெயர் | கூற்று |
|---|---|---|---|
| 134 | 362 | வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன் | தோழி |
| 135 | 365 | மதுரை நல்வெள்ளி | தோழி |
| 136 | 366 | பேரிசாத்தன் | தோழி |
| 137 | 371 | உறையூர் முதுகூத்தன் | தலைவி |
| 138 | 372 | விற்றூற்று முதெயினனார் | தோழி |
| 139 | 373 | மதுரைக் கொல்லன் புல்லன் | தோழி |
| 140 | 374 | உறையூர்ப் பல்காயனார் | தோழி |
| 141 | 375 | ---- | தோழி |
| 142 | 377 | மோசிகொற்றன் | தலைவி |
| 143 | 379 | ----- | தோழி |
| 144 | 385 | கபிலர் | தலைவி |
| 145 | 389 | வேட்ட கண்ணன் | தோழி |
| 146 | 392 | தும்பிசேர் கீரனார் | தோழி |
| 147 | 394 | குறியிறையார் | தோழி |

# நற்றிணை பாடிய புலவர்களும் பாடல் எண்களும் கூற்றுகளும்

| வ. எண் | பாடல் எண் | புலவர் பெயர் | கூற்று |
|---|---|---|---|
| 1 | 1 | கபிலர் | தலைவன் |
| 2 | 5 | பெரும்பதுமனார் | தோழி |
| 3 | 6 | பரணர் | தலைவன் |
| 4 | 8 | ----- | தலைவன் |
| 5 | 13 | கபிலர் | தோழி |
| 6 | 17 | நொச்சிநியமங்கிழாா | தலைவி |
| 7 | 22 | --- | தோழி |
| 8 | 23 | கணக்காயனார் | தோழி |
| 9 | 25 | பேரிழசாந்தனார் | தோழி |
| 10 | 32 | கபிலர் | தோழி |
| 11 | 34 | பிரமசாரி | தோழி |
| 12 | 36 | சீத்தலைச்சாத்தனார் | தோழி |
| 13 | 39 | மருதன் இளநாகனார் | தலைவன் |
| 14 | 44 | பெருங்கௌசிகனார் | தலைவன் |
| 15 | 47 | நல்வெள்ளியார் | தோழி |
| 16 | 51 | பேராலவாயர் | தலைவி |
| 17 | 53 | நல்வேட்டனார் | தோழி |
| 18 | 55 | பெருவழுதி | தோழி |
| 19 | 57 | பொதும்பில்கிழார் | தோழி |
| 20 | 61 | சிறுமோலிகனார் | தோழி |
| 21 | 64 | உலோச்சனார் | தலைவி |
| 22 | 65 | கபிலா | தோழி |
| 23 | 68 | பிரான் சாத்தனார் | தோழி |
| 24 | 75 | மாமூலனார் | தலைவன் |
| 25 | 77 | கபிலர் | தலைவன் |
| 26 | 82 | அம்மள்ளனார் | தலைவன |
| 27 | 83 | பெருந்தேவனார் | தோழி |
| 28 | 85 | நல்விளக்கனார் | தோழி |
| 29 | 88 | நல்லந்துவனார் | தோழி |
| 30 | 93 | மலையனார் | தோழி |
| 31 | 95 | கோட்டம்பலவானர் | தலைவன் |
| 32 | 98 | உக்கிரப்பெருவழுதி | தோழி |
| 33 | 102 | செம்பியனார் | தலைவி |
| 34 | 104 | பேரிசாத்தனார் | தலைவி |
| 35 | 108 | ---- | தோழி |
| 36 | 112 | பெருங்குன்றூர் கிழார் | தோழி |
| 37 | 114 | தொல்கபிலர் | தோழி |
| 38 | 116 | கந்தரத்தனார் | தலைவி |
| 39 | 119 | பெருங்குன்றூர் கிழார் | தோழி |

# நற்றிணை

| வ. எண் | பாடல் எண் | புலவர் பெயர் | கூற்று |
|---|---|---|---|
| 40 | 122 | செங்கண்ணனார் | தோழி |
| 41 | 125 | ---- | தோழி |
| 42 | 128 | நற்சேந்தனார் | தோழி |
| 43 | 129 | ஔவையார் | தோழி |
| 44 | 133 | நற்றமனார் | தலைவி |
| 45 | 134 | ---- | தோழி |
| 46 | 136 | நற்றங்கொட்டனார் | தலைவி |
| 47 | 140 | பூதங்கண்ணனார் | தலைவி |
| 48 | 144 | கச்சிக்பேட்டுப் பெருந்தச்சனார் | தலைவி |
| 49 | 146 | கந்தரத்தனார் | தலைவன் |
| 50 | 147 | கொள்ளம்பக்கனார் | தோழி |
| 51 | 151 | இளநாகனார் | தோழி |
| 52 | 154 | நல்லாவூர் கிழார் | தோழி |
| 53 | 156 | கண்ணங்கொற்றனார் | தோழி |
| 54 | 158 | வெள்ளைக்குடி நாகனார் | தோழி |
| 55 | 160 | -- | பாங்கன் |
| 56 | 165 | -- | தோழி |
| 57 | 168 | -- | தோழி |
| 58 | 173 | -- | தோழி |
| 59 | 176 | -- | பரத்தை |
| 60 | 182 | -- | தோழி |
| 61 | 185 | -- | தலைவன் |
| 62 | 188 | -- | தோழி |
| 63 | 190 | -- | தலைவன் |
| 64 | 192 | -- | தலைவன் |
| 65 | 194 | மதுரை மருதன் இளநாகனார் | தோழி |
| 66 | 201 | பரணர் | தலைவன் |
| 67 | 204 | மள்ளனார் | தலைவன் |
| 68 | 206 | ஐயூர் முடவனார் | தோழி |
| 69 | 209 | நொச்சி நியமங்கிழார் | தலைவன் |
| 70 | 213 | கச்சிப்போட்டுப் பெருந்தச்சனார் | தலைவன் |
| 71 | 217 | கபிலர் | தலைவி |
| 72 | 220 | குண்டுகட்பாலியாதனார் | தோழி |
| 73 | 222 | கபிலர் | தோழி |
| 74 | 225 | கபிலர் | தலைவி |
| 75 | 228 | ஓடத்திருமாறனார் | தோழி |

# நற்றிணை

| வ. எண் | பாடல் எண் | புலவர் பெயர் | கூற்று |
|---|---|---|---|
| 76 | 232 | முதுவெங்கண்ணனார் | தோழி |
| 77 | 233 | அஞ்சில் ஆந்தையார் | தோழி |
| 78 | 236 | நம்பி குட்டுவனார் | தலைவி |
| 79 | 244 | கூற்றங் குமரனார் | தலைவி |
| 80 | 247 | பரணர் | தோழி |
| 81 | 251 | மதுரைப் பெருமந்தின நாகனார் | தோழி |
| 82 | 253 | கபிலர் | தோழி |
| 83 | 255 | ஆலம்பேரி சாத்தனார் | தலைவி |
| 84 | 257 | வண்ணக்கண் சோருமருங்குமரனார் | தோழி |
| 85 | 259 | கொற்றங்கொற்றனார் | தோழி |
| 86 | 261 | சேந்தன் பூதனார் | தோழி |
| 87 | 265 | பரணர் | தலைவன் |
| 88 | 268 | வேறிபாடிய காமக்கண்ணியார் | தோழி |
| 89 | 273 | மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் சித்தனார் | தோழி |
| 90 | 276 | தொல்கபிலர் | தோழி |
| 91 | 282 | நல்லூரச்சிறுமேதாவியார் | தோழி |
| 92 | 285 | மதுரைச் கொல்லன் வெண்ணசினார் | தோழி |
| 93 | 288 | குளம்பனார் | தோழி |
| 94 | 292 | நல்வேட்டனார் | தோழி |
| 95 | 294 | புதுக்கயத்த வண்ணக்கண் கம்பூர் கிழான் | தோழி |
| 96 | 297 | மதுரை அளக்கர் ஞாழார் மனோர் மள்ளனார் | தோழி |
| 97 | 301 | பாண்டியன் மாறன் வழுதி | தோழி |
| 98 | 304 | மாறோகத்து கந்தரத்தனார் | தலைவி |
| 99 | 306 | உரோடோகத்து நப்பசலையார் | தோழி |
| 100 | 309 | கபிலர் | |
| 101 | 313 | தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் | தோழி |
| 102 | 317 | மதுரைப் பூவண்ட நாகன் வேட்டனர் | தோழி |
| 103 | 322 | மதுரைப்பாலாசிரியன் சேந்தன் கொற்றனார் | தோழி |
| 104 | 324 | கயமானார் | தலைவன் |
| 105 | 326 | மதுரைமருதன் இளநாகனார் | தோழி |
| 106 | 328 | தொல்கபிலர் | தோழி |
| 107 | 332 | குன்றூர்கிழார் மகன் கண்ணதாசன் | தலைவி |
| 108 | 334 | ஐயூர் முடவனார் | தோழி |
| 109 | 336 | கபிலர் | தோழி |
| 110 | 339 | சீத்தலைச்சாத்தனார் | தோழி |
| 111 | 341 | மதுரை மருதன் இளநாகனார் | தலைவன் |
| 112 | 344 | மதுரைஅறுவை வாணிகன் இளவேட்டனார் | தோழி |

# நற்றிணை

| வ. எண் | பாடல் எண் | புலவர் பெயர் | கூற்று |
|---|---|---|---|
| 113 | 347 | பெருங்குன்றூர் கிழார் | |
| 114 | 351 | மதுரைக் கண்ணத்தனார் | தோழி |
| 115 | 353 | கபிலர் | தோழி |
| 116 | 355 | ----- | தோழி |
| 117 | 356 | பரணர் | தலைவன் |
| 118 | 357 | குறமகன் குறியெயினி | |
| 119 | 359 | கபிலர் | தோழி |
| 120 | 365 | கிள்ளிமங்கலம்கிழார் மனகார் சேரகோவணார் | தோழி |
| 121 | 368 | கபிலர் | தோழி |
| 122 | 373 | கபிலர் | தோழி |
| 123 | 376 | கபிலர் | தோழி |
| 124 | 377 | மடல்பாடிய மாதங்கீரனார் | துலைவன் |
| 125 | 379 | குடவாயிற் கிரத்தனார் | தோழி |
| 126 | 383 | கோளியூர் கிழார் மகனார் செழியனார் | தோழி |
| 127 | 386 | தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார் | தோழி |
| 128 | 389 | காவிரிப்பூம்பட்டினத்துச் சொல்கண்ணனார் | தலைவி |
| 129 | 393 | கோவூர் கிழார் | தோழி |
| 130 | 396 | ----- | தோழி |
| 131 | 399 | தொல்கபிலர் | தோழி |

## அகநானூறு பாடிய புலவர்களும் பாடல் எண்களும் கூற்றுகளும்

| வ. எண் | பாடல் எண் | புலவர் பெயர் | கூற்று |
|---|---|---|---|
| 1 | 2 | கபிலர் | தோழி |
| 2 | 8 | பெருங்குன்றூர் கிழார் | தலைவி |
| 3 | 12 | கபிலர் | தோழி |
| 4 | 18 | கபிலர் | தோழி |
| 5 | 22 | வெறிபாடிய காமக்கண்ணியார் | தலைவி |
| 6 | 28 | பாண்டியன் அறிவுடை நம்பி | தோழி |
| 7 | 32 | நல்வெள்ளியார் | தோழி |
| 8 | 38 | வடம வண்ணக்கண் பேரிசாத்தனார் | தோழி |
| 9 | 42 | கபிலர் | தோழி |
| 10 | 48 | தங்கால் முடக்கொற்றனார் | தோழி |
| 11 | 52 | நொச்சி நியமங்கிழார் | தலைவி |
| 12 | 58 | மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார் | தலைவி |
| 13 | 62 | பரணர் | தலைவன் |
| 14 | 68 | ஊட்டியார் | தோழி |
| 15 | 72 | பெருமை வெளியனார் மகனார் கடலனார் | தலைவி |
| 16 | 78 | மதுரை நக்கிரனார் | தோழி |
| 17 | 82 | கபிலர் | தலைவி |
| 18 | 88 | ஈழத்துப்பூதன் தேவனார் | தோழி |
| 19 | 92 | மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார் | தோழி |
| 20 | 98 | வேறிபாடிய காமக்கண்ணியார் | தோழி |
| 21 | 102 | மதுரைஇளம்பாலாசிரியன் சேந்தங்கூத்தன் | தலைவி |
| 22 | 108 | தங்கால் பொற்கொல்லனார் | தோழி |
| 23 | 112 | நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர்கிழார் | தோழி |
| 24 | 118 | கபிலர் | தோழி |
| 25 | 122 | பரணர் | தலைவி |
| 26 | 128 | கபிலர் | தலைவி |
| 27 | 132 | தாயங்கண்ணனார் | தோழி |
| 28 | 138 | எழுஉப் பன்றிநாகன் குமரனார் | தலைவி |
| 29 | 142 | பரணர் | தலைவன் |
| 30 | 148 | பரணர் | தோழி |
| 31 | 152 | பரணர் | தலைவன் |
| 32 | 158 | கபிலர் | தோழி |
| 33 | 162 | பரணர் | தலைவன் |
| 34 | 168 | கோட்டம்பலத்துத் துஞ்சிய சோமன் | தோழி |

# அகநானூறு பாடிய புலவர்களும் பாடல் எண்களும் கூற்றுகளும்

| வ. எண் | பாடல் எண் | புலவர் பெயர் | கூற்று |
|---|---|---|---|
| 35 | 172 | மதுரைப் பாலாசிரியர் நப்பாலளார் | தோழி |
| 36 | 178 | பரணர் | தோழி |
| 37 | 182 | கபிலர் | தோழி |
| 38 | 188 | வீரை வெளியண் தித்தனார் | தோழி |
| 39 | 192 | பொதும்பில்கிழான் வெண்கண்ணனார் | தோழி |
| 40 | 198 | பரணர் | தலைவன் |
| 41 | 202 | ஆவூர் கிழாா மகனார் கண்ணனார் | தோழி |
| 42 | 208 | பரணர் | தலைவன் |
| 43 | 212 | பரணர் | தலைவி |
| 44 | 218 | கபிலர் | தோழி |
| 45 | 222 | பரணர் | தோழி |
| 46 | 228 | அண்டர்மகன் குறுவழுதியார் | தோழி |
| 47 | 232 | கொடிமங்கலத்து வாதுளி நற்சேந்தன் | தோழி |
| 48 | 238 | கபிலர் | தோழி |
| 49 | 242 | பேரிசாத்தனார் | தோழி |
| 50 | 248 | கபிலர் | தோழி |
| 51 | 252 | நக்கண்ணையார் | தலைவி |
| 52 | 258 | பரணர் | தலைவன் |
| 53 | 262 | பரணர் | தலைவன் |
| 54 | 268 | வடமவண்ணக்கண் பேரிசாத்தனார் | தோழி |
| 55 | 272 | மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் | தோழி |
| 56 | 278 | கபிலர் | தோழி |
| 57 | 282 | தொல்கபிலர் | தோழி |
| 58 | 288 | விற்றுற்று மூதெயினனார் | தோழி |
| 59 | 292 | கபிலர் | தலைவன் |
| 60 | 298 | மதுரைப்பண்ட வாணிகன் இளவேட்டனார் | தலைவி |
| 61 | 302 | கபிலர் | தோழி |
| 62 | 308 | மதுரைப்பண்ட வாணிகன் இளவேட்டனார் | தோழி |
| 63 | 312 | மதுரை மருதன் இளநாகனார் | தோழி (அ)தலைவி |
| 64 | 318 | கபிலர் | தோழி |
| 65 | 322 | பரணர் | தலைவன் |
| 66 | 328 | மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார் | தோழி |
| 67 | 332 | கபிலர் | தலைவி |
| 68 | 338 | மதுரைக் கணக்காயனார் | தலைவன் |
| 69 | 342 | மதுரைக் கணக்காயனார் | தலைவன் |
| 70 | 348 | மதுரைப் இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார் | தலைவி |

# அகநானூறு

| வ. எண் | பாடல் எண் | புலவர் பெயர் | கூற்று |
|---|---|---|---|
| 71 | 352 | ஆஞ்சியத்தை மகன் நாகையார் | தலைவி |
| 72 | 358 | மதுரை மருதன் இளநாகனாா | தோழி |
| 73 | 362 | வெள்ளி வீதியார் | தோழி |
| 74 | 368 | மதுரை மருதன் இளநாகனார் | தோழி |
| 75 | 372 | பரணர் | தலைவன் |
| 76 | 378 | காவட்டனார் | தலைவி |
| 77 | 382 | கபிலர் | தோழி |
| 78 | 388 | ஊட்டியார் | தலைவி (அ) தோழி |
| 79 | 392 | மோசிகீரனார் | தோழி |
| 80 | 398 | இம்மென்கீரனார் | தலைவி |

## கலித்தொகை பாடிய புலவரும் பாடல் எண்களும் கூற்றுகளும்

| வ. எண் | பாடல் எண் | கூற்று | புலவர் பெயர் |
|---|---|---|---|
| 1 | 37 | தோழி | |
| 2 | 38 | தோழி | |
| 3 | 39 | தோழி | |
| 4 | 40 | தோழி | |
| 5 | 41 | தோழி | |
| 6 | 42 | தலைவி (அ) தலைவன் (சஞ்சீவி) | |
| 7 | 43 | தோழி | |
| 8 | 44 | தோழி | |
| 9 | 45 | தோழி | |
| 10 | 46 | தோழி | |
| 11 | 47 | தோழி | |
| 12 | 48 | தோழி | |
| 13 | 49 | தோழி | |
| 14 | 50 | தோழி | |
| 15 | 51 | தலைவி | |
| 16 | 52 | தோழி | |
| 17 | 53 | தோழி | |
| 18 | 54 | தலைவி | |
| 19 | 55 | தலைவி | |
| 20 | 56 | தலைவன் | |
| 21 | 57 | தலைவன் | |
| 22 | 58 | தலைவன் | |
| 23 | 59 | தலைவன் | |
| 24 | 60 | தோழி | |
| 25 | 61 | தோழி | |
| 26 | 62 | தலைவி | |
| 27 | 63 | தோழி | |
| 28 | 64 | தோழி | |
| 29 | 65 | தோழி | |

# ஐங்குநூறு பாடிய புலவரும் பாடல் எண்களும் கூற்றுகளும்

| வ. எண் | பாடல் எண் | கூற்று | புலவர் பெயர் | பத்தி | பத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 201 | தலைவி | கபிலர் | 21.அன்னாய் வாழிப் பத்து | |
| 2 | 202 | தோழி | | | |
| 3 | 203 | தலைவி | | | |
| 4 | 204 | தலைவி | | | |
| 5 | 205 | தோழி | | | |
| 6 | 206 | தோழி | | | |
| 7 | 207 | தோழி | | | |
| 8 | 208 | தோழி | | | |
| 9 | 209 | தலைவி | | | |
| 10 | 210 | தோழி | | | |
| 11 | 211 | தோழி | கபிலர் | 22. அன்னாய்ப் பத்து | |
| 12 | 212 | தோழி | | | |
| 13 | 213 | தலைவி | | | |
| 14 | 214 | தோழி | | | |
| 15 | 215 | தலைவி | | | |
| 16 | 216 | தோழி | | | |
| 17 | 217 | தோழி | | | |
| 18 | 218 | தோழி | | | |
| 19 | 219 | தோழி | | | |
| 20 | 220 | தோழி | | | |
| 21 | 221 | தலைவி | கபிலர் | 23. அம்ம வாழிப்பத்து | |
| 22 | 222 | தலைவி | | | |
| 23 | 223 | தோழி | | | |
| 24 | 224 | தலைவி | | | |
| 25 | 225 | தோழி | | | |
| 26 | 226 | தோழி | | | |
| 27 | 227 | தோழி | | | |
| 28 | 228 | தோழி | | | |
| 29 | 229 | தோழி | | | |
| 30 | 230 | தோழி | | | |
| 31 | 231 | தோழி | கபிலர் | 24. தெய்யோப்பத்து | |
| 32 | 232 | தோழி | | | |
| 33 | 233 | தோழி | | | |
| 34 | 234 | தோழி | | | |
| 35 | 235 | தோழி | | | |

## ஐங்குநுறூறு பாடிய புலவரும் பாடல் எண்களும் கூற்றுகளும்

| வ. எண் | பாடல் எண் | கூற்று | புலவர் பெயர் | பத்தி | பத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 36 | 236 | தோழி | கபிலர் | 24. தெய்யோப் பத்து | |
| 37 | 237 | தோழி | | | |
| 38 | 238 | தோழி | | | |
| 39 | 239 | தோழி | | | |
| 40 | 240 | தோழி | | | |
| 41 | 241 | தோழி | கபிலர் | 25. வெறிப்பத்து | |
| 42 | 242 | தோழி | | | |
| 43 | 243 | தோழி | | | |
| 44 | 244 | தோழி | | | |
| 45 | 245 | தோழி | | | |
| 46 | 246 | தோழி | | | |
| 47 | 247 | தோழி | | | |
| 48 | 248 | தோழி | | | |
| 49 | 249 | தோழி | | | |
| 50 | 250 | தோழி | | | |
| 51 | 251 | தோழி | கபிலர் | 26. குன்றக்குறவன் பத்து | |
| 52 | 252 | தோழி | | | |
| 53 | 253 | தலைவி | | | |
| 54 | 254 | தோழி | | | |
| 55 | 255 | தலைவன் | | | |
| 56 | 256 | தலைவன் | | | |
| 57 | 257 | தோழி | | | |
| 58 | 258 | தோழி | | | |
| 59 | 259 | தலைவன் | | | |
| 60 | 260 | தோழி | | | |
| 61 | 261 | தோழி | கபிலர் | 27. கேழற்பத்து | |
| 62 | 262 | தலைவி | | | |
| 63 | 263 | தலைவி | | | |
| 64 | 264 | தோழி | | | |
| 65 | 265 | தலைவி | | | |
| 66 | 266 | தோழி | | | |
| 67 | 267 | தோழி | | | |
| 68 | 268 | தோழி | | | |
| 69 | 269 | தோழி | | | |
| 70 | 270 | தோழி | | | |
| 71 | 271 | தோழி | கபிலர் | 28. | |

| வ. எண் | பாடல் எண் | கூற்று | புலவர் பெயர் | பத்தி | பத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 72 | 272 | தலைவி | கபிலர் | 28. | குரக்குப்பத்து |
| 73 | 273 | தோழி | | | |
| 74 | 274 | தலைவி | | | |
| 75 | 275 | தோழி | | | |
| 76 | 276 | தோழி | | | |
| 77 | 277 | தோழி | | 29. | கிள்ளைப்பத்து |
| 78 | 278 | தலைவி | | | |
| 79 | 279 | தோழி | | | |
| 80 | 280 | தோழி | | | |
| 81 | 281 | தலைவன் | கபிலர் | | |
| 82 | 282 | தோழி | | | |
| 83 | 283 | தோழி | | | |
| 84 | 284 | தோழி | | | |
| 85 | 285 | தோழி | | | |
| 86 | 286 | தலைவி | | | |
| 87 | 287 | தோழி | | | |
| 88 | 288 | தலைவன் | | | |
| 89 | 289 | தோழி | | | |
| 90 | 290 | தோழி | | | |
| 91 | 291 | தலைவன் | கபிலர் | 30. | மஞ்ஞைப்பத்து |
| 92 | 292 | தலைவி | | | |
| 93 | 293 | தலைவன் | | | |
| 94 | 294 | தோழி | | | |
| 95 | 295 | தலைவி | | | |
| 96 | 296 | தோழி | | | |
| 97 | 297 | தோழி | | | |
| 98 | 298 | தலைவன் | | | |
| 99 | 299 | தலைவன் | | | |
| 100 | 300 | தோழி | கபிலர் | | |

**ஒன்றிற்கும் மேற்பட்ட குறிஞ்சித் திணைப்பாடல்களைப் பாடிய புலவர்கூறும் பாடல் எண்களும் பாடல்களின் கூற்றுகளும்**

| வ.எண் | புலவர் | நூல் | பாடல் எண் | கூற்று | நூல் குறிஞ்சி மொத்தம் | குறிஞ்சி மொத்தம் | பாடிய மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கபிலர் | ஐங். | 255 | தலைவன் | | | |
| | | 1.அன்னாய் வாழிப் பத்து | 256 | தலைவன் | | | |
| | | | 259 | தலைவன் | | | |
| | | | 281 | தலைவன் | | | |
| | | | 288 | தலைவன் | | | |
| | | | 291 | தலைவன் | | | |
| | | | 293 | தலைவன் | | | |
| | | | 298 | தலைவன் | | | |
| | | | 299 | தலைவன் | | | |
| | | | 201 | தலைவி | | | |
| | | | 203 | தலைவி | | | |
| | | | 204 | தலைவி | | | |
| | | | 209 | தலைவி | | | |
| | | | 213 | தலைவி | | | |
| | | | 215 | தலைவி | | | |
| | | | 221 | தலைவி | | | |
| | | | 222 | தலைவி | | | |
| | | | 224 | தலைவி | | | |
| | | | 253 | தலைவி | | | |
| | | | 262 | தலைவி | | | |
| | | | 263 | தலைவி | | | |
| | | | 265 | தலைவி | | | |
| | | | 272 | தலைவி | | | |
| | | | 274 | தலைவி | | | |
| | | | 278 | தலைவி | | | |
| | | | 289 | தலைவி | | | |
| | | | 292 | தலைவி | | | |
| | | | 295 | தலைவி (19) | | | |
| | | | 201-300ல் | | | | |
| | | | 72 பாடல்கள் | தோழி(72) | 100 | 100 | |
| | | அன்னாய் வாழிப்பத்து | (201-210) | | | | |
| | | அன்னாய்ப்பத்து | (211-220) | | | | |
| | | அம்மவாழிப் பத்து | (221-230) | | | | |
| | | தெய்யோப்பத்து | (231-240) | | | | |
| | | வெறிப்பத்து | (241-250) | | | | |
| | | குன்றக்குறவன் பத்து | (251-260) | | | | |
| | | கேபற்பத்து | (261-270) | | | | |
| | | குரக்குப்பத்து | (271-280) | | | | |
| | | கிள்ளைப்பத்து | (281-290) | | | | |
| | | மஞ்ஞைப்பத்து | (291-300) | | | | |

| வ.எண் | புலவர் | நூல் | பாடல் எண் | கூற்று | குறிஞ்சி மொத்தம் | பாடிய மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கபிலர் | ஐங். | 201 முதல் 300 வரை | தோழி | 100 | | |
| | | கலித்தொகை (குறிஞ்சிக்கலி) | 37 முதல் 65 வரை | | | | |
| | | | 37 | | | | |
| | | | 38 | | | | |
| | | | 39 | | | | |
| | | | 40 | | | | |
| | | | 41 | தோழி(5) | | | |
| | | | 42 | தலைவன் | | | |
| | | | 43 | தோழி | | | |
| | | | 44 | தோழி | | | |
| | | | 45 | தோழி | | | |
| | | | 46 | தோழி | | | |
| | | | 47 | தோழி | | | |
| | | | 48 | தோழி | | | |
| | | | 49 | தோழி | | | |
| | | | 50 | தோழி | | | |
| | | | 51 | தலைவி | | | |
| | | | 52 | தோழி | | | |
| | | | 53 | தோழி | | | |
| | | | 54 | தலைவி | | | |
| | | | 55 | தலைவி | | | |
| | | | 56 | தலைவன் | | | |
| | | | 57 | தலைவன் | | | |
| | | | 58 | தலைவன் | | | |
| | | | 59 | தலைவன் | | | |
| | | | 60 | தோழி | | | |
| | | | 61 | தோழி | | | |
| | | | 62 | தலைவன் தலைவி | | | |
| | | | 63 | தோழி | | | |
| | | | 64 | தோழி | | | |
| | | | 65 | தலைவன் தோழி | | | |
| | | அகநா. | 2 | தோழி (4) | | | |
| | | | 12 | தோழி (4) | | | |
| | | | 18 | தோழி (4) | | | |
| | | | 42 | தோழி (4) | | | |
| | | | 82 | தலைவி | | | |
| | | | 118 | தோழி | | | |
| | | | 128 | தலைவி | | | |
| | | | 158 | தலைவி | | | |
| | | | 182 | தலைவி | | | |

| வ.எண் | புலவர் | நூல் | பாடல் எண் | கூற்று | குறிஞ்சி மொத்தம் | பாடிய மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 218 | தோழி(6) | | | |
| | | | 238 | தோழி(6) | | | |
| | | | 248 | தோழி(6) | | | |
| | | | 278 | தோழி(6) | | | |
| | | | 292 | தலைவி | | | |
| | | | 318 | தோழி | | | |
| | | | 332 | தலைவி | | | |
| | | | 382 | தோழி | 17 | | |
| | | குறுந். | 13 | தலைவி | | | |
| | | | 18 | தோழி | | | |
| | | | 25 | தலைவி (2) | | | |
| | | | 38 | தலைவி (2) | | | |
| | | | 42 | தோழி | | | |
| | | | 87 | தலைவி | | | |
| | | | 95 | தலைவன் (2) | | | |
| | | | 100 | தலைவன் (2) | | | |
| | | | 106 | தலைவி | | | |
| | | | 115 | தோழி | | | |
| | | | 121 | தலைவி | | | |
| | | | 142 | தலைவன் | | | |
| | | | 153 | தலைவி (2) | | | |
| | | | 187 | தலைவி (2) | | | |
| | | | 198 | தோழி | | | |
| | | | 208 | தலைவி | | | |
| | | | 225 | தோழி | | | |
| | | | 241 | தலைவி (5) | | | |
| | | | 249 | தலைவி (5) | | | |
| | | | 259 | தலைவி (5) | | | |
| | | | 264 | தலைவி (5) | | | |
| | | | 288 | தலைவி(5) | | | |
| | | | 291 | தலைவன்(2) | | | |
| | | | 312 | தலைவன்(2) | | | |
| | | | 355 | தோழி(2) | | | |
| | | | 361 | தலைவி(2) | | | |
| | | | 385 | தலைவி(2) | 28 | | |
| | | நற். | 1 | தலைவி | | | |
| | | | 13 | தோழி(3) | | | |
| | | | 32 | தோழி(3) | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 65 | தோழி(3) | | | | |
| | | | 77 | தலைவன் | | | | |
| | | | 217 | தலைவி | | | | |
| | | | 222 | தோழி | | | | |
| | | | 225 | பரத்தை | | | | |
| | | | 253 | தோழி | | | | |
| | | | 309 | தலைவி | | | | |
| | | | 336 | தலைவி | | | | |
| | | | 353 | தலைவி | | | | |
| | | | 359 | தலைவி | | | | |
| | | | 368 | தலைவி | | | | |
| | | | 373 | தலைவி | | | | |
| | | | 376 | தோழி(6) | 16 | | | |
| | | பத்துப்பாட்டு (குறிஞ்சிப்பாட்டு) | 8 | தோழி | 1 | | | |
| | | | | | 191 | 235 | 191 | |

| வ.எண் | புலவர் | நூல் | பாடல் எண் | கூற்று | குறிஞ்சி மொத்தம் | பாடிய மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | பரணர் | அகநா. | 62 | தலைவன் | | | |
| | | | 122 | தலைவி | | | |
| | | | 142 | தலைவன் | | | |
| | | | 148 | தோழி | | | |
| | | | 152 | தலைவன்(2) | | | |
| | | | 162 | தலைவன்(2) | | | |
| | | | 178 | தோழி | | | |
| | | | 198 | தலைவி | | | |
| | | | 208 | தலைவன்(2) | | | |
| | | | 212 | தலைவன்(2) | | | |
| | | | 222 | தோழி | | | |
| | | | 258 | தலைவன்(2) | | | |
| | | | 262 | தலைவன்(2) | | | |
| | | | 322 | தலைவன்(2) | | | |
| | | | 372 | தலைவன்(2) | 15 | | |
| | | குறுந். | 36 | தலைவி | | | |
| | | | 60 | தோழி(2) | | | |
| | | | 73 | தோழி(2) | | | |
| | | | 120 | தலைவன்(3) | | | |
| | | | 165 | தலைவன்(3) | | | |
| | | | 199 | தலைவன்(3) | | | |
| | | | 292 | தோழி(2) | | | |
| | | | 298 | தோழி(2) | 8 | | |
| | | நற். | 6 | தலைவன்(2) | | | |
| | | | 201 | தலைவன்(2) | | | |
| | | | 247 | தோழி | | | |
| | | | 265 | தலைவன்(2) | | | |
| | | | 356 | தலைவன்(2) | 5 | 85 | 28 |
| 3 | பேரிசாத்தனார் | அகநா. | 38 | | | | |
| | | | 242 | | | | |
| | | | 268 | தோழி(3) | 3 | | |
| | | குறுந். | 81 | | | | |
| | | | 159 | | | | |
| | | | 366 | தோழி(3) | 3 | | |
| | | நற். | 25 | தோழி | | | |
| | | | 104 | தலைவி | 2 | 20 | 8 |
| 4 | நக்கீரர் | அகநா. | 78 | தோழி | 1 | | |
| | | குறுந். | 70 | பாங்கன் | | | |
| | | | 105 | தலைவி | | | |
| | | | 143 | தோழி | | | |
| | | | 161 | தலைவி | | | |
| | | | 280 | தலைவன் | 5 | 36 | 6 |
| 5 | ஔவையார் | குறுந். | 23 | தோழி | | | |
| | | | 29 | தலைவன் | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 158 | தலைவி | 3 | | |
| | | நற். | 129 | தோழி | 1 | 59 | 4 |
| 6 | பெருங்குன்றூர்கிழார் | அகநா. | 8 | தலைவி | | | |
| | | நற். | 5 | தோழி(4) | | | |
| | | | 112 | தோழி(4) | | | |
| | | | 119 | தோழி(4) | | | |
| | | | 347 | தோழி(4) | 4 | 21 | 5 |
| 7 | தொல்கபிலர் | அகநா. | 282 | தோழி | | | |
| | | குறுந். | 14 | செவிலி தலைவன் | | | |
| | | நற். | 114 | தோழி(4) | | | |
| | | | 276 | தோழி(4) | | | |
| | | | 328 | தோழி(4) | | | |
| | | | 399 | தோழி(4) | 4 | 6 | 6 |
| 8 | சிறைக்குடி ஆந்தையார் | குறுந். | 62 | தலைவன்(2) | | | |
| | | | 132 | தலைவன்(2) | | | |
| | | | 222 | தோழி | | | |
| | | | 300 | தலைவன் | 4 | 9 | 4 |
| 9 | இளந்தேவனார் | அகநா. | 58 | தலைவி | | | |
| | | | 298 | தலைவன் | | | |
| | | | 328 | தலைவி | 3 | 4 | 3 |
| 10 | கந்தரந்தனார் | நற். | 116 | தலைவி | | | |
| | | | 146 | தலைவன் | | | |
| | | | 306 | தோழி | 3 | 8 | 3 |
| 11 | சேந்தம்பூதனார் | குறுந். | 90 | | | | |
| | | | 247 | தோழி(2) | 2 | | |
| | | நற். | 261 | தோழி | 1 | 7 | 3 |
| 12 | நல்வெள்ளியார் | அகநா. | 32 | தோழி | 1 | | |
| | | குறுந். | 365 | தோழி | 1 | | |
| | | நற். | 47 | தோழி | 1 | 4 | 3 |
| 13 | மதுரைஇளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார் | அகநா. | 102 | தலைவி(2) | 2 | | |
| | | | 348 | தலைவி(2) | | | |
| | | நற். | 273 | தோழி | 1 | 3 | 3 |
| 14 | வெள்ளிவீதியார் | அகநா. | 362 | தோழி | 1 | | |
| | | குறுந். | 58 | தலைவன் | 1 | | |
| | | | 146 | தோழி | 2 | 13 | 3 |
| 15 | ஈழத்துப் பூதன் தேவனார் | அகநா. | 88 | தோழி | 1 | | |
| | | குறுந். | 360 | தலைவன் | 1 | 7 | 2 |
| 16 | குன்றியனார் | குறுந். | 301 | தலைவி | | | |
| | | | 336 | தோழி | 2 | 10 | 2 |
| 17 | கொல்லன் அழிசி | குறுந். | 26 | தோழி(2) | | | |
| | | | 138 | தோழி(2) | 2 | 4 | 2 |
| 18 | நல்வேட்டனார் | நற். | 53 | தோழி(2) | | | |
| | | | 292 | தோழி(2) | 2 | 5 | 2 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 19 | விற்றூற்று மூதெயினனார் | அகநா. | 288 | தோழி | 1 | | |
| | | குறுந். | 372 | தோழி | 1 | 4 | 2 |
| 20 | அல்லூர் நன்முல்லையார் | குறுந். | 32 | தலைவன் | | | |
| | | | 68 | தலைவி(2) | | | |
| | | | 96 | தலைவி(2) | 3 | 11 | 3 |
| 21 | ஊட்டியார் | அகநா. | 68 | தோழி | | | |
| | | | 388 | தலைவி | 2 | 2 | 2 |
| 22 | கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார் | நற். | 144 | தலைவி | | | |
| | | | 213 | தலைவன் | 2 | 2 | 2 |
| 23 | கிள்ளிமங்கலங்கிழார் | குறுந். | 76 | தலைவி(2) | | | |
| | | | 152 | தலைவி(2) | 2 | 4 | 2 |
| 24 | மடல்பாடிய மாதங்கீரனார் | குறுந். | 182 | தலைவன் | 1 | | |
| | | நற். | 377 | தலைவன் | 1 | 2 | 2 |
| 25 | மள்ளனார் | குறுந். | 72 | தலைவன் | 1 | | |
| | | நற். | 204 | தலைவன் | 1 | 2 | 2 |
| 26 | மிளைப்பெருங்கந்தன் | குறுந். | 136 | தலைவன் | | | |
| | | | 204 | பாங்கன் | 2 | 3 | 2 |
| 27 | ஐயூர் முடவனார் | குறுந். | 206 | தலைவன் | | | |
| | | | 322 | தலைவி | 2 | | |
| | | நற். | 206 | தோழி(2) | | | |
| | | | 334 | தோழி(2) | 2 | 10 | 2 |
| 28 | சீத்தலைச்சாத்தனார் | நற். | 36 | தோழி(2) | | | |
| | | | 339 | தோழி(2) | 2 | 10 | 2 |
| | | | | | | | |
| 29 | தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் | அகநா. | 48 | | | | |
| | | | 108 | தோழி | 2 | | |
| | | நற். | 313 | தோழி | 1 | 6 | 3 |
| 30 | தும்பிசேர்கீரனார் | குறுந். | 315 | தலைவி | | | |
| | | | 392 | தோழி | 2 | 7 | 2 |
| 31 | நொச்சிநியமங்கிழார் | அகநா. | 52 | தலைவி | 1 | | |
| | | நற். | 17 | தலைவி | | | |
| | | | 209 | தலைவன் | 2 | 5 | 3 |
| 32 | மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் | நற். | 82 | | | | |
| | | | 297 | தோழி(2) | 2 | 13 | 2 |
| 33 | மதுரை அறுவை வானிகன் இளவேட்டனார் | அகநா. | 272 | | | | |
| | | | 302 | தோழி(2) | 2 | | |
| | | | 185 | தலைவி | 1 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 144 | தலைவன் | 1 | 12 | 4 |
| 34 | மதுரைக் கணக்காயனார் | அகநா. | 338 | | | | |
| | | | 342 | தலைவன்(2) | 2 | | |
| | | நற். | 23 | தோழி | 1 | 5 | 3 |
| 35 | மருதனிளநாகனார் | அகநா. | 312 | தோழி(அ) தலைவி | | | |
| | | | 358 | தோழி | | | |
| | | | 368 | தோழி | | | |
| | | குறுந். | 160 | தலைவி | 3 | | |
| | | நற். | 39 | தலைவன் | 1 | | |
| | | | 194 | தோழி | | | |
| | | | 326 | தோழி | | | |
| | | | 341 | தலைவன் | 4 | 79 | 8 |
| 36 | மாங்குடிமருதனார் | குறுந். | 173 | தலைவன் | | | |
| | | | 302 | தலைவி | 2 | 13 | 2 |
| 37 | முதுகூத்தனார் | குறுந். | 353 | தோழி | | | |
| | | | 371 | தலைவி | 2 | 9 | 2 |
| 38 | வெறிபாடிய காமக்கண்ணியார் | அகநா. | 22 | தோழி (அ) தலைவி | | | |
| | | | 98 | தோழி(அ) தலைவி | 2 | | |
| | | நற். | 268 | தோழி | 1 | 5 | 3 |
| குறிஞ்சித்திணையில் 38 புலவர்கள் பாடிய மொத்தப் பாடல்கள் | | | | | | | 333 |

## அகம் மட்டும் பாடிய புலவரின் குறிஞ்சித்திணையில் ஒரு பாடல் மட்டும் பாடிய புலவரும் பாடல் எண்களும் கூற்றுமாந்தர்களும்

| வ. எண் | புலவர் | நூல் | பாடல் எண் | கூற்று | நூல் மொத்தம் | மொத்த குறிஞ்சித் திணைப்பாடல் | பாடிய மொத்த பாடல்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அஞ்சியத்தை மகள் நாகையார் | அகநா. | 352 | தலைவி | 1 | 1 | 1 |
| 2 | அஞ்சில் ஆந்தையர் | நற். | 233 | தோழி | 1 | 1 | 2 |
| 3 | அம்மூவனார் | குறுந். | 327 | தலைவி | 1 | 1 | 127 |
| 4 | ஆசிரியன் பெருங்கண்ணன் | குறுந். | 239 | தலைவி | 1 | 1 | 1 |
| 5 | ஆலம்பேரிசாத்தனார் | நற். | 255 | தலைவி | 1 | 1 | 8 |
| 6 | ஆவூர்கிழார் மகனார் கண்ணனார் | அகநா. | 202 | தோழி | 1 | 1 | 1 |
| 7 | இம்மென்கீரனார் | அகநா. | 398 | தலைவி | 1 | 1 | 1 |
| 8 | இருந்தையூர்க் கொற்றன் புலவன் | குறுந். | 335 | தோழி | 1 | 1 | 1 |
| 9 | இளங்கீரனார் | குறுந். | 116 | தலைவன் | 1 | 1 | 16 |
| 10 | இளநாகனார் | நற். | 151 | தோழி | 1 | 1 | 3 |
| 11 | இறையனார் | குறுந். | 2 | தலைவன் | 1 | 1 | 1 |
| 12 | உக்கிரப்பெருவழுதி | நற். | 98 | தோழி | 1 | 1 | 2 |
| 13 | உமுந்திணைப் புலவர் | குறுந். | 333 | தோழி | 1 | 1 | 1 |
| 14 | உறையூர்ச் சிறுகந்தனார் | குறுந். | 257 | தலைவி | 1 | 1 | 1 |
| 15 | உறையூர்ப் பல்காயனார் | குறுந். | 374 | தோழி | 1 | 1 | 1 |
| 16 | எயிற்றியனார் | குறுந். | 256 | தலைவன் | 1 | 1 | 1 |
| | எருமைவெளியனார் மகனார் | அகநா. | 72 | தலைவி(அ) தோழி | 1 | 1 | 1 |
| 17 | எமூஉப்பன்றி நாகன் குமரனார் | அகநா. | 138 | தலைவி | 1 | 1 | 2 |
| 18 | கடுந்தோட்கரவீரன் | குறுந். | 69 | தோழி | 1 | 1 | 1 |
| 19 | கடுவன் மள்ளனார் | குறுந். | 82 | தலைவி | 1 | 1 | 4 |
| 20 | கண்ணனார் | குறுந். | 244 | தோழி | 1 | 1 | 2 |
| 21 | கதக்கண்ணனார் | குறுந். | 88 | தோழி | 1 | 1 | 2 |
| 22 | கரூவூர்கிழார் | குறுந். | 170 | தலைவி | 1 | 1 | 1 |
| 23 | கருவூர் சேரமான் சாத்தன் | குறுந். | 268 | தோழி | 1 | 1 | 1 |
| 24 | காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார் | குறுந். | 342 | தோழி | 1 | 1 | 1 |
| 25 | காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார் | நற். | 389 | தலைவி | 1 | 1 | 3 |
| 26 | கிடங்கில் குலபதி நக்கண்ணனார் | குறுந். | 202 | தலைவி | 1 | 1 | 1 |
| 27 | கிள்ளிமங்கலங்கிழார் மகனார் சேரகோவனார் | நற். | 365 | தோழி | 1 | 1 | 1 |
| 28 | குட்டுவன் கண்ணனார் | குறுந். | 179 | தோழி | 1 | 1 | 1 |
| 29 | குளம்பனார் | நற். | 288 | தோழி | 1 | 1 | 1 |
| 30 | குறமகள் குறிஎயினி | நற். | 357 | தலைவன் | 1 | 1 | 1 |
| 31 | குறி இறையார் | குறுந். | 394 | தோழி | 1 | 1 | 1 |
| 32 | கூற்றங்குமரனார் | நற். | 244 | தலைவி | 1 | 1 | 1 |
| 33 | கொடிமங்கலத்து | அகநா. | 232 | தோழி | 1 | 1 | 2 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வாதுளி நற்சேந்தனார் | | | | | | |
| 34 | கொட்டம்பலவனார் | நற். | 95 | தலைவன் | 1 | 1 | 1 |
| | கொள்ளம்பக்கனார் | நற். | 147 | தோழி | 1 | 1 | 1 |
| 35 | கொற்றங்கொற்றனார் | நற். | 259 | தோழி | 1 | 1 | 2 |
| 36 | கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் | அகநா. | 168 | தோழி | 1 | 1 | 1 |
| 37 | கோவேங்கைப் பெருங்கதவனார் | குறுந். | 134 | தலைவி | 1 | 1 | 1 |
| 38 | கோலியூர்க்கிழார் மனகார் செழியினார் | நற். | 383 | தோழி | 1 | 1 | 1 |
| 39 | கோழிக்கொற்றனார் | குறுந். | 276 | தலைவன் | 1 | 1 | 1 |
| 40 | சத்திநாதனார் | குறுந். | 119 | தலைவன் | 1 | 1 | 1 |
| 41 | சிறுமோலிகனார் | நற். | 61 | தோழி | 1 | 1 | 1 |
| 42 | செங்கண்ணனார் | நற். | 122 | தோழி | 1 | 1 | 2 |
| 43 | செம்பியனார் | நற். | 102 | தலைவி | 1 | 1 | 1 |
| 44 | செம்புலப்பெயல்நீரார் | குறுந். | 40 | தலைவன் | 1 | 1 | 1 |
| 45 | சேரமான் எந்தை | குறுந். | 22 | தோழி | 1 | 1 | 1 |
| 46 | தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார் | நற். | 386 | தோழி | 1 | 1 | 1 |
| 47 | திப்புத்தோளார் | குறுந். | 1 | தோழி | 1 | 1 | 1 |
| 48 | தின்மதிநாகனார் | குறுந். | 111 | தோழி | 1 | 1 | 1 |
| 49 | தேவகுலத்தார் | குறுந். | 3 | தலைவி | 1 | 1 | 1 |
| 50 | நம்பிருட்டுவன் | நற். | 236 | தோழி | 1 | 1 | 5 |
| 51 | நல்லாவூர்கிழார் | நற். | 154 | தலைவன் | 1 | 1 | 2 |
| 52 | நல்லூச் சிறு மேதாவியார் | நற். | 282 | தோழி | 1 | 1 | 1 |
| 53 | நல்விளக்கனார் | நற். | 85 | தோழி | 1 | 1 | 1 |
| 54 | நற்சேந்தனார் | நற். | 128 | தோழி(அ)தலைவி | 1 | 1 | 1 |
| 55 | நற்றங்கொற்றனார் | நற். | 136 | தலைவி | 1 | 1 | 1 |
| 56 | நற்றமனார் | நற். | 133 | தலைவி | 1 | 1 | 1 |
| 57 | நெடுவெண்ணிலவினார் | குறுந். | 47 | தோழி | 1 | 1 | 1 |
| 58 | நெய்தற் சாய்த்துய்ந்த ஆவூர்கிழார் | அகநா. | 112 | தோழி | 1 | 1 | 1 |
| 60 | பரூஉ மோவாய்ப் பதுமனார் | குறுந். | 101 | தலைவன் | 1 | 1 | 1 |
| 61 | பனம்பாரனார் | குறுந். | 52 | தோழி | 1 | 1 | 1 |
| 62 | பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார் | குறுந். | 156 | தலைவன் | 1 | 1 | 2 |
| 63 | பாண்யடின் மாறன்வழுதி | நற். | 301 | தோழி | 1 | 1 | 2 |
| 64 | பிரமசாரி | நற். | 34 | தோழி | 1 | 1 | 1 |
| 65 | பிரான் சாத்தனார் | நற். | 68 | தோழி | 1 | 1 | 1 |
| 66 | புதுக்கயத்து வண்ணக்கண் கம்பூர்கிழான் | நற். | 294 | தோழி | 1 | 1 | 1 |
| 67 | பூதங்கண்ணனார் | நற். | 140 | தலைவன் | 1 | 1 | 1 |
| 68 | பெருங்கௌசிகனார் | நற். | 44 | தலைவன் | 1 | 1 | 2 |
| 69 | பெருஞ்சாத்தனார் | குறுந். | 263 | தோழி | 1 | 1 | 1 |
| 70 | பெருந்தேவனார் | நற். | 83 | தோழி | 1 | 1 | 3 |
| 71 | பெருந்தோட் குறுஞ்சாத்தன் | குறுந். | 308 | தோழி | 1 | 1 | 1 |
| 72 | பெருவழுதி | நற். | 55 | தோழி | 1 | 1 | 2 |
| 73 | பேயனார் | குறுந். | 339 | தோழி | 1 | 1 | 105 |
| 74 | பொதுக்கயத்துக் | குறுந். | 337 | தலைவன் | 1 | 1 | 1 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | கீரந்தை | | | | | | |
| 75 | பொதும்பில்கிழார் | நற். | 57 | தோழி | 1 | 1 | 1 |
| 76 | மதுரைக் கடையத்தார் மகனார் வெண்ணாகனார் | குறுந். | 223 | தலைவி | 1 | 1 | 1 |
| 77 | மதுரைக் கண்டரத்தனார் | குறுந். | 317 | தோழி | 1 | 1 | 1 |
| 78 | மதுரைக் கண்ணத்தனார் | நற். | 351 | தோழி | 1 | 1 | 2 |
| 79 | மதுரைக் கொல்லன் புல்லன் | குறுந். | 373 | தோழி | 1 | 1 | 1 |
| 80 | மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் | நற். | 285 | தோழி | 1 | 1 | 2 |
| 81 | மதுரைப் பாலாசிரியர் சேந்தன் கொற்றனார் | நற். | 322 | தோழி (அ) தலைவி | 1 | 1 | 1 |
| 82 | மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார் | அகநா. | 172 | தோழி | 1 | 1 | 1 |
| 83 | மதுரைப் பாலரிசிரியர் நற்றாமனார் | அகநா. | 92 | தோழி | 1 | 1 | 1 |
| 84 | மதுரைப் பூவண்டநாகன் வேட்டனார் | நற். | 317 | தலைவி தோழி | 1 | 1 | 1 |
| 85 | மதுரைப் பெருமருதின நாகனார் | நற். | 251 | தோழி | 1 | 1 | 1 |
| 86 | மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன் | குறுந். | 332 | தோழி | 1 | 1 | 1 |
| 87 | மலையனார் | நற். | 93 | தலைவி | 1 | 1 | 1 |
| 88 | மாடலூர்கிழார் | குறுந். | 150 | தலைவி | 1 | 1 | 1 |
| 89 | மாமூலனார் | நற். | 75 | தலைவன் | 1 | 1 | 30 |
| 90 | மிளைவேள் தித்தன் | குறுந். | 284 | தலைவி | 1 | 1 | 1 |
| 91 | மீனெறிதூண்டிலார் | குறுந். | 54 | தலைவி | 1 | 1 | 1 |
| 92 | முடத்திருமாறன் | நற். | 228 | தோழி | 1 | 1 | 2 |
| 93 | முதுவெங்கண்ணனார் | நற். | 332 | தோழி | 1 | 1 | 1 |
| 94 | மோசி கொற்றன் | குறுந். | 377 | தலைவி | 1 | 1 | 1 |
| 95 | வண்ணக்கண் சோரு மருங்குமரனார் | நற். | 257 | தோழி | 1 | 1 | 1 |
| 96 | வருமுலை யாரித்தி | குறுந். | 176 | தோழி | 1 | 1 | 1 |
| 97 | வாயிலிளங்கண்ணன் | குறுந். | 346 | தோழி | 1 | 1 | 1 |
| 98 | விட்டகுதிரையார் | குறுந். | 74 | தோழி | 1 | 1 | 1 |
| 99 | வீரைவெளியன்தித்தன் | அகநா. | 188 | தோழி | 1 | 1 | 1 |
| 100 | வெண்கண்ணனார் | அகநா. | 192 | தோழி | 1 | 1 | 2 |
| 101 | வெண் கொற்றன் | குறுந். | 86 | தலைவி | 1 | 1 | 1 |
| 102 | வெண்பூதன் | குறுந். | 83 | தோழி | 1 | 1 | 1 |
| 103 | வேட்டகண்ணன் | குறுந். | 389 | தோழி | 1 | 1 | 1 |
| 104 | வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன் | குறுந். | 362 | தோழி | 1 | 1 | 1 |
| 108 | கண்ணங் கொற்றனார் | நற். | 156 | தலைவி(அ)தோழி | 1 | 1 | 1 |
| 109 | மதுரைப் பெருங்கொல்லன் | குறுந். | 141 | தலைவி(அ)தோழி | 1 | 1 | 1 |
| 110 | கோவூர்கிழார் | நற். | 393 | தோழி | 1 | 1 | 1 |

**அகமும் புறமும் பாடிய புலவருள் குறிஞ்சித்திணையில் ஒரு பாடல் மட்டும் பாடிய புலவரும் பாடல் எண்களும் வற்று மாந்தர்களும்**

| வ.எண் | புலவர் | நூல் | பாடல் எண் | கூற்று | நூல் மொத்தம் | மொத்த குறிஞ்சித் திணைப்பாடல் | பாடிய மொத்த பாடல்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அண்டர்மகன் குறுவழுதியார் | அகநா. | 228 | தோழி | 1 | 1 | 4 |
| 2 | அறிவுடைநம்பி | அகநா. | 28 | தோழி | 1 | 1 | 4 |
| 3 | ஆலத்தூர்கிழார் | குறுந். | 112 | தலைவி | 1 | 1 | 7 |
| 4 | உலோச்சனார் | நற். | 64 | தலைவி | 1 | 1 | 35 |
| 5 | உறையூர் முதுகண்ணன் சாத்தனார் | குறுந். | 133 | தலைவி | 1 | 1 | 6 |
| 6 | ஒரு சிறைப் பெரியினார் | குறுந். | 272 | தலைவன் | 1 | 1 | 3 |
| 7 | ஓரம்போகியார் | குறுந். | 70 | தலைவன் | 1 | 1 | 110 |
| 8 | கதப்பிள்ளையார் | குறுந். | 265 | தோழி | 1 | 1 | 5 |
| 9 | கயமனார் | நற். | 324 | தலைவன் | 1 | 1 | 23 |
| 10 | காவட்டனார் | அகநா. | 378 | தலைவி | 1 | 1 | 2 |
| 11 | காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் | குறுந். | 297 | தோழி | 1 | 1 | 10 |
| 12 | குடவாயிற் கீரத்தனார் | நற். | 379 | தோழி | 1 | 1 | 18 |
| 13 | குண்டுகட் பாலியாதனார் | நற். | 220 | தோழி | 1 | 1 | 2 |
| 14 | குன்னூர் கிழார் மகனார் கண்ணத்தனார் | நற். | 332 | தலைவி | 1 | 1 | 2 |
| 15 | கூடலூர் கிழார் | குறுந். | 214 | தோழி | 1 | 1 | 4 |
| 16 | கோப்பெருஞ்சோழன் | குறுந். | 129 | தலைவன் | 1 | 1 | 7 |
| 17 | தாயங்கண்ணனார் | அகநா. | 132 | தோழி | 1 | 1 | 11 |
| 18 | நக்கண்ணையார் | அகநா. | 252 | தலைவன் | 1 | 1 | 6 |
| 19 | நல்லந்துவனார் | நற். | 88 | தோழி | 1 | 1 | 40 |
| 20 | பிசிராந்தையார் | அகநா. | 308 | தோழி | 1 | 1 | 6 |
| 21 | பேராலவாயார் | நற். | 51 | தோழி | 1 | 1 | 6 |
| 22 | பேரெயின் முறுவலற் | குறுந். | 17 | தோழி | 1 | 1 | 2 |
| 23 | மாறோக்கத்து நப்பசலையார் | நற். | 304 | தலைவி | 1 | 1 | 8 |
| 24 | மோசிகீரனார் | அகநா. | 392 | தோழி | 1 | 1 | 9 |
| 25 | வெள்ளைக்குடி நாகனார் | நற். | 158 | தோழி | 1 | 1 | 3 |

**சங்க இலக்கியத்தில் பெயர் தெரியாத புலவர்களின் குறிஞ்சித் திணைப் பாடல்கள் மற்றும் பாடல் எண், கூற்றுகள்.**

| வ.எண் | புலவர் | நூல் | பாடல் எண் | கூற்று | நூல் மொத்தம் | மொத்த குறிஞ்சித் திணைப்பாடல் | பாடிய மொத்த பாடல்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பெயர் தெரியவில்லை | குறுந். | 201 | தலைவி | | | |
| | | | 361 | தலைவி | | | |
| | | | 375 | தலைவி | | | |
| | | | 379 | தோழி (3) | 4 | 4 | - |
| 2 | பெயர் தெரியவில்லை | நற். | 8 | தலைவன் | | | |
| | | | 22 | தோழி (4) | | | |
| | | | 108 | தோழி (4) | | | |
| | | | 125 | தோழி (4) | | | |
| | | | 134 | தோழி (4) | | | |
| | | | 160 | தலைவன் | | | |
| | | | 165 | தோழி(3) | | | |
| | | | 168 | தோழி(3) | | | |
| | | | 173 | தோழி(3) | | | |
| | | | 176 | பரத்தை | | | |
| | | | 182 | தோழி | | | |
| | | | 185 | தலைவன் | | | |
| | | | 188 | தோழி | | | |
| | | | 190 | தலைவன்(2) | | | |
| | | | 192 | தலைவன்(2) | | | |
| | | | 355 | தோழி (2) | | | |
| | | | 396 | தோழி (2) | 17 | 17 | - |

சங்கம் மருவிய கால இலக்கியங்களில் குறிஞ்சித்திணைப் பாடல்களின் எண்களும் புலவர்களும் கூற்றுகளும்

| சவ.எண் | புலவர் | நூல் பெயர் | பாடல் எண் | கூற்று | மொத்த குறிஞ்சித் திணை பாடல்கள் | பாடியது மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மாறன் பொறையனார் (கி.பி.4 - வைதிகர்) | ஐந்திணை ஐம்பது | 11 | தோழி | | |
| | | | 12 | தலைவி | | |
| | | | 13 | தலைவி | | |
| | | | 14 | தோழி | | |
| | | | 15 | தோழி | | |
| | | | 16 | தோழி | | |
| | | | 17 | தோழி | | |
| | | | 18 | தோழி | | |
| | | | 19 | தோழி | | |
| | | | 20 | தலைவி | 10 | 50 |
| 2 | கண்ணஞ்சேந்தனார் (கி.பி.4 – வைதிகர்) | திணைமொழி ஐம்பது | 1 | தோழி | | |
| | | | 2 | தோழி | | |
| | | | 3 | தோழி | | |
| | | | 4 | தோழி | | |
| | | | 5 | தோழி | | |
| | | | 6 | தோழி | | |
| | | | 7 | தோழி | | |
| | | | 8 | தோழி | | |
| | | | 9 | தோழி | | |
| | | | 10 | தோழி | 10 | 50 |
| 3 | மூவாதியார் (கி.பி.5 – சமணர்) | ஐந்திணை எழுபது | 1 | தோழி | | |
| | | | 2 | தலைவி | | |
| | | | 3 | தோழி | | |
| | | | 4 | தலைவி | | |
| | | | 5 | தலைவி | | |
| | | | 6 | தோழி | | |
| | | | 7 | தோழி | | |
| | | | 8 | தோழி | | |
| | | | 9 | தலைவி | | |
| | | | 10 | தோழி | | |
| | | | 11 | தோழி | | |
| | | | 12 | தலைவி | | |
| | | | 13 | தலைவி | | |
| | | | 14 | தலைவி | 14 | 70 |
| 4 | கணிமேதாவியார் (கி.பி.5 – சமணர்) | திணைமாலை நூற்றைம்பது | 1 | தலைவன் | | |
| | | | 2 | தோழி | | |
| | | | 3 | தோழி | | |
| | | | 4 | தலைவன் | | |
| | | | 5 | தோழி | | |
| | | | 6 | தோழி | | |
| | | | 7 | தோழி | | |
| | | | 8 | தலைவன் | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 9 | தலைவன் | | |
| | | | 10 | தோழி | | |
| | | | 11 | தோழி | | |
| | | | 12 | தோழி | | |
| | | | 13 | தோழி | | |
| | | | 14 | தோழி | | |
| | | | 15 | நற்றாய் | | |
| | | | 16 | தலைவன் | | |
| | | | 17 | தலைவன் | | |
| | | | 18 | தோழி | | |
| | | | 19 | தலைவன் | | |
| | | | 20 | தோழி | | |
| | | | 21 | தோழி | | |
| | | | 22 | தலைவன் | | |
| | | | 23 | தலைவன் | | |
| | | | 24 | தலைவன் | | |
| | | | 25 | தோழி | | |
| | | | 26 | தோழி | | |
| | | | 27 | தோழி | | |
| | | | 28 | பாங்கன் | | |
| | | | 29 | தோழி | | |
| | | | 30 | தலைவன் | | |
| | | | 31 | தோழி | 31 | 153 |
| 5 | மாறோக்கத்து முள்ளிநாட்டு நல்லூர்க் காவிதியார் மகனார் புல்லங்காடனார் | கைந்நிலை | 1 | தலைவி | | |
| | | | 2 | தலைவி | | |
| | | | 3 | தலைவி | | |
| | | | 4 | தலைவி | | |
| | | | 5 | தலைவி | | |
| | | | 6 | தலைவி | | |
| | | | 7 | தலைவி | | |
| | | | 8 | தோழி | | |
| | | | 9 | தலைவி | | |
| | | | 10 | தலைவி | | |
| | | | 11 | தலைவி | | |
| | | | 12 | தோழி | 12 | 60 |
| | | | | | **77** | **383** |

# சங்க சங்கம் மருவியகால இலக்கியங்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்

பெரியார் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக (பிஎச்.டி.)
அளிக்கப்பெறும் ஆய்வேடு


ஆய்வாளர்
ம.ப.ரமேஷ்குமார்
பதிவு எண். R10TAM08

நெறியாளர்
பேரா. முனைவர் தி.பெரியசாமி

தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
(தேசிய தரமதிப்பீட்டுக்குழுவின் மறுமதிப்பீட்டில் 'ஏ' தரச்சான்றிதழ் பெற்றது)
பெரியார் பல்கலை நகர்
சேலம்–636 011.


டிசம்பர் – 2019

# இயல்-5

# சங்கம் மருவிய காலஇலக்கியங்களில் குறிஞ்சிநிலமக்களின் வாழ்வியல்

## முன்னுரை

சங்கம் மருவிய காலம் என்பது சங்க காலத்திலிருந்து எல்லாம் மாறுபட்ட நிலை எனலாம். அதாவது அயலவர் ஆட்சி, பிறமொழி ஆதிக்கம், மக்களிடையே சாதியம் வேரூன்ற தொடங்கிய பிரிவினை கொண்ட நிலை என எல்வாம் வேறொரு நிலைக்கு இடடுச் சென்ற காலம். இக்கால சமூக நிலை கீழ்கணக்கின் அறநூல்களில் பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது. சங்க இலக்கியத்தில் புறப்பாடல்கள் மிகுந்திருக்க மருவிய கால இலக்கியத்தில் ஒரேயொரு புறநூலே படைக்கப்பட்டுள்ளது. ஆனால், அதே சமயத்தில் அக நூல்கள் அகத்தினை மரபுகள் பெரிதும் போற்றப்பட்டு அவை வாழ்வியலாக வாழப்பட்டமையும் வெளிப்படுகிறது. புறவாழ்வியலும் தொழில், பழக்க வழக்கம், நம்பிக்கை என பழந்தமிழரின் வாழ்வியல் முறையே தொடரக் கூடியதாக விளங்கியமை அறியமுடிகிறது. அதை விளக்குவதே இவ்வியலின் நோக்கமாக அமைகிறது.

## ஐந்திணை எழுபது

### தலைவி தலைவன் மீது கொண்டிருந்த மதிப்பு

ஐந்திணை எழுபது நூலில் மூவாதியார் தலைவி தலைவன் மீது கொண்டிருந்த மதிப்பு மிக்க பார்வையையும் நட்பையும் தமது பாடல்களில் வெளிப்படுத்தி இருப்பது தெளிவுப்படுகிறது.

தலைவி தோழியிடம் மலைநாட்டுத் தலைவன் வாய்மை முதலிய பண்புகள் உள்ளவன் என்பதால் அவன் பொருள் தேட என நீங்கிச் சென்றாலும் என் தோல்கள் பிரிவு வருத்தத்தினால் மெலியவில்லை. காரணம் அவன் மீது நான் கொண்ட நம்பிக்கையே. தலைவன் திருமணம் செய்து கொள்ள ஏற்றுக்கொண்டமையே மகிழ்ந்து தலைவி தோழியிடம் கூறுவதாக,

**“நாடன் நயம் உடையன் என்பதனால், நீப்பினும்**

**வாடல் மறந்தன, தோள்”[1]**

கூறுவதாக இப்பாடல் வரிகள் அமைந்துள்ளன. இது தலைவி தலைவன் மீது கொண்டிருந்த நன்மதிப்பினை காட்டுகின்றது. தலைவனின் வாய்மையும் வெளிப்படுகிறது. மேலும் தலைவனுடைய பண்பையும் தலைவி தோழியிடம் கூறுவதனை காணமுடிகிறது. இதனை,

**“மன்றப் பலவின் சுளை விளை தீம் பழம்**

**ஊண்டு உவந்து மந்தி முலை வருட, கன்றுஅமர்ந்து**

**ஆமா சுரக்கும் அணி மலை நாடனை”[2]**

எனும் இப்பாடலால் அறிய முடிகிறது. அதாவது தலைவனின் அன்பான இயல்பினை குறைத்து பேசிய தோழியிடம் தலைவி, பொதுமன்றத்தில் உள்ள பலாமரத்து முதிர்ந்து நன்கு பழுத்த பலாப்பழததை தின்று மகிழ்ந்து நீர்வேட்கை மிக்க அங்கு தங்கி இருக்கும் காட்டுப்பசுவின் மடியைத் தடவ, அப்பசு தன் கன்றுக்குப் பால் சுரந்து கொடுப்பதைப்போல குரங்குக்கு பால் சுரந்து கொடுக்கும் பண்புடைய மலைநாட்டு தலைவனை நாம் பிரிந்து வாழ இயலாது என்று கூறுவதன் மூலம் தலைவனின் பண்பை வெளிப்படுத்துகிறாள்.

அதே நேரத்தில் தலைவனின் அன்பையும் உயர்வாக நினைப்பதை அறிய முடிகிறது. இதனை

**“சான்றவர் கேண்மை சிதைவு இன்றாய், ஊன்றி**

**வலி ஆகி, பின்னும் பயக்கும், மெலிவு இல்**

**கயம் திகழ் சோலை மலை நாடன் கேண்மை**

**நயம் திகழும் என்னும், என் நெஞ்சு”[3]**

இப்பாடலால் உணர முடிகின்றன. அதாவது தோழி சான்றோரின் நட்பு சிதைவு இல்லாமல் நிலைத்து நின்று வலிமையுடன் பலவகை நன்மைகளைத் தரும். அதுபோன் நீர்நிலைகளால் வளமாகக் காணப்படும் சோலைகள் சூழ்ந்த மலைநாட்டுத் தலைவனின் நட்பு நெஞ்சம் நினைக்கிறது என்று தலைவி தலைவனின் அன்பை குறைத்துபேசிய

தோழியிடம் தலைவனின் அன்பை எடுத்து கூறுவதன் மூலம் வெளிப்படுகிறது. மேலும் ஒரு பாடலில் நம் தலைவன் இயற்கையாக இணைந்த காலததில் நாம் தெளிவு பெரும்படி கூறிய சொற்கள் நன்மை தரக்கூடியவை. ஆதனால்தான் அவனுடன் இணைந்தேன். அவன் காட்டிய அன்பு சிறந்தது என்றும் அவன் எனக்கு துணையாக இருப்பான். அதனால் நீ தலைவனை பழிகூறவேண்டாம் என்று தலைவி தோழிக்கு சொல்லுவதை

**“குன்றந நாடன் தெளித்த தெளிவினை**

**நுன்று என்று தேறித் தெளிந்தேன், தலையளி**

**ஓன்று, மற்று ஒன்றும் அனைத்து”**[4]

இப்பாடல் வரிகளால் அறிய முடிகிறது.

**தலைவி தலைவன் உயிரைத்தன் உயிராகப் போற்றல்**

தலைவன் இரவில் தன்னை பார்க்க வரும் போதுமரணத்தை ஏற்படுத்தும் பாம்புகளால் அவனுக்கு ஏதாவது நிகழ்ந்து விடுமோ என்று வருந்துகிறாள் அந்நிலையில் அவள் தோழியிடம்

**“குறை ஒன்று உடையேன்மன்-தோழ-நிறை இல்லா**

**மண்ணுயிர்க்கு எமம் செயல் வேண்டும். குன்னே அரா**

**வழங்கு நீள்சோலை நாடனை நம் இல்,**

**இரா வாரல் என்பது உரை”**[5]

இவ்வாறு கூறுவதன் மூலம் அறிய முடிகிறது. அதாவது தோழி எனக்கு ஒரு குறை உண்டு அதனை நீ நீக்க வேண்டும். மனக்கவலைக் காரணமாக என் உயிர்க்கு பாதுகாவல் தேவை, அதனை நீ செய்தல் வேண்டும். பாம்புகள் நடமாடுகின்ற இரவு வேளை நம் தலைவர் இங்கு வருகிறார். அவருக்கு தீமை வரலாம் என்று என் நெஞ்சம் வருந்துகிறது. ஆதனால் அவரை இரவு வரவேண்டாம் என்று கூறி விரைவில் திருமணம் செய்து கொள்ளுமாறஅவரிடம் கூறுக என்று தோழியிடம் கூறுகிறாள். இதில் என் உயிர்க்கு பாதுகாவல் தேவை என்பதன் மூலம் தலைவன் உயிரை தன் உயிராகப் போற்றுவது புலப்படுகிறது.

**தலைவனின் வாய்மை வெளிப்படல்**

தலைவி தலைவன் மீது கொண்டிருந்த நம்பிக்கையை காப்பாற்றுபவனாக வாய்மைக் கொண்டு விளங்கியமை அறிய முடிகிறது. தோழி தலைவியிடம் மலைநாட்டுத் தலைவன் மணம் பேசி வருவதற்காகச் சான்றோர்களை அனுப்பியுள்ளான் அதனால் நம் செவிலித்தாய் மணத்தை விரும்பி வருந்தும் துயரம் இப்போது நீங்கியது எனக் கூறுவதன் மூலம் தலைவனின் வாய்மை வெளிப்படுகிறது.

**வரைவு கடாதல்**

சங்க இலக்கியத்தை போலவே இச்சங்க மருவிய கால இலக்கியத்திலும் வரைவு கடாதலும் அறத்தொடு நிற்கும் உயரிய குணமும் தொடந்துள்ளமை அறிய முடிகிறது. தோழி தலைவனிடம்

**“கானக நாட மறவல், வயங்கிழைக்கு**
**யான் இடை நின்ற புனை”**[6]

இவ்வாறு கூறுகிறாள். ஆணிகலன்களை அணிந்த தலைமகளுக்கும் உமக்கும் நடுவே புணையாக இருந்த என் உதவியை மறவாமல் அவளை மணந்து மகிழ்விப்பாயாக என்று தோழி தலை மகனிடம் கூறுவதனால், அறத்தொடு நிற்றல் காணமுடிகிறது. மேலும் பூஞ்சோலைகள் மிக்க நல்ல மலைநாட்டுத் தலைவனே தலைவியை நீ மறக்காமல் பாதுகாப்பாயா? அவளுக்கு உன்னை அல்லாமல் வேறுயாரும் உதவுபவர் இல்லை. உன் அருள் பார்வையினால் அவள் இனிய உயிரை நிலைபெறச் செய்யும் மருந்தாக அமைந்து திருமணததை விரைவில் செய்து காப்பாயாக என வலியுறுத்துவத காண முடிகிறது. இதனை

**“நல் மலை நாட! மறவல், வயங்கிழைக்கு**
**நின் அலது இல்லையால், ஈயாயோ, கண்ணோட்டத்து**
**இன் உயிர் தாங்கும் மருந்து?”**[7]

இவ்வரிகளால் அறியலாம். அதோடு மட்டுமல்லாது தலைவனே உன்னிடம் அறியாமை என்பது இருக்க முடியாது. அதனால் தலைவியை விரைவில் மணந்து கொள்வது நல்லது என

**“வெறி கமழ் நண் சோலை நாட! ஒன்று உண்டோ**

**அறிவின்கண் நின்ற மடம்?”[8]**

கூறுவதை காண முடிகிறது. மேலும் தோழி ஆனவள் அவ்வாறு மணக்க தாமதப்பட்டால்,

**“வரையக நாட! வரையாய் வரின், எம்**

**நிரைதொடி வாழ்தல் இலள்”[9]**

இவ்வாறு நிகழலாம் என கூறுகிறாள். அதாவது நீ விரைவில் மணக்க தவறினால் தலைவி இறந்துபடவும் நேரலாம் என்கிறாள். இதன் மூலம் தலைவியின் அன்பும் திருமணத்தின் அவசியமும் தோழியாள் வலியுறுத்துப்படுவதை காணமுடிகிறது.

**தலைவி அறத்தொடு நிற்றல்**

வேலனுக்கு வெறியாட்டு நிகழ்த்துவது என்பது சங்க இலக்கியங்களிலிருந்து காண முடிகிறது. தலைவிக்கு காதல் மிகும் போது காதலன் நினைவாள் தனது இயற்கை குணாதிசயங்களிலிருந்து மாறுபட்டு சோர்வுடனும் தனிமையை விரும்பியும் காணப்படுவாள். அதைக் கண்ட அவளது தாயார் பேய் தான் பிடித்துவிட்டது என்று வேலனுக்கு ஆட்டினை பலிகொடுத்து வெறியாட்டு நிகழ்த்துவர். அவ்வழக்கம் சங்க மருவிய காலத்திலும் இருந்ததை ஐந்திணை எழுபது என விளக்கியும் நமக்கு காட்டி நிற்கின்றது. இதனை,

**“வார்குரல் ஏனல் வளை வாய்க் கிளி கவரும்**

**நீரால் தெளி திகழ், கான் நாடன் கேண்மையே**

**ஆர்வததின் ஆர முயங்கினேன், வேலனும்**

**ஈர, வலித்தான் மறி”[10]**

இப்பாடலால் அறிய முடிகிறது. அதாவது தலைவி தோழியிடம் தோழி! நீண்ட திணைக்கதிர்களை வளைந்த வாயினை உடைய கிளிகள் கவர்ந்து செல்லாதிருக்க, என் ஐயன்மார் திணைப்புனக் காவலில் என்னை நிறுத்தினர். அப்போது, மழை காரணமாக நான் அவனை ஆரதழுவினேன். அதனால் என் மேனியில் மாற்றம் ஏற்பட்டது. அம்மாற்றம் தெய்வத்தால் உண்டானது என்று எண்ணி வேலை வெறியாடன் வேலனை அழைத்து ஆட்டுக்குட்டியை முருகனுக்குப் பலியாக

தந்து வெறியாட துணிந்து விட்டாள் செவிலித்தாய் நீ செவிலித்தாயிடம் உண்மையைக் கூறி வெறியாட்டையை தவிர்ப்பாயாக! என்று கூறி தலைவி தோழியிடம் அறத்தொடு நிற்பதை காண முடிகிறது.

இங்கே “மந்திரங்கள் கூறி யாகங்கள் செய்வதே ஆரியருக்குழு சிறப்பாக உரிய வழிபாட்டு முறை தமிழருடைய வழிபாட்டிலே வெறியாட்டு முதலிய ஆட்டங்கள் முக்கிய இடம் பெற்றன. முருக வழிபாடு கூறப்படும் இடங்களில் இத்தகைய கூத்துக்கள் வருணிக்கப்படுகின்றன. இவ்வழிபாடுகளில் பூசாரிகள் இல்லை. வழிபடுவோர் இறைவன் தம்மிலே வந்து வெளிப்படுவான் என்னும் நம்பிக்கையுடன் கூத்தாடினர்.”[11] எனும் சு.வித்தியானந்தன் கருத்து குறிஞ்சி நில மக்கள் வழிபாட்டு நெறியை விளக்குவதாக அமைந்துள்ளது.

**ஐந்திணை ஐம்பது**

ஐந்திணை ஐம்பது ஆசிரியர் மாறன் பொறையனார் இவர் இயற்றிய ஐந்திணை ஐம்பதில் முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்ற அடைவில் ஐந்திணைக்கும் பத்துப்பத்து பாடல்களே பெற்றுள்ள நூலில் ஆதலின், இதனை ஐந்திணை ஐம்பது என்று கூறிக்கின்றார். இந்நூலில் குறிஞ்சி திணைக்குரிய பத்துப்பாடல்கள் சிறப்புடன் விளங்குகின்றன. இப்பாடல்கள் திணை புனத்தை காப்பதை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டள்ளன.

**திணைப் புனக்காவலும் இற்செறிப்பும்**

குறிஞ்சி நிலத்தில் தலைவி நினைப்புனத்தை காவல் புரிய வருகிறாள் அப்போது தலைவனோடு காதல் உண்டாகிறது திணைப்புனம் முற்றிய நிலையில் காவல் செய்வதை விட்டுவிட்டு வீட்டிற்கு செல்லும் காலம் வருகிறது. இந்நிலையில் தோழி தலவைி உடன்,

**“பொன் இணர் வேங்கை கவினிய பூம்பொழிலுள்**
**நன்மலை நாடன் நலம்புனைய, மென்முலையாய்**
**போயின, சுல்நாள் புனத்து மறையினால்**
**ஏயினர் இன்றி, இனிது”[12]**

இவ்வாறு கூறுகிறாள் அதாவது மென்மையான மார்பகங்களையுடைய தலைவியே! போன்போன்று பூக்கும் வேங்கை மரங்கள் நிறைந்துள்ள சோலையில், நம் தலைவனாக மலைநாடன் உன்னோடு கலந்தபின்பு எவருடைய குறுக்கீடும் இல்லாமல் இன்பமாய்ச் சிலநாட்கள் கழிந்தன. இனி, எவ்வாறு அமையுமோ? நாம் அறியோம் என்று கூறுவதன் மூலம் காதலுக்கு இடையூறு வந்து விட்டது எனக்கூறுகிறாள். அந்த இடையூறு என்னவென்று அடுத்த பாடலிலே வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

**“மால்வரை வெற்ப வணங்க குரல்ஏனல்**
**காவல் இயற்கை**
**பூக்கண் கமூஉம் புறவிற்றாய், பொன் விளையும்**
**பாக்கம், இது எம் இடம்”[13]**

என பாடல் அமைந்துள்ளது. அதில் தோழியானவள் தலைவனிடம் உயரங்களையுடைய மலைநாட்டுத் தலவைனே! திணைப்புனம் முற்றிய தன் காரணமாகத் திணைப்புனத்தைக் காவல் செய்கின்ற வேலையை நாங்கள் கைவிட்டோம். தூய்மையான அருவிகள் பூக்களைக் கழுவிக் கொண்டு வரும்படியான சூழலில் எங்கள் வீடு அமைந்துள்ளது. எங்களைக் காண விரும்பினால் அங்கு நீங்கள் வரலாம் என தாங்கள் இயற்கையால் அதாவது திணைப்புனம் விளைச்சலாள் இற்செறிக்கப்பட்டமையே கூறுகிறாள்.

**தலைவியின் காதல் உணர்வு**

இவ்வாறு தோழி தலைவனிடம் கூறியபின் தலைமகன் சிறைப்புறத்தானாக இருக்க தன்னுடைய காதல் உணர்வை அவன் அறியும்படி வெளிப்படுத்துகிறான். இதனை

**“கானக நாடன் கலவான்என் தோள்! என்று**

**மான்மெர் கண்ணாய் - மயங்கல்நீ! நானம்**

**கலந்து இழியும் நல்மலை மேல் வால்அருவி ஆட,**

**புலம்பும் அகன்றுநில் லா!”**[14]

இப்பாடலால் அறிய முடிகிறது. தோழியே தலைவன் வீட்டுக் காவலில் இருக்கும் என் தோல்களை சேரமாட்டான் என்று நீ வருந்த வேண்டாம் தலவைனது நாட்டைச் சேர்ந்த மலையிலிருந்து வீழ்கின்ற அருவியில் நாம் நீராடினால் தலைவனுக்குச் சேராமையால் ஏற்படும் துன்பங்கள் எல்லாம் நீங்கிவிடும் என்று தலைவி தோழியிடம் கூறுவதன் மூலம் அவளுடைய காதல் உணர்வையும் இயலாமையும் வெளிப்படுத்துவதே அறிய முடிகிறது.

**வரைவு கடாதல்**

ஐந்திணை ஐம்பதில் வரைவு கடாதல் பற்ற தோழி நான்கு பாடல்களில் கூறுவதாக அமைந்து உள்ளது. தோழி சிறைப்புறத்தானாக இருக்கும் தலைவனைப் பார்த்து நாங்கள் மலையிடத்தில் உள்ள வேங்கை மரத்தின் பூக்களை பறித்து விளையாடியதால் மாந்தளிர் போன்ற என் உடல் வியர்த்து அதனால் மலையில் உள்ள எல்லா அருவிகளிலும் நீராடினோம். அதனால் மென்மையான சொல்லின் உடையதலைவிக்கு சிவந்த வரிகள் படர்ந்த கண்கள் சிவந்தன என்று தோழி செவிலித்தாய் தலைவனுக்கு வெளிக்காட்டுகிறாள். அடுத்தப் பாடலிலேயே தோழி தலைமன்னனிடம் நேரடியாக வளைந்த, வரிகளையுடைய வேங்கைப் புலியால் தாக்கப்பெற்று அப்பிடியினின்றும் தப்பிய மடிந்த காதுகளைக் கொண்ட யானை அஞ்சுப் பின்வாங்கித் தன் நடையினால் உண்டாகும் ஒலி புலிக்குக் கேட்குமே என்று அஞ்சி மெல்ல நடக்கின்ற வழியானது நீ திரும்பிப் போகும் வழி என்று எண்ணியதால் ஒளியுடைய வளையலை அணிந்த தலைவியின் கண்கள் நேற்று இரவு முழுவதும் தூக்கம் கொள்ளவில்லை. அதனால் நீ

விரைவில் தலைவியை மணந்துகொள்க என்று தோழி தலைவனிடம் கூறினாள். இதனை,

**"கொடுவரி வேண்கை பிழைத்து, கோட்பாடு**
**முடிசெவி வேழம்-இரீஇ, அடிஓசை**
**அஞ்சி, ஒதுங்கும் அதர்உள்ளி, ஆர்இருள்**
**துஞ்சா, சுடர்க்கொடி கண்"[15]**

இப்பாடலால் அறியலாம். மேலும் நீ தலைவியை பார்க்க கொடிய வழியில் வருவதால் உனக்கு என்ன தீங்கு நேருமோ என்ற அஞ்சி மனத்துன்பம் அதிகமாக வாட்டமுற்று மெலிந்து நிற்கின்றாள் நீ விரைவில் திருமணம் செய்து கொள்க என்பதனை

**"திரு ஒருங்கும் மென்சாயல் தேம்கோதை மாதர்**
**உருஒடுங்கும், உள்உருகி நின்று"[16]**

எனும் வரிகளால் அறியலாம். இவ்வாறு வருந்தும் தலைவி தன் நிலையிலிருந்து மாறுபடுகிறாள். ஆதனால் செவிலித்தாய் வேலன் வெறியாட்டு நிகழ்த்த முடிவு செய்கிறாள்.

**தலைவி அறத்தொடு நிற்றல்**

செவிலித்தாய் வெறியாடுதலுக்கு தயார் செய்ய வேலையில் தலைவி தோழியிடம் தோழி நம் மலைநாட்டுத் தலைவனால் ஏற்பட்ட என்மேனி மாற்றத்தைக் கண்ட செவிலித்தாய் தெய்வம் என்னை வருத்திற்று என்று கருதி, வேலனை வரவழைத்து முருகனுக்குப் பூசையிடுதலால் வெறியாடுதலை செய்கின்றாள். நீ அதனைத் தடுத்து செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்பாயாக என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள். இதனை

**"வெறி கமழ் வெற்பன என் மெற்ந் நீர்மை கொண்டது**
**அறியாள், மற்று அன்னே! அணங்கு சுணங்கிற்று - என்று**
**மறி ஈர்த்து உதிரம் தூய், வேலன் - தரீஇ**
**வெறியோடு அலம்வரும் யாய்"[17]**

இப்பாடல் வரிகளால் அறியலாம். இந்நூலில் தினைப்புனம் காவல் காக்க சென்ற தலைவி தலைவனோடு காதலால் இணைவதும் தினைப்புனம் முற்றிய நிலையில் தலைவி தினைப்புனத்திற்கு செல்ல முடியாமல் வீட்டில் இற்செறிக்கப்படுவதும் தோழி தலைவனிடம் வரைவு கடாதல் கூறுதலும் செவிலித்தாய் தலைவிக்கு வேலன் வெறியாட்டு நிகழ்த்து நிலையில் தலைவி தோழியிடம் அறத்தொடு நிற்கக்கூறி அந்தஅகவாழ்க்கையில் களவு வாழ்வில் இருந்து கற்பு வாழ்க்கைக்கு அவர்கள் அடியெடுத்து வைப்பதும் அறியமுடிகிறது.

**திணைமொழி ஐம்பது**

இந்நூலின் ஆசிரியர் கண்ணஞ்சேந்தனார். ஐந்திணைகளைப் பற்றி பத்துப்பத்துப்பாடல்களாக ஐம்பது பாட்களைக் கொண்டுள்ளது இந்நூல். ஐந்திணைகளைப் பற்றிக் கூறும் மற்ற நூல்களைக் காட்டிலும் இதற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அதாவது இந்நூல் ஐந்திணைகளையும் வரிசையாக அமைத்திருக்கும் முறை சிறந்ததொன்று எனலாம். இதனை “முதலில் குறிஞ்சித்திணை – குறிஞ்சி நிலத்தில் தான் காதலனும் காதலியும் முதல் முதலாகச் சந்திப்பார்கள். அவர்களிடம் காதல் பிறக்கும். மணமக்களாவதென்று உறுதி செய்து கொள்ளுவார்கள்.

இரண்டாவது பாலைத்திணை - இது காதலன் காதலிலை விட்டும் பிரிவதை பற்றிப் பேசவது காதலன் மணம் புரிவதற்கு முண்போ மணம் புரிந்து கொண்ட பிறகோ பொருள் தேடம் பிரிவான். அவனை அவள் மணம் புதிவதற்கு முன்பே அவள் பெற்றோர் அறியாமல் தன்னுடன் அழைத்துச் செல்வான். இவ்வாறு பிரிவை உணர்த்துவது பாலைத் நிணையாகும்.

மூன்றாவது முல்லைத்திணை- காதலன் பிரிந்ததனால் வரும் துன்பத்தை பொறுந்துக் கொண்டித்தல். தன் உள்ளத்திலே எவ்வளவு துயரம் பெருகினாலும். அதை அடக்கிக் கொண்டு காதலன் வருகையை எதிர்பார்த்திருப்பாள் கற்புள்ள காதலி. இந்த நிகழ்ச்சியை உரைப்பதே முல்லைத்திணை. நான்காவது மருதத்திணை இத்திணையிலே இல்லறம் நடத்தும் காதலன் காதலிக்குக்குள் நிகழும் ஊடல் கூறப்படும். எந்தெந்தக் காரணங்களால் என்றெல்லாம் சொல்லப்படும்.

ஐந்தாவது நெய்தல் திணை-காதலன் பிரிவுக்காகக் காதலி வருந்துதல், தன் துன்பத்தைக் காதலி வெளிப்படையாகக் கூறுவாள். இவைகளே ஐந்திணை ஒழுக்கங்கள் இவற்றைச் சுருக்கமாகக் கூறினால், கூடல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்று கூறிவிடலாம்.

மேலே காட்டிய வரிசைப்படியே இந்நூலில் ஐந்திணைகளும் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு திணையைப் பற்றியும் பத்துப்பத்து வெண்பாக்கள் பாடப்பெற்றிருக்கின்றன. இவ்வெண்பாக்கள் படிப்பதற்கு இனிமையானவை. எளிமையானவை, அழகிய கற்பனைகள் அமைந்தவை. அகப்பொருளைப் பற்றிச் சொல்லும் பதிணென்கீழ்க்கணக்கு நூல்களில் இது ஒரு சிறந்த நூல்”[18] என குறிப்பிடுவர். இந்நூலின் குறிஞ்சித்திணையில் முதல் மூன்று பாடல்களும் வரைவு கடாதலைப் பற்றி தோழி கூறுவதாக அமைந்துள்ளது.

**வரைவு கடாதல்**

தோழி தலைவனை நோக்கி உயர்ந்த மலைகளையுடைய தலைவனே! நீ கடந்துவரும் வழி யானைகள் உலவும் இடமாகும். ஆதனால் இரவுக் காலத்து வரவேண்டாம் என்று தோழி கூறினாள். விரைவில் திருமணம் செய்து கொள்க எனக் கூறினாள்.

**“வான்உயர் வெற்ப இரவின் வரல் வேண்டா**
**யானை உடைய சுரம்”**[19]

என வரிகளால் அறியலாம். மேலும் அடுத்தப் பாடலிலேயெ தினைப்புனமும் கதிர்கள் கொய்யப் பெற்றுக் காவல்நீங்கின. ஆதனால் நீ இங்கு வருதல் அரிதாக அமையும். தலைவியை வீட்டுக்காவலில் வைப்பர். நீ விரைந்து திருமணம செய்துகொள்க என அறிவுறுத்துகிறாள் இதனை

**“விறல்மலை நாட! வரவு அரிதாம் கொல்லோ?**
**புனமும் அடங்கின காப்பு”**[20]

இப்பாடல் வரிகளால் அறியலாம்.

தலைமகனைத் தோழி இரவுக்குறி நயப்பித்தது தலைவன் பிரிவால் தலைவி மெலிந்து போகிறாள். மிகவும் வாட்டத்தோடு காணப்படுகிறாள். அவளுடைய துயரினை போக்கும் பொருட்டு தலைமகனை தோழி இரவுக்குறி நயப்பிக்கிறாள். இதனை,

**“ஏனம் இடந்திட்ட ஈர்மணி கொண்டு எல்லிடை**
**கானவர் மக்கள் கனல்எனக் கைகாய்த்தும்**
**வான்உயர் வெற்பன் வருவான்கொல், என்தோழி**
**மேனி பசப்புக் கெட?”[21]**

என்னும் பாடலால் அறியலாம். அதாவது குறிஞ்சித் தோன்றிய மாணிக்க மணிகளை இரவு நெருப்பு என நினைத்து கைகளைக் காட்டிக் குளிர்காய்வாள். இத்தகைய உயர்ந்த மலைநாட்டுத தலைவன் தலைவியை உடல், பசலை நிறமானது நீங்குவதற்காக இரவுக்குறியை வந்து அருள் செய்வானோ என்று தோழி கூறுவதனை காணமுடிகிறது.

**பின்னின்ற தலைமகனைக் காவல் சொல்லிச் சேட்படுத்தியமை**

தலைவியைக் காண இரவில் தலைவன் வருகிறான். அப்போது தோழி இரவில் இங்கே வந்து தலைவியை சந்திப்பது என்பது ஆபத்தான ஒன்றாகும். இதனை

**“விரைகமழ் சாரல் விளையுனம் காப்பார்**
**வரையிடை வாரன்மின்-ஐய-உரைகடியர்**
**வில்லினர், வேலர், விரைந்துசெல் அப்பினர்,**
**கல்லிடை வாழ்நர் எமர்”[22]**

இதனை பாடல் வரிகளால் அறிய முடிகிறது. அதாவது தலைவனே! இம்மலையில் வாழும் எம்மவர், வேடுவர். ஆதனால் தினைப்புனத்தைக் காக்கும் கடுஞ்சொல்லை உடையவராய் வில்லேந்திய கையினராய் வேலோன் அறியும் தன்மையராய் விரைந்து செல்லும் அம்புகளுடைய வில்லினராய் இரவில் காவல் செய்க. அதனால், விரைந்து நீ வரவேண்டாம் எனத் தோழி அறிவுறுத்துகிறாள். மேலும்

எம்மவர் உமமைக் கண்டாள் சினத்து உமக்குத் தீங்கு செய்வர். அதனால் நீர் இங்கு வரவேண்டாம் என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள். இதனை

**“ஏனலுள், ஐய!-வரவுமற்று என்னைகொல்**

**காணினும், காய்வர் எமர்”[23]**

எனப்பாடல் வரிகளால் அறியமுடிகிறது.

**மீண்டும் வரைவு கடாதல்**

தலைவனைப் பார்த்து தோழி மலைநாட்டுத்தலைவன் நீ இரவில் வந்தால் உனக்கு நேரும் இடைற்றை எண்ணித் துன்பப்பட்டு விளங்குவதால் ஊரார் அறியும் பழிச்சொற்கள் பரவும். அதனால் இரவில் வராமல் விரைவில் மணந்து கொள்க என உரைக்கிறாள். இதனை

**“மாழைமான் நோக்கியும் ஆற்றாள், இரவரின்**

**ஊர்அறி கௌவை தரும்”[24]**

இதனை இவ்வரிகளால் அறியலாம். இதனடையே பகலில் தலைவியை சந்திக்க வரும் தலைவனை நெருங்க விடாமல் தோழி தடுக்கிறாள். அதோடு சிற்ப்புறத்தானாக இருக்கும் தலைவன் கேட்கும்படி திருமணம் செய்ய தூண்டுகிறாள். இதனை

**பலவின் பழம்பெற்ற பைங்கண் கடுவன்**

**செல்வம் கடிந்தாள், புனத்து”[25]**

எனப்பாடல் வரிகளால் அறிய முடிகிறது. அதாவது என் தோழியாகிய தலைவியே நம் தலைவனுடன்நாம் கொண்ட களவொழுக்கத்தினை அறிந்த செவிலித்தாய் நாம் சோலைக்குச் செல்வதை தடுக்கிறாள். அதனால் தலைவனைப் பகற்பொழுதிற் காணமுடியாது. பலாப்பழத்தைப் பெற்ற பசுமையான கண்களையுடய ஆண் குரங்கு ஏவீ! என்று தன் பெண்குரங்கை அன்புடன் அழைத்துப்பழகும். மலைநாட்டில் நம் தலைவன் நம்மொடு மாறுபட்டு ஊடல்கொள்ளமாட்டான் என்று தலைவன் தலைமகள் சிறைப் புறந்தானாகத் தோழி தலைவிக்குக் கூறி, விரைந்து

மணங்கொள்ளுமாறு அறிவுறுத்துகிறாள். இவ்வாறு இத்திணை மொழி ஐம்பது நூலில் குறிஞ்சித்திணை பாடல்கள் அமைந்துள்ளன.

**திணைமாலை நூற்றைம்பது**

இந்நூலின் ஆசிரியர் ஏலாதி இயற்றிய கணிதேமாவியார். ஐந்திணை ஒடுக்கங்களைக்கோவையாக அமைத்து மாலை போலத் தந்துள்ளமையின் திணைமாலை என்றும் பாடல் அளவினால் திணைமாலை நுற்றைம்பது என்றும், இந்நூல் பெயர் பெற்றுள்ளது. கீழ்க்கணக்கில் அமைந்த ஐந்திணை நூல்களில் அளவால் பெரியது. இதுவே, குறிஞ்சி, நெய்தல், பாலை,முல்லை, மருதம் என்னும் வரிசையில் ஐந்திணைகளை இந்நூல் முறைப்படுத்தியுள்ளது. நூற்றைம்பது என்னும் எண் வரையறைக்கு ஏற்ப திணை ஒவ்வொன்றும் 30 பாடல்களைக் கொண்டிருத்தலே முறை. அங்ஙனமாகவும் குறிஞ்சி, நெய்தல், முல்லைத்திணைகள் மூன்று 31 பாடல்களைப் பெற்றுள்ளன. இதனால், இந்நூலும் 153 பாடல்களைப் பெற்றுள்ளன. இங்கே "ஒவ்வொரு திணையைப் பற்றிய பாடல்களும், அந்தந்த நிலத்தில் உள்ள இயற்கைக் காட்சிகளைப் படம் பிடித்தது போல எடுத்துக்காட்டும். இயற்கை நிகழ்ச்சிகளை எடுத்துரைப்பதாலே இந்நூலாசிரியர் மிகவும் வல்லுநர். தமிழர் பண்பாட்டையும், பழக்க வழக்கங்கள் சிலவற்றையும் இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்."[26] என்று ஆசிரியர் சிறப்பை சாமிசிதம்பரனார் கூறியுள்ளமை காணத்தக்கதாகும்.

இதில் ஆணின் கற்புத்திறமும் சிறப்புற கூறப்பட்டு உள்ளது. பழங்காலத்தில் உடன்போக்கு என்ற ஓர் துறை இருந்தது. அதாவது, தலைவனும் தலைவியும் பெற்றோர் இருவரும், அவர்கள் காதலை ஏற்றுக் கொள்ளாதபோது தலைவியைத் தலைவன் உடன் அழைத்துச் சென்று திருமணம் செய்து கொள்வது வழக்கமாக இருந்தது. அதனை உடன்போக்கு என்று கூறுவர். சேவிலித்தாய் தலைவியைத் தேடிச் செல்வாள். எதிலே வருகின்றவர்களிடம் ஓர் ஆணையும் பெண்ணையும் பார்த்தீர்களா? என்று கேட்பாள். பழங்காத்தில் ஒரு வழக்கம் இருந்தது. ஆடவர் பிற பெண்டிரைப் பார்ப்பதில்லை. பெண்டிர் பிற ஆடவரைப் பார்ப்பதில்லை. எதிரே வந்த தலைவனிடம் செவிலி கேட்கிறாள்.

அவன்நான் சூரியன் போன்ற தண்மை ஒளியுடைய பெண்ணைக் கண்டாளாம் என்று பதில் கூறுகிறான்.

**“நண்ணீநீா் செல்மின்! நமா் அவா் ஆடவேல்**
**எண்ணிய செல்மின்! எளிது அரோ!-எண்ணிய**
**வெம்சுடா் அன்னானை யான்கண்டேன், கண்டாளாம்**
**தண்சுடா் அன்னாளைத் தான்”[27]**

மேற்கண்ட பாடல் மூலம் தலைவன் தலைவியைத் தவிர வேறொரு பெண்ணை ஏறெடுத்தும் பாராத கற்பு மாண்பு வெளிப்படுகிறது. குறிஞ்சி திணையில் உள்ள 31 பாடல்களில் மதியுடம்படுத்துவது தலைவியை காணாமல் தலைவன் தானே புலம்புவது ஆற்றாமையால், தோழியிடம் புலம்போது தலைவி அன்பின் மிகுதியால் தலைவனை பாா்க்காமல் இரவுக்குறியை தவிா்த்தல் தோழி நெறி விளக்கல் தலைவன் மடல் ஏறல் தலைவி இற்செறிப்பு தோழி, கையுறை உணா்த்தலும், ஏற்றலும் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது, நற்றாய் அறத்தொடு நிற்றல் என பல அகத்துறை கூறுகள் திணைமாலை நூற்றைம்பதில் இடம் பெற்றுள்ளன.

**மதியுடம்படுத்தல்**

தலைவன் இத்தலைவியை பாா்க்க செல்கிறான். தலைவி தோழியோடு தினைப்புனத்தை காவல் செய்துக் கொண்டிருக்கிறாள். அப்போது

**“நறைபடா சாந்தம் அறஎறிந்து நாளால்**
**உறை எதிா்ந்து வித்திய ஊழ் ஏனல், - பிறை எதிா்ந்த**
**தாமரை போல் வாள்முகத்துக் தாழ்குழலீல்-காணீரோ**
**ஏமரை போந்தன ஈண்டு”?[28]**

இவ்வாறு உரைக்கிறான். அதாவது மணம்மிக்க பூங்கொடிகள் படா்ந்து உயா்ந்த சந்தன மரங்களை வேறொடு வெட்டி, நல் நாளில் மழைபெய்யும் காலத்தை எதிா்பாா்த்து விதைத்தால் முதிா்ந்த தினைப்புனத்தை காவல் செய்யும் பிறைபோன்ற நெற்றியையும்

தாமரைமலர் போன்ற ஒளி மிக்க முகத்தையும் தாழ்ந்த கூந்தலையுடைய பெண்களே! இவ்விடத்தை நோக்கி எனது வில்லினின்றும் புறப்பட்ட அம்பு பாய்ந்த மான்கள் இங்கு வந்தனவோ? என்று தலைவன் கேட்பதைக் காண முடிகிறது. இங்கே “இல், மனை தொடர்பான சில பொதுநடைமுறைகள் இருந்ததையும் சங்க பாடல்கள் காட்டுகின்றன. பெண்ணின் ஒழுக்கம் தொடர்பாக தங்குமிடம் இன்றியமையாததாக இருந்தது. களவொழுக்கம், கற்பொழுக்கம் என்ற அகவொழுக்க நிலையில் ஆணும், பெண்ணும் தொடர்பு கொண்டபோது சில நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. பெற்றோர் அறியாது பெண் வெளியே சென்று ஆணுடன் தொடர்பு கொண்டபோது அவளைத் தாய் இல்லத்திலே தடுத்து வைத்துக் காவல் செய்யும் நடைமுறை இருந்துள்ளது.”[29] என்பதும் நோக்கத்தாய் உள்ளது.

**தலைவன் தலைவியை காணாத நெஞ்சுக்கு சொல்லுதல்**

அகமாந்தர்கள் தமக்குத்தாமே கூறுவதும், ஒருவர் மற்றொருவருக்குக் கூறுவதும், மேலே குறிக்கப்படாத தூதுப் பொருட்கள் சில கண்டு கூறுவதும் சங்கப் பாடல்களில் காணப்படும். இவற்றுள் நெஞ்சுக்குக் கூறுவதாக அமைவதும் ஒன்று. உயர்திணைப் பொருட்களேயன்றி அக்றிணைப் பொருட்களும் கூற்றினைக் கேட்பனவாக அகப்பொடல்களில் அமையும் கூற்றுக் கூறுவார் தம் நெஞ்சினை விளித்தும், முன்னிலைப்படுத்தியும் கூறுவதாகப் பாடப்பெறும். நெஞ்சுக்கு மானிடத் தன்மைகளையெல்லாம் ஏற்றிக் கூறுவதுண்டு.

தலைவி பருவம் கண்டும், பொழுது கண்டும் கண்ணுள்ளே கூறியது; மகட்போக்கிய நற்றாய் கூறியதாக மகட்போக்கிய செலிவி கூறியது என்றிவ்வாறு வரும் சில கூற்றுக்கள் தன்மைக் கூற்றுக்களாக, நாடகத்தன்மையில் தனிமொழி போல அமைவன. இவைபோல நெஞ்சுக்குக் கூறுதல், மேலோட்டமாகப் பார்க்கின்றபோது ஒருவர் கூற்றாக, தனிமொழி போலத் தோன்றினும் அவ்வாறு கூறுதற்கில்லை. நெஞ்சுக்கு கூறுதல் தனிமையில் இருந்து கூறும் கூற்றாயினும் இங்கே கேட்கும பொருளும் உண்டு. இது கேட்போர் உள்ள சிளலா இக்கூற்றிற்குறியோரே தம் நெஞ்சைக் கேட்கும் பொருளாக்குவர்.

இந்நிலை அகப்பொருள் மாந்தர் ஒருவர் பிறிதொருவருக்குக் கூறும் கூற்றினும் தனிமொழியினும் வேறுபட்டது.

நெஞ்சும் கூற்றினைக் கேட்கும் பொருளாக அமையுமேயன்றிக் கூற்றினை உடைய பொருளாகக் கற்பித்துக் கொண்டு பாடப்படுதலும் உண்டு. இவ்வகை நிலைக்கு

**"கேட்குந போலவும் கிளக்குந போலவும்**
**இயக்குந போலவும் இயங்குந போலவும்**
**அற்றிணை மருங்கின் அறையவும் படுமே"**[30]

எனவும்

**"புள்ளும் மாவும் புனரியும் கானலும்**
**உள்ளுறுத் இயன்றவும் ஒழிந்தவை பிரிவும்**
**தன்சொற் கேட்குந போலவும் தனக்கவை**
**இன்சொற் சொல்லுந போலவும் ஏவல்**
**மெய்குந போலவும் தோற்றுந போலவும்**
**மெய்குழற் கிழத்தி மொழிந்தாங் கமையும்"**[31]

எனவும் வரும் இலக்கண மரபுகள் பொருந்தக் கூறப்படும்

**"முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுதல்**
**நுனையம் உரைத்தல்..."**[32]

என்னும் தொல்காப்பியத் தொடர்களுக்கு நச்சினார்க்கினியர் எழுதும் உரையும் இத்தன்மைக்குப் பொருந்தும்.

சங்க இலக்கியததில் நெஞ்சொடு கிளத்தல்- நெஞ்சுக்கும் சொல்லியது எனப் பாடப்பெற்ற பல பாடல்கள் காணப்படுகின்றன. இப்பாடல்களின் கீழ்ததரப்பட்டுள்ள குறிப்புகளில், 'நெஞ்சிற்குச் சொல்லியது', 'நெஞ்சினைக் கழறியது', 'நெஞ்சிற்குச்சொல்லி செலவழுங்கியது', 'நெஞ்சிற்கு சொல்லிச் செலவழுங்குவாத்தது' எனக் காணப்படுகின்றன. கூற்று வகைகளையம், கூற்று நிலைகளையும்

விரித்துரைக்கும் தொல்காப்பியர், நெஞ்சிற்கும் சொல்லியது என்று கூற்று நிகழ்வினைக் குறிப்பிடவில்லை. ஆயினும் நெஞ்சுக்குக் கூறும் வகையில் அமையும் கூற்று வகைகளும் தொல்காப்பியத்தில் இடம்பெறுகின்றன. அவை 'பாசறைப் புலம்பல்', 'விரிந்த வழிக் கலங்கள்', 'நின்று நனி பிரிவின் அஞ்சிய பையுள்', 'வேற்று நாட்டு அகல்வயின் விடுமத்தான்' போன்றன (தொல் பொருள் 102, 146) பிற்காலத்து இலக்கண நூலாகிய நம்பியகப் பொருள், நெஞ்சொடு சொல்லலைக் குறிப்பிடும்.

**"உடன்போய் மீண்ட கொடுங்குழை மடந்தை**
**பிரிவழித் தலைவனொடு அரத்தியல் பேசலும்**
**பிரிந்துழி நெஞ்சொடும் பிறரொடும் வருந்திச்**
**சொல்லலும் உரியர் சொல்லுங் காலை"[33]**

அகப்பொருட் கூறுகளை நானூறு பாடல்களில் விளக்கும் திருக்கோலையாரில் நெஞ்சொடு வகுந்தல், நெஞ்சோடு நேர்தல், நெஞ்சோடு புலத்தல், நெஞ்சோடு மறுத்தல் பற்றிய பாடல்கள் இடம் பெறுதல் காணலாம் (திருக்கோவை 273, 342, 343, 344) இவை நெஞ்சோடு கூறுகளில் அமைவன. வள்ளுவரின் திருக்குறளில் அமைந்த ஓரதிகாரம் நெஞ்சொடு கிளத்தலாகும். நெஞ்சோடு புலத்தலும் இதனோடு தொடர்புடையது.

இணைமாலை நூற்றைம்பதல் காணப்படும் குறிஞ்சித் திணை பாடல் ஒன்றில் தலைவன் தலைவியை காணாத போது தன் நெஞ்சோடு கூறுகிறார். இதனை

**"கோடாப் புகழ்மாறன் கூடல் அனையாளை**
**ஆடா அடகினும் காணேன்போர் வாடாக்**
**கருங்கொல்வேல் மன்னர் கலம் புக்க கொல்லோ**
**மருங்குல் கொம்பு அன்னாள் மயிர்?"[34]**

இப்பாடல் மூலம் காணமுடிகிறது. அதாவது மாறுபாடு அல்லாத புகழினையுடைய பாண்டியனது மதுரையைப் போன்ற தலைவியினை விளையாட்டுப் பண்ணையிலும் காணவில்லை. பூங்கொம்பு இணையைப்

போன்ற இடையையும் கூந்தலாகிய மயிர்கள், போர்களத்தில் பின்வாங்கா மேல் படையை ஏந்திய மன்னர் அணியும் முதன்மை வரையாக உள்ள முடியாக ஒன்று கூடி வளர்ந்து அவள் பேரறிவைக் காட்டினவோ என்று தலைவன் நெஞ்சோடு சொல்லிக் கொண்டான். இதன் மூலம் சங்க இலக்கிய காதல்மரபு சங்க மருவிய நூல்களிலும் தொடர்ந்துள்ளன தெரியவருகிறது. இங்கே **“காதல் உணர்வில் தலைவன் இருவேறு முரண்பட்ட எண்ண அலைகளால் துன்புறுகின்றான். முதல் நிலையில் இன்ப உணர்வுகளும், அடுத்த நிலையில் துன்ப உணர்வுகளும் தனிமொழியின் வெளியீடாக திகழ்கின்றன”**[35] எனும் கருத்திற்கிணங்க தலைவன் தலைவியரின் கூற்றுகளும் திகழ்கின்றன.

**தோழி நெறி விலக்கல்**

தலைவன் தலைவியைத் தேடி மலைக்கு வருகிறாள். அப்போது இங்கு வரவேண்டாம் என நெறி விலக்குகிறாள். இதனை

**“………… பெரு வரைமேல்**
**தேன் தேவாக்கு ஒக்கும் மலை நாட! வாரலோ,**
**வுான் தேவர் கொட்டும் வழி!”**[36]

என இவ்வரிகளில் அறியலாம்

**தலைவியின் ஆற்றாமையால் தோழியிடம் புலம்பல்**

தலைவியை காண முடியாமல் தலைவன் ஆற்றாமையில் தோழியிடம் தன் காதல் துயரினை சொல்லி புலம்பியுள்ளான். இதனை,

**“பால்ஒத்த வெள்துருவா பாய்ந்துஆடி, பல்பூப்பெய்**
**தாலொத்த ஐவனம் காப்பாள் கண்வேல் ஒத்துஎன்**
**நெஞ்சம்வாய்ப் புக்குஒழிவு காண்பானோ, காண்கொடா?**
**மேசாயற் கேநோவல் யான்”**[37]

இப்பாடல் மூலம் அறியமுடிகிறது. அதாவது பால்போன்ற வெண்மையான நீர்வீழ்ச்சிகளில் பாய்ந்து நீராடுதலைச் செய்து பலமலர்கள் பரப்பி

வைத்தாற் போன்ற மலை நெல்விளையும் புனத்தின் காவல் செய்யும் தலைவியின் கண்கள் வேல் போன்று என் நெஞ்சில் புகுந்து தங்கின. ஏன் உயிர் நீக்கம் காணவேண்டின் புறம்போகாது அங்கேயே தங்கிவிட்டன. அவள் அழகில் நான் நோயுடன் நிற்கின்றேன். அதனால் எனது ஆற்றாமையைத் தலைவியிடம் கூறுக என்று தலைவன் தோழியிடம் புலம்புவதைக் காணமுடிகிறது. மேலும், மற்றொரு பாடலில் தோழியிடம் தலைவன் பெரிய மலைப்பக்கங்கள் எங்கும் தாம் புகுந்து தேடித் தேன்முழுவதையும் நுகர்ந்து பிறவற்றைப் பொருட்படுத்தாது மலைகளைப் போன்றிருந்த யானைகளை அகப்பனத்துச் சொல்வார் உடைய கங்கையானது திருமார்புக்குத் தோற்று, நாணழிந்து, அறிவு, ஆண்மை, உயர்வு, ஒழுக்கம் ஆகிய குணங்கள் நான்கினையும் இழந்து தளர்ந்து உருகி வலிமை அழிவதற்கு எடுத்துக்காட்டாக நான் அமைந்துள்ளேன் என்று தலைவன் கூறுவதும் இங்கு நோக்கத்தக்கது. இதனை

**“நாண் அழிந்து, நல்ல நலன் அழிந்து, நைந்து உருகி,**

**ஏண் அழிதற்கு யாபடபொ னம்”[38]**

இவ்வரிகள் உணர்த்துகின்றன. இதனோடு மற்றும் ஒரு பாடலில் மணம்மிக்க குளிர்ந்த தகாமரம் வகுளமரம் என்னும் இவற்றைப் பயனற்ற புதர்கள் என விரும்பாது வேருடன் வெட்டி எறிந்து பயிர் செய்தலை விரும்பி உழுது செந்திணையை விதைக்கின்றவர்களின் தங்கையாகிய தலைவி பிறர்படும் துன்பத்திற்கு நொந்து இலங்க தலைவன் தோழியிடம் கூறியதை

**“நறுந்தண் தகரம், வகுளம், இவற்றை,**

**வெறும்புகல்போல் வேண்டாது, வேண்டி, எறிந்து உழுது**

**செந்திணை வித்துவார் தங்கை பிறர்நோய்க்கு**

**நொந்தஇனைய வல்லளோ? நோக்கு!”[39]**

இப்பாடலால் வெளிப்படுகிறது.

**தலைவன் பாங்கனிடம் புலம்பல்**

தலைவன் தம்முடைய தோழன் ஆன பாங்கனிடமும் தன்னுடைய தவிப்பை வெளிப்படுத்தி இருக்கிறான். என் வேட்டைகாலத்து விடுபெற்று வந்த விலங்கினைக் கண்டதுண்டோ என்று கேட்டுக்கொண்டு தனியாகத் தினைப்புனத்திற்குச் சென்றேன். சென்ற இடத்தில் அழகுடைய பூங்குழலாள் என் திறமையைக் கண்டு என் மனத்தை தனக்கு இடமாகக் கொண்டார். இது என்ன மாயம்? என்று வியப்பாக உள்ளதாகத் தன் தோழனிடம் தலைவன் தன் இயலாமையை வெளிப்படுத்துவதனை அறியமுடிகிறது.

இதனை

**“வஞ்சமே என்னும் வகைத்தால், ஓர் மா வினாய்,**

**தஞ்கம் தமியனாய்ச் சென்றேன், என் நெஞ்சை,**

**நலம் கொண்டு ஆர் பூங்குழலாள், நன்று ஆயத்து அன்று, என்**

**வலம் கொண்டாள், கொண்டாள் இடம்”[40]**

இப்பாடலால் அறிய முடிகிறது.

**மடலேறுதல்**

தலைவி தனக்கு கிடைக்க பச்சத்தில் மடல் ஏறுதலை தேர்ந்தெடுத்து உள்ளான். இவ்வழக்கம் சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. தோல்காப்பியமும் இதனை பெருந்திணை பிரிவில் கூறியுள்ளது தொல்காப்பியர்,

**“ஏறிய மடற்றிம் இளமை தீர்திறம்**

**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்**

**மிக்க காமத்து மடலொடு தொகைக்கும்**

**செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே”[41]**

எனக் கூறுகிறார்.

பெருந்திணை நான்கு துறைகள் கொண்டது.

1. காதலியைப் பெறாத நிலையில், காதலன் மடலேறி செல்லுதல்

2. கட்டிளமைக் காலத்து இன்பம் துய்க்காது கணவன் நெடுங்காலம் பிரிந்திருத்தல்
3. எவ்வனையானும் தேறுதல் அடையாமல் மனைவி காமம் முற்றுதல்
4. காமம் கொண்ட மனைவியின் துணிவும் செயல்

இதில் இந்நூலில் முதலாவது துறையாக விளங்கும் காதலியை பெறாத நிலையில் காதலன் மடலேறுதல் என்னும் உணர்வு நிலையில் பாடப்பட்டுள்ளது. இதனை

**“நாள்நாகம் நாறும் நனைகுழலாள் நல்கிதன்**
**பூண்ஆகம் நேர்வுஅளவும் போகாது, பூண்ஆகம்**
**என்றேன், இரண்டாவது உண்டோ? மடல்மாமேல்**
**நின்றேன், மறுகிடையே நேர்ந்து”**[42]

இப்பாடலால் அறிய முடிகிறது. அதாவது அன்று புத்த சுரபுன்னை மலரைமணக்கும் படி தலையில் அணிந்துக் கொள்ளத்தலைவி அவளுடையஅன்பை எனக்குத்தந்து அவளுடைய மார்பினையும் எனக்குக் கொடுத்தார். அதனால் அவளைப்பெறாமல் நான் இருக்க இயலாது. ஆதன் காரணமாக பனைமடலால் செய்யப்பெற்ற குதிரை மீது அமர்ந்து அவள் இருக்கும் தெரு வழியே மடலேறிச் செல்வது என்று முடிவு செய்துள்ளேன் எனத் தலைவன் கூறுவர் இங்கு நோக்கத்தக்கதாகும்.

**தோழி கையுறை மறுத்தலும் ஏற்றலும்**

கையுறை என்பது தெய்வத்திற்கு காணிக்கையாக கொடுக்கப்படும் பொருளாக மட்டும் விளங்கவில்லை அன்பின் மிகுதியால் ஒருவருக்கு கொடுக்கப்படும் பொருள் கையுறை ஆகும். இங்கே தலைவனும் தலைவியைக் கைப்பிடிப்பதற்காக கையுறை அணிகிறான். இங்கே கையுறை என்பது தலைவியிடம் உள்ள அன்பை வெளிப்படுத்தும் வகையில் தலைவன் அன்பு பாராட்டி அளிக்கப்படும் பூ, தழை முதலியனவும் கையுறை ஆகும்.

தலைவன் தலைவிக்காக கையில் கையுறையோடு தோழியை வந்து சந்திக்கிறான். அப்போது அவன் என் தமையன் மார்கள் புலிபோன்ற வளமையும் கொடுமையும் மிக்கவர்கள். நீயும் வலிமைமிக்க

பெரும் பலியை ஒத்துள்ளாய். அதனால் நீ கொணர்ந்த தழையை இன்று ஏற்றுக் கொள்ள இயலாது. நாளை கொண்டு வந்தால் ஏற்றுக் கொள்ளலாம் என கையுறை வாங்க மறுக்கிறாள். இதனை

**"அன்னையால் நீயும், அருந்தழையாம் ஏலாமைக்கு**

**என்னையோ? நாளை எளிது"[43]**

எனக் கூறுவதை காண முடிகிறது. அடுத்தநாள் கொண்டு வந்த கையுறையை வாடாமல் தான் தலைவியிடம் சேர்ப்பதாகவும் கூறுகிறாள். இதனை

**"அண்கண்ண வாடாமை, யான் நல்ல என்றால்தான்**

**உண்கண்ணி வாடாள் உடன்று"[44]**

இப்பாடல் வரிகளால் உறுதிப்படுகிறது.

**தோழி தலைவியிடம் தலைவனுக்காக குறை நயத்தல்**

தோழி தன் கூறியவாறே தலைவியிடம் தலைவனை இணைக்கும் பொருட்டு குறை நயத்தலை மேற்கொள்கிறாள். இதனை குளிர்ந்த மலைநாட்டுத் தலைவன் சொல்லவில்லை. ஆனால் அடிக்கடி பூந்தழைகளைக் கொண்டு வருகின்றான். உன்னால் முடிய கூடிய செயல் என்று நினைத்து மலைகளிலிருந்து மர நிழலிலும் சிறிது பொழுது தங்கியிருக்கின்றான். இதனால் வந்தவன் மனக்கருத்து எதுவாக இருக்கலாம் என்று தோழி தலைவியை கேட்கிறாள். இதனை,

**"தன்குறை ஈது என்னான், தழை கொணரும் தண் சிலம்பன்**

**நின்குறை என்னும் நினைப்பினனாய், பொன் குறையும்**

**நாள் வேங்கை நீழலுள் நண்ணான் எவன் கொலோ**

**கோள் வேங்கை அன்னான் குறிப்பு?"[45]**

என்பதன் மூலம் உறுதிப்படுகிறது.

**பகற்குறிக்கான இடம்**

பகலில் தலைவியை தலைவன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திக்கும் இடமே பகற்குறி ஆகும். பகற்குறிக்கான இடத்தை தோழி தலைவனிடம் கூறுவதாக கீழ்க்கண்ட பாடல் அமைந்துள்ளது.

**“பலா எழுத்த பால்வருக்கைப் பாத்தி அதன்நேர்**
**நிலா எழுந்த வார்மணல் நீடிச் சுலா எழுந்து,**
**கான்யாறு கால் கீத்த காந்தள் அம்பூந் தண் பொதும்பர்**
**தான் நாறத் தாழ்ந்த இடம்”**[46]

எனப் பாடல் பாடப்பட்டுள்ளது. இப்பாடலானது உயர்ந்த பலா மரங்களின் பக்கத்தில் வருகைப் பலாமரங்களால் பகுத்துப் பிரிக்கப்பெற்ற பாலத் தோப்பின் நடுவே நிலவொளி காணும் மிகுந்த மணல் உயர்ந்து வட்டமாய்ப் பூக்கள் மிகுந்து காணப்பெறும் குளிர்ந்த சோலையில் நானும் தலைவியும் பகற் பொழுதில் தங்கி விளையாடும் இடமாகும் என்று தோழி தலைவனிடம் கூறுவதை காணமுடிகிறது.

**அன்பின் மிகுதியால் இரவுக் குறியைத் தவிர்த்தல்**

தலைவன் தலைவியை இரவிலே சந்திக்க வருகிறான். அவன் வரும் வழியில் பல அபாயங்கள் நிறைந்துள்ளன. அவன் மீது கொண்டுள்ள அன்பால் அவனுக்கு ஏதும் நேரக்கூடாது என்று அவள் இரவுக்குறியை தவிர்த்தலை காணமுடிகிறது.

இதனை,

**“மால் நீலம் மாண்ட துகில் உமிழ்வது ஒத்து, அருவி**
**மால் நீல மால் வரை நாட! கேள் மா நீலம்**
**காயும் வேற் கண்ணாள், கனை இருளில் நீ வர**
**ஆயுமோ? மன்ற நீ ஆய்!”**[47]

எனும் பாடல் வெளிக்காட்டி நிற்கிறது. மலை நாட்டவனே நான் சொல்வதை கேட்பாயாக. நீல மலர்களையும் வெறுத்து ஒதுக்கும் படியான நிலையை நீல நிறமுடைய வேல் போன்ற கண்களையுடைய

தலைவி நீ இரவுக்குறியில் வரும்போது வருகின்ற துன்பத்தினை ஆராய்ந்து அவள் துன்புறுகின்றாள் என்பதை நீ எண்ணி பார்க்க வேண்டும் என்று தோழி தலைவனிடம் கூறுவதை காணமுடிகிறது. மற்றும் ஒரு பாடலில் குற்றமில்லாத வளங்களையுடையதும், கல் என்ற ஓசையுடன் ஒலிக்கும் அருவிகள் பாயும், மலைநாட்டுத் தலைவனே..! ஒப்பற்றவனாகிய நீ இரவில் வளமையான வில்லைத் துணையாகக்கொண்டு வருகின்ற வழிகள் மிகவும் அரியனவாய் இருக்கின்றன. யானைகள் திரிகின்ற அக்காட்டு வழி நீ வராதே என்று தோழி தலைவனிடம் வேண்டுவதாக அமைந்துள்ளது. இதனை,

**“இரவுஇல் வளமலைக் கல் அருவி நாட**
**உரவில் வலியாய், ஒரு நீ, இரவின்**
**வழிகள் தாம் சாலவர அரிய, வாரல்**
**இழிகடா யானை எதிர்!”**[48]

இப்பாடல் வெளிப்படுத்தி நிற்கிறது. இங்கே “வரைவுகடாவித் திருமணம் செய்துகொள்ள வேண்டுவதும், பகற்குறி இரவுக்குறி மறுத்துரைப்பதன் மூலம் திருமணத்தை வலியுறுத்துவதும், நொதுமலர் வரவுணர்த்தி வரைவுகடாவுவதும், வரையாது வருபவரை வரைந்து கொள்ளச் சொல்லி அறிவுறுத்துவதுமான தோழியின் செயற்பாடுகள் அனைத்தும் காதலைக் கற்பாக்க முயலும் செயற்பாடுகளாகவே உள்ளன.”[49] எனும் இக்கருத்து தமிழரின் அகவாழ்வியலை எடுத்தியம்புகிறது.

**இற்செறிப்பு**

தலைவியினுடைய காதல் அவளுடைய குடும்பத்தாருக்கு தெரியும் நிலையில் அவள் இச்செறிக்கபடுகிறாள். இதனை,

**“சாந்தம் எறிந்து உழுத சாரல் சிறுதிணை**
**சாந்தம் எறிந்த இதண் மிசை, சாந்தம்**
**கமழக் கிளாகடியும் கார்மயில் அன்னாள்**
**இமிழ, கிள எழா ஆர்த்து”**[50]

எனும் பாடல் வெளிப்படுத்தி நிற்கிறது. அதாவது சந்தன மரங்களை வெட்டி உழுது பயிர் செய்யப்பெற்ற திணைபுனத்து சந்தனக் கட்டைகளைக் கால்களாகக் கொண்டு அமைத்த பரண்மீதில் சந்தனக் குழம்பு உடம்பில் மணக்கும் படி இருந்த கிளிகளை விரட்டிய கார் காலத்தில் மயிலைப் போன்ற சாயலையுடைய எம் தலைவி வாய்திறந்து ஆலோலோ என்று கூறியும் கிளிக்கூட்டம் செல்வதில்லை. அதனால் அவளை வீட்டிற்கு அழைத்துச் செல்கின்றனர் என்று தோழி தலைவனிடம் கூறுவதைக் காணமுடிகிறது.

**தோழி செவிலித்தாயிடம் அறத்தொடு நிற்றல்**

அறம் எனப்படுவது பல பண்புகளையும் தழுவிய பொதுச் சொல்லாயினும் ஈண்டு பெண்ணுக்கு உரிய முதற் பண்பான கற்பையே குறிக்கும். கற்பென்னும் கடைப்பிடியில் நின்று களவொழுக்கத்தை பெற்றோருக்கு வெளிப்படுத்தல் என்பது இத்துறையின் பொருளாகும். பெற்றோருக்கு அறிவித்தல் தோழியின் நோக்கமில்லை. அங்ஙனம் அறிவிப்புழி, தலைவி ஏற்கனவே கற்பு நெறிப்பட்டு விட்டாள் என்பதை முதன்மையாக வலியுறுத்துவதே அவள் நோக்கமாகும்.

இந்நன்னோக்கம் சங்கப் புலவர்களின் நெஞ்சைப் பிணிந்து ஆண்மை சென்ற பல பாடல்களை உருவாகியுள்ளது. வேறு வழியெல்லாம் பயனற்றுப் போன காலை, அறத்தொடு நிற்றல் என்னும் நேர்நெறியைத் தலைவியும் தோழியும் மேற்கொள்ள நாணமும், கற்பும் ஒருவந்தம் காக்கத்தரும் இரு பேரொழுக்கங்கள் ஆயினும், குழந்தை இறப்பினும் தாய் பிழைக்க என்பது போல, நாண் விட்டேனும் கற்பைத் தலையாகப் போற்றியொழுக வேண்டும் என்பது தமிழ் முன்னோர் கண்ட மனையியல்,

**“உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்று”**[51]

நாணத்தைக் காக்க உயிர்விடுக. காற்பைக் காக்க நாணத்தை விடுக’ என்று தமிழ்த்துறை முற்றிய தொல்காப்பியர் தெளிவிப்பவர். அறத்தொடு நிற்பது பெற்றோர்க்கு முன்பேயாயினும், அவ்வளவிற்கு நாணம் என்னும்

அணியைக் கழற்றி வைக்க வேண்டுமாதாலால், அறத்தொடு நில்லா வகை தோழி மணவினை முடிக்க முயல்வாள். களவுச் சுவடு படாமல் பல தீமைகளை தோன்றுவிதற்கு முன்னரே தலைவன் வரைந்து கொள்ள வேண்டும் என்பது தோழியின் ஆசை. இரவுக்குறிக்கண் வந்த தலை மகளைக் கண்ட தோழி, மலைநாடனே.. இனி மணந்து கொண்டால் என்ன? மான் கூட்டமும் மிளகுக் கொடியும் படரும் மலைப்பகுதியில் நீ நிகழ்த்திய கலவொழுக்கத்தை எம் சுற்றத்தார் அறியாரன்றோ? அவர் கொள்வையாயின், நின்னை முன்பின் அறியாதார் போல நாங்கள் நடந்து கொள்வோம். இவளும் முதன் முதலில் நின்னைக் காண்பவள் போல நாணல் அடைவாள். அவள் பொய்யாக நாணிக் கோணி நிற்பதைக் கண்டு நாங்கள் மகிழ்வோம்.

**“வரையின் எவனோ வான்தோய் வெற்ப**
**கணக்கலை இருக்கும் கறியிவர் சிலம்பின்**
**மணப்பருங் காமம் புணர்ந்தமை யறியார்**
**தொன்றியல் மரபின் மன்றல் அயரப்**
**பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி**
**நொதுமல் விருந்தினம் போலவாவள்**
**புதுநாண் ஒடுக்கமும் காண்குவம் யாமே”**[52]

என்று தன் ஆசையைச் சொல்லுதல் போல அறிவு சொல்லுதல் காண்க. அகத்திணை இலக்கியத்துத் தோழி வரம்பற்ற உரிமையுடையவள்; தலைவியின் உரிமையையும் செயலையும் தன் உரிமையும் செயலுமாகக் கொள்ளும் உறைவுடையவள் எனினும், தலைவியின் இசைவின்றி அறத்தோடு நிற்கும் உரிமை மட்டும் தோழிக்கு இல்லை. இவ்வரம்பை

**“அறத்தோடு நிற்கும் காலத் தன்றி**
**அறத்தியல் மரபியள் தோழி என்ப”**[53]

என்னும் தொல்காப்பியயத்தால் (நூ.1151) அறிகின்றோம். ஏன்? அறத்தோடு நிற்பதால் நாணத்துக்கு இழுக்கு வரும் அந்நாண் இழுக்குக்கு வாயவள் தலைவர். கற்பின் பொருட்டு நாணக் குறைவு

வரினும், வருக என்று துணிய வேண்டியவள். அவள் அத்துணிவை அறிந்த பின்னரே தோழி அறத்தொடு நிற்றலை மேற்கொள்ள வேண்டும்.

திணைமாலை நூற்றைம்பதில் தோழி செவிலித்தாயிக்கு அறத்தொடு நிற்பதாக மூன்று பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அதில் யானையிடமிருந்து தலைவியை காப்பாற்றியதற்காக தலைவனையே காதல் செய்து மணக்கும் மனதுடையவர்களாக இருதலைவியரும் கடும் புனலிலிருந்து தன்னை காப்பாற்றியமைக்காக அத்தலைவனையே மணக்க உந்திபூண்ட ஒருத்தலைவியையும் காணமுடிகிறது. அதில் உயிரை காப்பது பேரறம் என்று எண்ணி பரணில் தன்னைக் காத்துகொள்ள இயலாத நிலையில் இருந்த தலைவியை தாக்க வந்த யானையைத் தன் அம்பினால் எய்து விலகியோடச் செய்து எம் தலைவியைக் காப்பாற்றினான். பின்பு அவன் அனிச்சமலரையும் சுனையில் மலராத நீலோற்பது மலர்களையும் ஒளிமிக்க அசோக மலரையும் கொண்டு வந்து கொடுத்து, எம் தலைவியின் கூந்தலில் அழகாக புனைந்தான். அத்தகைய உதவி செய்த ஆணழகன் எம் தலைவியின் அகத்தே சிறப்புற்று விளங்குகின்றான் என்று கூறி தோழி அறத்தொடு நிற்கிறாள். இதனை,

**"சுள்ளி சுனைநீலம் சோபா லிகை செயலை**
**அள்ளி அளக்கத்தின் மேல் ஆய்ந்து - தெள்ளி**
**இதனால் கடி நடுங்கா ஈர்ங்கடா யானை**
**உதணால் கடிந்தான் ஊன்"**[54]

என்னும் இப்பாடல் வழி அறத்தோடு நின்றலின் வெளிப்படுகிறது. மற்றும் ஒரு பாடலும் இதே போன்று செவிலிக்கு தோழி அறத்தொடு நின்றமையை வெளிக்காட்டி நிற்கின்றது.

வருக்கைப் பலமரங்கள் நிறைந்த மலையில் நானும் என் தலைவியும் திணைப்புனத்திற் பரண்மேல் இருந்தோம். அப்ஜபோது எங்களுக்கு இடையூராகப் பெரிய துதிக்கையினையும் மதநீரையும் கொண்ட யானை வந்தது. அதனால் ஏற்படும் ஒன்பத்தினன்றும் காளைப் போன்ற வருவன் எங்களைப் பாதுகாத்தான் காப்பாற்றினான். அவனைத்

தவிர வேறு எவர்க்கும் தலைவியின் தோள்கள் சீண்டுவதற்கு உரியன அல்ல என்று தோழி செவிலியிடம் கூறுவது புலப்படுகிறது. இதனை,

**“வருக்கை வளமலையுள், மாதரும் யானும்**
**இருக்கை இதண்மேலேம் ஆகப் படுக்கைக்**
**கடாஅம்மால் யானை கடிந்தானை அல்லால்**
**தொடா அவால், என் தோழி தோள்”[55]**

இப்பாடலின் மூலம் அறிய முடிகின்றது. அதோடு மற்றொரு தலைவி தன்னை கடும்புனலிலிருந்து தன் உயிரைக் காப்பாற்றிய தலைவனையே மணப்பாள் என்று அவளுடைய நன்றி குணத்தையும் உள்ளத் தூய்மையினையும் வெளிப்படுத்தி தோழி அறத்தொடு நின்றமை வெளிப்படுகிறது. இதனை,

**“வேலனார் போக மறிவிடுக்க வேரியும்**
**பாலனார்க்கு ஈக - பழியிலாள் பாலால்**
**கடும்புனலின் நீந்தி, கரை வைத்தாற்கு அல்லால்**
**நெடும் பணைப்போல் தோள்நேராள் நின்று”[56]**

இதனை இப்பாடல் வழி அறிய முடிகிறது. அதாவது வெறியாடும் பொருட்டு வரவழைத்த வேலேந்திய பூசாரியைத் திருப்பிஅனுப்புக. பலி கொடுக்கக் கொணர்ந்த ஆட்டுக் குட்டியினை விட்டு விடுக. பூசைக்குக் கொண்டுவந்த கள்ளை அதனை பருகுகின்ற மக்களிடம் கொடுத்துவிடுக. பழியில்லாத என் தலைவி ஊழ்வினையால் கடும்புனலுள் பாய்ந்து தன்னை எழுப்பிக் கரையின்கண் சேர்த்த காதலனுக்கு அல்லாமல் வேறுயவர்க்கும் தன் மூங்கில் போன்ற தோள்களைத் தரமாட்டாள் என்று தோழி செவிலியிடம் கூறி, அவளுடைய தூயத் தன்மையையும் தமிழரின் கலாச்சாரத்தையும் வெளிப்படுத்தும் விதமாக அறத்தொடு நிற்பது நம் அகவாழ்வியலை போற்றுவதாக அமைந்துள்ளது.

**நற்றாய் அறத்தொடு நிற்றல் :**

தலைவன் தலைவியினைக் காதல் செய்கிறான். அப்பொழுது சான்றோரோடு பெண் கேட்கின்றனர். அப்போது நற்றாய்,

**“வாடாத சான்றோர் வரவுஎதிர் கொண்டிராய்க்**
**கோடாது நீர் கொடுப்பின் அல்லது - கோடா**
**எழிலும் முலையும் இரண்டிற்கும் முந்நீர்ப்**
**பொழிலும் விலைஆமோ போந்து?”**[57]

எனக் கூறுகிறாள். அதாவது தலைவியை திருமணம் செய்துகொள்ள வேண்டி தலைவனைச் சார்ந்த சான்றோர்கள் வந்தனர். திருமணத்தின் பெண்ணை நீர் வார்த்துக்கொடுத்தது என்பதைத் தவிர, இப்பெண்ணின் தளர்ச்சியடையாத அழகுக்கும், மார்பினுக்கும் இந்த இரண்டுக்கும் கடல் சூழ்ந்த இவ்வுலகத்தையே கொடுத்தாலும் அது விலையாகுமா? பொருந்தாது என நற்றாய் அறத்தோடு நிற்றலை அறிய முடிகின்றது.

திணைமாலை நூற்றைம்பது என்னும் இந்நூலில் தமிழரின் அகவாழ்வியல் சிறப்புடன் விளங்குவதை உய்த்துணர முடிகிறது. தலைவன், தலைவியின் காதல், அவர்களின் மன உறுதி, தலைவி பேசாத பொழுது தலைவனின் காதல் உள்ளம் படும்பாடு தோழி காதலை கையுறை பெற்று சேர்த்து வைக்கும் குணப்பாங்கு அன்பின் மிகுதியால் தலைவனுக்கும் ஏதும் துயரம் நேர கூடாது என்று தலைவி இரவுக்குறியை தவிர்த்தல் தோழி செவிலிக்கு அறத்தோடு நிற்கும் நல்ல உயர்ந்த குணப்பாங்கு நற்றாய் அறத்தொடு நிற்கும் குணப்பங்கு தன்னை ஆபத்திலிருந்து உயிரை காப்பாற்றிய நன்றியுணர்வோடு கூடிய காதல் என்னும் உறுதியான ஒழுக்கம் கொண்ட தலைவிகள் என தமிழர் அகவாழ்வியலை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தி இந்நூல் நிற்கிறது.

**கைந்நிலை**

இந்நூலின் ஆசிரியர் புல்லங்காடனார். இந்நூல் ஐந்திணை அறுபது என்று வழங்கும் நிலையில் உள்ள நூலாகும். ஐந்திணைப் பற்றிய நூல். அறுபது பாடல்கள் உடைய நூல். இந்நூல் செய்யுட்களில் 18 பாடல்கள் சிதைந்துள்ளன. குறிஞ்சித்திணையில் 12 பாடல்கள் உள்ளன. அதில் 9 பாடல்கள் தலைவனைப் பிரிந்து தலைவி வாட்டம் கொண்டு புலம்புவதாக அவனை எண்ணி கலங்குவதாக பாடப்பட்டுள்ளன. முதல் பாடலில் மலைநாட்டு தலைவன் என்னை சேர்ந்தான். இங்கு

இல்லாதவனாகி என்னை கைவிட்டு பிரிந்து சென்றான். அதனால் என்மேனி பசைந்து அழகு இழந்தது என்று புலம்புகின்றாள் இதனை,

**“கானக நாடன் கலந்தான் இலன் என்று**

**மேனி சிதையும் பசந்து”**[58]

என்று கூறுகிறாள். அடுத்த பாடலிலேயே கள்ள மனம் கொண்ட நம் மலைநாட்டுத் தலைவன் இங்கு வராமல் இருப்பானோ? என்று என் நெஞ்சம் நடுங்கி வருந்துகின்றது என்று தோழியிடம் கூறுவதை,

**“வஞ்ச மலை நாடன் வாரான் கொல்? - தோழி! என்**

**நெஞ்சம் நடுங்கி வரும்”**[59]

இப்பாடல் வரிமூலம் அறியமுடிகின்றது. மேலும் மற்றொரு பாடலில்,

**“பாசம் பட்டு ஓடும் படுகல் மலை நாடற்கு**

**ஆசையின் தேம்பும் என் நெஞ்சு”**[60]

என தலைவி தோழியிடம் கூறுகின்றாள். அருவிநீர் ஓடுகின்ற மலைநாட்டுத் தலைவன் மீதுள்ள அன்பு காரணமாக என் மனம் அவன் காலம் நீட்டிப்பானோ என்று வருந்துகின்றது. மேலும் அவள் தலைவன் தன்னோடு இயற்கை புணர்ச்சியில் கலந்திருந்தபோது தேன் கலந்த சொற்களைக் கூறி என்னைத் தெளிவித்து பின்னர் அவற்றை எண்ணாது மறந்து விடுவானோ என தோழியிடம் கூறுகிறாள்.

மேலும் அவள் தலைவன் என் தோளோடு சேர்ந்திருந்த இன்பம் இப்போது நரகத்தில் இருப்பது போல இருக்கின்றது (ப.5) என்று புலம்புகின்றாள். மேலும் அவனால் என் கை வளையல்கள் கழன்று நெகிழ்ந்து விழுகின்றன, அவன் வந்தால் மட்டுமே பிரிவாற்றாமையாகிய நோய் குறையும். மேலும் அவர்நம் இன்பத்தை வெறுத்து விட்டதை போல தோன்றுகிறது என்று புலம்புகின்றாள். இவ்வாறு கூடலுக்குரிய இத்திணையில் பிரிவையும் பிரிவினால் உண்டான துயரையும் தோழியிடம் கூறுகிறாள் தலைவி.

பத்தாவது பாடலில்தான் தோழி, தலைவியை ஆற்றுப்படுத்தும் விதமாக நல்லதொரு செய்தியை கூறுகிறாள். தோழி, பொன் போன்ற மலர்கொத்துக்களை உடைய வேங்கை மரங்கள் நிறைந்திருக்கும் காடுகள் சூழ்ந்த நம் மலைநாட்டுத் தலைவன் இரவில் மின்னல் ஒளியை வீசும் வேலினை ஏந்தி இப்போது வருவான். அதனால் என் கண் இமைகள் உறங்காதிருக்கின்றன எனத் தலைவி தோழியிடம் இரவுக்குறி பற்றி பேசினாள் என்பதை,

**“பொன் இணர் வேங்கை புணம் சூழ்மலை நாடன்**
**மின்னின் அனைய வேல் ஏந்தி இரவினுள்**
**இன்னே வரும் கண்டாய் - தோழி! இடையாமத்து**
**என்னை இமை பொருமாறு?”[61]**

இப்பாடல் வெளிப்படுத்துகின்றது. மேலும் தலைவி அவளிடம் நம் மலைநாட்டுத் தலைவன் நம்மிடம் சொற்கள் சில பேசவே வருகின்றான் (ப.11) எனவும் கூறுகின்றாள். மேலும் இறுதியாக தலைவன் வருவதை புலவர் திணைக்கு ஏற்ப நிறைவு செய்துள்ளார்.

**“நாகநறுமலர் நாள் வேங்கைப் பூ விரவி**
**கேசம் அணிந்த கிளர் எழிலோள் ஆக**
**முடியும் கொல்? என்று முனிவான் ஒருவன்**
**வடிவேல் கை ஏந்தி வரும்”[62]**

எனும் இப்பாடல் குறிஞ்சி திணைக்கான கூடலை அகமரபு பிறழாமல் நிறைவு செய்கிறது. அதாவது புன்னையில் மணம் மிக்க மலரையும் அன்று அலர்ந்த வேங்கை மலரையும் ஒன்று சேர்த்து கலந்து தம் கூந்தலுக்கும், மார்புக்கும் அணிந்துள்ள தலைவியின் உள்ளம் வருந்துமா? என்று ஐயம் கொண்டு தலைவன் தன் உயிரையும் வெறுத்து தலைவியின் உயிரை காப்பதற்கு இரவில் கூர்மையான வேலை எறிந்து வருகின்றான், என்பதன் மூலம் குறிஞ்சித் திணைக்கான ஒழுக்கம் அமைந்து விடுவதை காணமுடிகிறது. இங்கே “குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடமும் ஆகும். ஆனால் அங்குள்ள ஆண் பெண் உறவின் தன்மை என்ன? புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

ஆகும். அதாவது குறிஞ்சிப் பிரதேசத்தில் வாழும் சமூகம் ஒரு குறிப்பிட்ட அளவு சமூக கட்டமைப்பும் சமூக ஒழுங்கமைப்பும் கொண்ட ஒரு பிரதேசமாக இருந்திருக்க முடியாது. தாய், தகப்பன், பெற்றோர், பிள்ளைகள் என்ற கருநிலைக் குடும்ப உறவு இல்லாமல் இல்லை. தங்களுடைய ஐந்திணை மரபில் குறிஞ்சிக்கு புணர்தல் உரியது என்பர். புணர் என்பதற்கு நாங்கள் கொள்ளும் கருத்து இணைதல், சேர்தல் என்பதாகும். அதாவது புணர்தல் எனும் பொழுது இரண்டு விடயங்கள் அல்லது இருவர் ஒன்றாக இயங்கும் நிலையையே கருதுகின்றோம்."[63] எனும் கருத்து நோக்கத்தக்கதாகும்.

**புறவாழ்வியல்**

சங்கம் மருவிய கால இலக்கியங்களில் குறிஞ்சித் திணைப் பாடல்களால் புறவாழ்வியலும் உவமையாகவோ பிறவழியாகவோ வெளிப்பட்டு நிற்கின்றன.

**திணைப்புனம்**

திணைப்புனத்தை காத்தல் முக்கிய தொழிலாக குறிஞ்சி நிலமக்கள் செய்துள்ளனர். தொழில் நீண்ட திணைக் கதிர்களை வளைந்த வாயினை உடைய கிளிகள் கவர்ந்து செல்லாதிருக்க, என் ஐயன்மார் தினைப்புன காவலில் என்னை நிறுத்தினார் என தலைவி கூறுகிறாள். இதன் மூலம் பெண்கள் திணைபுன காவலை மேற்கொண்டமை புலனாகிறது. இதனை,

**"வார்குரல் ஏனல்வளை வாய்க்கிளி கவரும்**

**நீரால் தெளி திகழ் கான்நாடன் கேண்மையே"[64]**

என்னும் இவ்வரிகளால் அறிய முடிகிறது.

தோழி திணைப்புனம் முற்றியதன் காரணமாக திணைபுனத்தை காவல் செய்கின்ற வேலையை நாங்கள் கைவிட்டோம் என கூறுகிறாள். இதனை,

**"மால்வரை வெற்ப வணங்கு குரல் எனல்**

**காவல் இயற்கை ஒழிந்தோம் யாம்"[65]**

என கூறுவதை காண முடிகிறது.

**மரம் வெட்டி உழவுத்தொழில் புரிதல்**

மேகங்கள் படிந்திருக்கும் சந்தன மரங்கள், விசை மரங்கள், வேங்கை மரங்கள் வயிரம் பாய்ந்த அகில் மரங்கள், தேவர் உலகில் எட்டி நிற்கும் சுரபுன்னை மரங்கள் இவற்றை எல்லாம் வெட்டி உழுது திணைப்பயிர் செய்பவராகிய மலைநாட்டவர்கள் எனும் அவர்களுடைய உழவுத் தொழிலையும் குறிஞ்சி திணை பாடல்கள் பதிவு செய்துள்ளன. இதனை,

**“மேகம் தோய் சாந்தம் விசைதிமிசு, காழ் அகில்**
**நாகம் தோய் நாகம் என இவற்றைப் போக**
**எறிந்து உழுவார்”**[66]

இவ்வரிகளால் அறியலாம். மேலும் திணைமாலை நூற்றைம்பதே மரங்களை அழித்து விவசாயம் செய்ததை மற்றொரு பாடலிலும் குறிப்பிட்டுள்ளது.

**”நறுந்தண் தகரம், வகுளம் இவற்றை**
**வெறும்புதல் போல் வேண்டாது வேண்டி எறிந்து உழுது**
**செந்தினை வித்துவார்”**[67]

எனும் இப்பாடலும் மணமிக்க குளிர்ந்த தகரமரம், வகுள மரம் எனும் இவற்றைப் பயனற்ற புதர்கள் என விரும்பாது வேருடன் வெட்டி எறிந்து பயிர் செய்தலை விரும்பி உழுது செந்திணையை விதைக்கின்றவர்கள் என அவர்கள் செய்த உழவுத்தொழிலைக் குறிப்பிடுகின்றது. மேலும் சந்தன மரங்களை வெட்டி உழவுத் தொழில் செய்தமையும் தெரிய வருகின்றது. இதனை,

**“நறைபடர் சாந்தம் அறஎறிந்து நாளால்**
**உறை எதிர்ந்து வித்திய ஊழ் ஏனல்”**[68]

இப்பாடல் வரிகளால் அறியலாம். இங்கே **“மனித குடியிருப்புக்களின் வளர்ச்சி முற்றிலுமாகச் சுற்றுச்சூழல் அம்சங்களைச் சார்ந்தமைகிறது என்பதைத் திணை மரபு நமக்கு உணர்த்துகிறது”**[69]என்பர்.

**நீர் நிலைகள்**

நீர் நிலைகளைப் பெருக்கி அதை பாதுகாத்து வளமான வாழ்வை மேற்கொண்டமையும் புலப்படுகிறது.

**”சான்றவர் கேண்மை சிதைவு இன்றாய், ஊன்றி**
**வலி ஆகி பின்னும் பயக்கும், மெலிவு இல்**
**கயம் திகழ் சோலை மலை நாடன் கேண்மை**
**நயம் திகழும் என்னும் என் நெஞ்சு”**[70]

எனும் இப்பாடல் தோழி சான்றோரின் நட்பு சிதைவு இல்லாமல் நிலைத்து நின்று வலிமையுடன் பலவகை நன்மைகளைத் தரும். அதுபோன்று நீர்நிலைகளால் வளமாக காணப்படும் சோலைக்கள் சூழ்ந்த மலைநாட்டுத் தலைவனின் நட்பு குறைவின்றி இன்பம் பயக்கும் என என் நெஞ்சம் நினைக்கிறது என்று தலைவி தலைவி தலைவனின் அன்பை குறைத்து பேசிய தோழியிடம் அவன் சிறந்த பண்புகளை எடுத்துகூறினாள்.

**விலங்குகளை அகப்படுத்துதல்**

விலங்குகளை பழந்தமிழர்கள் வீரத்தோடு வேட்டையாடியும் உயிரோடு பிடித்தும் அகப்படுத்தியுள்ளனர். அதனை சங்க மருவிய கால இலக்கியங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. திணைமாலை நூற்றைம்பது யானைகளை பிடித்து அகப்படுத்தியமைப் பற்றி பதிவு செய்துள்ளது.

**“பெருமலை தாம்நாடித் தேன் துய்ந்துப் பேணாது**
**அருமலை மாய்க்குமவர்”**[71]

எனும் இவ்வரிகள் யானைகளை அகப்படுத்தியமையை கூறுகிறது. பெரிய மலைப்பக்கங்கள் எங்கும் தாம் புகுந்துத்தேடி தேன் முழுவதையும் நுகர்ந்துப் பிறவற்றை பொருட்படுத்தாது மலைகளை போன்றிருந்த

யானைகளை அகப்படுத்தி கொள்வார் என்பதன் வாயிலாக நமக்கு புலப்படுகிறது. மேலும் மற்றொரு பாடலில் கொல்லும் தன்மையுடைய யானையின் தந்தங்களையும் கொலை புரியும் தொழிலை செய்யும் புலியின் தோல்களையும் நம் யானைப் போன்ற உன் அண்ணன் மார் திறையாகக் கொண்டு செல்பவராகி இத்தினை புனத்தின் கண் எதிர் வந்தவரை அம்பினால் தாக்கி ஒழிப்பர் இதனை,

**“கொல்யானை வெண்மருட்பும் கொல்வல்புலி அதளும்**
**நல்யானை நின்ஜயர் கூட்டுண்டு செல்வார்தாம்**
**ஓர் அம்பி னான்எய்து போக்குவர்..”[72]**

எனும் வரிகளால் இதனை அறியமுடிகிறது.

**பசு வளர்ப்பு**

மலையில் பசுவும், நல்ல இழைத்தழைகளை உண்டு வளர்ந்துள்ளது. அம்மலையின் இயற்கை வளத்தினை பற்றி குறிப்பிடும் போது பசு வளர்ப்பினையும் குறிப்பிட்டு உள்ளனர்.

**“மன்றப் பலவின் சுளை விளை தீம்பழம்**
**உண்டு உவந்து மந்திமுலை வருட கன்று அமர்ந்து**
**ஆமா சுரக்கும் அணி”[73]**

எனும் இவ்வரிகள் பொதுமன்றத்தில் உள்ள பலாமரத்தில் முதிர்ந்து நன்கு பழுத்த பலாப்பழத்தை தின்று மகிழ்ந்து நீர் வேட்டை மிக்க அங்கு தங்கியிருக்கும் காட்டு பசுவின் மடியைத் தடவ, அப்பசு தன் கன்றுக்கும் பால் சுரந்து கொடுப்பதைப் போல குரங்குக்கும் பால் சுரந்து கொடுக்கும் பண்புடையது மலைநாடு எனும் கருத்தால் பசு வளர்ப்பு பற்றி தெரிவிக்கின்றது.

**தேன் அழித்தல்**

மலையில் தேன் அழித்தல் தொழிலை வேடர்கள் மேற்கொண்டு இருந்தமையை,

**"பிரைசம் கொள வீழ்ந்த தீம் தேன் இறாவுல்**

**மரையான் குழவி குளம்பின் துகைக்கும்.."[74]**

இவ்வரிகள் குறிப்பிட்டுள்ளன. அதாவது வேடர்கள் தேன் அடைகளைக் கவர்ந்து சென்றபோது கீழே நழுவி விழுந்த தேன் அடைகளை மான்குட்டிகள் கால் குழம்புகளால் சிதைக்கும் மலைநாட்டு தலைவனே..! என்பதன் மூலம் தேன் அழித்தல் தொழில் நடந்ததை அறிய முடிகிறது.

**பழக்கவழக்கங்கள்**

நல்ல காரியங்களுக்கு சான்றோரை அழைத்து செல்லும் மரபு எக்காலமும், இருந்தது அறியலாம். அதைபோல் இசையும், ஆடையும் சிறப்பானதாக நம் தமிழர் பழக்கங்களில் இருந்திருக்கிறது.

**மணம் பேச சான்றோரை அழைத்து செல்லல்**

தலைவியே.. தழைகள் அடர்ந்து குளிர்ந்த காட்டு மல்லிகையின் கொடிகள் படர்ந்துள்ள சோலையில் கொத்து கொத்தாய் விளங்கும் காந்தள் மலர்களில் வண்டின் கூட்டம் தேனுண்டு பாடும் மலைநாட்டு தலைவன் மணம் பேசி வருவதற்காகச் சான்றோர்களை அனுப்பியுள்ளான் என தோழி கூறுகிறாள். இதனை,

**"இலை அடர் தண்குளவி வேய்ந்த பொதும்பில்**

**குலையுடையக் காந்தள், இனவண்டு இமிரும்**

**வரையக நாடனும் வந்தான்"[75]**

எனும் வரிகளால் அறியமுடிகிறது.

**தழை ஆடை**

அன்றைக்கு தழையாடைகள் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டு அவை மிக்க மகிழ்வோடு உடுத்தியமை ஐந்திணை ஐம்பதின் வாயிலாக வெளிப்படுகிறது. இதனை,

**"புனைபூந் தழைஅல்குல் பொன் அன்னாய்!"[76]**

இவ்வரியால் அறிய முடிகிறது. அதாவது தொடுக்கப்பெற்ற மலர்களுடன் கூடிய தழைகள் அமைந்த தழையாடையை உடுத்திய அடிவயிற்றினையுடைய திருமகளை போன்றத் தலைவியே... என

விலித்தன் வாயிலாக அறிய முடிகிறது. அதே நேரத்தில் **“தமிழகத்திற் பழங்காலத்திலேயே நெசவு தோன்றி விட்டதென ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். வயவர் யோவான் மார்ஷல் தம் மொகஞ்சோ-தாரோவும், சிந்து நாகரீகமும் எனும் நூலில் கி.மு.3000 ஆண்டுகட்கு முன் மேனாடு கட்கு இந்தியா வினின்றே துணி ஏற்றுமதியானதென்று கூறியிருக்கின்றார். அக்கால இந்தியா தமிழகமே”**[77] என பாவாணர் கூறுவதும் நோக்கதக்கதாய் உள்ளது. பருத்தியாடையாக இருந்தாலும் கூட தலைவிக்கு தலையாடை உடுத்துவது என்பது சிறப்பானதொரு அலங்காரமாக போற்றப்பட்டமை தெளிவுபடுகிறது.

**இசை**

இசை நம் மனதை வருட கூடியது. அவ்விசைகள் சங்கம் மருவிய காலத்திலும் போற்றப்பட்டு இசைக்கப்பட்டமை அறிய முடிகிறது.

**“யாழும் குழலும் முழவும் இயைந்தென”**[78]

இப்பாடல் வரியின் மூலம் அறியப்படுகிறது. யாழின் இசையும் குழலின் ஓசையும் முழவின் ஒலியும் இணைந்து சேர்ந்தாற்போன்று ஒலியை எழுப்பும் எனும் இவ்வரிகள் இசைப் போற்றும் சங்கக்காலச் சமூகத்தைக் காட்சிப்படுத்துகின்றன.

**தொகுப்புரை**

தலைவி தலைவன் மீது கொண்டிருந்த நம்பிக்கை, நன்மதிப்பு முதலியன வெளிப்படுகின்றன. தலைவனின் அன்பையும் பண்பையும் போற்றக் கூடியவளாகத் தலைவி விளங்கியுள்ளாள்.

தலைவி தலைவன் உயிரைத் தன் உயிராகப் போற்றியமையும் புலப்படுகிறது.

தினைப்புனம் விளைந்த நிலையில் தலைவனைப் பகற்குறியில் சந்திக்க வீட்டிற்கு செல்லும் நிலையில் தலைவி அதை ஒரு சிறைப்புறமாக எண்ணித் தவிப்பதும் புலப்படுகிறது.

காதல் பிரிவில் வாடும் தலைவி அயலவர் பெண் கேட்டு வரும் நிலையில் தோழியிடம் அவளே (தலைவியே) அறத்தொடு நிற்கும் நிலை காணப்படுகிறது. தலைவன் வரும் வழிகளை எண்ணி தலைவியும், தோழியும் வரைவு கடாதலை வலியுறுத்தியுள்ளனர். சங்க இலக்கியத்தில் வரும் தலைவனைப் போலவே காதல் கைக்கூடாத வேளையில் நெஞ்சொடு புனத்தலைத் தலைவனும் மேற்கொண்டுள்ளான். சங்க இலக்கிய மரபு இங்கேயும் வெளிப்படுகிறது. காதலியை திருமணம் செய்யும் பொருட்டுத் திணைமாலை நூற்றம்பதில் காணப்படும் தலைவனும் மடலேறு முற்படுவதைக் காணமுடிகிறது.

தலைவன் தலைவியை அடைவதற்கு இல்லறவாழ்வில் இணைவதற்கு தோழியே முழுமுதற் காரணமாகத் திகழ்கிறாள். தழையாடை என்பது தலைவிக்கானதாக விளங்குவதும் அறிய முடிகிறது. இச்செறிக்கப்பட்டாலும் தலைவி தலைவனுக்காகவே காத்திருக்கு கூடியவளாக விளங்குகிறாள். அதே போல் தன் உயிரை வெள்ள பெருக்கிலிருந்தும், யானைகளிடமிருந்தும் காப்பாற்றிய தலைவனையே காதலித்து, அவனைத் தவிர வேறு யாரையும் கைப்பிடிக்க மாட்டோம் எனும் மன உறுதிமிக்க தலைவியரை காணமுடிகிறது.

புறவாழ்வியலில் தினைப்புனம் அமைத்து உழவுத் தொழில் செய்ததையும், மரங்களை வெட்டி அழித்தலையும், நீர் நிலைகள் பெருக்கி விவசாயம் மேற்கொண்டமையும், விலங்குகளை அகப்படுத்தலையும் தேனலித்தலையும், பசு வளர்ப்பில் ஈடுபட்டமையும், திருமணத்திற்கு பெண் கேட்க சான்றேதரை அழைத்து சென்றமையும் புலப்படுகிறது.

**சான்றெண் விளக்கங்கள்**

1. ஐந்திணை எழுபது., பா.எ.2:3-4
2. மேலது., பா.எ.4
3. மேலது., பா.எ.5
4. மேலது., பா.எ.9:2-4
5. மேலது., பா.எ.14
6. மேலது., பா.எ.1:3-4
7. மேலது., பா.எ.6
8. மேலது., பா.எ.8
9. மேலது., பா.எ.10:3-4
10. மேலது., பா.எ.13
11. சு.வித்தியானந்தன்., தமிழர் சால்பு., ப.78
12. ஐந்திணை ஐம்பது., பா.எ.11
13. மேலது., பா.எ.12
14. மேலது., பா.எ.13
15. மேலது., பா.எ.16
16. மேலது., பா.எ.17
17. மேலது., பா.எ.20
18. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்., ப.342
19. திணைமொழி ஐம்பது., பா.எ.1:3-4
20. மேலது., பா.எ.2:3-4
21. மேலது., பா.எ.4
22. மேலது., பா.எ.5
23. மேலது., பா.எ.6:3-4
24. மேலது., பா.எ.7:3-4
25. மேலது., பா.எ.10:3-4
26. சாமி சிதம்பரனார்., பதினெண் கீழ்க்கணக்கு., ப.39

27. திணைமாலை நூற்றைம்பது., பா.எ.89
28. மேலது., பா.எ.1
29. வ.சுப.மாணிக்கம்., தமிழ்க்காதல்., ப.38
30. பவணந்தியார்., நன்னூல்., நூ.40
31. நம்பியகப்பொருள்., நூ.223
32. தொல்.பொருளதிகாரம்., நூ.101
33. நம்பியகப்பொருள்., நூ.217
34. திணைமாலை நூற்றைம்பது., பா.எ.4
35. சங்க இலக்கிய உரையாடல்., ப.198
36. திணைமாலை நூற்றைம்பது., பா.10
37. மேலது., பா.எ.19
38. மேலது., பா.எ.23
39. மேலது., பா.எ.24
40. மேலது., பா.எ.9
41. தொல்காப்பியம்., நூ.996
42. திணைமாலை நூற்றைம்பது., பா.எ.16
43. மேலது., பா.எ.20
44. மேலது., பா.எ.21
45. மேலது., பா.எ.31
46. மேலது., பா.எ.30
47. மேலது., பா.எ.6
48. மேலது., பா.எ.11
49. பெ.மாதையன்., சங்க இலக்கியத்தில் குடும்பம்., பக்.42-43
50. திணைமாலை நூற்றைம்பது., பா.எ.3
51. மனோன்மணி சண்முகதாஸ்., பண்டையத் தமிழர் வாழ்வியல்., ப.86
52. தொல்காப்பியம்., நூ.1058
53. அகப்பொருள்., நூ.112
54. தொல்காப்பியம்., நூ.1151

55. திணைமாலை நூற்றைம்பது., பா.எ.2

56. மேலது., பா.எ.14

57. மேலது., பா.எ.12

58. கைந்நிலை., பா.எ.1

59. மேலது., பா.எ.2

60. மேலது., பா.எ.3

61. மேலது., பா.எ.10

62. மேலது., பா.எ.12

63. கா.சிவதம்பி., சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும்., ப.39

64. ஐந்திணை எழுபது., பா.எ.13

65. மேலது., பா.எ.12

66. திணைமாலை நூற்றைம்பது., பா.எ.28

67. மேலது., பா.எ.24

68. மேலது., பா.எ.1

69. கா.சிவதம்பி., பண்டையத் தமிழ் சமூகம்., ப.60

70. ஐந்திணை எழுபது., பா.எ.5

71. திணைமாலை நூற்றைம்பது., பா.எ.23

72. மேலது., பா.எ.22

73. ஐந்திணை எழுபது., பா.எ.4

74. மேலது., பா.எ.10

75. மேலது., பா.எ.3

76. மேலது., பா.எ.14

77. தேவநேய பாவாணர்., பண்டை தமிழ் நாகரீகமும் பண்பாடும்., ப.53

78. திணைமொழி ஐம்பது., பா.எ.7

# முடிவுரை

தமிழ் இலக்கண நூல்களில் குறிஞ்சி என்ற தலைப்பின் கீழ் தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், அகப்பொருள் விளக்கம், மாறன் அகப்பொருள் இலக்கண விளக்கம் தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் என்ற நூல்கள் யாவும் பெரும்பாலும் ஒத்த தன்மையுடைய கருத்துகளையே விளக்குகின்றன.

சில நூல்கள் இதிலிருந்து மாறுபட்டும் உள்ளன. அறுவகை இலக்கணம் என்ற நூல் ஏனைய இலக்கண நூல்களைப் போல் முப்பொருள் பற்றி விரிவாக எடுத்துக்கவில்லை.

தொல்காப்பியம், யாப்பருங்கலம் காரிகை, தண்டியலங்காரம், நன்னூல் ஆகிய நூல்களைப் பின்பற்றியும் திருத்தியும் மாற்றியும் ஏற்றுக் கொண்டு இயன்றுள்ளது.

பல நூல்கள் விரித்த செய்தியை சிறிது விரித்தும், மாற்றியும் குறிஞ்சி பற்றி செய்தியை அழகுற இலக்கண நூல்கள் முதற்பொருள் (நிலம், பொழுது) கருப்பொருள், உரிப்பொருள் என முப்பொருளையும் வகைப்படுத்தியுள்ளது.

அகவொழுக்கம், களவொழுக்கம், கற்பொழுக்கம் என இலக்கண நூல்கள் வகைப்படுத்தி திணையின் இயல்பை மேம்படுத்தியுள்ளது. குறிஞ்சித் திணைக்கு இலக்கண நூல்களில் சிறப்பிடம்பிடித்துள்ளது. இலக்கண நூலாசிரியர்கள் குறிஞ்சியை அழகுற கையாண்டுள்ளது வெளிப்படுகிறது.

பத்துப்பாட்டில் எட்டாவதும் பாட்டாக அமையும் இக்குறிஞ்சிப்பாட்டு 261 அடிகளையும் 1440 சொற்களையும் கொண்டதாகும். அறத்தோடு நிற்றல் என்னும் துறையில் அமைந்த இக்குறிஞ்சிப் பாட்டு முழுவதும் தோழி செவிலிக்காக கூறுவதாக அமைந்துள்ளது.

சங்க இலக்கியத்துள் காணப்பெறும் கபிலரின் பாடல்களின் எண்ணிக்கை 235 ஆகும். இவை முறையே நற்றிணை 20, குறுந்தொகை

29, ஐங்குறுநூறு 100, பதிற்றுப்பத்து 10, அகநானூறு 12, புறநானூறு 28, கலித்தொகை 29, குறிஞ்சிப்பாட்டு 1 என்றவாறு அமைந்துள்ளன. பத்துப்பாட்டிலும் பரிபாடல் தவிர்த்த பிற எட்டுதொகை நூல்களிலும் கபிலர் பாடல்கள் காணக்கிடக்கின்றன. கபிலர் பாடியுள்ள 235 பாடல்களில் 197 பாடல்கள் அகப்பாடல்களாகும். இவற்றுள் 182 களவிற்கும், 12 கற்பிற்கும், 3 கைக்கிளைக்கும் உரியவை என்பார் வ.சுப. மாணிக்கம். 38 பாடல்கள் புறத்திணை பற்றியனவாகும்.

கபிலர் பாடல்களில், அகத்திணை மரபுகள் அனைத்தும் ஒருசேர எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. ஐவகைத் திணைகள், மூவகைப் பொருள்கள் ஆகியன சிறப்புற இடம்பெற்று உள்ளன.

சங்க அகப்பாடல்களில் குறிப்பாகக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் பல்வேறு குறிஞ்சி நிலப்பகுதிகள் சுட்டப்பட்டுள்ளன. இத்தகைய மலைப்பகுதிகளை ஆட்சிபுரிந்த குறுநில மன்னர்கள் பற்றிய செய்திகளும் மலைநில மக்களின் வாழ்வியலில் இடம்பெற்றுள்ள நிகழ்வுகளையும் செயல்பாடுகளையும் சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் முன்வைக்கின்றன.

சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களிலும் தொல்காப்பியர் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவை தொல்காப்பிய – சங்க இலக்கிய ஒற்றுமையை உணர்த்துவனவாக அமைந்துள்ளன.

பல்வேறு களவுக்கால நிகழ்வுகள் நிகழ்வதை நற்றிணையின் குறிஞ்சித்திணைப் பாடல்கள் தலைவன் கூற்றிலமைந்து நமக்கு வெளிப்படுத்துகின்றன. அதாவது,

தலைவனைத் தலைவி குறியிடத்திற்கு அழைத்துச் செல்லுதல், தலைமக்கள் இருவரும் நெருக்கமாகத் தழுவிக் கொள்ளுதல், தலைவி தோழிகளுடன் நீராடுதல், தலைவி தோழியருடன் பந்தாடுதல், தலைவன் தலைவியது அழகு நலன்களைப் புகழ்ந்து பேசுதல், தலைவி இற்செறிப்பில் அதாவது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருத்தல், உலகமே எதிர்த்தாலும் தலைவியை விட்டுப் பிரியமாட்டேன் எனத் தலைவன் கூறுதல், தலைவன் அன்பு மிகுதியால் துன்பப்படுதல், தலைவன்

மடலேறுதலைக் கூறுதல், தலைவன் மடலேறாமல் சாவேன் எனக் கூறுதல் முதலிய களவுக்கால நிகழ்வுகளைத் தலைவன் கூற்றுக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன.

களவு வாழ்வில் ஈடுபடும் தலைவியைத் தலைவன் மனைவி என குறிப்பிடும் பதிவும் குறிஞ்சித்திணைப் பாடலில் இடம்பெற்றுள்ளது.

குறிஞ்சிநில மக்களின் வாழ்விடமான குடியிருப்புகள் பற்றிய செய்திகள் சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணப்படுகின்றன.

மக்கள் வேட்டையாடியும் உழவு செய்தும் தங்கள் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டதை அறியலாம்.

குறிஞ்சிநில மக்கள் தினை விதைப்பு எனும் வேளாண்மையைச் செய்து உணவைப் பெற்றுள்ளனர். பெரும்பாலான குறிஞ்சித்திணைப் பாடல்கள் இதை நமக்குக் காட்டுகின்றன.

குறிஞ்சிநில மக்கள் தங்களுக்கென தனித்த வழிபாட்டையும் நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் கொண்டிருந்தனர்.

தலையாடை உடுத்தல் என்னும் மரபு சங்ககாலத் தலைமக்களின் களவியல் வாழ்வின் ஓர் அங்கமாக இருந்ததை இப்பாடலின் வழி உணர முடிகின்றது.

கபிலர் நூறு பாடல்களில் அறத்தொடு நிற்றல் எனும் துறைக்கே அதிக முக்கியத்துவம் தருவதால் அக்கால வாழ்வியலில் குறிப்பாகக் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலில் அறத்தொடு நிற்றல் முக்கிய இடம் வகித்ததை இதன் மூலம் அறியமுடிகிறது.

தலைவன் கூற்றிலமைந்துள்ள குறிஞ்சித்திணைப் பாடல்கள் பெரும்பாலானவை தலைவியின் அழகு நலன்களைப் புகழ்வனவாகவே அமைந்துள்ளன. இது சங்க காலக் குறிஞ்சிநில மக்களின் காதல் வாழ்வைப் புலப்படுத்துவதாக உள்ளது.

காதல் வாழ்வில் ஏற்படுகின்ற தலைவனின் காம மிகுதியையும் அதனால் ஏற்படுகின்ற துன்பத்தினையும் பல குறிஞ்சித்திணைப் பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

தலைவனின் காதல் மிகும்போதும் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள முடியாத நிலை ஏற்படும்போதும் தலைவன் மடலேறுவேன் என்று கூறும் நிகழ்வு சங்ககாலக் காதல்வாழ்வின் ஒரு பகுதியாக இருந்ததைக் குறுந்தொகைப் பாடல்களின்வழி அறியமுடிகின்றது.

குறிஞ்சிநில மக்களின் வேட்டைத் தொழிலோடு வேளாண்மை, வியாபாரம், கைத்தொழிகள் முதலிய தொழில்களையும் செய்துவந்ததைக் குறுந்தொகைப் பாடல்களின்வழி அறியமுடிகின்றது.

குறிஞ்சிநில மக்களின் மரபு சார்ந்த பண்பாட்டில் கடவுள் வழிபாடு என்பது இன்றியமையாத பண்பாடாக அமைந்துள்ளது.

குறிஞ்சிநிலத் தலைமக்கள் தமது களவு வாழ்வின்போது குளிர்ச்சி மிக்கத் தழையாடையை அணிந்து கொள்வதை மரபாகக் கொண்டிருந்தனர்.

தலைமக்களது களவு வாழ்க்கையில் தலைவன் தலைவியின் அழகுநலன்களைப் புகழ்தல் எனும் மரபு குறிஞ்சிநிலத்துக்குரிய பண்பாட்டு மரபாக நிலைத்திருப்பதை அறியமுடிகின்றது.

வேறு எத்திணைக்குரிய உரிப்பொருளும் குறிஞ்சியிற் கலக்கவில்லை. இது குறிஞ்சித்திணையின் தனிச்சிறப்பாகும்.

சங்ககால மன்னர்கள் சார்ந்த பல வரலாற்றுக் குறிப்புகள் அகநானூற்றுக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளமையே இதன்அடி நீட்சிக்குக் காரணம் எனலாம்.

பாடுபொருளின் அடிப்படையில் குறிஞ்சிப்பாட்டிற்கான துறை தோழி செவிலிக்கு அறத்தொடுநிற்றல் என்பதாகும். பாடல் முழுவதும் தோழி கூற்றாகவே அமைந்து தலைவியின் களவொழுக்கத்தினைச் செவிலிக்கு வெளிப்படுத்துவதால் ‘தோழி செவிலிக்கு அறத்தொடுநிற்றல்’ என்பது குறிஞ்சிப்பாட்டிற்குரிய துறையாகக் கொள்ளப்படுவது பொருத்தமுடையதாகிறது. தலைமக்களது களவுவாழ்வைக் கற்பாக்கும் பொருட்டுக் கைக்கொள்ளப்பட்ட ஓர் உத்திமுறையாக ‘அறத்தொடுநிற்றல்’ என்னும் துறை விளங்குவதால் குறிஞ்சிப்பாட்டில் அறத்தொடுநிற்றல் என்பது முக்கியத்துவம் பெறுகின்றது.

குறிஞ்சிப்பாட்டு முழுவதும் தோழியின் கூற்றாகவே வெளிப்படினும் அதனுள் தலைவியின் கூற்றும் தோழிவாயிலாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தலைவி தனது காதல் குறித்துத் தோழியிடம் கூறிய செய்திகள் தோழி கூற்றாக வெளிப்பட்டுச் செவிலித்தாயிடம் எடுத்துரைக்கப்படுகின்றன.

மனிதன் வாழ்வதற்கு ஏற்ற இடமாக பூமி எனும் மிகப்பெரிய நிலப்பரப்பு தேவையான ஒன்றாக இருந்து வருகின்றது. இந்நிலப்பரப்பைத் தவிர வேறு வாழிடம் மனிதனுக்கு இப்போதைக்கு இல்லை என்று கூறலாம்.

சங்க காலக் குறிஞ்சிநில மக்கள் கூத்தாடுதல் எனும் செயலில் ஈடுபட்டிருந்ததும் அதற்கென தனியே ஓர் களம் அதாவது இடம் இருந்ததும் (அகம்.) 82ஆம் பாடலின் வழி வெளிப்படுகின்றது.

முருகனுக்கு அக்காலத்திலேயே கோயில்கள் எழுப்பப்பட்டன என்பதை அறிய முடிகிறது. எனினும், சங்கக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் கோயில் இருந்ததற்கான பதிவுகள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சங்க இலக்கியத் தோழி தலைவனைப் பற்றிப் பேச அதற்கு தலைவி தலைவனுக்கு ஆதரவாகப் பரிந்து பேசி இயற்பட மொழிதல் என்னும் களவுச் செயல்பாடும் கபிலா் பாடல் மூலம் அறியப்படுகின்றது.

களவுப் பாடல்களில் பெரும்பாலும் தலைவியின் அழகு நலன்களே புகழப்பட்டுள்ளன. இப்புகழ்ச்சியில் தலைவன் ஈடுபடுவது இயல்பு. எனினும் நற்றிணையில் இதற்கு மாறாகத் தலைவி தலைவனைப் பற்றிப் பாடுகிறாள் என்பது குறிப்பிடத்தக்தாக உள்ளது.

சங்ககாலக் குறிஞ்சிநில மக்கள் கடவுள் பற்றிய நம்பிக்கையில் இருந்ததை வேலன் வெறியாட்டு உணா்த்தி நின்ற போதிலும் பிற கடவுள்கள் பற்றிய பதிவுகளையும் கபிலா் முன்வைப்பது குறிப்பிடத்தக்கது.

குறிஞ்சி நில மக்கள் அணியத்தக்க கொடி, வளையல் முதலியவற்றைச் செய்து கொடுக்கும் திறன் படைத்த தொழில் வல்லுநா்கள் குறிஞ்சி நிலச் சமூகத்திலிருந்ததை அறிய முடிகிறது.

சங்க காலக் குறிஞ்சி நில மக்களில் ஊசல் எனும் விளையாட்டை மேற்கொண்டனர் என்றும், அப்போதுதான் தலைவனைச் சந்திக்கும் வாய்ப்பு பெற்றுக் களவில் ஈடுபட்டனர் என்பதையும் கபிலர் தம் பாடலில் உணர்த்துகின்றார்.

சங்ககால குறிஞ்சி நில மக்கள் வேளாண்மை தொழிலில் ஈடுபட்டதை அதுவும் நிலத்தைப் பண்படுத்தி கரும்பு முதலிய பயிர்களை விளைவிப்பதையும் கபிலர் பாடல்களால் அறிகிறோம்.

இயற்கை நிகழ்வுகளைத் தன் பாடல்களில் சுட்டும் பரணர் 'இயற்கை' எனும் சொல்லை எங்குமே பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

களவு ஒழுக்கம் என்பது குறிஞ்சிநில சமூகத்துக்கு உரியது என்றாலும் அதற்கான எதிர்ப்பும் குறிஞ்சிநிலச் சமுதாயத்தில் நிலவியதை உணரமுடிகின்றது. இந்த எதிர்ப்புநிலை குடிச்சிறப்பு பாழ்படக்கூடாது என்ற நோக்கில் தோன்றியதையும் அறியமுடிகின்றது.

தித்தன் என்பவன் பாணர்களை ஆதரித்தமையையும், நன்னன் என்பவன் இரவலர்க்கு களிறுகளை வழங்கியமையையும், ஆய் என்பவன் தன்னிடம் வருவோர்க்கு கலம் நிறையச் சோறளித்து உபசரித்தமையையும் அறியமுடிகின்றது.

தலைவி பெறுவதற்கு அரியவள் என்ற கருத்தினை ஒவ்வொரு பாடலிலும் பரணர் எடுத்தியம்புகின்றார். இந்த வகையில் பரணரின் அகநானூற்றுப்பாடல்கள் பெரும்பாலும் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்வதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் சங்ககால மக்களின் களவுவாழ்வில் அல்லகுறிப்பிடுதல் என்பது மிகமுக்கிய வாழ்வியல் செயல்பாடாக அமைந்திருத்தலை அறியமுடிகின்றது.

சங்ககால வாழ்வியலில் இற்செறிப்பு உணர்த்தல் எனும் நிகழ்வு பெரும்பாலும் தோழி வாயிலாகவே நிகழ்ந்துள்ளதை அறியமுடிகின்றது.

சங்க காலத் தலைமக்களது களவு வாழ்வியலுக்கு எதிராகக் காவல் எனும் இற்செறிப்பு தலைவிக்கு மட்டும் உரியதாக

அமைந்திருத்தலையும் இக்கட்டுப்பாடு தலைவனுக்கு எந்நிலையிலும் அவன் உறவினர்களால் ஏற்படுத்தப்படவில்லை என்பதையும் அறிய முடிகின்றது.

ஆண்கள் பொருள் ஈட்டுவதைக் கடமையாகக் கொண்டிருந்தனர். பொருளைக் கொண்டுதான் ஏனைய அறங்களைச் செய்ய முடியுமென்று அவர்கள் உறுதியாக எண்ணியதை அறியமுடிகின்றது.

வரைவு மறுத்தல், வரைவு மலிவு ஆகியவற்றை உணர்த்தும் பரணர் களவு வாழ்வை கற்பு வாழ்வாக மாற்றுவதற்குரிய அறத்தொடு நிற்றல் என்னும் துறையில் அமைந்த பாடல் ஒன்றினைக் கூட பாடவில்லை என்பது வியப்புக்குரியது. இயற்கைப் புணர்ச்சி மற்றும் பாங்கற்கூட்டம் தொடங்கி இரவுக்குறி, அல்லகுறி, இற்செறிப்பு, வரைவு கடாதல், வரைவுமறுத்தல், வரைவு மலிதல் என்னும் துறைகளில் பாடல்களைப் பாடியுள்ள பரணர் குறிஞ்சித்திணைக்குரிய முக்கிய துறையான அறத்தொடு நிற்றலைப் புறக்கணித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இல்லற வாழ்வே மகிழ்வு தருவது என்பதும், அதிலும் காதல் திருமணமே தலைவன், தலைவியரால் விரும்பி மேற்கொள்ளப்பட்டதென்றும் அறியமுடிகின்றது.

இக்காதல் பெரும்பாலும் குறிஞ்சி நில மக்கள் உழவு தொழில் செய்யக்கூடிய இடமான தினைப்புனத்திலே தான் தோன்றி அரும்பு விட்டமையும், தினைப்புனமே காதலுக்கான களமாக விளங்கியமையும் தெரியவருகின்றது.

தலைவியின் தோழி பன்முகத் தன்மைகள் கொண்டவளாக விளங்குகிறாள். களவு வாழ்வைத் தலைவன் நீட்டித்த போதும், தலைவியை மறந்து நெடுநாள் காண வராத போதும் வரைவு கடாதலை வலியுறுத்தி இல்லற வாழ்க்கைக்கு இருவரையும் இட்டுச் செல்கிறாள். அதோடு தலைவனுக்கு நனி நாகரிக பண்பும், வாக்குத் தவறாத வாய்மையும் வேண்டும் எனத் தேவைப்படும் இடங்களில், காலங்களில்

இடித்துரைத்து கற்பு வாழ்வை வலியுறுத்தி இல்லறவாழ்வுக்கு வழிகோளுகிறாள் என்பதும் தெளிவுபடுகிறது.

தலைவன் தலைவியின் காதலுக்கு ஏங்கியமையும், காதல் பிரிவில் ஆற்றாதவனாய் நெரூசொடும், பாங்கன், பாங்கியிடமும் தன் கவலைகளை வெளிப்படுத்தி தலைவியை அடையும் முயற்சிகளை மேற்கொண்டமையும் புலனாகிறது.

தலைவி தன்னைச் சந்திக்க இரவுக் குறியில் வரும் பொழுது அவனுக்கு உண்டாகும் ஆபத்துக்களை எண்ணி அன்பின் மிகுதியால் இரவுக் குறியைத் தவிர்த்தமையும், தலைவன் உம் நினைவும், கண்ணின் ஒளியுமே எனக்கு ஏமம் என்று சொல்லி அச்சம் தெளிவித்து இரவில் சந்தித்தையும் உய்த்துணரமுடிகிறது.

தலைவன் பரத்தையும் சென்று தங்கிய போது அவளே அவனை அவன் மனைவியிடம் அனுப்பிய செய்தியும் தெரிய வருகிறது.

புற வாழ்வியலாகத் தினைப்புணம் காத்தல், தேனழித்தல், இரும்பிடித்தல், கழங்குப் பார்த்தல் போன்ற தொழிலம், நம்பிக்கையும் விளங்கியமையும் புலப்படுகிறது.

தலைவி தலைவன் மீது கொண்டிருந்த நம்பிக்கை, நன்மதிப்பு முதலியன வெளிப்படுகின்றன. தலைவனின் அன்பையும் பண்பையும் போற்றக் கூடியவளாகத் தலைவி விளங்கியுள்ளாள்.

தலைவி தலைவன் உயிரைத் தன் உயிராகப் போற்றியமையும் புலப்படுகிறது.

தினைப்புனம் விளைந்த நிலையில் தலைவனைப் பகற்குறியில் சந்திக்க வீட்டிற்கு செல்லும் நிலையில் தலைவி அதை ஒரு சிறைப்புறமாக எண்ணித் தவிப்பதும் புலப்படுகிறது.

காதல் பிரிவில் வாடும் தலைவி அயலவர் பெண் கேட்டு வரும் நிலையில் தோழியிடம் அவளே (தலைவியே) அறத்தொடு நிற்கும் நிலை காணப்படுகிறது. தலைவன் வரும் வழிகளை எண்ணி தலைவியும், தோழியும் வரைவு கடாதலை வலியுறுத்தியுள்ளனர். சங்க இலக்கியத்தில்

வரும் தலைவனைப் போலவே காதல் கைக்கூடாத வேளையில் நெஞ்சொடு புனத்தலைத் தலைவனும் மேற்கொண்டுள்ளான். சங்க இலக்கிய மரபு இங்கேயும் வெளிப்படுகிறது. காதலியை திருமணம் செய்யும் பொருட்டுத் திணைமாலை நூற்றம்பதில் காணப்படும் தலைவனும் மடலேறு முற்படுவதைக் காணமுடிகிறது.

தலைவன் தலைவியை அடைவதற்கு இல்லறவாழ்வில் இணைவதற்கு தோழியே முழுமுதற் காரணமாகத் திகழ்கிறாள். தழையாடை என்பது தலைவிக்கானதாக விளங்குவதும் அறிய முடிகிறது. இச்செறிக்கப்பட்டாலும் தலைவி தலைவனுக்காகவே காத்திருக்கு கூடியவளாக விளங்குகிறாள். அதே போல் தன் உயிரை வெள்ள பெருக்கிலிருந்தும், யானைகளிடமிருந்தும் காப்பாற்றிய தலைவனையே காதலித்து, அவனைத் தவிர வேறு யாரையும் கைப்பிடிக்க மாட்டோம் எனும் மன உறுதிமிக்க தலைவியரை காணமுடிகிறது.

புறவாழ்வியலில் தினைப்புனம் அமைத்து உழவுத் தொழில் செய்ததையும், மரங்களை வெட்டி அழித்தலையும், நீர் நிலைகள் பெருக்கி விவசாயம் மேற்கொண்டமையும், விலங்குகளை அகப்படுத்தலையும் தேனலித்தலையும், பசு வளர்ப்பில் ஈடுபட்டமையும், திருமணத்திற்கு பெண் கேட்க சான்றேதரை அழைத்து சென்றமையும் புலப்படுகிறது.

## மேலாய்விற்கான களங்கள்

1. சங்கஇலக்கியங்களில் காணலாகும் கருப்பொருள் மயக்கம் குறித்து விரிவாக ஆராய இடமுள்ளது.
2. சங்கஇலக்கிய குறிஞ்சித்திணைப்பாடல்களையும் சிற்றிலக்கியங்களில் காணலாகும் குறவஞ்சி இலக்கியங்களையும் ஒப்பிட்டு ஆய்வு செய்ய இடமுள்ளது.